வெளியீடு 21-2-2001 Issued 21-2-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 25, 2000 - தொகுதி 98- எண் 3

Tuesday the 25th April, 2000 - Volume 98 - No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

114/2000

# 25-4-2000

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 245-287

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

(அ) காஞ்சிபுரம் அருகில் 5-4-2000 அன்று திரு. விஸ்வநாதன் சென்ற கார் எரிக்கப்பட்டது 287-293

(ஆ) மகாபலிபுரத்தில் நடைபெற்ற வன்னியர் இளைஞர் பெருவிழா நிகழ்ச்சிக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடு 293-301

(இ) சத்துணவுப் பணியாளர்கள் பணி நிரந்தரம் கேட்டுப் போராடுதல் 301-311

(ஈ) சிதம்பரம் பகுதியில் அடிக்கடி மின் வெட்டு ஏற்படுதல் 311-318

3. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் 319

(ஆ) தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் கடன்களை இரத்து செய்யக் கேட்டுப் போராடுதல் 319-321, 322-324, 325-337

D
223310
V211,81 P00
P00,98.

பக்கங்கள்


4. அறிவிப்புகள்—

(அ) அடுத்து எடுக்கப்பட்ட வேண்டிய கவன ஈர்ப்புகள் நேரமின்மை கருதி பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளல் — 31[illegible]

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 2000 (ஆ. இ.) — 334

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) மதிப்பீட்டுக் குழு — 321

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 321

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 334-335

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 337-338

மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி — 338-373

(அ) கோரிக்கை எண் 5 — முத்திரைத்தாள்கள் —நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 6 — ஆவணப் பதிவு
(இ) கோரிக்கை எண் 47 — ஊரகத் தொழில்கள்
(ஈ) கோரிக்கை எண் 59 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு
— 338

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 339,340,341, 343,344, 360-369




பக்கங்கள்


மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திரு. ஏ. ராசேந்திரன் — 344-351

*திரு. கே. சுந்தர் — 351-355

டாக்டர் காஞ்சனா கமலநாதன் — 355-359

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 373-375

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 13, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 25, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பொருள்கருவி காலம் வினையிடனொ(டு) ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்."*

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 361,* திரு. செங்கை சிவம், திரு. ஐ. கணேசன், *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**361—**

**சலவைப்படி**

***18125**—**திரு. செங்கை சிவம்:**
**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 25

(அ) தமிழகக் காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சலவைப்படியை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலவைப்படியை ரூ.15-லிருந்து ரூ.30-ஆக உயர்த்தி வழங்கிட அரசு ஆணை எண் 499, நிதித் துறை, நாள் 15-9-1998-ல் அரசு ஆணையாக பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்குத் தற்போது உயர்த்தி அளிக்கப்படக்கூடிய சலவைப்படி போதுமானதாக இல்லை என்று காவலர்களில் பெரும் பகுதியினர் சொல்வது அரசுக்குத் தெரியுமா? ஆமெனில், அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா? அதேபோல, ஒவ்வொரு காவலருக்கும் ஆண்டுக்கு எத்தனை uniform sets அளிக்கப்படுகின்றன என்பதையும் அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த சலவைப்படி அவர்களுக்குப் போதுமானதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுக்குமாத்திரம்தான் தெரியும் என்று கருதுகின்றேன். அடுத்த கேள்விக்கான விவரம் என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு காவலர்கள் கதர்த் துணியிலே தைக்கப்பட்ட சீருடையை அணிந்த நேரத்தில் அதை மாற்றி டெரிக்காட்டனாக வழங்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். ஆனால், அந்தத் துணிகளை எல்லாம் dry wash என்ற முறையிலே சலவை செய்வதற்கு அதிகமாகச் செலவாகிறது என்கிற காரணத்தாலும், அதோடு பாதுகாப்புப் பணிகள், ரோந்துப் பணிகள் போன்ற பொறுப்புகளிலே காவலர்கள் பணியாற்றுகிறபோது, அடிக்கடி உடைகள் வீணாகும் நிலை இருப்பதைக் கருத்திற்கொண்டும், இதை இன்னும் கொஞ்சம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலை இருந்தால் அதை அரசு பரிசீலிக்கத் தவறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 362, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**362—**

## புதிய பாடத் துறைகள்

***25668—திரு. உ. திசைவீரன்**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி கலைக் கல்லூரியில் வரலாறு, கணிதம், பொருளியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படாதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாடத் துறைகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியிலே இயங்கி வருகின்ற அரசுக் கலைக் கல்லூரியில் 4 பாடப் பிரிவுகள் மட்டுமே இயங்கி வருகின்றன. இவை சமுதாயத்திலே மதிப்பு மிக்க பாடப் பிரிவுகளாக இருக்கின்ற காரணத்தினாலே, வெளி மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்கள் அங்கே அதை முழுமையாக ஆக்கிரமித்துக்கொள்கின்றனர். இதனால் பரமக்குடி மற்றும் புறப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை இன்னும் இருக்கிறது. இன்றைக்கு தமிழக அரசு, அந்தக் கல்லூரிக்கு ரூ.215 இலட்சம் ஒதுக்கி, கட்டட வசதி செய்து கொடுப்பதற்கு ஆணையிட்டு இருக்கிறது. அதேபோல, 4 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதையெல்லாம் கருத்திற்கொண்டு, புதிய பாடப் பிரிவுகளான B.Sc. (Maths), Chemistry, Physics போன்ற பாடங்கள், அதேபோல

[2000 ஏப்ரல் 25

B.Com., B.A. (History), (Economics) போன்ற பாடங்களைக்கொண்டு, புதிய பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு அரசு அனுமதிக்குமா? அதோடு ஏற்கெனவே இயங்கி வருகின்ற பாடப் பிரிவுகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் வேலைவாய்ப்பு மிகுதியாக உள்ள அந்தப் பாடப் பிரிவுகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு இருக்கின்றன. பி.எஸ்ஸி. (கணிப்பொறி அறிவியல்), பி.எஸ்ஸி, (மின்னணுவியல்), பி.எஸ்.ஸி (உயிர் வேதியியல்), பி.ஏ. (கூட்டுறவு மேலாண்மை), பி.பி.ஏ. வணிக மேலாண்மை, இவையெல்லாம் அதிக பயன்பாடு மிகுந்த துறைகளாகக் கருதப்பட்டு, தொடக்க நிலையிலே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவற்றிலே, எந்த ஒரு பாடப் பிரிவிலே எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பல்கலைக்கழக விதிமுறைகள் இடம் தந்தாலும், அதுபற்றி அரசு கவனிக்க முடியும். புதிய பாடத் திட்டங்களை ஏற்படுத்துவதாக இருந்தால், புதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறபோது, அதற்கு அதிக செலவாகிறது என்ற காரணத்தால், புதிய பாடத் திட்டங்களை அறிவிக்கக்கூடிய வாய்ப்பு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 363, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**363—**

**மேல்நிலைப் பள்ளி**

***30201**—**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரிய திருக்கோணம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1999-2000 ஆம் ஆண்டு அரியலூர் ஒன்றியம், பெரிய திருக்கோணம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தியதற்கு அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை இருபபதோடு, கட்டடங்களும் இல்லாமல் இருக்கிறது. அதேபோல, சுண்டக்குடி, காம்ரசவல்லி, கண்டிராதீர்த்தம், வெங்கனூர் போன்ற கிராமங்களில், உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியிடங்கள் நிறைய காலியாக இருக்கின்றன. அவற்றையும் நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு காலக்கட்டத்தில் ஆசிரியர்கள் வழங்கியதிலே குறைபாடு ஏற்பட்டுவிட்ட காரணத்தால், அவற்றையெல்லாம், ஈடுசெய்யக்கூடிய அளவிற்கு ஒரே ஆண்டில் அதை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பில்லை. ஏற்கெனவே எந்த அளவிற்கு ஆசிரியர்களை நிரப்புவது குறைந்துபோய்விட்டதோ, அவற்றைப் படிப்படியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஆண்டும் ஆசிரியர்கள் தேர்வுக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறபோது, எந்தப் பள்ளிகளிலே அதிக அளவுக்கு ஆசிரியர்கள் இல்லையோ, அவற்றுக்கு முன்னுரிமை தந்து, அவர்களை அந்த இடங்களில் நியமிக்க ஆவன செய்யப்படும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுண்டக்குடியில், பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியே நீண்ட நாட்களாக காலியிடமாக இருக்கிறது. தலைமை ஆசிரியர் பொறுப்பு என்பது முக்கியமான பணி, ஆகவே, தலைமை ஆசிரியரை நிரப்புவதற்காவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்

[2000 ஏப்ரல் 25

அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல விண்ணப்பங்களை என்னிடத்திலே தருகிறவர்கள். அப்படி ஒரு விண்ணப்பம் ஏற்கெனவே தந்து இருப்பார்களேயானால், அது இயக்குநருக்கு அனுப்பப்பட்டு இந்த விடுமுறை காலத்திலே, அந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *364*, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**364—**

**பழனியில் துணை மின் நிலையம்**

***24431*—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனியில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி விவசாயத்தை நம்பி வாழுகின்ற பகுதி. மின் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதை மீண்டும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பழனியில் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இயக்கத்தில் உள்ளது. மேலும், எதிர்கால மின்சுமையின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, பழனி துணை மின் நிலையத்திலுள்ள மின் மாற்றியின் திறனை, 2X16 மெகா வோல்ட்டிலிருந்து, 1X16+1X25 மெகா வோல்ட்டாக, அதாவது 32 மெகா வோல்ட்டாக இருந்த திறனை, 41 மெகா வோல்ட் திறனாக மாற்றுவதற்கான ஒரு திட்டம் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ளது. அந்த ஒன்பதாவது



2000 ஏப்ரல் 25]

ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக, இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு முடியுமானால், அந்தப் பகுதியிலே இந்தப் பிரச்சினையே வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *365*, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**365—**

**மடிப்பாக்கத்தில் துணை மின் நிலையம்**

***32618*—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடிப்பாக்கத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) அதன் இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் ஓராண்டுக்குள் அந்தப் பணி முடிக்கப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடிப்பாக்கம் சென்னையை ஒட்டி இருக்கிற புறநகர் பகுதி மட்டுமல்லாது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டு, பெரிய வசதிகள் எல்லாம் செய்து தரப்பட்டிருக்கின்றன. அதற்காக ஊராட்சி இரண்டு கிரவுண்டு இடம்— 4,800 சதுர அடிகள் ஒதுக்கித்தந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனுடைய முக்கியத்துவம் கருதி, இந்த ஆண்டே, அந்தப் பணியினை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா, அதற்கு என்ன செலவாகிறது என்பதையெல்லாம் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கிரவுண்டு நிலம், ஒரு துணை மின் நிலையம் அமைக்க அவர்கள் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். இரண்டு கிரவுண்டு இடத்திலே, அப்படிப்பட்ட ஒரு துணை மின் நிலையத்தை அமைக்க முடியாது. 31/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் அரை ஏக்கர் நிலமாவது வேண்டும். அதற்காகத்தான் நிலம் ஏற்கெனவே தேர்வு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இப்போது இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. 248.97 இலட்சம் ரூபாய் செலவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 366, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**366—**

**வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்**

***30938**—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் வட்டாட்சியர் அலுவலகம் பழுதடைந்த கட்டடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகம் தற்பொழுது பழுதடைந்த கட்டடத்தில் இயங்கவில்லை.

(ஆ) புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

(இ) வினா எழாது.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை.

வினா எண் 367, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**367—**

**தரைப்பாலம்**

***28919**—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் நகராட்சி, தரைப்பாலத்தை உயர்த்திக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடியாத்தம் நகராட்சி, தரைப்பாலத்தை உயர்த்திக் கட்டும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரம் மிக நெரிசல் மிகுந்த பகுதியாக உள்ளதால், வாகனப் போக்குவரத்து ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளதால், அந்த வாகனங்கள் அந்த நகராட்சியிலுள்ள தரைப்பாலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். அந்தத் தரைப் பாலம் மிக மோசமாகப் பழுதடைந்துள்ளதால் பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. அந்தத் தரைப்பாலத்தைக் கட்டுவதற்கு சுமார் முப்பது இலட்சம் ரூபாய்தான் ஆகும் என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தரைப்பாலத்தை உயர்த்திக் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தினை மேம்பாடு செய்வதற்காக முப்பது இலட்சம் ரூபாய் செலவாகும் என்றுதான் மதிப்பீடு இருக்கிறது. இருந்தாலும், தற்போது நகராட்சியின் நிலை, போதுமான அளவுக்கு நிதி வசதி இல்லாமல், அதை நடத்திச்செல்கிற வாய்ப்பே குறைவாக இருக்கிற காரணத்தால், தற்போது பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 368, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**368—**

**நிலத்தடி நீர்**

***33574—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு, நிலக்கோட்டை ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும் நிலத்தடி நீர் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிலக்கோட்டை தொகுதி முழுவதற்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு மற்றும் நிலக்கோட்டை ஒன்றியங்களில் போதுமான நிலத்தடி நீர் தற்போது உள்ளது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்து இருக்கின்றார்கள். ஆனால், 300 அடி, 400 அடிக்கு bore போட்டால்கூட bore-ல் தண்ணீர் வருவதில்லை. ஆனால், குடிநீருக்கு அப்படி 300 அடிக்குக் கீழே bore போட்ட பிறகுகூட, வரக்கூடிய தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. நீங்கள் கேரளா தண்ணீரை, வைகை தண்ணீரை மானாமதுரைக்குக் கொண்டு செல்கிறீர்கள்; பரமக்குடிக்குக் கொண்டு செல்கிறீர்கள்; திண்டுக்கல்லுக்குக் கொண்டு செல்கின்றீர்கள்; சின்னாளப்பட்டிக்குக் கொண்டு செல்கின்றீர்கள். அதேநேரத்திலே, நிலக்கோட்டைத் தொகுதியிலுள்ள இரண்டு யூனியன்களிலுள்ள, எல்லா கிராமங்களுக்கும் இந்தக் குடிநீர் வழங்குவதற்கான ஒரு முயற்சியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் இல்லை என்பது மூலக் கேள்வி. ஆனால் சம்பந்தப்பட்ட துறையில் அங்கே கேட்கிறபோது, நிபுணர்கள் எல்லாம் ஆய்வு செய்து நிலத்தடி நீர் நிச்சயமாக இருக்கிறது, பாதுகாப்பான குடிநீர் வழங்கலாம் என்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். கூடுமானவரையில் நிலத்தடி நீர் கிடைக்கவில்லை அல்லது போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை, அது சரியாக இல்லை என்ற நிலை வந்தாலொழிய, வேறு ரொம்ப தூரத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலையில் நாம் இல்லை. நிதி ஆதாரம் அந்த அளவுக்கு இல்லை. ஆகையினால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஒருவருக்கு 40 லிட்டர் தேவை. அதைத் தாருங்கள் என்று கேட்டால், அதற்குரிய நடவடிக்கையைத்தான் எடுக்க இயலுமே தவிர, கேட்கிற ஆற்றிலிருந்து எல்லாம் தண்ணீர் கொடுக்கிற வாய்ப்பு தற்போது இல்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் கேட்பது எல்லாம் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், என்னுடைய தொகுதியிலிருந்துதான் தண்ணீர் கொண்டு போகிறீர்கள். என்னுடைய மக்கள் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்த வழியைக் கடந்துதான் தண்ணீர் போகிறது. எத்தனை நாளைக்கு நாங்கள் இந்த உப்புத் தண்ணீரைக் குடிக்க முடியும்? ஆழத்திற்குச் சென்றால் உப்புத் தண்ணீர் வருகிறது. ஆகையினாலேதான், நீங்கள் மற்ற ஊர்களுக்குச் செய்வதுபோன்று நிலக்கோட்டை தொகுதியிலுள்ள அத்தனை குக்கிராமங்களுக்கும் இந்தப் பெரியாறு தண்ணீர், வைகை தண்ணீரைக் கொடுப்பதற்கு மறுபரிசீலனை செய்யமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தெரிவிக்கிறேன். தண்ணீர் இல்லை, தட்டுப்பாடாக இருக்கிறது, கிடைக்கிற தண்ணீர் நன்றாக இல்லையென்ற முடிவுக்கு வந்தபிறகுதான் வேறு எங்கேயாவது நீர் ஆதாரம் தேடி அலையமுடியுமே தவிர, வைகை இருக்கிறது, மற்றப் பகுதிகளுக்கெல்லாம் கொடுக்கிறார்கள், ஆகவே வைகை தண்ணீர்தான் எங்கள் பகுதிக்கும் வேண்டுமென்று வம்பு செய்வது நியாயம் அல்ல. குடிநீர் வேண்டுமென்று சொல்லி, ஆய்வுகள் நடைபெற்று, அதற்கான பணிகளை எல்லாம் தொடங்கிக் கொண்டு இருக்கிறோம். நிச்சயமாக எங்கெங்கு விடுபட்டிருக்கிறதோ, அங்கே எல்லாம் இந்த ஆண்டு 6,300 குடிநீர்த் திட்டங்களுக்கு அனுமதி அளிக்க இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்காக நிதியைக் கொஞ்சம்

[2000 ஏப்ரல் 25

தாராளமாக ஒதுக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக அதையெல்லாம் பார்த்து, பரிசிலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 369, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**369—**

**உயிர் உரங்கள்**

**24213*—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு வேளாணமைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டத்தில் உயிர் உரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*முற்பகல் 9-45*

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் உரங்கள் என்பவை நைட்ரஜனை முழுக்க, முழுக்க ஆக்கிரமித்து, இழுத்து, அந்தப் பயிர்களை ஊட்டமாக வளரச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியவையாகும். அந்த உரம் தயாரிக்க தமிழகத்திலே எந்தெந்த பகுதியிலே எத்தனை ஆலைகள் இருக்கின்றன? எதிர்காலத்தில் மாவட்ட தலைநகரங்கள் அனைத்திலும், குறிப்பாக ஈரோடு போன்ற விவசாயம் அதிகமாக செய்யப்படுகின்ற இடங்களில் விரைவாக இந்த உயிர் உர ஆலைகளை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உரங்களும் விவசாயிகளுக்குப் போதுமானவையாக, தமிழகத்திற்குத்



2000 ஏப்ரல் 25]

தேவையான அளவிற்கு, இருக்கின்றனவா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 70 இலட்சம் நுண்ணுயிர் உரப் பொட்டலங்கள் ஒவ்வொன்றும் 200 கிராம் எடையில் தயாரிக்கப்படுகிறது. எந்தெந்த மாவட்டத்திலே இந்த நுண்ணுயிர் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன என்று கேட்டார். கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, திருச்சி, சாக்கோட்டை ஆகிய 6 இடங்களில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கப்பட்டு, இப்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்போது இந்த 6 இடங்களிலும் தயாரிக்கப்படுகின்ற உரங்களே போதுமான அளவிற்கு இருக்கிறது. ஈரோட்டுக்கு அருகிலே சேலத்திலே தயாரிக்கப்படுகின்ற அந்த உரம் அவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இருக்கிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையான அளவிற்கு உரங்கள் எல்லாம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவதாகக் கூறினார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஈரோடு மாவட்டம் மாத்திரம் அல்ல, மற்ற பகுதிகளிலேயும் கேட்கின்ற இடங்களில் எல்லாம் தேவைப்படுகின்ற உயிர் உரங்களிலே, 20 விழுக்காடு அளவிலேதான் முழுமையாக தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்றது. மீதி போதாமல்தான் இருக்கிறது என்று அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் எதிர்காலத்தில் தேவையான அளவிற்கு அனைத்துப் பகுதிகளிலும் உயிர் உரங்கள் உற்பத்தியை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இன உரம் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 1,400 மெட்ரிக் டன் உற்பத்தி செய்கின்றோம். ஆனால், இப்போது, 1999-2000 ஆண்டிலேயே இருப்பு நமக்கு இருப்பது 1,065 மெட்ரிக் டன். நடப்பு ஆண்டிலும் 1,400 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப் போகிறோம். ஆக, பற்றாக்குறை என்று சொல்வது சரியல்ல. அப்படி யாராவது அதிகாரிகள் தவறான ஒரு தகவலைத் தந்தால், அதைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயிர் உரங்கள் என்று சொல்கின்றவேளையில் சாதாரணமாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் மத்தியிலே மாட்டுச் சாணம், அதுபோன்று தழைச்சத்து இவைதான் விவசாயிகளுக்குப் பயன்தரக்கூடிய உயிர் உர இனங்கள் என்று சொல்லக்கூடிய பிரச்சாரத்தை இப்போது செய்கின்றார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னால், இந்த உரங்களுக்குப் பெரிய மதிப்பு அவர்கள் கொடுக்கவில்லை. எந்த அடிப்படையில் இந்த உயிர் உர இனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? தழைச்சத்திலிருந்து செய்யப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை உரங்களான ஊட்டமேற்றிய தொழு உரம் என்பது இந்த மாட்டுச்சாணம் போன்ற கழிவுப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஊட்டமேற்றிய வேப்பம் புண்ணாக்கு, தென்னை நார் கழிவு, பசுந்தாள் உரம் போன்ற தொழு உரங்களும், அசோஸ்ஃபைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா, நீலப் பச்சை பாசி போன்ற பயிர்களுக்கு ஏற்ற உயிர் உரங்களைத் தயாரிக்கிறோம். இதிலே பசுந்தாள் இன உரம் கொழுஞ்சி, தக்கைப் பூண்டு, சீமை அகத்தி போன்றவைகளிலிருந்து நாம் தயாரிக்கிறோம். அதுமட்டுமல்ல, அசோஸ்ஃபைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் ஆராய்ச்சிக் கூடங்களில் வளர்க்கப்பட்டு வயல்வெளிகளில் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகத்திற்கு தயாரிக்கப்படுகிறது.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளடி முடிந்தவுடன் சில தாவர இனங்கள் வேரின் மூலமாக நீரையும், சூரிய வெளிச்சத்தின் மூலமாக பிராணவாயுவையும் எடுத்துக்கொண்டு ஒளிச்சேர்க்கையின் மூலம் சுவாசம் தயாரிக்கிறது. அந்தத் தாவர இனங்கள் சுவாசம் தயாரிக்கிறபோது அதற்குக் கீழே இருக்கக்கூடிய வேரில் நைட்ரேட்டைச் சேர்த்திருக்கிறது. அது தக்கைப் பூண்டு, மின்னி, செஸ்டோனியா போன்ற அந்த இன விதைகளை அபிவிருத்தி செய்து, விவசாயிகளுக்கு இனாமாக வழங்கி, தாளடி முடிந்தவுடன் அந்தப் பயிர்களைச் சாகுபடி செய்தால் மேலே இருப்பது மாட்டுத் தீவனமாகவும், வேர்ப் பகுதியிலே இருக்கக் கூடிய நைட்ரேட்டுகள் நிலத்திலே பட்டு,



நிலத்திலே இருக்கக்கூடிய அமிலத் தன்மைகள் குறைந்து நிலங்களைத் தரம் உயர்த்தித் தருகிறது. அதனுடைய விதைகளை இனாமாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு விவசாயி என்ற காரணத்தால் இந்த ஆலோசனையை வழங்கியிருக்கிறார். இந்தச் செய்தியை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, May I know from the Hon'ble Minister for Agriculture whether Coconut husk kept on the road side and burnt be used as a manure? I understand from the Hon. Minister's statement that it is a very good manure. May I request the Hon. Minister to see that Coconut husk is not wasted by burning on the road side ? We can see on the road side smoke is coming from the husk. May I request the Hon. Minister to take steps to see that it is used properly as a natural manure in the State, Sir ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் நார்க் கழிவுப் பொருளிலிருந்து நாம் உரம் தயாரிக்கிறோம். இப்போது அதறகான ஆலோசனை விவசாயத் துறை மூலம் வழங்கப்பட்டு, அதையும் நாம் உரமாகத் தயாரித்து விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 370, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**370—**

**புதிய நகரப் பேருந்து**

***2831—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 25

கும்பகோணத்திலிருந்து வலையபேட்டை, சோமங்குடி, சுவாமிமலை, அண்டக்குடி, திருமண்டங்குடி சர்க்கரை ஆலை வழியாக திருவைக்காவூர் வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்பகோணம்-திருவைக்காவூர் (வழி) வலையப்பேட்டை மாங்குடி, சுவாமிமலை, அண்டக்குடி, திருமண்டங்குடி சர்க்கரை ஆலைத் தடத்தில் தடம் எண் 12-ன் மூலம் தினசரி 3 நடைகளும், கும்பகோணம்—திருவைக்காவூர் (வழி) வலையப்பேட்டை, மாங்குடி தடத்தில் தினசரி 3 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே, கோரிக்கை வழித் தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டிய தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

வினா எண் 371, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**371—**

### நகரப் பேருந்து வசதி

***21769—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:***

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தக்கோலத்திலிருந்து தணிகைப்போளூர் வரை நகரப் பேருந்து விடப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தடத்தின் இரண்டு முனைகளாக தக்கோலம் மற்றும் தணிகைப் போளூர் ஆகிய ஊர்கள் அங்கீகரிக்கப்படாத நகரங்களாகும். எனவே, இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

தக்கோலத்திலிருந்து தணிகைப்போளூருக்கு நேரடியாக 8 பேருந்துகள் மூலம் 32 நடைகள் பேருந்து வசதி உள்ளது. தக்கோலத்திலிருந்து அரக்கோணம் வரை பேருந்துகள் மூலம் 54 நடைகளும், அரக்கோணத்திலிருந்து தணிகைப் போளூருக்கு 80 பேருந்துகள் மூலம் 214 நடைகளும் தினசரி பேருந்து வசதி இருப்பதால், தற்பொழுது உள்ள போக்குவரத்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.



2000 ஏப்ரல் 25]

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கோலத்திற்கும், தணிகைப்போளூருக்குமிடையே கிட்டத்தட்ட 30, 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அரக்கோணம் நான்கு முனை சந்திப்பு, பல பகுதிகளுக்கும் மக்கள் அந்தப் பகுதிகளிலிருந்து சென்று வேலை செய்வதற்கும், பள்ளி செல்லும் பிள்ளைகள், கல்லூரிகளுக்குச் செல்பவர்கள் என்று இப்படி இருக்கின்ற காரணத்தினால் அத்தனைப் பேருந்து நடைகள் இருந்தும்கூட நெருக்கடி மிகுதியால் பேருந்துகளின் கூரைகளின்மீது எல்லாம் மக்கள் பயணம் செய்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பேருந்து விடுவாரா? அதேசமயம் ஆற்காடிலிருந்து ஓச்சேரி வரை வருகின்ற டி.24 பேருந்து ஓச்சேரியில் அரை மணி நேரம் நிறுத்தப்படுகிறது. என்னுடைய தொகுதியில் பனப்பாக்கம் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருப்பதால், அந்தப் பேருந்தை அங்கு நிறுத்துவதற்கும், ஏற்கெனவே பல பேருந்துகள் என்னுடைய தொகுதியில் வந்துகொண்டிருந்த பேருந்துகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை இயக்குவதற்கும், மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளுடைய அடர்வைக் கொண்டுதான் கூடுதல் பேருந்துகள் விடுவதற்கான முடிவுகளை அரசு மேற்கொள்கிறது. ஆகவே, பயணிகளுடைய அடர்வைக்கொண்டு, இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும். அவருடைய தொகுதியிலே நிறுத்தப்பட்டிருக்கிற பேருந்துகள் குறித்து, குறிப்பு கொடுப்பார்களேயானால், அவை நிச்சயமாக இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 372, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

*முற்பகல் 9-55*

**372—**

### புதிய பாலம்

***22470—திரு. மா. இராமச்சந்திரன்:***

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், தெற்கு கோட்டையில் உள்ள பழைய பாலம் பழுதடைந்துள்ளதால் நடு சருக்கையில் ஒரு புதிய பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள பாலப் பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான பாலங்களை இந்த 4 ஆண்டுகளில் கட்டி இன்றைக்குப் பேரும் புகழோடு வாழுகிற நம்முடைய அரசு — இராஜாமடம் வாய்க்கால் மிகக் குறுகிய அளவே உள்ளது. எனவே குறைந்த தொகையிலே பாலத்தைக் கட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதுமட்டுமல்ல, இது 1924-லே கட்டப்பட்ட பாலம். மிகவும் பழுதாகி இருக்கிறது. இதைக் கட்டிக் கொடுத்தால் நம்முடைய அரசுக்கும், நமக்கும், மக்களுக்கும், போக்குவரத்திற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லி, இதை அரசு ஆராய்ந்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் பிள்ளையூர்-ஏனாதி சாலையில் இராஜாமடம் வாய்க்காலில் அமைந்து இருக்கிறது. இப்போது 8 மீட்டர் அகலத்தில் 2 கண்களைக் கொண்ட பாலம் அங்கே இருக்கிறது. வெகு நாட்களுக்கு முன்பு கட்டப்பட்ட பாலமாக இருந்தாலும், அதை மீண்டும் கட்டவேண்டும், திரும்பக் கட்டவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் தோராயமாகத் தேவைப்படுகிறது. எனவே, இப்போது துறையினுடைய நிதிநிலைக்கு ஏற்ப தற்சமயம் எடுத்துக்கொள்ள இயலாத நிலை இருக்கிறது. எதிர்காலத்தில் இதை 'நபார்டு' திட்டத்தின் மூலம் எடுத்துச் செய்ய முடியுமா என்ற சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 373, திரு. இரா. மூக்கப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**373—**

### தரைப்பாலம்

***26789—திரு. இரா. மூக்கப்பன்:***

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 25]

(அ) கள்ளக்குறிச்சி - விளம்பார் செல்லும் சாலையில் ஏரி கோடி தண்ணீர் செல்லும் இடத்தில் தரைப்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியிலிருந்து விளம்பார் செல்லுகின்ற அந்தச் சாலையில் ஏரியினுடைய கோடி தண்ணீர் செல்வதாலும், பக்கத்தில் இருக்கின்ற 10, 15 கிராமங்களில் இருந்து விவசாயிகள் கரும்பு ஏற்றிச் செல்லுகின்ற நேரத்தில் அந்த ஏரிக் கரையிலே ஏறிச் செல்லுகின்ற அந்த வழித்தடம் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதாலும் அங்கே ஒரு குழாய்ப் பாலமாவது அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பார்-புக்கவாரி சாலையில் இருக்கின்ற இந்தப் பாலம் hard bed கடின தளம் போட்ட பாலமாக அமைந்திருக்கிறது. மழைக் காலத்திலேதான் அந்த ஓடையிலே தண்ணீர் வருகிறது. மற்ற காலங்களில் பெரும்பாலும் தண்ணீர் வருவதில்லை. குழாய்ப்பாலம் அமைப்பதைவிட இந்தக் கடின தளப் பாலம் சிறந்தது என்று துறை கருதுகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று எதிர்காலத்தில் இது குறித்து ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 374, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 25

**374—**

**சேமிப்புக் கிடங்குகள்**

***20469*—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குகள் எத்தனை இடங்களில் உள்ளன?

*(ஆ)* இதில் எவ்வளவு பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* தமிழ்நாட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான *141* இடங்களிலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான *54* இடங்களிலும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான *20* இடங்களிலும், இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமான *12* இடங்களிலும் கிடங்குகள் உள்ளன.

*(ஆ)* தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் *2,105* பணியாளர்களும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களில் *417* பணியாளர்களும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் *379* பணியாளர்களும் இந்திய உணவுக் கழகத்தில் *2,779* பணியாளர்களும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உணவு சேமிப்புக் கிடங்குகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவரும் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்களா? நிரந்தரம் செய்யப்படாமல் பணியாற்றுகின்ற தினக்கூலித் தொழிலாளர்கள் அதிகம் பேர் உள்ளார்களா? அதுகுறித்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் *2,105* பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதிலே ஏற்கெனவே நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருந்து நேரடியாக எடுக்கப்பட்ட பணியாளர்கள்



2000 ஏப்ரல் 25]

அத்தனை பேருமே நிரந்தரப் பணியாளர்களாக இருக்கிறார்கள். ஆனால் மூட்டை தூக்கும் தொழிலாளர்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த வருடம் மே *1* ஆம் தேதியன்று நிரந்தரப்படுத்துவோம் என்று சொல்லி கிட்டத்தட்ட *1,500* தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மற்ற தொழிலாளர்களுடைய, *10* ஆண்டு காலம் வேலை செய்ததற்குரிய அந்தக் கணக்கு சரியாக இல்லாத காரணத்தால் கொஞ்சம் தாமதமாக இருக்கிறது. அத்தனை தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்தச் சொல்லித்தான் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதேபோல தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திலே *417* பேர் நிரந்தரப் பணியாளர்களாகவும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே *379* பேர் நிரந்தரப் பணியாளர்களாகவும், இந்திய உணவுக் கழகத்தில் *2,779* பேர் நிரந்தரப் பணியாளர்களாகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப்பொருள் சேமிப்புக் கிடங்கிலிருந்து ரேஷன் கடைகளுக்கு உணவுப் பொருள் வரும்போது, சேமிப்புக் கிடங்கிலிருந்து வரும்போதே எடை குறைச்சலாக வருகிறது, அதனால்தான் ரேஷன் கடையிலே நாங்கள் உணவுப் பொருளை குறைத்துக் கொடுக்கிறோம்' என்று சொல்லி மேற்கொண்டு, மேற்கொண்டு ரேஷன் ஊழியர்கள் தவறு செய்கிறார்களே, இதைச் சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? உணவுப்பொருள் கிடங்கிலிருந்து ரேஷன் கடைக்கு வரும்போதே உணவுப் பொருள் குறைவாக வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா.நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கழகத்திலிருந்து அரிசி எடுத்துக்கொண்டு வருகின்றபோது ஒவ்வொரு மூட்டையும் ஒவ்வொரு எடை இருக்கிறது. ஆனால், மொத்தத்திற்கும்தான் எடை. நாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொண்டுவருகின்றபோது அதில் இருக்கின்ற அரிசியை மொத்தமாக எடைபோட்டு வாங்கி நாம்தான் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே மீண்டும் குறைவாக இருக்கின்றதை கூடுதலாக்கி சரிசமமாக *101* கிலோ ஆக்குகின்றோம். அதனால் அங்கிருந்து குறைவாக வருவதற்கு வாய்ப்பு இல்லை.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி கொள்முதல் மூலமாக நாம் நெல் கொள்முதல் செய்கின்றோம். அப்படிக் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் திறந்தவெளியில் வைத்திருக்கின்ற காரணத்தினால் ஏராளமான நெல் மூட்டைகள் வீணாகப் போகின்றன. எனது மாவட்டத்தின் அருகில் இருக்கக்கூடிய சிதம்பரம் தொகுதியில், கீரப்பாளையத்தில்கூட இப்படி நெல் மூட்டைகளைத் திறந்தவெளியில் அடுக்கி வைக்கின்ற காரணத்தினால் நெல் மூட்டைகள் பாழாகிப் போயிருக்கின்றன. எனவே நெல்லினைச் சேமித்து வைப்பதற்காக அந்தப் பகுதியிலே கூடுதலாக ஒரு கிடங்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சம்பா பருவத்திலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 2 மாத காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினுடைய அளவு கிட்டத்தட்ட 11 இலட்சம் டன்கள். ஆனால், நம் தமிழ்நாட்டில் இருக்கின்ற இந்த 4 நிறுவனங்களிலும் கூடுதலாக வைக்கக்கூடிய அளவு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மொத்தம் 6,21,460 மெட்ரிக் டன்களும், அதேபோல தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே 5,98,210 டன்களும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே 4,36,638 டன்களும், இந்திய உணவுக் கழகத்திலே 5,53,247 டன்களும் வைக்கக்கூடிய அளவுக்குத்தான் இங்கே கிட்டங்கி வசதி இருக்கிறது. திடீரென்று 3 மாத காலத்தில் 11 இலட்சம் 12 இலட்சம் டன் என்று கொள்முதல் செய்யப்படுகின்றபோது Open Cap Storage தான் செய்ய வேண்டியிருக்கிறது. இது வருடந்தோறும் வருகின்ற காரணத்தினால் மத்திய அரசு உதவியோடு புதிய கிட்டங்கிகளைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்து இருக்கிறோம். மத்திய அரசில் அதற்கு மானியம்கூட 40 சதவீதம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அனுமதி அளித்தவுடன் பல பகுதிகளிலே- தமிழ்நாட்டிலே எங்கெங்கு தேவை என்பது ஏற்கெனவே குறிப்பிட்டவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மத்திய அரசு அனுமதித்தவுடன் அந்த வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த தொழிலாளர்களை மாண்புமிகு



2000 ஏப்ரல் 25]

முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று நிரந்தரப்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் மகிழ்ச்சி. இந்திய தொழிலாளர் நலச் சட்டப்படி 2 வருடத்தில் 480 நாட்கள் பணி புரிந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று சட்டம் வரையறுத்துக் கூறியிருக்கிறது. அரசின் சட்டப்படி பார்த்தால் 480 நாட்கள் பணியாற்றியவர்களை நிரந்தரப்படுத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் இருப்பது அரசின் சட்டத்தையே இன்னொரு துறை அகௌரவப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு 480 நாட்களுக்கு மேல் பணிபுரிந்திருக்கிற தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று தெரிவித்து, 1,500 தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திய பிறகு, ஏன் 480 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தவில்லை என்று கேட்கின்ற பொதுவுடைமை இயக்கக்காரர்கள் கடந்த காலத்தைக் கொஞ்சம் யோசனை செய்து பார்க்க வேண்டும். நாங்கள் செய்கிறோம். அந்தத் தொழிலாளர்களை யாரும் எந்தக் கேள்வியும் எப்போதும் கேட்க முடியாத நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களாக வருவார்கள், அவர்கள் செய்வதுதான் வேலை. அவர்களை வெளியே போகச் சொல்ல முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்களை ஒழுங்குப்படுத்த வேண்டும் என்று இப்போது எடுத்திருக்கின்ற முயற்சியிலேதான் நிரந்தரப்படுத்துகின்ற அந்தப் பணியையே ஆரம்பித்து இருக்கின்றோம். இதிலே கடந்த காலத்திலே அவர்களே தங்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கேட்கவில்லை. எங்களுக்கு ஓர் அடையாள அட்டை மட்டும் தாருங்கள் என்றுதான் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களை நிரந்தரப்படுத்துகின்ற பணியை உள்ளபடியே சரியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே உண்மையான தொழிலாளர்கள், 10 ஆண்டு காலம் நிர்ணயம் பண்ணியது எதற்கு என்றால், அங்கிருக்கின்ற அதிகாரிகளோடு, அங்கிருக்கின்ற அந்த நிர்வாகத்தோடு, ஒத்துழைத்து பணியைச் செய்தால்தான் இந்த 30 நாட்கள் நடைபெறுகின்ற பணி தொய்வு இல்லாமல் நடைபெறும். அதிலே இடையிலே வந்த சில தொழிலாளர்கள் வேண்டுமென்றே குறுக்கிடு செய்கிறார்கள். அதனால்தான் அந்த 10 ஆண்டுகாலம் என்று வைத்து இருக்கிறோம். இதை முடித்த பிறகு நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனைப்படி அந்த காலக்கெடுவைக் குறைத்து ஒவ்வோர் ஆண்டும் அந்தத்

[2000 ஏப்ரல் 25

தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்குரிய பணியை எடுக்க விருக்கிறோம். நிச்சயமாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 375, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**375—**

**தமிழ்நாடு கூட்டுறவு வங்கி**

***27608—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:***

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்டை மாநிலங்களைப்போல தமிழ்நாட்டில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பெயர்களை தமிழ்நாடு கூட்டுறவு வங்கியாகப் பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பெயர்களை தமிழ்நாடு கூட்டுறவு வங்கி என மாற்றம் செய்ய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்களில் மாநிலக் கூட்டுறவு வங்கி, அதனையடுத்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்று இரண்டு அடுக்கு முறைதான் உள்ளது. ஆனால், தமிழ்நாட்டிலே மட்டும் மத்தியக் கூட்டுறவு வங்கி என்று நடுவிலே ஓர் அமைப்பு முறை வருகிறது. மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் கூட்டுறவு முறை மிகச் சிறப்பாகச் செயல்படுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கெல்லாம்கூட அதிகாரிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டிலே மட்டும் அதிகாரிகளுடைய எண்ணிக்கை கூடுதலாகவும், ஊழியர்களுடைய



2000 ஏப்ரல் 25]

எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதாகப் பரவலாகப் புகார்கள் உள்ளன. எனவே, முன்பு ஒரு ரெஜிஸ்ட்ரார் இருந்த இடத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? ஏதாவது பொருத்தம் இருக்க வேண்டாமா, உங்கள் துணை வினாவிற்கும் மூலக் கேள்விக்கும் என்ன தொடர்பு? இதை கூட்டுறவுத் துறை மானியத்திலே பேசிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இது எப்படி துணை வினாவாக அமைய முடியும்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** எனவே, இந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கையைக் குறைத்து, ஊழியர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இலாபகரமாக நடப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதேபோல, 1994 ஆம் ஆண்டிலே கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்குத் தரப்படுவதாக ஒப்பந்தத்திலே போடப்பட்ட ஓர் இன்கிரிமென்ட் இன்று வரையிலே தரப்படவில்லை. அதனைத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இருக்கின்ற இரண்டு, மூன்று மாநிலங்களிலே மட்டும்தான் கூட்டுறவுத் துறை இரண்டு அடுக்கு முறையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆனால், தொன்றுதொட்டு, மாநிலத் தலைமை வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கி, தொடக்க வங்கி என்று 3 அடுக்கு முறையாக நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதிலே, நீங்கள் பார்த்தீர்களேயானால், தமிழ்நாட்டிலே, இந்தியாவிலேயே சிறந்த வங்கியாகத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படுவது நம்முடைய தலைமை வங்கிதான். மற்ற இடங்களிலே கூட்டுறவுத் துறையிலே சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர, இந்தியாவிலேயே தொடர்ந்து நமது தலைமை வங்கிதான் தொடர்ந்து சிறந்த வங்கியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, ஊரக வளர்ச்சி வங்கி இந்தியாவிலேயே இரண்டாவது வங்கியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்ததற்குக் காரணம், இடையிலே 20, 22 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து தேர்தலே நடத்தப்படாமல், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாததாலும், தொடர்ந்து வெள்ளம், வறட்சி என்று மாறி, மாறி வந்து, நம் அரசு எடுத்த அந்த முடிவு அவர்களுக்கு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என்றெல்லாம் செய்யப்பட்டது, இப்படி, பல்வேறு பிரச்சினைகளின் காரணமாகச் சில இடங்களிலே, ஆயிரத்திற்கும்

மேற்பட்ட வங்கிகள் நலிவடைந்திருக்கின்றன. அவற்றைக்கூட நிமிர்த்துவதற்கு, நலிவடைந்தவைகளை எடுத்து அவைகளை வலுவான முறையிலே செயல்படுத்துவதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அவர்களுக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறோம். அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள்; தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்ற கணக்கு இல்லை. ஏற்கெனவே இருந்ததைப்போல நில வள வங்கிகள் என்று எடுத்துக் கொண்டால் 2 வங்கிகள், 3 வங்கிகளுக்கு ஓர் அதிகாரி என்ற அளவில்தான் இப்போதும் போடப்பட்டிருக்கிறது. பல இடங்களிலே தலைவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் எங்களுக்கு அதிகாரிகளே தேவையில்லை என்று தடையாணைகூடப் பெற்றிருக்கிறார்கள். ஒரே அளவு, அந்தக் காலத்திலேயிருந்த அதே அதிகாரிகள்தான் இன்றளவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நமது முதலமைச்சர் அவர்கள், இருக்கின்ற பணியிடங்களை நிரப்புவதற்காகப் புதிய உத்தரவு ஒன்றைத் தந்திருக்கிறார்கள். அதையும் மே மாதம் 3 ஆம் தேதி கூட்டுறவுத் துறை மானியத்திலே அறிவிக்க இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே பணியாளர்களை சீனியாரிட்டி அடிப்படையில் நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் அரசாணையைப் பிறப்பித்தார்கள். அந்த வகையிலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி துணை வினாவாக அமையும்? அவருக்கு, தீரனுக்குச் சொல்லும்போதும் நீங்கள் கேட்டுக் கொண்டுதானே இருந்தீர்கள்? இது துணை வினா ஆகுமா?

**திரு. சி. ஞானசேகரன்:** மத்தியக் கூட்டுறவு வங்கி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கூட்டுறவுத் துறை மானியத்திலே பேசும்போது, இதைப் பேசுங்கள். இதற்கு விளக்கம் பெறுங்கள். இந்தக் கேள்வி, பெயர் மாற்றத்திற்குண்டான ஒரு கேள்வி. இதிலே துணை வினா எப்படி வரும்?

**திரு. சி. ஞானசேகரன்:** சம்பந்தப்பட்டதால் கேட்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தம் இல்லை என்று தீர்ப்புக் கூறுகிறேன். உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே—

**திரு. சி. ஞானசேகரன்:** G.O.வை மாற்றிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரிதான். நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையில்லை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. இந்த மூல வினாவிற்கும் உங்கள் துணை வினாவிற்கும் தொடர்பில்லை என்கிற ஒரேயொரு கருத்தைத்தான் நான் சொல்கிறேன், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Seniority அடிப்படையிலே இருந்தது. இப்போது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தீர்ப்புச் சொல்லிவிட்டேன். நீங்கள் என்னிடம் பேசினீர்கள் என்றால் பதில் சொல்ல நான் மந்திரி இல்லை, நீங்கள் உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில், மாநில அரசு அமைத்த ஒரு கமிஷன், முருகராஜ் கமிஷன், மத்திய வங்கி ஊழியர்களுக்குப் பென்ஷன் வழங்குவதற்குரிய பரிந்துரைகளை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அந்தப் பரிந்துரை கடந்த 3 ஆண்டுகளாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் சொல்கிறதே, அதுவும் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நிதி நெருக்கடியும் இல்லாத ஓர் ஆலோசனை; தொழிலாளர்களின் வைப்பு நிதியிலிருந்து அந்தப் பென்ஷன் பணம் வழங்குகிற திட்டம் அது. எனவே, அந்தத் திட்டத்தை அரசாங்கம் அமலாக்க முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு நிதி பாதிப்பு எதுவும் இல்லை என்கிறார். அதேநேரத்தில் ஏற்கெனவே ஆராயப்பட்டு, வழங்கப்பட்ட அந்த அறிக்கையிலே ஊழியர்களுடைய வைப்பு நிதி எந்த அளவு இருக்கிறதோ, அதே அளவிற்குத் தருவது என்றால் நாங்கள் இப்போது தயாராக இருக்கிறோம். ஆனால், அந்த வைப்பு நிதியை அவர்கள் கட்டுகிற அளவிற்கு வங்கியிலிருந்து பணம் கட்டச் சொல்கிறார்கள். அப்போது வங்கியினுடைய வரவு-செலவு கணக்கைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதுதான் இப்போது இருக்கின்ற சிக்கல். அதைக்கூட இப்போது ஆராய்ந்து

[2000 ஏப்ரல் 25

கொண்டிருக்கிறோம். விரைவிலே முதலமைச்சர் அவர்கள் நல்ல ஒரு முடிவை அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார், இதற்குத் தொடர்புடைய வினாவாக இருக்க வேண்டும்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளிலும், கூட்டுறவுப் பண்டகசாலைகளிலும் பணிபுரியும் ஊழியர்கள் V.R.S. என்று மனமுவந்து விருப்ப ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வுபெறும் காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த Pension மற்றும் Gratuity ஆகிய தொகைகளை இன்னும் வழங்காமல் அவர்கள் மிகுந்த கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனை உடனடியாக ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் படித்துப் படித்துச் சொல்கிறேன், மூல வினாவிற்கும், துணை வினாவிற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று. அமைச்சர் பதில் சொல்ல விரும்பினால் சொல்லலாம், இல்லாவிட்டால் இதற்குப் பதில் சொல்லாமல் இருக்கலாம். இது தொடர்பில்லாத வினா.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரே ஒரு மொத்த விற்பனைப் பண்டகசாலையினுடைய தலைவர். அதுதான் அவர் கேட்கிறார். கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் இருக்கிற, Voluntary Retirement கொடுத்த தொழிலாளர்கள் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலிருந்துதான் கொடுத்திருக்கிறார்கள். திருச்சி சிந்தாமணி, கோவை சிந்தாமணி போன்ற பகுதிகளிலே, அவர்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து 3 கோடி ரூபாய் பணம் தரப்பட்டு, அவர்களுக்கு எல்லாம் பணம் தந்து அனுப்பிவைக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்போது திடீரென்று 6 கோடி, 7 கோடி ரூபாய் கொடுங்கள் என்று சொன்னால் கொடுக்க இயலாது. கிட்டத்தட்ட 33 மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலே 6, 7 மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மட்டும்தான் இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மற்றவை அத்தனையுமே சம்பளம் கொடுப்பதற்குக்கூடச் சிரமமான சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அதற்காகத்தான் நாம் இப்போது புதிய முடிவெடுத்திருக்கிறோம். அவர்களுக்குத் தேவையில்லாமல் சொத்துக்கள் இருக்குமானால் அதை கலெக்டர் தலைமையிலே ஒரு குழு அமைத்து அவர் நிர்ணயிக்கின்ற விலைக்கு வேறு ஒரு கூட்டுறவுத் துறை எடுக்குமானால் அவர்களுடைய பணத்தை நேர் செய்து உடனடியாக வழங்கலாம் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கோவையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. திருச்சியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய விருதுநகர் மாவட்டத்தில் இருக்கிற மொத்த விற்பனைப் பண்டகசாலையிலும் அப்படி ஏதாவது திட்டம் இருக்குமானால் இந்த அரசு அவர்களுக்கும் அனுமதி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 376, திரு. மு.பெ. சாமிநாதன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**376—**

### E.S.I. மருத்துவமனை

***29615—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவிலில் E.S.I. மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அமைச்சரிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் இடத்திலும் வெள்ளக்கோவில் பகுதியில் தொழிற்சாலைகள் அதிகமாகிவிட்ட காரணத்தினால் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையில் அங்கே E.S.I. மூலம் ஒரு மருந்தகம் அமைப்பதற்காக விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். அதை வைத்து அங்கே E.S.I. மூலமாக கருத்துரு முன்மொழிவு வழங்கப்பட்டு வருகிறதா என அறிய அலுவலகத்தைத் தொடர்புகொண்ட நேரத்திலே ஒரு சில காரணங்களால்

அந்தப் பணி தடைப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கடந்த வாரத்தில் தகவல் கிடைத்துள்ளது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அதிலே கவனம் செலுத்தி, மிக விரைவாக அந்த E.S.I. மருந்தகம் வெள்ளக்கோவில் பகுதியில் அமைய மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோவிலிலே E.S.I. மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒரு கோரிக்கை அடங்கிய கடிதத்தைக் கொடுத்தவுடனே உரிய அதிகாரிகளுக்கு அது அனுப்பிவைக்கப்பெற்றது. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதிக் கழக மண்டல இயக்குநர், நிர்வாக மருத்துவ அலுவலர், தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர், இவர்கள் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பொறுத்தமட்டில் E.S.I. மருத்துவமனை தொடங்குவது குறித்து எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. பயனாளிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனாலும் முறைப்படி கவனத்தோடு அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகாவிற்கு உட்பட்ட பணகுடி, கூடங்குளம் ஆகிய இரு பகுதிகளிலும் E.S.I. மருத்துவமனை ஆரம்பித்த பின்பும் புதிய கட்டடமும், முழு நேரமாக அங்கு மருத்துவர்களும், செவிலியர்களும் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கும், முழுநேரம் மருத்துவர்களும், செவிலியர்களும் தங்கியிருந்து பீடித் தொழிலாளர்களுக்குச் சிகிச்சை அளிக்க முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.



**திரு. பா. மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளில் E.S.I. மருத்துவமனை மற்றும் அந்தத் தொழிற்சாலைகளே மருத்துவமனைகளை அமைப்பது என்பது நடைமுறையிலே உள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் அதிகமாக இருக்கிற பகுதிகளில் அந்தந்தத் தோட்ட நிர்வாகம் மருத்துவமனைகளை அமைத்து சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று அரசு விதிகளில் இருந்தும், சில தனியார் தோட்டத் தொழிற்சாலைகளில் மருத்துவமனைகள் பெயருக்குச் செயல்பட்டு வருவதும், அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களே நேரில் நீலகிரி மாவட்டத்திற்கு வந்து பிராஸ்பக்ட், சீபோர்த் போன்ற தோட்டங்களில் மருத்துவமனைகள் மிக மோசமாக இருந்ததைக் கண்டறிந்தார்கள். அதுகுறித்து தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? அப்படி இல்லையென்றால் உடன் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Plantation Labour Act-ன்படி தொழிலாளர்களுக்குப் பல நல வசதிகள் செய்து கொடுப்பது கட்டாயமானது ஆகும். அப்படிச் செய்யவில்லையென்றால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். தோட்ட முதலாளிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவமனை போன்ற வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அப்படிச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை எங்களுடைய துறை கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. பல இடங்களிலே மருத்துவமனைகள் இருக்கின்றன. சில இடங்களில் இல்லையென்று புகார் வருகிறது. அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, E.S.I. மருத்துவமனை, குறிப்பாக முந்திரி ஆலைத் தொழிலாளிகளுக்காக ஓர் ஆண்டுக்கு முன்னாலே தொடங்கப்பட்டு, இன்னும் அந்த மூன்று மருத்துவமனைகளிலேயும் தேவையான மருத்துவர்களோ செவிலியர்களோ இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கிறது என்பது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைப் போக்குவதற்குத் தேவையான பணியாளர்களையும், மருந்துகளையும் அங்கே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்று நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதியிலே தொழிலாளர்களுக்கு E.S.I. மருத்துவமனை வசதி கிடையாது. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இப்போதுதான் அந்த வசதி பெறப்பட்டிருக்கிறது. அங்கே டாக்டர்கள் மற்ற பணியாளர்கள் சரியாக இல்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நானும், நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், இரண்டு பேருக்கும் சம்பந்தமான பிரச்சினை E.S.I. என்பதனாலே, நாங்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். அந்த ஆய்விலே அதுகுறித்துப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துணை வினாவிற்குப் பதில் அளிக்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெள்ளக்கோவிலில் E.S.I. மருந்தகம் அமைப்பது சம்பந்தமாக, ஆய்வு செய்த நேரத்தில் நம்முடைய தொழிற்சாலை தலைமை ஆய்வாளருடைய புள்ளிவிவரத்திலே, தொழிலாளர்கள் அங்கு போதவில்லை என்கின்ற விவரத்தை அளித்ததாகப் பதில் சொன்னார்கள். அது தவறான ,தகவல். E.S.I.-யினுடைய ஆய்வாளர்கள் வந்து ஆய்வு செய்த நேரத்திலே தேவையான தொழிலாளர்கள் இருப்பதாக என்னிடத்திலேயே அந்த இணை இயக்குநர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், சேப்பாக்கத்திலுள்ள தொழிற்சாலை தலைமை ஆய்வாளருடைய விவரம் தவறான தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தந்திருக்கிறது. அதனாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே தீவிர கவனம் செலுத்தி அங்கே மருந்தகம் அமைக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கைகள் தவறாக இருந்தால் திருத்தப்பட்டு சரிசெய்யப்படும். மொத்தத்திலே எல்லோருமே வெள்ளக்கோவிலிலே E.S.I. மருத்துவமனை அமைக்கலாம் என்ற செயற்குறிப்பைத்தான் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 377, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-20

**377—**

**தொழிற் பயிற்சி நிலையம்**

***37791—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகவுள்ளதால் அங்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் அதிலும் குறிப்பாக பெண்ணாகரம் தொகுதி என்பது எவ்விதத் தொழில் வசதியும் இல்லாத, கல்வி நிறுவனங்கள் அதிக அளவில் இல்லாத, மிகவும் பின்தங்கிய பகுதி என்ற காரணத்தாலே, இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், அங்கே கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில், ஏழை எளிய மக்கள் கல்விபெற வேண்டுமென்று சொல்லி, கடந்த ஆண்டுகூட நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தொடக்கப்பள்ளிகளைப் பெரிதும் மனது வைத்து வழங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து

[2000 ஏப்ரல் 25

இருக்கிறோம். அதை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த பின்தங்கிய மாவட்டம், பின்தங்கிய பகுதிகள் முன்னேறக்கூடிய வகையிலே என்னுடைய தொகுதியிலே அரசினர் தொழில் பயிற்சி நிலையம் நடப்பு ஆண்டில் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதியிலே ஏற்கெனவே அன்பு தொழில் பயிற்சி மையம், சுவாமி விவேகானந்தா தொழில் பயிற்சி மையம் என்று இரண்டு I.T.I.கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, இது இப்போது தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். ஆனாலும் பின்தங்கிய மாவட்டங்களில் எல்லாம், எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் I.T.I. இல்லையோ, அங்கெல்லாம் அது உருவாக்கப்பட வேண்டுமென்று கொள்கை முடிவெடுத்து, தேர்தலிலும் அவற்றை அறிக்கையாக வைத்து, 'சொல்லியதைச் செய்கிறோம்' என்ற வகையில், இப்போது செயல்படுத்தப்பட்டு, மொத்தம் 95 ஊராட்சி ஒன்றியங்களில்தான் பாக்கி இருக்கிறது. அவைகளுக்கும் விளம்பரப்படுத்தப்பட்டு, 35 விண்ணப்பங்கள்தான் வந்திருக்கின்றன. ஆக அரசு இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களை எல்லாப் பகுதிகளிலும் தமிழகம் முழுவதும் தொடங்க வேண்டுமென்ற கொள்கையில் வெற்றி நடைபோட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் தொழில் பயிற்சி நிலையங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதனால் நடப்பு ஆண்டில் அரசு தொழில் பயிற்சி நிலையம் தொடங்க அரசு முன்வருமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏற்கெனவே 53 அரசு தொழில் பயிற்சி நிலையங்களும், 590 தனியார் தொழில் பயிற்சி நிலையங்களும் ஆக மொத்தம் 643 தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அரசைப் பொறுத்தமட்டிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, உடல் ஊனமுற்றவர்களுக்காக, பெண்களுக்காக என்று இப்படி எல்லோருக்குமாக தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. தனியார் முன்வருவார்களேயானால், அவர்கள் தொழில் பயிற்சி நிலையங்களைத் தொடங்குவது குறித்து பிரச்சினையே கிடையாது. நாங்கள் ஆதரிக்கிறோம். ஏற்கெனவே இருக்கிறது. ஆகவே, எல்லா இடங்களிலும் அரசுதான் அதைத் தொடங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 378, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**378—**

## காடாத் துணிகள் தேக்கம்

***29560—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோமனூர், பல்லடம், திருப்பூர், அவினாசி பகுதிகளில் காடாத் துணிகள் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தேக்கத்திற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோமனூர், பல்லடம், திருப்பூர், அவினாசி பகுதிகளில் தனியார் துறையில்தான் காடாத் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கிவரும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேக்கம் எதுவும் ஏற்படவில்லை. தனியார் உற்பத்தி செய்து தேங்கியுள்ள ஜவுளி இரகங்களை விற்பனை செய்வது தொடர்பான திட்டம் ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பகுதியினுடைய பல்லடம், திருப்பூர், சோமனூர், அவினாசி போன்ற பகுதிகளில் காடாத் துணிகளை கூலிக்கு நெய்து தருகின்ற விசைத்தறியாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பாக, கிராமப்புற விவசாயிகளின் வேலைவாய்ப்பாக அந்தக் கூலிக்கு நெசவு நெய்கிற விசைத்தறிகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. இன்றைக்கும் தனியார் துறையிலே கடுமையான காடாத் துணிகள் தேக்கம் இருக்கிறது. வேண்டுமானால் இந்த இரண்டொரு மாத காலத்திற்குள் ஓரளவுக்கு சாதகமான நிலை இருந்தாலும், நடைமுறையில் அங்கே நெருக்கடிதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நமது மாநில அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, கூலிக்கு நெசவு செய்து வருகின்றவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவதால், காடாத் துணிகள் தேக்கம் ஏற்படுகிறது.

[2000 ஏப்ரல் 25

இதனால் கூலிக்கு நெசவு நெய்யக்கூடிய அந்த விசைத்தறி உரிமையாளர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகள் இருப்பதை மாநில அரசு உணர்ந்து, அவர்களின் மின்சாரக் கட்டணமும்— அதேநேரத்தில் அவர்களால் தொழில் நடத்துவதற்காக பெறப்பட்டிருக்கிற கடன்களுக்கான வட்டி நோட்டீஸ் போன்ற நடவடிக்கைகள் இருப்பதும், அந்தத் தொழில் இயங்குவதைக் கடுமையாகப் பாதித்து இருக்கின்றன. இவை குறித்துப் பரிவோடு அரசு பரிசீலித்து, அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்குரிய மாற்று வழிகளை ஆராய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-25*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாங்கிய கடனை திருப்பிக் கட்டக்கூடிய வாய்ப்பு இல்லாத சூழ்நிலையிலே காடாத் துணிகள் தேங்கி இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறாரே அது மேல்மட்டத்திலே கலந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை. ஆனால், உற்பத்தி செய்யப்படுகின்ற காடாத் துணிகளை நேரடியாக சந்தைக்கு விற்பனைக்கு அனுப்ப முடியாது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த காடாத் துணிகள், it is just a raw material— இது கச்சாப் பொருள்தான். இது ஏற்றுமதிக்காக வேண்டி ஆடைகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு காடாத் துணியே தவிர, மக்கள் மத்தியிலே கொண்டு சென்று, இதை விற்பனை செய்து, அதைக் காப்பாற்றிவிட முடியும் என்பது இயலாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல இரண்டு மாத காலத்திலே சற்று முன்னேற்றம் இதிலே ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தறிகளை வைத்திருக்கிற முதலாளிகள், அடுத்த கட்டமைப்பான ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள சில வழிமுறைகளை நம்மை அணுகி, கேட்பார்களேயானால் அதற்குரிய கட்டமைப்புகளை இந்த அரசு உறுதியாக நிறைவேற்றித் தரும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அமைச்சர் அவர்கள் அந்த காடாத் துணி நெய்பவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, அதற்குள்ள மார்க்கெட்டிங் நிலைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற குறிக்கோளோடுதான் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இப்போது ஏராளமான காடாத் துணி அங்கே தேங்கிக் கிடக்கிறது. சோமனூரிலே எல்லாம் இப்போது



2000 ஏப்ரல் 25]

தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத சூழ்நிலை வரும்போலத் தெரிகிறது. நான் அமைச்சரோடு நேரிலே ரெயிலிலே பேசிக்கொண்டு செல்லும்போதுகூடச் சொன்னேன். Just a raw material என்றாலும்கூட, நம்முடைய சிட்கோ போன்ற ஸ்தாபனங்கள் வழியாக அதற்கு ஒரு மார்க்கெட்டிங் உண்டாக்குவதற்கு, வெளிநாட்டிலே விற்பதற்கு உரிய வேலைகளை சிட்கோ மூலமாக நம்முடைய அரசு எடுத்து, அதைச் செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த நிலைகளை நாமும் முழுமையாக உணர்ந்திருக்கிறோம். ஆனால், இந்தக் காடாத் துணி மும்பையிலே இருக்கின்ற வியாபாரிகளை நம்பி உருவாக்கப்படுகின்ற துணியே தவிர, வேறல்ல. ஆனால், இவற்றையே மதிப்புள்ளவைகளாக, ஏற்றுமதிக்கு தகுதி உடையவையாக ஆக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்றால் நிச்சயம் தமிழகத்திலே அந்த வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இதை உற்பத்தி செய்கின்ற அந்த நெசவாளர்கள், அந்த விசைத்தறி உரிமையாளர்கள், இதற்கு மேல் அதிலே இலாப நட்டத்தைக் கருதி சில சங்கடங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்ற அடிப்படையிலேதான் இந்தக் காடாத் துணி உற்பத்தியோடு தமிழ்நாடு இன்றுவரை இருந்து வருகிறது. நிச்சயம் அதற்கடுத்த கட்டத்திற்கு அப்படிப்பட்ட உரிமையாளர்கள் அரசுடன் தொடர்புகொண்டு தக்க ஆலோசனைகளைக் கேட்டால், நிச்சயம் அந்தப் பணி சிறப்பாக நடைபெறும். வருகின்ற மானியக் கோரிக்கையிலே இதுகுறித்த சில விவரமான செய்திகளை—மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில் எப்படியெல்லாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை—நான் சொல்ல இருக்கின்றேன். ஆகவே, நிச்சயம் இவர்களுக்கு உரிய துணையை நல்லமுறையிலே என்னால் இயலக்கூடிய அளவிலே இந்த அரசு செய்து முடிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ்-லிருந்து காடா ரகம் பெற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆர்டர் கொடுக்கிறார்கள். ஆனால், கொள்முதல் செய்யமாட்டேன் என்கின்றார்கள். இதனால் நெசவாளர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். உதாரணமாக, சுந்தரபாண்டியம், வா. புதுப்பட்டி போன்ற இடங்களில் எல்லாம் ஆர்டர் கொடுத்து கொள்முதல் செய்யவில்லை. Export இரகத்தை தனியார்தான்

[2000 ஏப்ரல் 25

வாங்கிக்கொண்டு வருகிறார்கள். கோ-ஆப்டெக்ஸ்-லிருந்து வாங்க மாட்டேன் என்கிறார்கள். ஆகவே, கோ-ஆப்டெக்ஸ் மூலம் Export இரகம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க ஆவன செய்யப்படுமா? அப்படி தனியார் Export ரகம் தயார் செய்து கோ-ஆப்டெக்ஸ் சீல் குத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்றார்களே, இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்சைப் பொறுத்தவரையில் கைத்தறித் துறையிலே உற்பத்தி செய்கின்ற துணிகளைத் தவிர வேறு எந்தத் துணிகளையும் கொள்முதல் செய்வதே இல்லை. விசைத்தறிக்கும், கோ-ஆப்டெக்ஸுக்கும் சம்பந்தம் இல்லை. அதுபோல உற்பத்தித் திட்டம் கொடுக்கப்பட்டு இருந்தால், அந்த உற்பத்தித் திட்டத்தை முழுமையாகவும் அதற்கு மேலும் நாம் எடுத்திருக்கிறோம். மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது அப்படி ஓரிரு சங்கங்களிலே உற்பத்தி, உற்பத்திக்கான ஆர்டர் கொடுத்து, அது தேங்கி இருந்தால், எனக்குத் தெரிவித்தால், உடனடியாக அதைக் கொள்முதல் செய்வதற்குத் துறை தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது காடாத் துணிகளை விலை மதிப்புள்ள பொருள்களாக மாற்றி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு விசைத்தறி உரிமையாளர்கள் முன்வந்தால் அரசு உதவி செய்யும் என்று சொன்னார்கள். எல்லா விசைத்தறி உரிமையாளர்களுமே அதைப்போலச் செய்வதற்கு ஆசைப்படுகின்றார்கள். ஆனால், அரசு அதற்கு ஏதாவது ஒரு நிலையான வழிகாட்டுதல் வைத்திருக்கிறதா? அதற்காக ஏதாவது அமைப்புகள் இருக்கின்றனவா? Infrastructure இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் மும்பை நகரம்தான் இன்றைக்கு விசைத்தறியில் நமக்குப் போட்டியாக இருக்கிறார்கள். அங்கே சிறு விசைத்தறி உரிமையாளர்களுக்கு மின்சாரக் கட்டணத்திலே சலுகை வழங்கியிருக்கிறார்கள். அதைப்போன்ற ஒரு சலுகையை தமிழக அரசும் வழங்குமா என அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 25]

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் இங்கே தெரிவித்த அனைத்தையும் இந்த அரசும் சிந்தித்துக் கொண்டிருக்கிற நிலையில்தான் இருக்கிறது. இதிலே இருக்கிற சங்கடங்களை உணர்ந்துதான் ஏற்றுமதிக்கான அடிப்படை கட்டமைப்பை உருவாக்குவது. அவர்களுக்கு அதிலே ஒரு உத்வேகம் இருந்தால்தான் அந்தப் பணியை நடையால் அவர்களுக்குச் செய்து துணை நிற்க முடியுமே தவிர, அரசே முழுமையாக அதை ஏற்று செய்யக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால், நிச்சயம் எதிர்காலத்திலே விசைத்தறி துறைக்கென்று நாம் எடுக்கக்கூடிய நல்ல முடிவுகள் — கைத்தறிக்கு எப்படி நாம் சில சலுகைகளை அளித்திருக்கிறோமோ அதைப்போலவே விசைத்தறிக்கும் அளிக்கக்கூடிய வாய்ப்பு — இன்று மத்திய அரசினுடைய கொள்கை மாற்றத்தால் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, `Technical Upgradation Fund'-லே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இன்று பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் செயலாற்றினால், எப்படி கைத்தறித் துறைக்கு என்று ஓர் அமைப்பை உருவாக்கி வைத்திருக்கிறோமோ அதைப்போல விசைத்தறி உற்பத்திக்கும் ஓர் நல்ல அமைப்பை உருவாக்குகின்ற கொள்கையை அரசு திட்டமிட்டு அதனுடைய தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிச்சயம் விரைவிலே அதற்கும் நல்ல வழிமுறைகளை அரசு உறுதியாகச் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியிலே நெய்யப்படுகிற காடாத் துணி மட்டுமல்ல, அனைத்து இரகங்களுமே அவ்வப்போது சந்தை இல்லாமல் சிரமப்படுவதை அரசு அறிந்து இருந்தாலும்கூட, அதற்கு ஓரளவு நாம் நிவாரணம் அளிக்கின்ற வகையில், மின்கட்டணத்தில் ஓரளவு சலுகை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை இந்த அரசு செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பேசி முடிவு எடுக்கக்கூடிய ஒரு பிரச்சினை. ஆகவே, நிச்சயம் அதுபற்றி பேசுவதற்கு உரிய வாய்ப்பு அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 379, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**379—**

**புதிய கட்டடம்**

**24196*—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிராம்பட்டினம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அதிராம்பட்டினம் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிராம்பட்டினம் கால்நடை மருத்துவமனை, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் அமைந்திருக்கிறது. கிட்டத்தட்ட 25 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அந்தப் பேரூராட்சியிலும், அதைச் சுற்றியுள்ள கிட்டத்தட்ட 15 ஊராட்சிகளில் இருந்தும் கால்நடைகளெல்லாம் வருகை தருகின்றன. கட்டடம் மிக பழுதடைந்த நிலையில் இருக்கிற காரணத்தால், கால்நடை மருத்துவர்கள் வைத்தியம் பார்ப்பதற்கு கட்டடத்திற்குள்ளே போவதற்குச் சிரமப்படுகிறார்கள் என்பதைத் தெரிந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதற்கு நான் 'ஆம்' என்று சொன்னேன். ஏற்கெனவே அது ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொறுப்பிலே இருந்தது. இப்பொழுது பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டு, அதிராம்பட்டினம் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்புத் தனி நிதியாக ஒதுக்கீடு செய்ய 1998-99 ஆம் ஆண்டே கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக பொதுப் பணித் துறை, தலைமைப் பொறியாளருக்கு எழுதப்பட்டு, அதற்கு பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் ரூபாய் 5 இலட்சத்தை தஞ்சாவூர், பொதுப் பணித் துறை செயற்பொறியாளருக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணியை முடிக்க அறிவுறுத்தப்பட்டார். ரூ. 5 இலட்சம் போதாது என்றும், மேலும் 4 இலட்சம் ரூபாய் கூடுதலாகக் கேட்டு, 9 இலட்சம் ரூபாயாக தற்போது கேட்கப்பட்டு, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 380, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**380—**

**இறால் பண்ணைகள்**

**29347*—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்தில் எத்தனை இறால் பண்ணைகள் உள்ளன?

(ஆ) இவற்றில் அரசின் முறையான அனுமதியைப் பெற்றவை எத்தனை?

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீனளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) 28-3-2000 அன்று நிலவரப்படி கடலூர் மாவட்டத்தில் 160 இறால் பண்ணைகள் உள்ளன. இவற்றின் நிலப்பரப்பளவு 815 ஹெக்டேர் ஆகும்.

(ஆ) கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை எந்தவோர் இறால் பண்ணைக்கும் நீர்வாழ் உயிரின குழுமத்திலிருந்து A.A.I. அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் இப்படிப்பட்ட அனுமதி வழங்கப்படாத இறால் பண்ணைகள் முறையற்று, குடியிருப்புப் பகுதிகளிலும், விவசாய நிலங்கள் பகுதிகளிலும் அமைந்திருக்கிற காரணத்தால், நிலத்தடி நீர் உப்பு நீராகவும், விவசாய நிலங்கள் உவர் நிலங்களாகவும் மாறி, இன்றைக்கு விவசாயம் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இது அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் மிக இடையூறாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் உப்பலாறு, வெள்ளாறு கரைகளின் ஓரமாக அமைத்திருக்கக்கூடிய இறால் பண்ணைகளில் அந்தக் கரைகளைக்கூட தங்களுக்குச் சௌகரியமான வகையிலே உடைத்து, பல வகையில் தங்களுக்குச் சௌகரியமான நிலையிலே அமைத்துக்கொள்கின்ற காரணத்தினால் வெள்ளக் காலத்திலே ஊருக்குள்ளே வெள்ளம் புகுந்து மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, அரசு இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அங்கே உரிமம் பெற்று இறால் பண்ணை அமைப்பதற்கு ஆவன செய்யுமா? உரிமம் பெறாமல் அமைக்கப்படுகின்ற அந்த இறால் பண்ணைகளைத் தடை செய்ய அரசு முன்வருமா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பாணையை வழங்கியது. அந்தத் தீர்ப்பாணையின்படி மூன்று குழுக்கள் அதாவது, நீர்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமம் ஒன்று ஓய்வுபெற்ற நீதியரசர் இராமானுஜம் அவர்களின் தலைமையின் கீழும், மாநிலக் குழுமம் ஒன்றும், மாவட்டக் குழுமம் ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்தக் குழுமம் தமிழ்நாட்டிலுள்ள



2000 ஏப்ரல் 25]

இறால் பண்ணைகள் அழிக்கப்பட வேண்டாம் என்றும், ஏற்கெனவே அமைந்துள்ள இறால் பண்ணைகளும், புதியதாக இறால் பண்ணைகள் அமைக்க விரும்புவோரும் விண்ணப்பம் அளிக்க வேண்டுமென்றும், விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டு ஓர் உறுதியாணை வழங்க வேண்டும் என்றும், ஓர் உறுதியாணையை வழங்கி அந்த இறால் பண்ணைகள் இயங்கலாம் என்றும், அந்த உறுதியாணையில் அந்த இறால் பண்ணை வரையறுக்கப்பட்ட இடத்திற்கு அப்பால் முறை தவறி இருந்தால் அதை நாங்கள் அழித்துவிடுவோம் என்றும் உறுதியாணை வழங்கிவிட்டு அதை நடத்தலாம் என்றும் கூறியிருக்கிறது. கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை 109 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. இந்த 109 விண்ணப்பங்களில் இங்கே மாநில குழுமத்திற்கு அனுப்பப்பட்டது 77 விண்ணப்பங்களாகும். நீர்வாழ் உயிரின குழுமத்திற்கு அனுப்பப்பட்டது 55 விண்ணப்பங்களாகும். இந்த விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. இன்னும் 51 விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளன. அவை இன்னும் வராமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஆய்வு நடத்தப்பட்டு, பண்ணைகள் முறைப்படி இருந்தால் நடத்த, அரசு, அனுமதிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) காஞ்சிபுரம் அருகில் 5-4-2000 அன்று திரு. விஸ்வநாதன் சென்ற கார் எரிக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, காஞ்சிபுரம் அருகில் திரு. விஸ்வநாதன் மற்றும் நால்வர் சென்ற கார் 5-4-2000 அன்று எரிக்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புகள் கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

[2000 ஏப்ரல் 25

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-2000 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் வெள்ளைகேட் அருகே ஈஞ்சம்பாக்கம் என்ற பகுதியிலே முன்னாள் பாட்டாளி கட்சிச் செயலாளரும், வன்னியர் சங்கத்தினுடைய முன்னணித் தலைவர்களில் ஒருவருமான விஸ்வநாதன் அவர்கள் தங்களுடைய வன்னியர் சங்க கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பதற்காக சென்று கொண்டிருந்த நேரத்திலே, வேலூர் மாவட்ட பா.ம.க. இளைஞர் அணித் தலைவர் நெமிலி சண்முகம் என்பவருடைய தலைமையிலே இரண்டு டாட்டா சுமோ கார்களிலே சென்று அந்த விஸ்வநாதன் அவர்கள் சென்ற காரை தலைகீழாக புரட்டிப்போட்டு, ஒரிசாவிலே பாதிரியாரை எரித்துக் கொன்றதுபோல, அந்தக் காரை அப்படியே பெட்ரோல் ஊற்றி எரித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருந்த ஈஞ்சம்பாக்கம் காலனியைச் சார்ந்த பொதுமக்கள் ஓடோடி வந்து அந்த விஸ்வநாதனையும், அவரோடு இருந்தவர்களையும் காப்பாற்றிச் சென்றிருக்கிறார்கள். அன்றைக்கு அந்தக் காலனி மக்கள் மட்டும் இல்லையென்று சொன்னால், அந்த நான்கு பேரும் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டிருப்பார்கள். இப்படி அராஜகமான முறையிலே இத்தகைய செயல்களைச் செய்பவர்கள்மீது காவல்துறை இதுவரையிலே எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதேபோல, 7-4-2000 அன்று இராயப்பேட்டையிலே துரை என்பவருடைய அச்சகத்திலே கட்டுமானத் தொழில் செய்துகொண்டிருந்தபோது, அந்த ஒரு புத்தகம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், இந்தச் சம்பவத்தைப்பற்றி மட்டும் பேச வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இதையொட்டியதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுமாதிரி பல சம்பவங்கள் என்று சொல்லலாமேயொழிய, அந்த விவரங்களைச் சொல்வதற்கு உங்களுக்கு நேரம் கொடுக்கமாட்டேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்னுடைய பிரச்சினையும் இணைந்து இருக்கின்ற காரணத்தினாலேதான் நான் இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் சொல்லுங்கள், நான் அனுமதி கொடுக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. மணிவர்மா:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் சொல்லட்டும், நீங்கள் என்ன எனக்கு ஆர்டர் போடுவது?

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். திரு. மணிவர்மா மேல் நடவடிக்கை எடுப்பேன். ஒழுங்காக, மரியாதையாக நடந்துகொள்ளுங்கள். நீங்கள் யார் அங்கேயிருந்து பேசுவதற்கு? திரு. கணேசன், உட்காருங்கள். உங்களுக்கு, பிறகு வாய்ப்பு தருகிறேன். திரு. தீரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-4-2000 அன்று வாழப்பாடியார் அவர்கள் கூட்டிய வன்னியர் சங்க கூட்டத்திற்கு என்னையும் சிறப்பு அழைப்பாளராக அழைத்து இருந்திருந்தார்கள். நாங்கள் அந்தக் கூட்டத்திற்கு கலந்துகொள்ளச் சென்ற போது அங்கே கலாட்டா செய்வதற்காக சிலர் வந்திருந்தார்கள். அவர்கள் அராஜகம் செய்ய வந்தபொழுது தடுத்ததற்காக ஒரு காவல்துறை அதிகாரி, செல்வமணி என்கின்ற இன்ஸ்பெக்டரையே அடித்துப் புறங்கைகளையெல்லாம் கிழித்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதிலே உண்மையான குற்றவாளிகளாகிய, அந்த அச்சகத்தைத் தாக்கிய குற்றவாளிகள் டி.எஸ். மூர்த்தி, பிரகாஷ் போன்றவர்களின்மீது புகார் கொடுக்கப்பட்டும்கூட, அவர்களைக் கைது செய்யாமல், சாதாரணமான ஒருசில பேர்களைக் கைது செய்துவிட்டு அமைதியாக இருந்துவிடுகிறது காவல்துறை.

*முற்பகல் 10-40*

நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் 2-2-2000 அன்று விழுப்புரம் மாவட்டத்திலே நான் கொடியேற்றச் சென்றபோது, மேல்மலையனூர் பக்கத்திலே என்னுடைய காரைத் தாக்கி, என்னை ஜனநாயகக் கடமையை ஆற்றவிடாமல் தடுத்தார்கள்; வன்முறை செய்தார்கள். அதற்கு நாங்கள் புகார் கொடுக்கிறோம். அந்தப் புகாருக்கு எங்கள் மீதே நடவடிக்கை எடுத்து எங்கள் தரப்பைச் சார்ந்தவர்களையே கைது செய்துவிட்டு, எதிர்த் தரப்பிலே ஒரு பொய்ப் புகார்

கொடுக்கிறார்கள்; அதற்கு எங்களவர்களை, எங்கள் கட்சியினரையே கைது செய்து காவலிலே வைக்கிறது காவல் துறை. நான் இந்த நேரத்திலே என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், அதே 2-2-2000 அன்று கடலூரிலே அனைத்துக் கட்சிப் பேரணி, பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. அங்கே டாக்டர் ராமதாஸ் அவர்கள் வெளிப்படையாகவே பேசுகிறார். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்தவர்களோடு மோதத் தயார். எந்த இடத்தைச் சொல், வந்து மோதுகிறோம் என்று வெளிப்படையாகவே இப்படி வன்முறையைத் தூண்டுகிறவகையிலே பேசியிருக்கிறார்கள். இது காவல் துறையிலே பதிவாகி இருக்கிறது.

அதுமட்டுமல்ல. மாமல்லபுரத்திலே நடைபெற்ற 18 ஆம் தேதி பொதுக் கூட்டத்திலேகூட..... (மணியடிக்கப்பெற்றது)

**திரு. ஐ. கணேசன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எந்தப் பொருளைக் கொடுத்துப் பேச அனுமதித்தீர்கள்? அவர் எதைஎதையோ பேசிக்கொண்டிருக்கிறார். அதே அனுமதியை எங்களுக்கும் நீங்கள் வழங்க முன்வருவீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன் சொல்வதில் பொருள் இருக்கிறது. நான் படித்துப் படித்து உங்களிடம் சொல்லிவிட்டேன். நீங்கள் தீர்மானம் கொடுக்கும்போது பத்து சம்பவங்களைக் கொடுத்துத் தீர்மானம் கொடுத்திருந்தால்கூட உங்களுக்கு அனுமதி கொடுக்கமுடியும். நீங்கள் ஒரு சம்பவத்தைக் குறித்து தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அதைப்போல எனக்கும் சில பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லி முடிக்கவேண்டும். முதலமைச்சர் பதில் சொல்வார்கள் நீங்கள் இங்கே தேவையில்லாமல் பேசிக்கொண்டிருந்தால் நான் பட்டிமன்றமாக மாற்றத் தயாராக இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய வழிகாட்டுதலிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, குருவினுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த வன்னியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் வெளிப்படையாகப் பேசுகிறார்கள். நாங்கள் தலையெடுத்து— (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும், விஸ்வநாதனுக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் விஸ்வநாதனைப் பற்றிப் பேசி முடியுங்கள். முதலமைச்சர் பதில் சொல்வார்கள்.





**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** எனவே, இன்றைக்கு ஜனநாயக ரீதியாகச் செயல்பட்டு கொண்டிருக்கின்ற தலைவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. தயவுசெய்து அவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்பட வேண்டும். நன்முறையிலே மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய தலைவர்கள் வன்முறைப் பேச்சுக்களை இப்படியே வளரவிட்டுக்கொண்டே போனால், சட்டம்-ஒழுங்கு என்ன ஆவது என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல. நான்கூட ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக இருந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடம் பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். என்னால் எந்தவித சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையும் ஏற்படாமல், எனக்குத் தலைவலி வராமல் நீ நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதுமாதிரியே நாங்கள் நடந்து காட்டியிருக்கிறோம். இப்படிப்பட்ட அறிவுரைகளை இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னோடு இருக்கின்ற.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் சொல்ல வேண்டுமென்று சொல்லி முடியுங்கள். நீங்கள் பிரச்சினைகளை வளர்க்காதீர்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நான் பிரச்சினைகளை வளர்க்க விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது விஸ்வநாதன் கார்தான். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-2000 அன்று மாலை சுமார் ஆறு மணியளவில் அரக்கோணத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு விஸ்வநாதன் என்பவர் காரில் வந்துகொண்டிருந்தபோது, ஈஞ்சம்பாக்கம் அருகே அவரது காரை, இரண்டு டாட்டா சுமோ கார்களிலே வந்த சுமார் 25 பேர் வழிமறித்து, திரு. விஸ்வநாதனையும் மற்றவர்களையும் தாக்கியுள்ளார்கள். தாக்குதலுக்குப் பயந்து அவர்கள் ஈஞ்சம்பாக்கம் காலனியிலே ஓடி ஒளிந்துகொண்டார்கள். டாட்டா சுமோவில் வந்தவர்கள் விஸ்வநாதன் வந்த காரைச் சிறிது தூரம் தள்ளிக்கொண்டுபோய்ப் பள்ளத்திலே தள்ளி, எரிபொருளை ஊற்றிக் கொளுத்திவிட்டு, தாங்கள் வந்த டாட்டா சுமோ வாகனத்திலேயே ஏறித் தப்பியிருக்கிறார்கள். அன்றிரவு, காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலையத்துக்கு வந்து, நடந்த சம்பவம் குறித்து விஸ்வநாதன் புகார் மனு ஒன்றைக் கொடுத்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் காஞ்சிபுரம்

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 25

தாலுகா காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. காயமடைந்த விஸ்வநாதன், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு, உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருக்கு வெளிப்படையான காயங்கள் எதுவும் இல்லை. விஸ்வநாதனோடு காரில் வந்த மூன்று பேர்களுக்கும் காயம் எதுவும் இல்லை.

முற்பகல் 10-45

இந்த வழக்கில் அரக்கோணத்தைச் சேர்ந்த பஞ்சா என்ற பஞ்சாட்சரம் மற்றும் கார் ஓட்டுநரான பாபு ஆகியோர் இருவரும் கைது செய்யப்பட்டு உள்ளார்கள். மற்றவர்கள் தேடப்பட்டு வருகின்றார்கள். பஞ்சாட்சரம் ஜாமீனிலே விடுவிக்கப்பட்டு இருக்கிறார்; பாபு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு உள்ளார். நடவடிக்கை எதுவுமே எடுக்கவில்லை காவல் துறை என்று மாண்புமிகு தீரன் அவர்கள் கூறிய கூற்று சரியல்ல; நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது; தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்; எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே வெளியே நடைபெறுகின்ற அரசியல் கட்சி பிரச்சினைகளுக்குள் சட்டம் நிச்சயமாக தலையிட்டு ஒழுங்கு அமைதியைக் காப்பாற்றுவதற்காக மாத்திரம் பயன்படுமேயல்லாமல், அவர்களுடைய அரசியல் பிரச்சினைகளுக்குள்ளே நிச்சயமாக நுழையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னது தவறு; நடவடிக்கை எடுக்கப்பட்டு, இருவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். மேலும் சிலர் தேடப்படுகிறார்கள்.

அதைப்போலவே, அச்சகம் ஒன்றைப் பற்றி, அச்சகத்திலிருந்து புத்தகங்களை திருடிவிட்டதைப் பற்றி சொன்னார். அங்கேயும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும், மேலும் சிலர் தேடப்பட்டு வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. இதைப்பற்றி ஒரே ஒரு நிமிடம்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு என்ன? Point of order. அடுத்து உங்கள் தீர்மானம் ஒன்றை எடுக்கிறேன்; அதிலே நீங்கள் ஏதாவது கருத்துச் சொல்லுங்கள்.



2000 ஏப்ரல் 25]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பதிலில் டாக்டர் ராமதாஸ் அவர்களை சம்பந்தப்படுத்திப் பேசவே இல்லை. ஆனால் உறுப்பினர், அவையில் இல்லாதவரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியதற்கு எந்த வகையிலே அனுமதி கொடுத்தீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். அரசியல் ரீதியாக தனிப்பட்ட மனிதர்கள், அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக் கூடாது என்பது மரபு; நான் இல்லை என்று சொல்லவில்லை. பெரிய அரசியல் கட்சித் தலைவர்களைப் பற்றி, இப்போது முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இங்கே இல்லை; பல பேர் பேசும்போது அவரைச் சம்பந்தப்படுத்திப் பேசினார்கள். அதனாலே, பெரிய தலைவராக இருந்தால், பொது மக்கள் பேசத்தான் செய்வார்கள்; சட்டமன்றத்தில் பேச்சு தான் வரும். அதிலே உண்மை இருந்தால், அதை முதலமைச்சர் ஏற்றுக்கொள்வார்; உண்மை இல்லை என்பதனால், அதைப்பற்றி அவர்கள் சொல்லவில்லை.

## (ஆ) மகாபலிபுரத்தில் நடைபெற்ற வன்னியர் இளைஞர் பெருவிழா நிகழ்ச்சிக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 18-4-2000 அன்று மகாபலிபுரத்தில் வன்னியர் இளைஞர் பெருவிழா நிகழ்ச்சியில் காவல் துறையினர் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு செய்யாதது குறித்து. திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி ஆகியோர் அறிவிப்பு கொடுத்து இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவரைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18-4-2000 அன்று மகாபலிபுரத்திலே சித்திரை முழு நிலவு வன்னியர் இளைஞர் பெருவிழா நடைபெற்றது. அந்த இளைஞர் பெருவிழா நடைபெறும் நேரத்திலே, இலட்சக்கணக்கானோர் கூட இருக்கிறார்கள்; காவல் துறை அனுமதி வேண்டும் என்று சொல்லி, காவல் துறைக்கு முன் அனுமதி கேட்டு எழுதிக் கொடுத்து இருந்தோம். அதைப்போலவே பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடுகின்ற காரணத்தினாலே, அந்த மகாபலிபுரம் பகுதி, அதை ஒட்டி இருக்கக்கூடிய பகுதிகளில் சாராயக் கடைகள் இல்லை என்று சொன்னாலும்கூட, கள்ளச்சாராயம் இருக்கக்கூடிய பகுதிகளில், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதேநேரத்தில், பிராந்திக் கடைகள் எல்லாம்கூட மூட வேண்டும் என்று சொல்லி காவல் துறைக்கு நாங்கள் (குறுக்கீடுகள்) கோரிக்கை வைத்து இருந்தோம்.

[திரு. ஜி.கே. மணி] [2000 ஏப்ரல் 25

அதைப்போலவே, அங்கே பொது மக்கள் பெருந்திரளாகக் கூடுகின்ற காரணத்தினாலே, அதிக அளவிலே பாதுகாப்பு ஏற்பாடு கருதி, அங்கே காவலர்களைப் பணி அமர்த்த வேண்டும் என்று சொல்லியும் கோரிக்கை வைத்து இருந்தோம். இப்படி, காவல் துறைக்கு மனு மூலமாக கோரிக்கை வைத்து இருந்தும்கூட இலட்சக்கணக்கான இளைஞர்கள் அங்கே குடும்பத்தோடு வருகின்ற நேரத்திலே பாதுகாப்பு இல்லாத நிலையை நாங்கள் உணர முடிந்தது.

அதுமாத்திரமல்ல, வரக்கூடிய வழியிலே இந்த நிகழ்ச்சியை எப்படியாவது கெடுக்க வேண்டும், இந்த நிகழ்ச்சியை அவமானப்படுத்த வேண்டும், கொச்சைப்படுத்த வேண்டும் என்று சொல்லி, நான் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காக மிகவும் வேதனைப்படுகிறேன்; வருத்தப்படுகிறேன்; எனக்கு முன்னாலே பேசுகின்ற நேரத்திலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே, திட்டமிட்டுச் செய்ததாக எங்கள் நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களைப் பற்றியும், வன்னியர் சங்கத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய குரு அவர்களைப் பற்றியும் வீண் வம்புக்கு இழுக்கின்ற வகையிலே இங்கே பேசினார்கள்; அவர்களுக்கும் அந்தச் சம்பவத்திற்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லை. சம்பந்தம் இல்லாத பிரச்சினையைத் தொடர்புபடுத்திப் பேசுவது என்பது எந்த வகையிலும் நியாயம் ஆக்கிவிட முடியாது. அதேநேரத்திலே, அந்த கார் எரிப்புச் சம்பவத்திலே பேசுகின்ற நேரத்திலேகூட அவர் சுட்டிக்காட்டியது தவறு. பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை எப்படியாவது கொச்சைப்படுத்த வேண்டும்; இதனோடு தொடர்புபடுத்த வேண்டும் என்று சொல்லி பேசினாரே தவிர வேறல்ல என்பதை இந்த நேரத்திலே சொல்லி...

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசுங்கள். அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டாம். அவர் முறையில்லாமல் பேசியிருந்தால் நான் அவைக் குறிப்பிலிருந்து எடுத்திருப்பேன். ஆகையினால் நீங்கள் உங்கள் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இப்படி இலட்சக்கணக்கானோர் வந்த நேரத்திலே, **



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. நான் நடந்ததைச் சொல்கிறேன். வருகிற வழியிலே என்ன நடந்தது, போலீஸ் பாதுகாப்பு எப்படி இருந்தது என்பதை.(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள்

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தீரன், உட்காருங்கள். திரு. தீரன் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. 'போலீஸ் பாதுகாப்பு கொடுக்கவில்லை; வேண்டுமென்றே திட்டமிட்டு, எங்கள் மாநாடு நடக்கக் கூடாது என்று போலீஸ் உதவி புரியவில்லை; யாரோ ஒரு சிலர் அதைக் கெடுப்பதற்கு முயற்சி செய்தார்கள்; அதற்கும் போலீஸ் துணை செய்கிற மாதிரி, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று நீங்கள் சொல்லுங்கள். ஆட்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேச உங்களை அனுமதித்து, இங்கே பட்டிமன்றம் நடத்த என்னால் முடியாது. ஆகவே, தயவுசெய்து மரபுகள் அடிப்படையிலே, 'சில பேர் அதை எதிர்த்து, அங்கே கூட்டம் சிறப்பாக நடைபெறக் கூடாது என்று முயற்சி செய்தார்கள்; அதற்கும் போலீஸ் ஒத்துழைத்தார்கள்' என்று சொல்லுங்கள். அதற்குப பிறகு முதலமைச்சர் பதில் சொல்வார்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தீரன் அவர்களுக்கு அனுமதி கிடையாது. நான் குற்றச்சாட்டுகளையெல்லாம் எடுத்துவிட்டேன். திரு. தீரன், நீங்கள் பேசாமல் உட்காருங்கள்.

(திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. ஜி.கே. மணி எழுந்து நின்றார்கள்.)

நீங்கள் இருவரும் பட்டிமன்றம் நடத்துவதற்கு இது உரிய அவையல்ல.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 ஏப்ரல் 25

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வாகனங்களிலே வந்த நேரத்திலே குறிஞ்சிப்பாடி ஒன்றியத்திலேயிருந்து சிவக்குமார், இராமலிங்கம் வந்த வாகனங்களையெல்லாம் (மணியடிக்கப்பெற்றது) மறித்ததைச் சொல்லிவிடுகிறேன். அப்போது போலீஸ்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் 'எங்களுக்கு ஆட்களை அடையாளம் தெரியும்; அந்த ஆட்களின் பெயர்களை போலீஸிடம் எழுதிக்கொடுத்தோம்; நாங்கள் அடையாளம் சொன்னவர்களையும் அவர்கள் கைது செய்ய மாட்டேன் என்கிறார்கள், என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். வரிசையாகப் பெயரைப் படித்துக் கொண்டிருந்தால் என்ன தெரியும்?

**திரு. ஜி.கே. மணி:** இல்லை ஆதாரத்தோடுதான் ....

**திரு. ஐ. கணேசன்:** திரு. தீரன் அவர்களும் ஏற்கெனவே பெயரைப் படித்தார்கள். 4 பெயர்களை, 5 பெயர்களைப் படித்தார்கள். அடிபட்டு, போட்டோ எடுத்து பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பெயர்களைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பெயர்களைச் சொல்லி போலீஸில் புகார் கொடுத்தோம்; நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லி முடியுங்கள். முதலமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாகனங்கள் எண்கள் கூட என்னிடம் இருக்கின்றன. வந்த வாகனங்களைத் திட்டமிட்டு, சதியாளர்கள், அடியாட்களை வைத்து நொறுக்கினார்கள். வந்தவர்களை அடித்தார்கள், காயமெல்லாம் ஏற்பட்டது. அருகிலே இருந்த காவல் நிலையத்திற்குச் சென்று, கூவத்தூர் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தார்கள். 'வந்த வண்டிகளை எல்லாம் அடிக்கிறார்கள்; எங்களுக்கெல்லாம் காயம் ஏற்பட்டுவிட்டது' என்று சொல்லி காவல் நிலையத்திலே புகார் கொடுக்கச் சென்ற நேரத்திலே, அங்கே உதவி ஆய்வாளர் மற்றும் அதிகாரிகள் இருந்தும்கூட, அந்தப் புகாரை எடுத்துக்கொள்ளவில்லை. நாங்கள் புகாரைப் பெற்றால்தான் செல்வோம் என்று சொல்லி, இல்லையென்றால் இங்கே அமர்வோம் என்று சொன்ன



2000 ஏப்ரல் 25] [திரு. ஜி.கே. மணி]

நேரத்திலே, காவல் துறை அங்கே புகார் கொடுக்கச் சென்றவர்களை, அடித்து, அவர்களுக்கு மீண்டும் காயம் ஏற்படுத்தியுள்ளனர். இப்படி புகார் கொடுக்கச் சென்றவர்கள் மீதே காவல் துறை அடிக்கக்கூடிய நிலை அந்தக் காவல் நிலையத்திலே ஏற்பட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, முத்தியால்பேட்டை பகுதியிலே வந்தவர்களையும் தடை செய்து, அங்கே வரவிடாமல் தடுத்துவிட்டார்கள். இப்படி மாலையிலே வந்தவர்களை, தமிழ்நாட்டிலேயிருந்து வந்தவர்களை தடுத்துவிட்டார்கள். அதையும் மீறி சில வாகனங்கள் வந்த நேரத்திலே காவல் துறை அதிகாரிகள், இந்த வழியிலே செல்லக் கூடாது; நீங்கள் மதுராந்தகம் செல்ல வேண்டும்; செங்கல்பட்டு செல்ல வேண்டும் என்று சொல்லி, அந்த வாகனங்களையெல்லாம் திருப்பிவிட்டார்கள். இப்படிச் சுற்றி வளைத்து மாலை 3.00 மணிக்கு புறப்பட்டவர்கள் விடியற்காலை 2.00 மணி 3.00 மணிக்குத்தான் வந்து சேர்ந்தனர். இப்படித் தடை செய்து வாகனத்தைத் திருப்பிவிட்டார்கள்.

அது மாத்திரமல்ல. அந்தக் கூட்டம் நடந்த நேரத்திலே இலட்சக்கணக்கானோர் கூடியிருந்தார்கள். காவல் துறையினர் சொற்ப அளவிலே இருந்தார்கள். இருந்தவர்களும் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளவில்லை. தலைவர்கள் இருந்த மேடையைச் சுற்றி யாருமே இல்லை. மேடையிலே நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மேடைக்கு முன்பாக எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். மத்திய அமைச்சர்கள் 2 பேர் அமர்ந்திருக்கின்றார்கள். அந்த இடத்திலே போலீஸ்காரர்கள் ஒருவர் கூட கிடையாது. நானே சென்று சொன்னேன். இங்கே எங்களுடைய தலைவர் இருக்கிறார்; மத்திய அமைச்சர்கள் இருக்கிறார்கள்; இந்த இடத்திலே கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கிறது; ஆகவே பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்; நீங்கள் இந்தப் பகுதிக்கு வர வேண்டுமென்று சொல்லிய நேரத்திலே, அங்கேயிருந்த உதவி ஆய்வாளர்—என்னால் அவருடைய பெயர் மற்றும் காவல் துறை எண்ணினைக்கூடச் சொல்ல முடியும்—அவர்களெல்லாம் என்னிடத்தில் சொன்னது 'நாங்கள் வர முடியாது; வேண்டுமென்று சொன்னால் எங்களுடைய எஸ்.பி.-யிடத்திலே சொல்லுங்கள்; டிஎஸ்பி.-யிடத்திலே சொல்லுங்கள்; அவர்கள் சொன்னால் அந்தப் பகுதிக்கு வருகிறோம், என்று சொல்லி, நாங்கள் வேண்டிக் கொண்டும்கூட தட்டிக் கழித்தார்கள். ஆகவே, இப்படி எல்லா

பகுதிகளிலேயும் காவல் துறை அதிகாரிகள் சொற்ப அளவிலே அங்கே பணியமர்த்தப்பட்டிருந்தார்கள்.

பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லி, இந்த இடத்திற்கு வாருங்கள் என்று கேட்ட நேரத்திலேகூட அதைத் தட்டி கழித்தார்கள். இப்படிச் சில வாகனங்களைத் திருப்பி விடுகிறார்கள். இந்த கூவத்தூர் காவல் நிலையத்திலே காவல துறையினர் அடித்திருக்கிறார்கள் என்று நாங்கள் சொன்ன நேரத்திலும்கூட, இப்போது ஒன்றும் செய்ய முடியாது, இங்கே எஸ்.பி. இல்லை என்று சொல்லி தட்டிக்கழித்தார்கள். ஆக இப்படி இலட்சக்கணக்கானோர் கூடக்கூடிய அந்த இடத்திலே காவல்துறை தன்னுடைய கடமையைச் சரியாக செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே வருத்தததோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-55*

அதே நேரத்திலே இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் வேறு நிகழ்ச்சிகள், 200 பேர், 300 பேர் கலந்து கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளில்கூட காவல் துறை அதிகமாக பணியமர்த்தப்படுகிறார்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இதோடு நிறுத்துங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் எடுத்துச் சொன்ன சில பிரச்சினைகள் தமிழ்நாட்டிற்கு அப்பாற்பட்டது. வருகிற வழியிலே ஒரு விழாவிற்காக, மாமல்லபுரத்தில் நடைபெற்ற விழாவிற்காக வருகிற வழியில் பாண்டிச்சேரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளோடு இணைக்கும்போது நான் அதற்குப் பதில் சொல்லக்கூடிய பொறுப்பிலே இல்லை. எனவே, அதற்குப் பொறுப்பேற்று பதில் சொல்ல வேண்டிய அரசு பாண்டிச்சேரியிலே உள்ள அரசுதான். அவர்கள் இங்கே சுமத்திய குற்றச்சாட்டில் காவல் நிலையங்களுக்குச் சென்று புகார் கொடுத்தவர்களை அடித்தார்கள் என்பதுபோன்ற அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு என்னிடத்திலே விவரங்கள் எதுவும் இல்லை. இல்லாததற்குக் காரணம் அவர்கள் தந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு அறிவிப்பு '18-4-2000 அன்று மகாபலிபுர வன்னியர் இளைஞர் பெருவிழா நிகழ்ச்சியில் காவல் துறையினர் போதுமான பாதுகாப்பு ஏறபாடு செய்யாதது குறித்து' என்றுதான் இருக்கிறது. அதனால் நான்



காவல் துறையிடம் அறிந்துகொள்ள விரும்பியது, பாதுகாப்புத் தரப்பட்டதா இல்லையா, எவ்வளவு பேர் என்ற விவரங்களைத்தான் கேட்டிருந்தேன். அவர்கள் தந்த விவரத்தை இங்கே தர விரும்புகின்றேன்.

வன்னியர் சங்கம் நடத்திய வன்னிய இளைஞர் சித்திரை முழுநிலவுப் பெருவிழா, 18-4-2000 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இந்த விழாவையொட்டி செங்கல்பட்டு D.I.G. தலைமையில், காவல் கண்காணிப்பாளர்கள்- S.P.-க்கள் இருவர், காவல் துறை துணை கண்காணிப்பாளர்கள், D.S.P.s.-க்கள் 5 பேர், இன்ஸ்பெக்டர்கள் 11 பேர், சப்-இன்ஸ்பெக்டர்கள் 46 பேர், தலைமைக் காவலர்கள், காவலர்கள் உள்ளிட்ட இதர காவலர்கள் 620 பேர், Six Hundred and Twenty, ஆயுதப படைப்பிரிவின் 7 செக்ஷன்கள், ஒவ்வொரு செக்ஷனுக்கும் பத்து பேர் இருப்பார்கள், கண்ணீர்ப்புகை அணிகள் 2 பிரிவுகள், போக்குவரத்துப் பிரிவு இன்ஸ்பெக்டர் 1, சப்-இன்ஸ்பெக்டர் 2, இவை அன்னியில் போக்குவரத்துப் பிரிவு சார்பாக இன்ஸ்பெக்டர் 1, சப்-இன்ஸ்பெக்டர்கள் 2, தலைமைக் காவலர்கள் உள்ளிட்ட இதர காவலர்கள் 30 பேர் மற்றும் பெண் காவல் ஆய்வாளர் 1, உதவி ஆய்வாளர்கள் 2, தலைமைக் காவலர்கள் உள்ளிட்ட இதர காவலர்கள் 40 பேர், ஆக மொத்தம் 835 பேர் பாதுகாப்புப் பணியில் அன்றையதினம் ஈடுபடுத்தப்பட்டு, விழாவிற்கு முழு பாதுகாப்பு வழங்கப்பட்டது என்று எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியர் சங்கத்தினர் வருகை தரும் வழி நெடுக பாதுகாப்புப் பணியிலும், வாகனங்களை ஒழுங்குப்படுத்தும் பணியிலும், மாமல்லபுரத்தின் கடைவீதிகளிலும் மற்றும் கடற்கரையிலும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களை தவிர்த்து, விழா மேடைக்கு அருகில் மாத்திரம் ஒரு எஸ்.பி., ஒரு டி.எஸ்.பி., 3 இன்ஸ்பெக்டர்கள், 8 சப்-இன்ஸ்பெக்டர்கள், 90 காவலர்கள், 40 ஆயுதப்படை காவலர்கள் மற்றும் 30 பெண் காவலர்களும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் விழா முடிந்து அனைவரும் அங்கிருந்து கலைந்து செல்லும் வரையில் இப்பணியிலே ஈடுப்பட்டிருந்தார்கள்.

மேடைக்கு அருகில் மாத்திரம் காவல் துறையினர் 173 பேர் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தும்கூட போலீசார் போதுமான அளவிற்கு இல்லை என்று கூறுவது சரியல்ல. பாதுகாப்புக்கு போலீசார் வேண்டுமென்று கேட்டதாகவும், அதனைக் கண்டு கொள்ளாமல் ஒருவர்கூட அந்த இடத்திற்கு வராமல் இருந்ததாகவும் கூறுவது சரியான கூற்றாகத் தெரியவில்லை. ஏனென்றால் அங்கே பொறுப்பேற்றிருந்த காவல்

துறையின் பெர்றுப்புரன் அதிகாரிகளிடமே இது குறித்து விசாரித்தபோது அவர்கள் இதனை மறுத்துள்ளார்கள். மாறாக, குறிப்பிட்டு யாரிடம் பாதுகாப்பு கேட்டு அவர்கள் தர மறுத்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அவற்றைப் பற்றி அவர்களிடம் விசாரித்து அறிய இயலும் என்றும் எனக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதுமாத்திரம் அல்ல, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அவர்கள் அங்கே பேசும்போது விடியற்காலை 3-15 மணி என்று கூறப்படுகிறது. மாலையிலிருந்து பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்ட காவல் துறையினர் தொடர்ந்து எத்தனை மணி நேரம் நின்று கொண்டே பணியாற்ற இயலும் என்பதையும், அதிலே ஒரு சிலர் நேரமாகிவிட்ட காரணத்தினால் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காட்சியை தமிழ்ப் பத்திரிகை ஒன்று புகைப்படமாக எடுத்து வெளியிட்டிருந்ததையும் நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

*முற்பகல் 11-00*

விழாவிலே கலந்து கொண்ட வன்னியர் சங்கத்தினர் பல்வேறு பகுதிகளில் இருந்தும மாமல்லபுரத்திற்கு வருகை புரிந்ததையொட்டி, வன்முறைச் சம்பவங்கள் சில நடைபெற்றன. அந்தச் சம்பவங்களை நான் விவரிக்க விரும்பவிலலை, தேவையில்லை என்ற காரணத்தால். அந்த வன்முறைச் சம்பவங்களை ஆங்காங்கே கவனித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காகவும், அங்கே வந்திருந்த காவலர்கள் அன்னியிலே வழி நெடுக காவலர்கள் ஆங்காங்கே அமர்த்தப்பட்டிருந்தார்கள். இந்த நிலையிலே போதுமான காவலர்கள் இல்லை என்ற கூற்று சரியானது ஆகாது என்பதை நான் எடுத்துச் சொல்லி இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

(உறுப்பினர்கள் திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஜி.கே. மணி எழுந்து நின்றார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரட்டையர் மாதிரி எழுந்து நிற்பதா திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் காவல் துறை அதிகாரிகளிடத்திலே அங்கே பேசினேன். அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே குறைந்த அளவு இருக்கிறது என்று சொன்னார்கள். அதிக அளவிலே இல்லை. அதிலே குறிப்பாக ஒரு டிஎஸ்.பி. சொல்லுகின்ற நேரத்திலே நாங்கள் இரண்டு டிஎஸ்.பி-கள்தான்



223310



இருக்கிறோம், எங்களால் ஒன்றும் செய்ய முடியாது; மொத்தமே 2 டி.எஸ்.பி.-கள்தான் போட்டு இருக்கிறார்கள். பாதுகாப்பு அளிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் சென்று சொன்னோம். 'இங்கே எல்லாம் நடக்கிறது, நீங்கள் உடனே அந்த இடத்தையெல்லாம் பார்வையிட வாருங்கள்' என்று சொன்னோம். பிறகு தலைவர்கள் அமர்ந்திருந்த இடத்தில், மத்திய அமைச்சர் இருந்த இடத்தில் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்று சொல்லுகின்ற நேரத்தில், ஒரு காவல் துறை உதவி ஆய்வாளர்- அவருடைய பெயரைக்கூட சொல்லுகிறேன்; பெயர் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் வேண்டாம்.

**திரு. ஜி.கே. மணி:** இருந்தாலும்கூட, அவர்கள் வரமுடியாது, எஸ்.பி.யிடம் சொல்லுங்கள், எஸ்.பி. சொன்னால் வருகிறோம் என்று சொன்னார்கள். இப்படித் திட்டமிட்டு ஒரு சில காவல் துறை அதிகாரிகள் செய்தார்களா என்ற பெருத்த வருத்தமும், சந்தேகமும் எங்களுக்கு வந்திருக்கிறது. தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்ற வேதனையை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, திரும்பிச் செல்லுகின்ற நேரத்திலே வன்முறைச் சம்பவங்கள் ஒன்றும் இல்லை, வழியிலே வந்து அடித்தார்கள். அதிலும்கூட ஒரு மணல் லாரி விபத்து ஏற்பட்டு 15 பேர் மருத்துவமனையிலேகூட சேர்க்கப்பட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் ஒன்றுமே நீங்கள் சொல்லவில்லையே, உங்கள் வருத்தத்தைத் தெரிவித்துவிட்டீர்கள்; உட்காருங்கள்.

### (இ) சத்துணவுப் பணியாளர்கள் பணி நிரந்தரம் கேட்டுப் போராடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்துணவுப் பணியாளர்கள் தங்களைப் பணி நிரந்தரம் செய்யக் கோரி போராடுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. மு. அப்பாவு, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. பி. வெங்கடசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன், சுருக்கமாகப் பேச வேண்டும்; வழக்கத்திற்கு மாறாக சுருக்கமாகப் பேச வேண்டும்.

D
V21,31 '00
P00.98.3

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, திராவிட முன்னேற்றக் கழகம் சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவோம் என்று சொல்லி வாக்குகளைக் கேட்டு ஆட்சிக்கு வந்தது. பிறகு, 1996 ஆம் ஆண்டு வந்தது. இரண்டு முறை வந்தும்கூட இன்னும் அவர்களை நிரந்தரப்படுத்தாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு செய்தியாகும். நான் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே அவர்களை நாங்கள் பகுதி நேர ஊழியர்களாக நிரந்தரப்படுத்திவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், தேர்தல் அறிக்கையிலே சொல்லுகிறபோது, நிரந்தரப்படுத்துவோம் என்று சொல்லுவதே, முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்கிற பொருள்படத்தான் சொல்லப்பட்டது. அந்த நம்பிக்கையில்தான் அந்த ஊழியர்கள் எல்லாம் இப்போது காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலேகூட அவர்களில்—பொதுவாக சில பேர் பட்டப் படிப்பை படித்துவிட்டு, பி.எட். படித்துவிட்டு, டீச்சர் ட்ரெயினிங் முடித்துவிட்டு இருக்கிறார்கள். சாலைப் பணியாளர் போன்றவர்களை, அதேபோல மக்கள் நலப் பணியாளர்களை எல்லாம் சமீபத்திலே இந்த அரசு நியமித்து அவர்களுக்கெல்லாம் நிறைய சம்பளத்தைக் கொடுக்கிறபோது, பல ஆண்டு காலமாக பணியிலே இருக்கக்கூடிய இந்தச் சத்துணவுப் பணியாளர்களை மட்டும் நாம் வஞ்சிப்பது என்பது சரியானது அல்ல என்பதை நான் இந்த இடத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கோலப்பன் கமிட்டியிலேகூட, விவசாயக் கூலிகளுக்கு நாம் பணம் கொடுக்கிறபோது, ஓர் ஆளுக்கு 55 ரூபாய் கூலி என்று ஒரு கணக்குப் போட்டாலும்கூட, அதே கணக்கைப் போட்டால்கூட—400 ரூபாயிலிருந்து இப்போது 1,050 ரூபாய அளவுக்கு இந்தச் சத்துணவுப் பணியாளர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அது நிச்சயமாகப் போதாது. நீங்கள் அந்த கோலப்பன் கமிட்டி அறிக்கைபடி பார்த்தால்கூட, அந்தக் கூலியை கணக்குப் போட்டால்கூட, அந்தக் கூலியே அவர்களுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. நிறைய படித்துவிட்டு நாள் கணக்காக வேலை செய்து கொண்டிருக்கின்றனர் அந்தச் சத்துணவுப் பணியாளர்கள். இன்று சத்துணவு ஊழியர்கள் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். சத்துணவுப் பணியாளர்கள் போராட்டம் செய்து, பேரணி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது மாவட்டம், மாவட்டமாக இவர்கள் போராட்டத்தை நடத்தி முடித்து, இன்று மாநிலத்தின் தலைநகரமான சென்னை மாநகரில் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.



ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கொஞ்சம் கருணைகூர்ந்து அவர்களை எப்படியாவது, பகுதிநேர ஊழியர்களாக நிரந்தரப்படுத்தி விட்டோம் என்று சொன்னாலும்கூட, அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கி, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த இலட்சக்கணக்கான ஊழியர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம்—ஏனென்றால் அமைச்சர் மட்டுமே இதிலே— ஏனென்றால் நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்தால்தான்...

*(முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டீர்கள். அமைச்சர், முதலமைச்சர் என்பதெல்லாம், அது உங்கள் வேலை அல்ல. உட்காருங்கள். கூட்டுப்பொறுப்பு அமைச்சரவைக்கு உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். பின்பு, அமைச்சர், முதலமைச்சர் என்று இதை ஏன் பிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி சத்துணவுப் பணியாளர்களுடைய போராட்டம் இன்றையதினம் சென்னையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக வைக்கப்பட்டிருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து, நிறைவேற்ற வேண்டுமென்று சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதுகூட அன்றையதினம் பேசினேன் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு விழாவிலே பங்கேற்ற போது அவர்களுடைய கோரிக்கை வைக்கிறபோது, "நாங்கள் ஆற்றைக் கடக்கிறபோது, பாதி ஆற்றிலேயே விட்டுவிட்டீர்களே" என்று அவர்கள் கோரிக்கை வைத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "பாதி ஆற்றிலே உங்களை விடவில்லை; பாதி ஆறு வரையிலும் நான் படகிலேயேதான் அழைத்து வந்திருக்கிறேன்; மீதி ஆற்றையும் கடக்கச் செய்வதற்கான முயற்சியைக் கண்டிப்பாக மேற்கொள்வேன்" என்று வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள். அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே, அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, இந்த அங்கன்வாடி—

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதற்குள் மீதி இருந்த ஆறு வற்றிவிட்டது. மணலில் படகு செல்லவில்லை. (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மீதி ஆறு வற்றிவிட்டது என்று சொன்னார்கள். இருந்தாலும், மணலிலே படகு செல்லவில்லை என்று சொன்னால்கூட, ஆபத்து இல்லாமல் எப்படியாவது கரை சேர்த்து விடுவீர்கள் என்கிற அந்த நம்பிக்கையிலே எதிர்பார்க்கிறார்கள். ஆகவேதான், இன்றையதினம் அந்தப் போராட்டம் நடைபெறுகிறது. அந்தப் போராட்டத்திலே பங்கேற்கிற அந்தச் சங்கப் பணியாளர்களை, பொறுப்பாளர்களை அழைத்துப் பேசி, நல்ல தீர்வினைக் காணவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உரிய ஓய்வுகால நன்மைகள், இன்னும் பல சலுகைகளை அரசு ஊழியர்களுக்கு வழங்குவதுபோல வழங்க வேண்டும். அவர்கள் 7½ மணி நேரத்திற்கு மேலாகவே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிரந்தரப் பணியாளர்களுக்குரிய அந்தக் கால அளவு பணி என்று அவர்களுக்கும் வரையறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் காரியங்களையெல்லாம் செய்வதற்குரிய முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, அவர்களுக்குரிய சலுகைகளைச் செய்வதற்கான முயற்சிகளையும், போராட்டத்திலே பங்குகொண்டிருக்கிற அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற செய்வதற்கான முயற்சிகளையும் எடுக்கிற வகையிலே, போராடிக் கொண்டிருக்கிற அந்தச் சத்துணவுப் பணியாளர்களுடைய தலைவர்களை உடனடியாக அழைத்துப் பேசி, நல்ல முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமைகிறேன்.

(திரு. இரா. தாமரைக்கனி கையைத் தூக்கினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, இப்படிக் கையைத் தூக்குகிற வழக்கம் கூடாது. நான் பெயரைக் கூப்பிடுவேன். இப்படி, இப்படிக் கையைத் தூக்கிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** கையைத் தூக்கினாலும் தப்பு என்கிறீர்கள். சும்மா இருந்தாலும் தப்பு என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சட்டமன்ற உறுப்பினர் முறையாகத்தான் நடந்துகொள்ள வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சரி.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

* **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பகுதிநேர ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும்; அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென பலவிதமான கோரிக்கைகளை வைத்து, இன்றையதினம் சென்னையில் ஊர்வலம் நடத்துகிறார்கள். சத்துணவுக் கூடங்களெல்லாம் மூடப்படுகின்றன. இதுசம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள்கூட இதே சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போதுகூட, அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தச் சத்துணவு ஊழியர்கள் போராட்டம் நடத்தும்போதெல்லாம், சம்பந்தப்பட்ட துறைகளுடைய செயலாளர்களை அழைத்துப் பேசி, "நாங்கள் எங்கள் துறையிலேயிருந்து பரிந்துரை பண்ணிவிட்டோம்; Finance-க்கு அனுப்பியிருக்கிறோம்; முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறோம்; முதலமைச்சர் அவர்கள் சரியான முடிவை எடுப்பார்கள்" என்று சொல்லி, அந்தச் சத்துணவுப் பொறுப்பாளர்களிடம் இரண்டு மூன்று தடவை வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். சத்துணவு ஊழியர்களுடைய மாநாட்டிலேகூட, அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்து இருக்கிறார்கள்.

இன்னும் ஒரு கோரிக்கை: அந்தச் சத்துணவு ஊழியர்களாக வேலை பார்க்கிறவர்களில், பட்டதாரிகளெல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் அரசிலே, காலியாக உள்ள இடங்களுக்கு, நாங்கள் பட்டதாரியாக இருக்கிறோம்; அதிலேயெல்லாம் எங்களை நிரப்ப வேண்டும் என்று சொல்லி, கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதனால், உள்ளாட்சித் துறை, பொதுப் பணித் துறை, மற்ற துறைகளிலெல்லாம் காலியிடங்கள் வரும்போது, டிகிரி படித்தவர்களையெல்லாம் அந்த இடங்களிலே அரசு ஊழியர்களாக நிரப்ப வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். இதற்கு துறையினுடைய செகரட்டரி, சம்பந்தப்பட்ட அமைச்சர் எல்லோருமே O.K பண்ணிவிட்டார்கள். ஆனால், முதலமைச்சர் மட்டும், அது எம்.ஜி.ஆர். கொண்டுவந்த சத்துணவுத் திட்டம், அதனாலே சத்துணவுத் திட்டத்தையே எடுத்துவிடலாமா என்று நினைத்து, அவர்களெல்லாம் எம்.ஜி.ஆர். ஆட்களாக இருப்பார்கள்; சத்துணவுத் திட்டத்திலே வேலை பார்ப்பவர்களெல்லாம் எம்.ஜி.ஆர். ஆட்களாக இருப்பார்கள்; என்று

[திரு. இரா. தாமரைக்கனி] [2000 ஏப்ரல் 25

சொல்லி, இந்த ஒரு காரணத்திற்காகத்தான் அரசு ஊழியர்களாக ஆக்கமாட்டோம் என்கிறீர்கள்; நிரந்தரமாக ஆக்கமாட்டோம் என்கிறீர்கள் என்பதைக் கூறிக்கொண்டு, அவர்களை அழைத்துப் பேசி—அவர்களைப் பார்த்தாலே பயப்படுகிறார்கள், எம்.ஜி.ஆர்-ஐப் பார்த்து பயந்தமாதிரி; எம்.ஜி.ஆரே வந்துவிட்டாரோ என்று; அவர்களை அழைத்துப் பேசி, (மணியடிக்கப்பெற்றது) அவர்களை நிரந்தரமாக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்து, சத்துணவு ஊழியர்களுடைய போராட்டத்தை வாபஸ் வாங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker Sir, the Mid-day Meal Organisers in the entire State are on strike. When they requested the Hon'ble Chief Minister several times, they were told that they would be made permanent and all other benefits would be given. Actually Mid-day Meal Organisers are working on part time basis, there is no doubt about it. They cannot go and work in some other places and get additional income. So, I suggest that atleast we can make use of them by giving some other school work for 2 to 3 hours more. Lot of graduates and educated people are there. So, we can increase the time of their work and give them full scale of pay. They are suffering a lot. They cannot go outside. In some other Departments you have made them permanent and given full salary. So, I request the Hon'ble Chief Minister to consider them on humanitarian ground and see that they are made permanent by giving them additional work in the school itself, so that they will also be happy. On behalf of BJP I request the Hon'ble Chief Minister to consider this, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களும், மதிய உணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களும் சேர்ந்து, தங்களுடைய கோரிக்கையை, அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி,



2000 ஏப்ரல் 25][திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இன்றைக்கு மறியல் போராட்டத்திலே ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். மேலும், அந்தச் சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றக்கூடிய பட்டதாரிகள், நில அளவைத் துறையிலே பணி செய்தவர்களுக்கு, கல்வித் துறை போன்ற மற்ற துறைகளிலே தகுதியுள்ளவர்களுக்கு மாற்றுப் பணிகள் வழங்கப்பட்டிருப்பதைப்போல, தங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எனவே, அரசு அந்தப் பொறுப்பாளர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயங்களை உணர்ந்து, அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமாறு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது கவன ஈர்ப்புக் கொண்டு வந்தவர்கள், சுருக்கமாகப் பேசினாலும், நான் விளக்கமாகப் பதில் சொல்லவேண்டிய அவசியத்திலே இப்போது இருக்கிறேன். முதலில், நம்முடைய தாமரைக்கனி அவர்கள், எம்.ஜி.ஆர். கொண்டுவந்தத் திட்டம் என்பதால், சத்துணவு ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்று சொன்னார். எம்.ஜி.ஆர். அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்; அவரே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்பதை தாமரைக்கனிக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன். எம்.ஜி.ஆர். கொண்டு வந்தத் திட்டம் என்பதற்காக அதை நிறுத்திவிடவில்லை. மாறாக, ஏறத்தாழ 70 இலட்சம் பிள்ளைகளுக்கு வாரம் ஒரு கோழிமுட்டை வழங்குகின்ற அரசு இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தை மேலும் வலுப்படுத்துகின்ற வகையிலேதான் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. ஏதோ போகிற போக்கிலே புழுதிவாரித் தூற்றிவிட்டுப் போகிறவர்கள் வேண்டுமானால் தாமரைக்கனியைப் போல இப்படிப் பேசலாம். எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரால், மருத்துவப் பல்கலைக்கழகம் அமைந்து, அது தொடங்கப்படுவதற்கு முன்பு எம்.ஜி.ஆர். மறைந்து, அதைத் தொடங்குவதற்காக வந்திருந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமன் அவர்கள், தொடங்காமலேயே திரும்பிச் சென்று, பிறகு இந்த ஆட்சி உருவான பிறகு, அதே குடியரசுத் தலைவரை அழைத்து, எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தை—மருத்துவப் பல்கலைக்கழகத்தைத்—திறந்து வைத்தவன் நான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) குறுகிய உணர்வு படைத்தவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர். சினி சிட்டி என்று பெயர் வைக்க வேண்டுமென்று கலை உலகம் முழுவதும் கதறியது. ஆனால், ஜெயா பிலிம் சிட்டி என்று பெயர் வைத்துக்கொண்டார்கள். எம்.ஜி.ஆர். பிலிம் சிட்டி என்று பெயர் வைக்கவில்லை. நான் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அந்தப் பெயர் மாற்றப்பட்டு, எம்.ஜி.ஆர். பிலிம் சிட்டி (மேசையைத் தட்டும் ஒலி) என்று பெயர் வைக்கப்பட்டது என்பதை நண்பர் தாமரைக்கனி அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். அவருக்கு சில நேரங்களில் ஞாபகம் வரும்; சில நேரங்களிலே ஞாபகம் வராது. (சிரிப்பு) அது என் குற்றம் அல்ல.

முற்பகல் 11-15

முதலில் தேர்தல் அறிக்கையைப் பற்றி நம்முடைய ஞானசேகரன் அவர்கள் உரையைத் தொடங்கியபோது குறிப்பிட்டார்கள். தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன் என்று; அதை நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள், அவர்களுக்கு எடுத்துக் காட்டினார்கள். 1996 அல்ல - மன்னிக்கவும் - 1989 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேதான், சத்துணவு ஊழியர்களை-Part time-Permanent ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொல்லி அதை நிறைவேற்றினோம், 1989-ஆம் ஆண்டு. ஆட்சிக்கு வந்தவுடன் அந்த வாக்குறுதியை நிறைவேற்றினோம், பகுதி நேர-நிரந்தரப் பணியாளர்கள் என்ற நிலையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தோம். அதுவரையிலே அவர்கள் நிரந்தரம் அல்ல; பகுதி நேரப் பணியாளர்கள் தான், நிரந்தரமாக ஆக்கப்படவில்லை. அதற்குப் பின்னர் 1996 தேர்தல் அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக்கிறோம் என்றால், இந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு சத்துணவு ஊழியர் என்ற தலைப்பில், 'சத்துணவு அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகள், தற்போது உள்ள ஆட்சியிலே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன— கடந்த கால ஆட்சியைக் குறிப்பிடுகிறோம். —எனவே, சத்துணவு அலுவலர்களின் குறைகள் பரிவுடன் கவனிக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறோம், என்றுதான் 1996-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றோம்.

1989-லே குறிப்பிட்டதை நிறைவேற்றி அவர்களைப் பகுதிநேர-நிரந்தர ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம். ஆனால், அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை. அரசு ஊழியர்களாக அவர்கள் ஆவதென்றால், அவர்கள் வேலைவாய்ப்பகத்தின் மூலமாக மனு போட்டு, அல்லது வேலைவாய்ப்பகத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கிற அந்த நிலையிலேதான் அவர்கள் வர வேண்டும். அதற்கு அவர்கள் தயாராக இருப்பார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால்—அப்படி என்றால்





எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துவிட்டு மறுபடியும் வேலைவாய்ப்பகத்திலே இருந்து அனைவரையும் தேர்ந்தெடுத்து, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அதற்கும் இயலுகிற அளவுக்கு நிதிநிலை இடம் கொடுக்கிறதா—Employment Exchange-ல் இருந்து வருவதாக இருந்தாலும் கூட, நிதிநிலை இடம் கொடுக்கிறதா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். கழக அரசு 1989-ஆம் ஆண்டு முதல் சத்துணவுப் பணியாளர்கள், வெறும் தற்காலிகப் பணியாளர்களாக இருந்ததை மாற்றி, நிரந்தரப் பகுதிநேர-பணியாளர்களாக Permanent-Part time employees என்று ஆக்கியது. 25-4-1998 முதல் சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதித் திட்டத்தை (Special Provident Fund) விரிவாக்கியதும் இந்த அரசுதான்.

சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் நிலை-1 மற்றும் நிலை-2, ஊட்டச் சத்துப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.200-5-250-10-400 என்று இருந்த ஊதிய விகிதத்தை ஆண்டுக்கு 140 கோடி ரூபாய் செலவையும் பொருட்படுத்தாமல், 1-1-1996 முதல் ரூ.600-10-700-20-1100 என உயர்த்தி, அடிப்படை ஊதியம் ரூ.760 என நிர்ணயிக்கப்பட்டது. இதன் காரணமாக அதுவரை மாத ஊதியமாக, சராசரியாக 450 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த சத்துணவு ஊழியர், இந்த ஊதிய விகிதம் திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாக சராசரி 1,150 ரூபாய் மாதம் ஒன்றுக்கு ஊதியமாகப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். பணியாளர்களுக்கு, கிராம நலப் பணியாளர்களுக்கு எல்லாம் ஊதியம் அதிகமாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு 1,150 ரூபாய் என்பதை மறந்துவிடக்கூடாது.

மேலும் இதற்கான ஆணை 25-4-1998 அன்று பிறப்பிக்கப்பட்ட போதிலும், 1-1-1996 முதலே இந்த ஊதிய உயர்வு அமல்படுத்தப்பட்டு சத்துணவுப் பணியாளர்களுக்கு பணப் பயன் கிடைக்கத்தக்க வகையிலே (back date) போட்டு. வழிவகை செய்யப்பட்டது;

அதைப்போலவே இந்தத் துறையிலே சமையலர்களுக்கு, அதுவரை மாதம் ஒன்றுக்கு 175 ரூபாய் மட்டுமே மதிப்பூதியமாகப் பெற்று வந்தவர்களுக்கு 1-1-1996 முதல் 450 ரூபாய் வீதமும், சமையல் உதவியாளர்கள் அதுவரையில் 125 ரூபாய் மட்டுமே பெற்று வந்தவர்களுக்கு மாதம் 400 ரூபாய் வீதமும் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான். சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்,

உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55 என்றிருந்ததை 58 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்ததும் இந்த ஆட்சிதான், 25-4-1998-ல்.

சத்துணவுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் ஈமச் சடங்குக்காக வழங்கப்பட்ட தொகை இரண்டாயிரம் ரூபாய் என்பது 1997-ஆம் ஆண்டில் ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான்.

பள்ளிச் சத்துணவுப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் —Group Insurance Scheme— குடும்ப நல நிதி வழங்க 7-11-1990 அன்று தி.மு.க. ஆட்சியில் உத்தரவிடப்பட்டது.

ஆனால், இந்தத் திட்டத்தை கடந்த அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் 1994 ஆம் ஆண்டில் நிறுத்தி வைத்துவிட்டார்கள். மீண்டும் கழக ஆட்சி அமைந்த பிறகு 1997-ல் அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ஆணையிடப்பட்டது.

முற்பகல் 11-20

சத்துணவுப் பணியாளர்களுக்கு கோடை விடுமுறைக் காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் என 27-6-1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றும் சமையலர், உதவியாளர் ஆகியோர் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவர்களுடைய வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையிலே வேலை வழங்கப்படும் என்று 27-6-1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டிலே என்னால் அறிவிக்கப்பட்டு, அவ்வாறே செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 13 காசு என்பது 18 காசுகளாக 1996 முதல் உயர்த்தப்பட்டது இந்த ஆட்சியில். பிறகு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 18 காசு என்பது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 23 காசு என்று உயர்த்தப்பட்டுள்ளது.

1995-96-ல் சத்துணவுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 360 கோடி ரூபாய். இதிலே சத்துணவுப் பணியாளர்களுக்கான ஊதியத்திற்கு மட்டும்



தரப்பட்ட தொகை 115 கோடி ரூபாய், 1995-96 இல். 2000-2001 இல் சத்துணவுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 581 கோடி ரூபாய். இதில் சத்துணவுப் பணியாளர்களுக்காக வழங்கப்படும் ஊதியம் 215 கோடி ரூபாய். சத்துணவுப் பணியாளர்களுக்கான சங்கத்தின் பொதுச் செயலாளர் ராமமூர்த்தி 1986 ஆம் ஆண்டிலிருந்தும், தலைவர் பழனிநாதன் 1988 ஆம் ஆண்டிலிருந்தும், பொருளாளர் ராஜாராம் 1991 ஆம் ஆண்டிலிருந்தும் அ.தி.மு.க. ஆட்சியிலே பணி நீக்கம் செய்யப்பட்டு வேலை இழந்திருந்தார்கள். அவர்களை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் அந்தப் பணி நீக்கத்தை இரத்து செய்து மீண்டும் பணியிலே அமர்த்தினோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் பணியிலே அமர்த்தப்பட்ட இந்த மூன்று பேரும்தான் தற்போது இந்தப் போராட்டத்தைத் தூண்டி விட்டு முற்றுகைப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்.

சத்துணவுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களை முழு நேர அரசுப் பணியாளர்களாக நியமித்து குறைந்தபட்ச ஊதிய விகிதப்படி சம்பளம் கொடுக்க ஒப்புக் கொண்டால், மேலும் கூடுதலாக 270 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். சத்துணவுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 581 கோடி ரூபாய். சத்துணவுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்றால், அவர்களது ஊதியத்திற்காக மாத்திரம் 485 கோடி ரூபாய் ஆகும். மீதியுள்ள 100 கோடி ரூபாயைக் கொண்டு எந்த அளவுக்கு சத்துணவு அளிக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த அளவிற்கு சத்துணவுப் பணியாளர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்ததற்குப் பிறகும், தமிழகத்திலே உள்ள நிதி நிலைமை தெரிந்த பிறகும், மேலும் கூடுதலாக 270 கோடி ரூபாய் செலவழிக்கத்தக்க வகையிலே நிரந்தர அரசு அலுவலர்களாக ஆக்க வேண்டுமென்றால், அது நியாயமான கோரிக்கையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

### (ஈ) சிதம்பரம் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிதம்பரம் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவது குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் ஈர்க்கின்றார்கள்.

[2000 ஏப்ரல் 25

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்திலே கடந்த ஒரு மாத காலமாக தொடர் மின்வெட்டு நடைபெற்று வருகிறது. மக்கள் பெருத்த அவதிக்குள்ளாகிறார்கள். அரசாங்கம் ஒரு நாளைக்கு காலையும் மாலையும் சேர்த்து 1½ மணி நேரம் மின்வெட்டு இருக்கும் என்று சொல்லிவிட்டு, சராசரியாக 6 மணி நேரம் மின்வெட்டு அங்கே இருக்கிறது. பொதுமக்களுடைய அடிப்படை உரிமையான உறங்கும் உரிமைகூட பறிக்கப்படுகிறது. இரவு நேரத்திலே உறக்கம் இல்லாமல் பலரும் சிரமப்படுகிறார்கள். வியாபாரிகள் எல்லாம் ஒரு நாள் மறியல் செய்தார்கள். வியாபார ஸ்தாபனங்கள் சரிவர செயல்பட முடியவில்லை. மாணவர்களால் படிக்க முடியாமல் சிரமம் ஏற்பட்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக மிகப் பெரிய விஷயம், Frequency 46 தான் இருக்கிறது. 46 Frequency இருக்கிற காரணத்தினால் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. மின்மோட்டார்கள் இயங்கவில்லை. மிகப் பெரிய சிரமம் ஏற்படுகிறது. எனவே, அரசாங்கம் இதிலே ஏன் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. தொடர்ந்து பொதுமக்களுடைய பிரச்சினைகளிலே கவனம் செலுத்தாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது. கோட்டப் பொறியாளரைக் கேட்டால் நெய்வேலியிலிருந்து தரமான மின்சாரம் வரவில்லை, தொடர்ச்சியான மின்சாரம் வரவில்லை, அவர்கள்தான் மின்சாரத்தைத் தடைபடுத்தித் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு கடிதம் எழுதி நான் கேட்டிருந்தேன். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், தேதி வாரியாக, தினமும் தரவேண்டிய மின்சாரத்தை நாங்கள் தந்திருக்கிறோம். எங்களுடைய தரப்பிலே தவறில்லை. தமிழ்நாடு மின்சார வாரியம்தான் சரியாகச் செயல்படவில்லை என்று அவர்கள் கடிதம் அளித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும். அமைச்சரைப் பொறுத்தவரை எங்களுடைய அன்பிற்குரியவராக இருந்தாலும், அவருடைய துறை எங்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கிறது. எனவே, சிதம்பரம் பகுதி மக்களுக்கு ஒரு விடிவை ஏற்படுத்துகிற வகையில் தடையில்லாத மின்சாரத்தைத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள், சிதம்பரம் பகுதியிலே தொடர்ந்து மின்சாரத் தடை ஏற்பட்டதைக் குறித்து, இங்கே



2000 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டு வந்து, தன்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சிதம்பரத்திற்கு மட்டுமின்றி, தமிழகத்திற்கே ஒரு விரிவான விளக்கம் தருவது நல்லது என்று நான் கருதுகின்றேன். பொதுவாக, கோடைகாலங்களிலே, நமக்கு நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலையிலே இருக்கின்றோம். போதுமான நீர், தேக்கங்களிலே கிடையாது. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, 300 மெகா வாட் அளவிற்கு, நாம் கோடைகாலங்களிலே, மின்சாரத்தை மற்றவர்களுக்குச் சரிசமமாக விநியோகிக்க வேண்டுமென்ற அடிப்படையில், விவசாயிகளுக்குப் பகலிலே 6 மணிக்குப் பதிலாக 4 மணி நேரம் என்றும், அதுபோலவே, நகர்ப்புற பகுதிகளிலே, ஒன்றரை மணிநேரம் Load Shedding செய்வது என்றும் முடிவு செய்து அறிவித்திருந்தோம். அது இன்றுவரையிலே, மின்சார வாரியத்தாலே பின்பற்றப்பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி, விவசாயத்திற்கு இன்றையதினம் பகலிலே, கொடுக்கின்ற 4 மணி நேரம் மின்சாரம் போக, இரவு நேரத்திலே 8 மணி நேரம் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். 20-4-2000 அன்று எதிர்பாராவிதமாக, தூத்துக்குடியிலேயும், மேட்டூரிலேயும் 210 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற மின் நிலையங்கள் திடீரென்று பழுது அடைந்துவிட்டது. பழுதுபார்ப்பதற்கு ஓரிரு நாட்கள் ஆயிற்று. இவையன்னியில், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலே நம்மைவிட மின் பற்றாக்குறை அதிகமாக இருக்கிற காரணத்தினால், திடீர், திடீரென்று, நம்முடைய மின்சாரத்தை அவர்கள் உறிஞ்சிவிடுகிறார்கள். Over-draw செய்து விடுகிறார்கள். இதனாலும், தமிழகம் பாதிக்கப்படுகிறது. இதிலிருந்து பரிகாரம் காணவேண்டுமென்று நாங்கள் மின்சார வாரியத்தோடு கலந்து பேசினோம். மத்திய அமைச்சர்களிடத்திலேயும் பலமுறை எடுத்துச் சொன்னோம். இருந்தாலும், இந்தியாவிலே இப்போது நான்கு கிரிட் இருக்கிறது. Northern Grid, Southern Grid, Western Grid, Eastern Grid என்று. வட மாநிலங்களிலே இருக்கக்கூடிய கிரிட்கள் Frequency சரியாக maintain செய்கின்றன. 49.5 Cycles என்று அவர்கள் maintain செய்கிறார்கள். ஆனால், ஆந்திராவிலேயும், கர்நாடகா மாநிலத்திலேயும் மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால், அடிக்கடி நம்முடைய மாநிலத்திலிருந்து அவர்கள் மின்சாரத்தை Over-draw செய்கின்ற காரணத்தாலே Frequency maintain செய்ய முடியவில்லை. நாம் எத்தனையோ கடிதங்கள் எழுதிவிட்டோம். 20-க்கும் மேற்பட்ட கடிதங்களை இரண்டு மாநிலங்களுக்கும் எழுதினோம்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 ஏப்ரல் 25

Southern Grid-க்கும் எழுதினோம். அதுமட்டுமல்ல, மத்திய அரசாங்கத்திற்கும் அதைத் தெரிவித்தோம். இருந்தாலும்கூட, அவர்கள் அந்த Frequency-யை 49.5-இலாவது வையுங்கள் என்று கேட்டால், 48.2 என்ற அந்த Cycles-லேதான் வைக்கவேண்டுமென்று ஒப்பந்தத்திற்கு வந்தார்கள். அதையாவது அவர்கள் பின்பற்றினார்களா என்றால் இல்லை. அவர்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்திலே 47.8 Cycles-க்கு அவர்கள் அந்த Grid mainteance-ஐ செய்கிறார்கள். இதனாலே, நமக்கு அடிக்கடி மின்சாரத் தொல்லை ஏற்படுகிறது. Trippings ஏற்பட்டு கொண்டு இருக்கிறது. இதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டுதான் மத்திய அரசுக்கு, 20-4-2000 அன்று நான் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்திலே உள்ள விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொண்டால் எந்த அளவிற்கு, மின்சார வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுக்கு எழுதிய கடிதம்—

``You may perhaps be aware that recently Tamil Nadu has been put to great hardship on account of lack of frequency discipline in the Southern Grid. There have been as many as 20 under frequency trippings per day causing untold misery to the consumers. The frequency which was kept at around 48.2 cycles has now fallen to 47.8 cycles and our efforts with the S.R.E.B. and C.E.A. have not borne any fruit..There has been over drawing of power by the neighbouring States as a result of which the Tamil Nadu Electricity Board has lost 540 million units of power since 1-4-1999. More than the loss of power, the trippings on account of under frequency have created a bad name for both Tamil Nadu and the Tamil Nadu Government. Since the position has not improved inspite of repeated letters from the Tamil Nadu Electricity Board and the State Government to the concerned authorities, there is no other option but to create the Tamil Nadu Electricity Board and the Kerala Electricity Board as a separate grid. The generation by the Central Generating Stations in Tamil Nadu is around 1,700 tonne MW which is equivalent to the share of Tamil Nadu and Kerala from the Central Government Generating Stations. Hence, there can be no objection from anybody to the creation of new Grid. This can easily be done by opening the Breakers at Sriperumpudur and Salem 400 K.V. Sub-station by the Power Grid.



2000 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

முற்பகல் 11-30

I have made the above suggestions after taking into account the efforts taken by the Tamil Nadu Electricity Board and the Tamil Nadu Government in maintaining the frequency discipline in the Grid for the last four years.

I am afraid, if the above suggestion is not accepted, the present indiscipline in the Grid will lead to frequent interruptions to the consumers leading to a bad image for the Tamil Nadu Government.

என்று நான் கடிதம் எழுதியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் எதைச் சொன்னாரோ, அதையே தமிழக அரசினுடைய கருத்தாக, தமிழக அரசுக்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் ஒரு கெட்டப் பெயர் உருவாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, Southern Grid-லிருந்து எங்களைத் தனியாகப் பிரித்து கேரளா, தமிழ்நாட்டிற்கு என்று தனியாக ஒரு Grid open செய்வதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதி இருக்கிறேன். இதுசம்பந்தமாக நேரிலே போய் பேசுவதற்காக 28 ஆம் தேதி டெல்லி செல்வதாகவும் இருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்படித் தனியாக ஒரு Grid நமக்கு அமைத்துத் தரப்படுமானால், எந்தக் காலத்திலும் நமக்கு இந்தத் தொல்லையே இருக்காது. ஆந்திராவும், கர்நாடகாவும் நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய மின்சாரத்தை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பே இருக்காது. அதற்காகத்தான் இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். இந்த முயற்சி வெற்றி பெறும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய சிதம்பரம் பகுதியில் ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து 20 ஆம் தேதி வரையில் ஏறக்குறைய 28 மணி நேரம், 35 நிமிடங்கள் மின்சாரத்தடை ஏற்பட்டிருக்கிறது என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, கடலூர் மாவட்டம் முழுவதுமே Load Shedding செய்ய வேண்டாம் என்று நேற்றிலிருந்து சொல்லி இருக்கின்றேன். இனி, அந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட மின்சாரத்தடை ஏற்படாது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்து, இதோடு என்னுடைய பதிலை நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற மாவட்டங்களில் எல்லாம் எப்படி? (சிரிப்பு) (குறுக்கீடு) ஏற்கெனவே அமைச்சர் எனக்கு ரொம்ப வேண்டியவர் என்று அழகிரி சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களிலேயும் இன்னும் ஓரிரு நாட்களிலே படிப்படியாக இந்த மின்சார நிலைமையை எண்ணிப் பார்த்து, அங்கேயும், Load Shedding-ஐ தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி, இன்னும் என்ன கேட்க வேண்டும்? தேவையில்லாமல் உங்களுக்கு மட்டும் ஒரு தனிச் சலுகை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இன்னும் அதற்கு மேலே Clarification கேட்கிறீர்கள். இங்கே பல உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக ஒரு நாள் அந்தப் பிரச்சினையை எடுக்கிறேன். அன்றைக்கு நீங்கள் கேள்வி கேட்கலாம். இப்பொழுது உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன Clarification முக்கியமாகக் கேட்கப் போகிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்வெட்டு வராது என்று சொல்வது, மழையை எதிர்பார்த்து அவர்கள் சொல்கிறார்கள். அதைத் தவிர மின்சார வாரியத்திற்கு இந்த மின்வெட்டை சரி செய்வதற்கான வேறு எந்த வழியும் இல்லை. உதாரணமாக Tamil Nadu Electricity Board-னுடைய Thermal Station-லேயேகூட 2,970 மெகா வாட் அவர்களுக்கு சக்தி இருந்தும்கூட, 2,100 மெகாவாட்தான் உற்பத்தி செய்கிறார்கள். இப்படி, நீர் மின்சாரம் மட்டும் வராமல் இல்லை, தெர்மல் பவரும் தோல்வி அடைந்திருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் ஒரு வழக்கறிஞர் மாதிரி வாதம் வைக்கக்கூடாது. நான் உங்களை முதலிலே அழைத்தவுடனே, இது ரொம்ப முக்கியமான பிரச்சினை என்று அப்போதே நீங்கள் இதைச் சொல்லி இருக்க வேண்டும். அதற்கு அமைச்சர் பதில் சொல்லி இருப்பார். அவர் பதில் சொல்கிற வரைக்கும் காத்திருந்துவிட்டு, தெர்மல் பவரும் ஒழுங்காக வரவில்லை என்று இப்போது புதிதாக ஒரு கதையைச் சொல்கிறீர்கள். நீங்கள் முதலிலேயே இதைச் சொல்லியிருக்க வேண்டியதுதானே? (குறுக்கீடு) நான் இல்லை என்று சொல்லவில்லை. இது ரொம்ப முக்கியமான விஷயம், நீங்கள் முதலிலேயே சொல்லி இருக்க வேண்டும் என்கிறேன். (குறுக்கீடு)





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அதற்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்றையும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். சென்ற ஆண்டும் இதே போன்ற ஒரு கவன ஈர்ப்பு அறிவிக்கையை நான் கொடுத்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே பதிலைச் சொன்னார்கள். ஏறக்குறைய இதே பதிலைத் தான் சென்ற ஆண்டும் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்த ஆண்டுதான் கடிதம் எழுதியிருக்கிறார்.

**திரு. ச. அழகிரி:** இப்போது ஒரிசாவில் இருக்கிற பல்ச்சாரிலிருந்து நமக்கு 400 மெகா வாட் மின்சாரம் தருவதற்கு அந்த மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. ஆனால், அதனைப் பெறுவதற்கான வசதிகள் நம்மிடம் இல்லை. கடந்த 4 ஆண்டு காலமாக மின்சாரத் துறை படு பயங்கரமான தோல்வி அடைந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாநிலத்திலிருந்து மின்சாரம் தருவதற்கு வாய்ப்பு இருந்தும்கூட, அதைப் பெறுவதற்கான வசதிகளை நாம் ஏன் செய்துகொள்ளவில்லை? அப்படிச் செய்யாத காரணத்தினால், பல சிரமங்கள் ஏற்படுகின்றன. பகல் நேரத்திலே 510 மெகா வாட் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. இரவு நேரங்களில் 238 மெகா வாட் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே, இந்த மின்சாரப் பற்றாக்குறையை எப்படி நீங்கள் சரி செய்யப்போகிறீர்கள்? எப்படி கடலூர் மாவட்டத்திற்கு மட்டும் நீங்கள் மின்சாரப் பற்றாக்குறை இல்லாமல் செய்ய முடியும் என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதலிலே தெர்மல் ஸ்டேஷன்களிலேயிருந்துகூட மின்சாரம் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் என் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். எதிர்பாராதவிதமாக 20 ஆம் தேதி, தாங்கள் நம்முடைய பேரவைத் தலைவருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, இந்தச் செய்தியைச் சொன்னவுடனேயே அதை நான் அண்ணா அறிவாலயத்திலே இருக்கும்பொழுது எனக்குத் தெரிவித்தார்கள். அழகிரி அவர்கள் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு செய்தியைச்

சொன்னார்கள். எனவே, நாளைக்கு அவர் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவர இருக்கிறார் என்று சொன்னார்கள். இந்தச் செய்தியைச் சொன்னவுடனே, விவரங்கள் கேட்டபோது அன்றையதினம் எதிர்பாராதவிதமாக தூத்துக்குடியிலே 210 மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மின்சார உற்பத்தி நிலையம் திடீரென்று பழுதடைந்துவிட்டது. அதே தினத்திலே மேட்டூரிலேயும் 210 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அந்த மின் உற்பத்தி நிலையம், அதுவும் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆக, 420 மெகா வாட் மின்சாரம் நமக்கு எதிர்பாராதவிதமாக பாதிக்கப்பட்ட காரணத்தினாலே, நம்முடைய தமிழகம் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டது. இப்போது சரி செய்தாகிவிட்டது. இரண்டு நாட்களிலே, தொழிலாளர்கள் இரவு பகலாக வேலை பார்த்து, அதைச் சரி செய்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். எப்படி கடலூர் மாவட்டத்திற்கு மட்டும் தனியாகக் கொடுக்க முடியும் என்று. நான் ஏற்கெனவே மின்சார வாரியத் தலைவரிடம் பேசியிருக்கிறேன். நீங்களும் பேசியிருக்கிறீர்கள். அதிகாரிகளோடு பேசிய தகவல்கள் எல்லாம் கிடைத்த பிறகுதான், நான் அவர்களோடு கலந்து பேசித்தான் சொல்கிறேன். இப்போது நமக்கு பகல் நேரத்திலே 500 மெகா வாட் மின்சாரம் குறைகிறது என்பது உண்மை. ஆனால், அதற்கு என்ன செய்திருக்கிறோம் என்றால், 1½ மணி நேரம் நாம் `Load Shedding' செய்திருப்பதன் மூலமாக 300 மெகா வாட் நமக்கு மிச்சம் ஆகிறது. மீதி 200 மெகா வாட்டிற்கு ஒரிஸ்ஸாவிலேயிருந்தும், பஞ்சாபிலேயிருந்தும் 200 மெகா வாட் மின்சாரத்தை நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இந்தியாவிலே இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே, நம்முடைய மாநிலத்திலேதான் மின்சாரம் இந்த அளவிற்காவது கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் உண்மையிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும்கூட, இன்னும் இந்த மின்சார உற்பத்தியிலே அதிகக் கவனம் செலுத்தி, வருங்காலத்திலே மின்சாரத் தடையே இல்லாமல் போக்குவதற்கு, குறிப்பாக 2001 ஆம் ஆண்டு கோடை காலத்திலே இப்படிப்பட்ட தடையே வராமல் இருப்பதற்கு இந்த ஆண்டு 800 மெகா வாட் மின்சாரம் புதியதாக உற்பத்தி செய்து நமக்குக் கொடுக்க இருக்கிறார்கள். பிள்ளைப்பெருமாள்நல்லூர் என்ற இடத்திலேயிருந்தும், பிறகு சமயநல்லூரிலேயிருந்தும், சாமல்பட்டியிலேயிருந்தும் நமக்குக் கிடைக்க இருக்கிறது. இந்த மின்சாரம் எல்லாம் நமக்கு வந்தால் நிச்சயமாக ஜனவரி மாதத்திலிருந்து தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட நிலை இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ச. அழகிரி, திரு. கே. சுப்பராயன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், திரு. க. மணிவர்மா ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். நீங்கள் பல பேர் அறிவிக்கைகள் கொடுத்திருக்கிறீர்கள். எல்லாவற்றிற்குமே ஒட்டுமொத்தமாகத் திரும்பவும் மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே சொல்லி, அதற்கு அவரைப் பதில் அளிக்கச் சொல்கிறேன் அதை இன்னொரு நாள் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு புதியதாக என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முன்பே நான் சொல்லி இருக்கிறேன். பல பேர் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அதற்குப் பதில் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இல்லை என்று சொல்லவில்லை. இன்னொரு நாள் எடுக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். உட்காருங்கள். நான்தான் எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன் இல்லையா?

## 4. அறிவிப்புகள்

### (அ) அடுத்து எடுக்கப்பட வேண்டிய கவன ஈர்ப்புகள் நேரமின்மை கருதி பிறிதொரு நாளில் எடுத்துக் கொள்ளப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புகள் பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் கடன்களை இரத்து செய்யக் கேட்டுப் போராடுதல்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகளுடைய பிரச்சினை சம்பந்தமாக தங்களிடம் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இப்போது அந்தப் பிரச்சினையை எடுக்கிறமாதிரி இல்லை. அதை எடுத்தால் இன்றைய மானியக் கோரிக்கையை எடுக்க முடியாது. எனவே, உட்காருங்கள் (குறுக்கீடு) அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இன்றைக்கு எடுக்க முடியாது.

*(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ச. அழகிரி, திரு. கே. சுப்பராயன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், திரு. க. மணிவர்மா ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

நீங்கள் திடீரென்று இப்படி எழுந்து நிற்பது முறையல்ல என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். நீங்கள் இந்த முறையைக் கையாளுவதாக இருந்தால் உங்கள் இஷ்டப்படி நடத்துங்கள். அப்போது நான் இந்த அவையில் தலைவராக உட்கார வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் சொன்னது உண்மை. ஒரு நாளைக்கு எத்தனைத் தீர்மானங்கள்தான் எடுக்க முடியும்?

**திரு. சி. ஞானசேகரன்:** சாலை மறியல் எல்லாம் செய்து, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கைது செய்ததை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் நாளைக்கு வந்து கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை வையுங்கள். முதலமைச்சரைப் பதில் சொல்லச் சொல்கிறேன். திரு. அ.லெ. சுப்பிரமணியன் (குறுக்கீடு) நான் சொல்லி முடிக்க வேண்டும், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நான் வேறு ஒருவரைக் கூப்பிட்டிருக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** இது மிக முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது இல்லை. அவர் பேசிய பிறகுதான், அது முக்கியம் என்றால், நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுப்பேன்.

*(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ச. அழகிரி, திரு. கே. சுப்பராயன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், திரு. க. மணிவர்மா ஆகியோர் எழுந்து நின்றனர்.)*



2000 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

இன்னும் 7, 8 பேர் சேர்ந்து நில்லுங்கள். எனக்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் இப்போது கூப்பிட்டிருப்பது திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்களை.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் குறித்த அறிக்கையின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் 25-வது அறிக்கையையும், மற்றும் மாவட்ட நிர்வாகம் குறித்த அறிக்கையின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் 26-வது அறிக்கையையும் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. வ. வேலுசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 107 முதல் 111 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் கடன்களை இரத்து செய்யக் கேட்டுப் போராடுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடுகள்) இல்லை. இன்னும் 4, 5 பேர் எழுந்து நில்லுங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், நான் அனுமதி மறுக்கிறேன். நீங்கள் அதை Protest பண்ணி Walk out கூட பண்ணுங்கள், எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் கேட்டுவிட்டேன். நீங்கள் என் அறையிலேயே முதலமைச்சரிடம் பேசிவிட்டீர்கள். அதற்குப் பிறகும் நீங்கள் இப்படி நடந்துகொள்வது முறையல்ல. அழகிரிக்காவது அறையிலே நடந்தது என்னவென்று தெரியாது, ஞானசேகரனுக்குத் தெரியும். முதலமைச்சரிடம் நீங்கள் பேசிவிட்டீர்கள். அதற்கு மேலும் நீங்கள் பேசுவது முறையல்ல.

*முற்பகல் 11-40*

**திரு. சி. ஞானசேகரன் :** **

**திரு. க. மணிவர்மா :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களை முதலில் வெளியேற்றுவேன். ஏற்கெனவே நீங்கள் முறைகேடாக நடந்துகொண்டிருக்கிறீர்கள். மேலும் தொடர்ந்தால் உங்களை வெளியேற்றுவேன்.

**திரு. மு. அப்பாவு :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் பேசுங்கள். யாரும் பதில் சொல்லப்போவதில்லை. பேசிக்கொண்டே இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் சேர்ந்து பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு :** **

*(திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. விசுவநாதன், திரு. சொ. கருப்பசாமி ஆகியோரும் எழுந்து நின்று பேசினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது. நான் இவர்களை எல்லாம் பெரிதும் மதிக்கின்றவன். ஆகவே, இவர்களை வெளியேற்றுவதற்கு எனக்கு மனது வரவில்லை. இவர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டே நிற்கட்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, பெரம்பலூர் மட்டுமல்லாமல் தமிழகம் தழுவிய ஒரு பிரச்சினை என்ற காரணத்தால் இன்று சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கைதாகி இருக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் இன்று கைதாகியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் நமக்கு, இந்த அவைக்கு ஒரு நல்ல செய்தியை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், விவசாயிகளுடைய பிரச்சினை. இன்று தமிழகமே கொழுந்துவிட்டு எரியக்கூடிய இந்தப் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு நல்ல செய்தியை, விவசாயிகள் கடனை இரத்து பண்ணுகிற செய்தியை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள், நான் இதோடு மூன்றாவது தடவை சொல்லுகின்றேன். எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலே சில மரியாதைகள் உண்டு. அதனால் எதிர்க் கட்சித் தலைவர் ஏற்கெனவே அறிவிப்பு கொடுத்ததைப் பற்றியோ, கொடுக்காததைப் பற்றியோ அவையிலே எழுப்ப வேண்டும் என்றால் ஒரு மரபு, ஒரு மரியாதைக்காவது என்னுடைய அறையிலே வந்து இன்று இதைப் பேசப் போகிறேன் என்று சொல்ல வேண்டும். அதற்கு மாறாக நேரடியாக இங்கே மன்றத்திலே வந்து இப்படிப் பேசுவது முறையல்ல. இதை கடைசி தடவையாகச் சொல்லுகின்றேன். இல்லாவிட்டால் இனிமேல் எதிர்க் கட்சித் தலைவர் பேசுவதும் அவைக் குறிப்பிலே ஏறாது என்று ஒரு உத்தரவைப் போடுவேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பிரச்சினையை எல்லோரும் எழுந்து எழுப்பிவிட்டார்கள். உடனே ஒரு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் நீங்கள் இப்பொழுது எழுந்து நின்று பேசுவது .... (குறுக்கீடு) நான் இப்போது மற்றவர்கள் பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்று கேட்ட காரணத்தால் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுடைய கடனை இரத்து செய்ய முடியும், அதற்கு வழி இருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறாரா என்று நான் புரிந்துகொள்ள விரும்புகிறேன்.

'நபார்டு' அதற்கு இணங்காதபட்சத்தில் ஒரு முறை இரத்து செய்துவிட்டால் அடுத்த முறை கூட்டுறவுக்கே நபார்டு கடன் தராது என்ற ஒரு சூழ்நிலையில் என்ன risk எடுத்துக்கொண்டு செய்ய முடியும் என்று எதிர்க் கட்சித் தலைவர் எதிர்பார்க்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. இப்போதே நாம் இரத்து செய்திருப்பது, அபராத வட்டி முழுமையும் இரத்து செய்திருக்கிறோம். இரண்டாவது 7% ஊக்கத் தொகை என்பது 1,200 ரூபாய் வட்டி கட்ட வேண்டியிருந்தால் அவர் 500 ரூபாய் கட்டினால் போதும். 700 ரூபாயைக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கமே அதைக் கட்டிவிடுகிறது என்ற அளவுக்கு ஊக்கத்தொகையாக 7% அறிவித்து இருக்கிறோம். இதைவிடக் கடனையே தள்ளுபடி செய்யச் சொன்னால் அரசாங்கமே நடத்த முடியாது. மேற்கு வங்கத்திலே கொண்டு வந்திருக்கிறார்களா? அல்லது கேரளாவிலே இரத்து செய்திருக்கிறார்களா? ஆனால் கம்யூனிஸ்ட்டுகள் எல்லாம் போராடுகிறார்கள். யாராவது ஒரு கம்யூனிஸ்ட் நண்பர் சொல்லட்டும்; கேரளாவிலே இரத்து செய்து இருக்கிறார்கள் கடனை என்று சொல்லட்டும்; வட்டியை அறவே இரத்து செய்து விடடார்கள் என்று சொல்லட்டும்; மேற்கு வங்கத்திலே இரத்து செய்து இருக்கிறார்கள் என்று சொல்லட்டும்; நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருககிறேன். எங்கும் இல்லாத வழக்கமாக இங்கே மாத்திரம், வேண்டும் என்றே இந்த அரசுக்கு ஒரு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பதற்காக சில பேர் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால் அதற்கெல்லாம் தேவையில்லாமல் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்கள் வக்காலத்து வாங்குவது எனக்கு நன்றாகத் தெரியவில்லை.

**திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே. நீங்கள் அவை மரபுகளை ரொம்ப மீறுகிறீர்கள். நான் தயவுசெய்து சொல்கிறேன், இது முறையல்ல, முதலமைச்சர் இதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள், அவ்வளவுதான்.

**திரு. ச. அழகிரி:** சில சந்தேகங்களைக் கிளப்பினார்கள். பதிலுக்கு நபார்டு. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது எப்படி பதிலுக்கு என்றாகும்? நபார்டு, அடுத்த வருஷம் கடன் வாங்கினால், கொடுத்தால் பரவாயில்லை. கொடுக்காவிட்டால் நான் இங்கே உறுப்பினராக இருக்கிறேனோ, இல்லையோ என்கிறீர்களா?





**திரு. மு. அப்பாவு:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை யாரும் கேட்கவில்லை.

**திரு. மு. அப்பாவு:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் யாரும் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கைதாகி இருக்கின்றவர்களெல்லாம் கடன் வாங்கிய விவசாயிகள் அல்ல. யார் கைதாகி இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும் எனக்கு. யாரோ சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அதிலே கைதாகி இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், கைதாகியது ஆயிரம் பேர் என்று சொல்கிறார்கள். அந்த ஆயிரம் பேரும் கூட்டுறவுக் கடன் வாங்கிய விவசாயிகள் அல்ல; ஆயிரம் பேரும் அல்ல.

**திரு. ச. அழகிரி:** **

(திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன். திரு. பி.ஆர். சுந்தரம், திரு. மு. அப்பாவு, திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. ச. அழகிரி ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை மரபுகளைக் காப்பாற்றுவதற்காக, இங்கே யார் பேசினாலும் அது அவைக் குறிப்பிலே ஏறாது. எவ்வளவு நேரம் நீங்கள் பேச வேண்டுமோ நீங்கள் பேசிக் கொண்டே இருங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. நீங்கள் ரொம்ப முறைகெட்டத்தனமாக நடக்கிறீர்கள். நான் இதை நேரடியாகக் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். இது சம்பந்தமாக அரசியல் ரீதியாக உங்கள் எதிர்ப்பைக் காண்பிப்பதற்கு வேறு வழி இருக்க வேண்டும். இப்படி சட்டமன்றத்தை அசிங்கப்படுத்தக்கூடாது. திட்டமிட்டு சட்டமன்றத்தை அசிங்கப்படுத்துகிறீர்கள்.

**திரு. ச. அழகிரி:** **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

**திரு. ச. அழகிரி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். நீங்களெல்லாம் பேசிவிட்டீர்கள். அப்புறம் என்ன? 10 பேர் சேர்ந்தார்போல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அப்புறம் முதலமைச்சர் என்ன பதில் சொல்வது?

**திரு. ச. அழகிரி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், பதிவு செய்யமாட்டேன். இப்படி பேசினீர்கள் என்றால் உறுதியாகப் பதிவு செய்ய மாட்டேன். உங்களுக்குத் திருப்தியில்லை என்றால் என்னைப்பற்றித் தீர்மானம் கொண்டு வாருங்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் (குறுக்கீடுகள்) இனிமேல் இவற்றையெல்லாம் இப்படி அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் யார் பேசினாலும் அது அவைக் குறிப்பிலே ஏறாது.

**திரு. ச. அழகிரி:** **

**திரு. கே. சுப்பராயன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நபார்டு பற்றிய செய்தியை முதலிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டார்கள். அவர் சொன்னால் நான் அனுமதி கொடுக்கிறேன். நீங்களெல்லாம் உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** **

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குள்ளே பிரிவினை இல்லை. முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்துக் கேட்டார்கள். நீங்கள் இதற்கு என்ன வழி என்று சொல்லுங்கள். நான் கேட்கிறேன் என்று சொன்னார்கள்....

**திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே,....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்டார், அதற்கு அனுமதி கொடுக்கிறேன், அழகிரி நீங்கள் உட்காருங்கள்.

(திரு. ச. அழகிரி, திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், திரு. மு. அப்பாவு, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. வை. சிவபுண்ணியம் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். இப்படி 10 பேர் எழுந்து நின்றால் அனுமதிக்க முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு அந்த அவசியம் இல்லை. அழகிரி அந்த வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது. நீங்கள் ஒட்டுமொத்தமாக ஒன்றாக இருங்கள். எனக்கு என்ன அதைப்பற்றிக் கவலை? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நபார்டைப் பற்றிச் சொன்னார்கள். அந்த நபார்டு வங்கி என்ன என்பதை நம்முடைய அழகிரி அவர்கள் மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதை விளக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேலாவது தெரிந்தவர்கள் தெரிந்த விஷயத்தைப் பற்றி மட்டும் இந்த அவையிலே பேசினால் நன்றாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டைப் பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னது நான்தான். ஆனால், நீங்கள்தான் எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதாக இருந்தால் நான் அனுமதிக்கிறேன் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், முதலமைச்சர் அவர்கள்...

**திரு. ச. அழகிரி:** எனவே, நீங்கள் ஒரு உள்நோக்கத்தோடுதான் சொல்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அழகிரி, நீங்கள் உள்நோக்கத்தோடுதான் இப்போது நடக்கிறீர்கள். இதை நான் பகிரங்கமாகச் சொல்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினையைப் பொறுத்தவரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பகிரங்கமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு இருக்கிற ஆத்திரம் எங்களுக்கும் உண்டு. நாங்களும் தேர்தலிலே நிற்கக்கூடிய ஆட்கள்தான். அதனாலே மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். ஆனால், நீங்கள் பேரவைத் தலைவரை அவமானப்படுத்த வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்திலே உறுதியாக இருக்கிறீர்கள். அதை முறையாகச் செய்யுங்கள். (குறுக்கீடு) அதை முறையாகச் செய்யுங்கள்.

**திரு. ச. அழகிரி:** அப்படியில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் இப்போது பேசுங்கள். நபார்டைப் பற்றிப் பேசுங்கள். வேறு ஒன்றையும் கேட்க நான் தயாராக இல்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, நபார்டைப் பற்றிப் பேசுவதற்கு முன் இன்னொரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் பேசுகிறபோது எங்களுக்கும் அந்த உணர்வு உண்டு என்று சொன்னீர்கள். நாங்கள் உங்களையும் அவர்களையும் வேறுபடுத்திப் பார்க்கிறோம். உங்களையும், அவர்களையும் நான் ஒன்றாகப் பார்க்கவில்லை. ஆளும் கட்சி வேறு, சட்டப்பேரவைத் தலைவர் வேறு. எனவே, இரண்டுபேரையும் நாங்கள் ஒன்றுபடுத்திப் பார்க்கவில்லை. உங்களுக்கு என்று ஒரு தனி மரியாதை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு இருக்கிற கொஞ்சநஞ்சம் ஆதரவையும் கெடுத்துவிடாதீர்கள். (சிரிப்பு)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நபார்டைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே ஒட்டுமொத்த விவசாயிகள் தங்களுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தி



2000 ஏப்ரல் 25] [திரு. ச. அழகிரி]

ஒரு மறியல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாடு அரசாங்கமும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்தக் கடன் தள்ளுபடியைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருந்தால்கூட, நபார்டு ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். நபார்டோடு சென்ற ஆட்சி அதைப்போல ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கிறது, அதனாலே அந்த ஒப்பந்தத்தை எங்களால் மீற முடியவில்லை என்று சொல்கிறார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கிறேன்; மாநிலத்திற்கு அதிக அதிகாரமும், அதிக சுயாட்சியும் கேட்கிற ஒரு அரசியல் கட்சி, சென்ற ஆட்சி இதேபோல ஒரு தீர்மானத்தைப் போட்டுவிட்டது; எனவே எங்களால் அதை மீற முடியவில்லை; அந்தச் சட்டத்திற்கு வேறு ஒரு மாற்றுச் சட்டத்தைக் கொண்டு வர முடியவில்லை என்று சொல்வது நியாயமா? இன்றைக்கு தேசிய ஜனநாயக முன்னணியில் நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள் . . . .

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே நியாயம், அநியாயம் பேசுவதற்கே இடமில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் சொல்லவில்லை, மீறமுடியாது என்று. நபார்டு சொல்கிறது. கொடுக்க முடியாது என்று நபார்டு சொல்கிறது. ஏற்கெனவே, சர்க்கார் என்றால் ஒரே சர்க்கார் தான். இப்போது காவிரிப் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம், வேறு ஒரு நதிப் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். ஒரு சர்க்கார் செய்து கொண்ட ஒப்பந்தம்தான் அடுத்த சர்க்காருக்கும் தொடருகிறது. அதைப்போலத்தான் இந்த சர்க்கார் செய்து கொண்ட ஒப்பந்தம், கடந்த கால சர்க்கார் செய்து கொண்ட ஒப்பந்தம்; அதை மீறாதீர்கள், நாங்கள் தரமுடியாது. கடனை நீங்கள் தள்ளுபடி செய்வதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது என்று நபார்டு சொல்கிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஜூலை மாதம் அன்றைக்கு இருந்த அமைச்சர் சோம்பால் அவர்கள் 6,500 கோடி ரூபாய்க்கு மறுமுதலீட்டிற்காக ஒரு நிதியை ஒதுக்கி இருக்கின்றார்கள். அதிலே தமிழகத்திற்குக்கூட 500 கோடி ரூபாய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அடுத்தது இன்றைக்குப் பொதுத் துறை வங்கிகள் மூலமாக அவை எல்லாம் Reserve Bank-யினுடைய கன்ட்ரோலில் இருப்பதுதான். 48,000 கோடி ரூபாய்க்கு

[திரு. ச. அழகிரி] [2000 ஏப்ரல் 25

பெருமுதலாளிகளுக்குக் கடன் அளித்திருக்கிறார்கள். அவை எல்லாம் வாராக் கடன்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 100 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியவர்கள் மட்டும் 1,000 பேர், 2,000 பேர் இருக்கிறார்கள். எனவே, அவைகளுக்கு எல்லாம் . . . (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மத்திய அரசைப் பற்றியது. இது அரசியல் பேச்சு. நீங்கள் நபார்டைப் பற்றி மாத்திரம் சொல்லுங்கள். ரிசர்வ் வங்கியில் யார் யார் வாங்கியிருக்கிறார்கள்? அவர்கள் எல்லாம் எவ்வளவு ரூபாய் பாக்கி? இதெல்லாம் என்ன? (குறுக்கீடு) இல்லை. இதெல்லாம் முறை இல்லை. (குறுக்கீடு) பேசுகிறவர்களுக்கு மரியாதை வேண்டுமென்றால் நியாயமாகப் பேச வேண்டும். இதை அரசியல் மேடையாக நீங்கள் ஆக்கக்கூடாது.

**திரு. ச. அழகிரி:** அப்படி அல்ல, நபார்டு அதாவது எப்படி R.B.I. ரிசர்வ் வங்கி தொழில் முனைவோர்களுக்குக் கடன் கொடுக்கின்றதோ அதைப்போலத்தான் நபார்டு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறது...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான எண்ணம் அவைக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நபார்டு என்பது கூட்டுறவு நிறுவனங்களுக்கும், Rural roads போன்றவைகளுக்கும், அரசினுடைய வளர்ச்சிக்கு கொடுக்கிற நிதி நிறுவனமே தவிர, தொழில் அதிபர்களுக்கு நபார்டிலேயிருந்து கொடுப்பதே இல்லை. I.D.B.I.-யிலிருந்து தான் கொடுக்கிறார்கள். I.D.B.I.-யிலிருந்துதான் தொழில் அதிபர்களுக்குக் கொடுக்கிறார்கள். ரிசர்வ் வங்கி அனுமதி பெற்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுக்கிறார்கள். நபார்டு என்ற அந்த வங்கி குறிப்பாக அரசாங்கத்தினுடைய இலாக்காக்களிலே இந்தக் குறிப்பிட்ட பணிகளுக்காகத்தான் நிதியை ஒதுக்கிக் கொண்டிருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** நானும் அதைத்தான் சொல்கிறேன், I.D.B.I. வேறு, நபார்டு என்பது வேறு என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். தொழில் முனைவோர்களுக்கு எப்படி I.D.B.I, ரிசர்வ் வங்கி கொடுக்கிறதோ.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஒரு கேள்வி, அழகிரி. நீங்கள் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருப்பது முறை அல்ல. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். முதலமைச்சர் ஒரே ஒரு கேள்வி கேட்கிறார். இந்தக்



2000 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

கடனை இரத்து செய்துவிட்டால் அடுத்த ஆண்டு நபார்டு பணம் கொடுக்கத் தயாராக இல்லை என்று முதலமைச்சர் சொல்கிறார். அதற்கு என்ன வழிமுறை என்பதை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோம்பால் அவர்கள் 1998 ஆம் வருடம் 6,500 கோடி ரூபாய் மறுமுதலீட்டு நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதிலே நமக்கு 500 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாங்கத்திற்கான பங்கு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, தேசிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்திலே அவர் ஓர் அங்கமாக இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசாங்கத்திடம் பேசி, இதனை ஒரு மாற்றம் செய்யலாம். இது ஒரு G.O. தான் சாதாரண G.O., ஒரு அரசாணை போட்டால் இந்த அரசாணையை இரத்து செய்து விடலாம். ஒரு அரசாணையை இரத்து செய்வதற்கு இன்னொரு அரசாணை தேவை. அதனை முதலமைச்சரால் செய்ய முடியும். செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதைச் செய்து தரவேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். திரு. சுப்பராயன் ஒட்டுமொத்தமாகச் சொல்லி, முதலமைச்சர் பதில் சொல்லட்டும். நான் விவாதத்தை அனுமதிக்க முடியாது. இப்போதே மணி 12.00 ஆகப் போகிறது. இன்னும் மானியக் கோரிக்கையே எடுக்கவில்லை. பிறகு அதிலே பேசவிடவில்லை என்று நாளைக்குக் குற்றச்சாட்டு வரும். திரு. சுப்பராயன், சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. இது விவசாயிகளுடைய பிரச்சினை மட்டும் அல்ல. மேலோட்டமாகப் பார்த்தால் இது ஒரு சாதாரணமான பிரச்சினையாக..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுத்தது ஒரே ஒரு காரணத்திற்காகத்தான்.

**திரு. கே. சுப்பராயன்:** முதலமைச்சர் கேட்பதற்கு நான் பதில் அளிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு மாத்திரம் பதில் சொல்லுங்கள். மேற்கு வங்காளத்திலேயோ, கேரளத்திலேயோ இப்படி நடந்திருக்கிறதா என்று கேட்டார்கள். அதற்கு மாத்திரம் பதில் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பின்னாலும், முன்னாலும் வெட்டிவிட்டு நடுவில் வெறும் இரண்டு வரிகளைக் காட்டுவதால் பொருள் புரியாது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதற்குத்தானே பதில் சொல்கிறேன் என்கிறீர்கள் நீங்கள்?

*முற்பகல்-11-55*

**திரு. கே. சுப்பராயன்:** நான் ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், விவசாயிகளுடைய கடன் இரத்து செய்யப்பட வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டிய அவசியம் என்ன என்பதையும், தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமான நிலைமைகளையும் இரண்டொரு வரிகளில் சொல்லி, இணைத்துச் சொன்னால்தான் அவற்றைப் புரிய வைக்க முடியும் என்பதற்காக நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று கைவிரிப்பது, கைகழுவிவிடுவதே தவிர, பிரச்சினையைத் தட்டிக்கழிப்பதே தவிர வேறல்ல. இது பிரச்சினைக்குப் பரிகாரம் தருகிற கடமைப் பொறுப்பிலிருந்து மாநில அரசு விலகிக்கொள்வதாகும். மே 28 ஆம் தேதி 1998-வது வருடத்தில் நாடாளுமன்றத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் விவசாயம் பொய்த்து விட்டதால் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் பிரச்சினைகள் குறித்து விவாதம் நடைபெற்றபோது அன்றைய இணை அமைச்சர் திரு. சோம்பால் நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார்கள். நபார்டு வங்கி விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை இரத்து செய்ய வேண்டும் என்று Reserve Bank of India நபார்டு வங்கிக்கு உத்தரவிட்டுள்ளதாக நாடாளுமன்றத்திலேயே அறிவித்திருக்கிறார்கள். அது எவ்வளவு ஒரு சீரியசான பிரச்சினையாக நாடாளுமன்றத்திலே நடந்திருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அதில் நாடாளுமன்றமே என்ன சொல்லியிருக்கிறதென்றால் விவசாயிகளின் கடனை இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்து Reserve Bank of India நபார்டு வங்கிக்கு கடனை இரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது என்றால், இது எவ்வளவு கடுமையான விஷயம்?



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** உத்தரவிட்டதே, அந்த உத்தரவை நபார்டு வங்கி நிறைவேற்றியதா?

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினைகளைப் பற்றி நாடாளுமன்றத்திலே விவாதம் வருகிறபோது அவற்றை நபார்டு வங்கிக்கு ரிசர்வ் பாங்க் சொல்லியிருக்கிறது. அதை நபார்டு வங்கி நிறைவேற்றவில்லை என்றால் நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்பு மத்திய, மாநில அரசைச் சார்ந்ததே தவிர, மக்களுடைய பிரச்சினை அல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நபார்டு வங்கிக்கு மாநில அரசு எப்படி பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியும்? நீங்கள் இதை மத்திய அரசுக்குச் சொல்லுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கம், கேரளா பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், மேற்கு வங்கத்தில், கேரளாவில் இப்படியொரு பிரச்சினை எழவில்லை. அங்கே எழாதபோது இந்தப் பிரச்சினைக்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்கு வங்கத்திலோ, கேரளத்திலோ இப்படி கடன் இரத்து செய்யப்பட வேண்டும் என்று போராட்டம் நடைபெறவில்லை. அப்படிப்பட்ட சிக்கல், நெருக்கடி அந்த மாநில விவசாயிகளுக்கு இல்லை என்பதைத்தான் அவர்கள் நடைமுறையில் காட்டுகிறார்கள். ஆனால், இங்கே 5 மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை நடைபெற்றிருப்பதால், இது ஒரு கடுமையான பிரச்சினை என்பதால், வட்டி, முதல் முழுவதையும் இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துவதில் ஒரு மாநில அரசுக்கு மனம் இருந்தால், மார்க்கம் இருக்கும். மாநில அரசுக்கு விவசாயிகளின் கடனை இரத்து செய்வதில் மனம் இல்லை, எனவே, மார்க்கம் இல்லை. மனம் தெளிவடைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாநில அரசினுடைய மனம் தெளிவாகத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தெளிவில்லாதவர்கள்தான் இதிலே ஏதோ இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஒன்றும் தெளிவில்லாதவர்கள் அல்ல. தெளிவு, தெளிவற்ற தன்மை என்பதற்கான வேறுபாட்டை நண்பர் சுப்பராயன் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு...

[2000 ஏப்ரல் 25

(திரு. மு. அப்பாவு, திரு. ச. அழகிரி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதற்கு மேலே அனுமதி தரமுடியாது. வேறு யாராவது இது பற்றிப் பேசினால், நான் நடவடிக்கைதான் எடுப்பேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பேச அனுமதி எதுவும் கிடையாது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2000 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் கடன்களை இரத்து செய்யக் கேட்டுப் போராடுதல்—தொடர்ச்சி

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, பெரம்பலூர் போன்ற எல்லா மாவட்டங்களிலேயும் இன்று ஆயிரக்கணக்கான விவசாயிகள் பஸ் மறியல் செய்து கைதாகியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் கைதாகியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு, விவசாயிகளைப் பற்றி கவலைப்படாமல், அவர்களுடைய கூட்டுறவு வங்கிக் கடனை இரத்து செய்யாமல் இருப்பதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்பு செய்வதானால் செய்யுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம் என்ற ஒரு வார்த்தையைச் சொல்லுங்கள், போதும். (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே கோரிக்கையை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லுங்கள், record ஆகிவிடும். அதற்காக மைக் வேண்டியதில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் மைக் வேண்டும். எல்லோருக்கும் மைக் கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் எதற்கு? வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லுங்கள். உங்களுக்கு நல்ல, பெரிய குரல் இருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம் பேசுவது அவைக்குறிப்பிலே ஏறாது.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு வார்த்தை அதிகம் பேசினால் வெளியேற்றுவேன். நீங்களாக வெளியேறுவதை விட, நானே வெளியேற்றுவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** **

*(அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*(அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*(இந்திய தேசிய லீக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*நண்பகல் 12-00*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கேரள மாநிலத்திலோ அல்லது மேற்கு வங்காள மாநிலத்திலோ இப்படிப் பிரச்சினை இருக்கிறதா என்று கேட்டார்கள். அந்த மாநிலங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை இல்லை என்பது மட்டுமல்ல, அங்கே விவசாயிகள் இப்படி மறியல் நடத்தவில்லை. ஆகவே மறியலில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளை அழைத்து அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து, இதற்கு ஒரு சுமுகமான முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தவேண்டும். அதை வலியுறுத்தி, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தில் இப்படிப்பட்ட பிரச்சினை இல்லை என்றார்கள். கேரளத்திலே கடன் வாங்கியவர்கள் ஒழுங்காகக் கடனைத் திருப்பிச் செலுத்துகிறார்கள். கடனைத் திருப்பிச் செலுத்தாதே என்று அவர்களுக்கு புத்திமதி சொல்ல இங்கே உள்ளதைப் போல சி.பி.ஐ.(எம்) அங்கே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000* ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2000-2001. விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவு

(இ) கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்

(ஈ) கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5-முத்திரைத் தாள்கள்-நிருவாகம். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.12,70,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4427, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,70,77,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1390, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to open a Sub-Registrar's Office at Berikai in Hosur Taluk'

I move— "that the sum of Rs.12,70,77,000/- allocated under Demand No. 5-Stamps- Administration be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3903, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,70,77,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2848, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்துக்கு கணினி வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,70,77,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2735, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் துணைப் பதிவாளர் (Sub-Registrar) அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,70,77,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஔ) கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6— ஆவணப் பதிவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.52,57,00,000-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத்தீர்மானம் எண் 4417, திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 52,57,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3835, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,57,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 47— ஊரகத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47— ஊரகத் தொழில்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.80,61,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4567, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,61,38,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4248*, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,61,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3075*, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to identify the rural areas and to start rural industries by using the available raw materials in Tamil Nadu',

I move— "that the sum of Rs.80,61,38,000/- allocated under Demand No.47-Rural Industries be reduced by Rs.100/-.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2806*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,61,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஈ) கோரிக்கை எண் 59— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.19,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *4577*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2792*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் தனது முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள்-நிருவாகம், ஆவணப் பதிவு, ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும்

ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம், திரு. ஏ. ராசேந்திரன் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் நிருவாகம், பத்திரப்பதிவு, ஊரகத் தொழில்கள் ஆகிய மானியங்களில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, ஒருசில கருத்துக்களை முன்வைக்க நான் விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பத்திரப் பதிவுத் துறை ,137 ஆண்டுகள் வயதுடைய துறை என்று நம்முடைய கொள்கை விளக்கப் புத்தகத்திலே குறிப்பிட்டுள்ளார்கள். இது மிகப் பழமையான துறை. இந்தத் துறை அரசுக்கு வருமானம் ஈட்டித் தருவதில் வணிக வரித் துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறை போன்ற துறைகளுக்கு அடுத்து மூன்றாவதாக விளங்குகிறது. சென்ற ஆண்டு 1,019 கோடி ரூபாய் வருவாய் வந்து இருக்கிறது என்று சொல்லும்போது, உண்மையிலே மகிழ்ச்சியாக இருந்தாலும், இந்தப் பதிவுத் துறையில் ஏற்படுகின்ற சிக்கல்களை, நான் ஒரு வழக்கறிஞராக இருக்கின்ற காரணத்தால், அதில் இருக்கின்ற சிக்கல்களால் நேரடியாக மக்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, ஆள் மாறாட்டம் செய்து பத்திரப் பதிவுகள் நிறைய நடக்கின்றன. இந்தப் பத்திரப் பதிவில் ஆள் மாறாட்டம் செய்யும்போது-வாங்குபவர், விற்பவர் இருவரில் விற்பவர் அவசியம் வந்தாக வேண்டும். ஆனால் வாங்குபவர் பத்திரப் பதிவுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை.

@ 133 முதல் 234 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



அப்படியே அவர்கள் வந்தாலும் ஆள் மாறாட்டம் செய்து, அவர்கள் எல்லாம் பத்திரப் பதிவு செய்கின்றார்கள். இதற்காகத்தான் நான் அதைப் பலமுறை அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே சொல்லியிருக்கின்றேன்; கேள்விகளைக்கூட கேட்டு இருக்கின்றோம்.

பத்திரப் பதிவு செய்யும்போது, பத்திரத்தை வாங்குபவருடைய போட்டோவையும், விற்பவருடைய போட்டோவையும், இரண்டையும் அதிலே ஒட்ட வேண்டும். அப்படி ஒட்டினால்தான் பத்திரங்களைப் பத்திரப் பதிவு செய்யும்போது ஆள் மாறாட்டம் செய்யப்படுவதைத் தடுக்கலாம். இதை நடுவண் அரசுகூட யோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். Indian Registration Act-ல் இதைச் செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று நடுவண் அரசு சொல்கிறது. நம்முடைய அரசும் இந்தப் பத்திரப் பதிவில் போட்டோ ஒட்டுவதைக் கடைப்பிடித்தால் நிச்சயமாக ஆள் மாறாட்டம் செய்யப்படுவதைத் தடுக்க முடியும். இதைத்தான் `வாத்வா கமிட்டி'கூட சொல்கிறது; பல யோசனைகளை அதில் சொல்லியிருக்கிறார்கள். ஆள் மாறாட்டம் பத்திரப் பதிவில் எப்படிச் செய்கிறார்கள் என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ரேஷன் கார்டு இருக்கிறது. இதில்கூட, ரேஷன் கார்டு கொண்டு வந்தால்தான் பத்திரப் பதிவு செய்ய முடியும் என்ற யோசனையைக்கூடச் சொல்லலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து யோசனை செய்து, அரசுத் துறை அதிகாரிகளையெல்லாம் நேரில் அழைத்துப் பேசி பத்திரப் பதிவில் ஆள் மாறாட்டம் செய்வதை எப்படித் தடுப்பது? என்பதற்கு ஒரு யோசனை செய்தாக வேண்டும். ஏனென்றால் சிவில் கோர்ட்டில் இருக்கின்ற வழக்குகளில் 25 சதவிகித வழக்குகள் ஆள் மாறாட்ட வழக்குகளாகவே இருக்கின்றன. ஒருவருடைய நிலத்தை வேறொருவர், 'நான்தான் அந்த முனுசாமி' என்று சொல்லி விற்று விடுகிறார். அது நீதிமன்றங்களிலே வரும்போது, ருசுப்படுத்துவது என்பது மிகச் சிரமமாக இருக்கிறது. ஏனென்றால் கையெழுத்து அவரைப்போலவே போட்டுவிடுகிறார்கள். அந்தக் கையெழுத்து அனுப்பப்படுகிறது. அந்தக் கையெழுத்து அனுப்பப்பட்டும், முடிவு தெரிவதற்குள்ளாக, 30 ஆண்டுகாலம்— மேல் கோர்ட்டிலே வந்து சென்று வருகிற வரை 30 ஆண்டு காலம் பிடிக்கிறது. அதற்குள் வயதாகி, அவர்கள் எல்லாம் மாறி விடுகிறார்கள். ஆகையால் ஆள் மாறாட்டம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும்.

அடுத்து, இப்போது பத்திரப் பதிவு செய்யும்போது, அதில் தேதி போடுகிறார்கள். ஆனால், அதற்கு முன்பாகப் பத்திரங்களை

எழுதுகிறார்கள். இதை எதற்கு எழுதுகிறார்கள் என்றால், முன் பத்திரம், பின் பத்திரம் என்று நீதிமன்றங்களிலே வரும்போது, முன் பத்திரம் எழுதியதுதான் செல்லும் என்ற சட்டம் இருக்கிறது. அதனால்தான் பத்திரம் பதிவு செய்தாலும் 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பு எழுதிய பத்திரங்களில் இருக்கின்ற தேதிதான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிற காரணத்தால், அது பல சிக்கல்களை ஏற்படுத்துகிறது. ஆகையால், பத்திரப் பதிவுத் துறையில் என்று பத்திரம் பதிவு செய்யப்படுகிறதோ அன்றைய தேதியிலிருந்துதான் அது அமலுக்கு வரும்; அன்றைய தேதிதான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற சட்டத்தை இயற்றினால்தான் இந்த தேதிக்கு முக்கியத்துவம் தருவது நிச்சயமாகத் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

அடுத்தது, வழிகாட்டி மதிப்பு Guideline Value இருக்கிறது. இந்த Guideline Value தான் பத்திரப் பதிவு அலுவலகங்களில் பல தவறுகள் நடக்க வாய்ப்பை ஏற்படுத்துகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட சொல்லியிருக்கிறார்கள். பதிவாளரிடத்திலே கொடுத்து இருக்கிறோம், முக்கிய அலுவலகங்களில் வைத்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இருந்தாலும், ஏழை எளிய, விவசாயப் பெருங்குடி மக்கள் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் செல்லும்போது, அவர்கள் என்னென்ன விதமாக மிரட்டப்படுகிறார்கள் அல்லது என்னென்னவிதமாக அவர்களை வசப்படுத்துகிறார்கள் என்பதை நாங்களெல்லாம் நேரடியாகப் பார்த்திருக்கிறோம். ஆகையால் இந்த Guideline Value- வழிகாட்டி மதிப்பை-எப்படி சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்பதற்கு பல துறைகள் இருக்கின்றன. அதற்காக அதிகாரிகள் அங்கெல்லாம் இருக்கிறார்கள். தனித் துணை ஆட்சியர் (பத்திரப் பதிவு-வழிகாட்டி) ஒருவர் இருக்கிறார். அவர்களெல்லாம் பத்திரப் பதிவுக்கு வழிகாட்டி மதிப்பை பயன்படுத்துகிறார்கள். இருந்தாலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. எப்படியாவது அதிகாரிகளை எல்லாம் வைத்து இதை எப்படிச் சீர்திருத்துவது என்று ஆராய்ந்து இந்த வழிகாட்டி மதிப்பை அந்தந்தப் பதிவு அலுவலகங்களில் வெளியே தொங்கவிட்டு, வருகின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அல்லது நிலங்களை விற்பவர்கள், வாங்குபவர்கள் நேரடியாகத் தெரிந்துகொள்வதற்கு அவர்களுக்கெல்லாம் வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த Guideline Value பற்றிய ஒரு தவறான பிரச்சினை, தவறான மதிப்பு அல்லது அங்கிருக்கிற பத்திரப் பதிவு அதிகாரிகள் சொல்கின்ற தவறான யோசனைகளையெல்லாம் தவிர்க்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.



அடுத்தது, ஆயிரம் ரூபாய்க்குக் கீழே விற்கின்ற வீட்டுமனைகள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஏழை எளிய மக்களுக்கு, பத்திரப் பதிவுக் கட்டணம் இல்லையென்று நம்முடைய அரசு அறிவித்து இருக்கிறது. அது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்தது. இப்பொழுது ஆயிரம் ரூபாய்க்கு வீட்டுமனை எங்கும் கிடைப்பதில்லை. சாதாரணமாக ஒரு கிராமத்தில் சென்று பார்த்தால்கூட 5 ஆயிரம் ரூபாய் அல்லது 10 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வீட்டுமனைகள் கிடைப்பதில்லை. எனவே உண்மையிலேயே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நம்முடைய அமைச்சரவர்கள் நினைப்பாரானால், அந்த ஆயிரம் ரூபாய் என்பதை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தினால்தான் அந்த ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்தது போல் ஆகும். அதையும் நம்முடைய அமைச்சரவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, சாதாரணமாக ஒரு கூட்டுக் குடும்பம் இருக்கிறது என்று சொன்னால், அண்ணன், தங்கை அல்லது இரண்டு சகோதரிகள் இருந்து இவர்களுக்குள்ளே Settlement அல்லது Release Deed எழுதினாலோ, அவர்கள் கிரயப் பத்திரத்திற்குப் பதிவு கட்டணம் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அது உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஏனென்றால், ஓர் அண்ணன், தங்கைக்கு Release Deed எழுதினாலும், அல்லது அண்ணன் தம்பிக்கு Settlement எழுதினாலும் அந்தக் கிரயப் பத்திரத்தில் எவ்வளவு தொகை போட வேண்டுமோ அவ்வளவு பத்திரப் பதிவுக் கட்டணம் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி யோசிக்க வேண்டும். ஏனென்றால், பெண்களுக்குச் சொத்துரிமை தந்தவர் கலைஞர் அவர்கள். பெண்களுக்கு மூதாதையர் சொத்திலே உரிமை என்று சொல்கிறோம். ஆனால் தந்தை தன்னுடைய திருமணமான மகளுக்குச் சொத்திலே உரிமை தரும்போது Settlement அல்லது Release Deed எழுதும்போது, அந்தப் பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக இருக்கிறது. அதையும் குறைத்து 5% ஆக இருப்பதை, 4% ஆக மாற்றினால் நிச்சயமாக அவர்களுக்கெல்லாம் உதவி செய்ததாக இருக்கும். அதைப்பற்றியும் இந்த அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, அடமானம் வைப்பதற்கு 4% பத்திரப் பதிவில் கேட்கிறார்கள். அதனால் என்ன ஆகிறது என்று சொன்னால், கிராமத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பத்திரத்தை அடமானம் செய்வதைவிட, பாண்டுகள் எழுதி நாம் பணத்தை வாங்கலாம் என்று நினைக்கிறார்கள். அதனால் அரசுக்கு வரவேண்டிய வருமானம் குறைகிறது.

[திரு. ஏ. ராசேந்திரன்] [2000 ஏப்ரல் 25

இந்த அரசுக்கு வரவேண்டிய வருமானத்தை அதிகரிப்பதற்காக, அந்தக் கடன்களைப் பெறுவதில், அடமானம் வைப்பதில் உள்ள விகிதத்தைக் குறைத்தால் நிச்சயமாக அரசுக்கு அதிகமாக வருவாய் வரும். இந்த 1,019 கோடி ரூபாய் என்பது நிச்சயமாக அடுத்த ஆண்டு 1,300 கோடி, 1,400 கோடி ரூபாய் வருவதற்கு வாய்ப்பு இருக்கும். அதையெல்லாம் நம்முடைய அமைச்சரவர்கள் சிந்தனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மகாராஷ்டிராவில் அல்லது பக்கத்தில் இருக்கிற கர்நாடகா மாநிலத்தில் ஒரு பத்திரப் பதிவு என்று சொன்னால் ஆயிரம் ரூபாய் என்று சீலிங் ரேட் வைத்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் கொடுத்தால், Settlement, Release Deed, இவையெல்லாம் அங்கு செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். அது எவ்வளவு உண்மை என்று தெரியவில்லை. அது குறித்து அமைச்சரவர்கள் துறையினுடைய அதிகாரிகளை அழைத்துப் பேசி· அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

அடுத்து, முத்திரைத் தாள்கள் பற்றி ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த கால இருண்ட ஆட்சியில் வேலியே பயிரை மேய்ந்ததுபோல, டான்சி நிலத்தை ஆண்டவர்கள் வாங்கினார்கள். அதிலும் பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைத்து வாங்கினார்கள். இது நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால் நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. அதற்குள்ளே நுழையவும் விரும்பவில்லை. இருந்தாலும், இந்தப் பத்திரப் பதிவுக் கட்டணம் குறைக்கப்படுவதால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பது நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இப்போது முத்திரைத் தாள்கள் நிருவாகத்திற்கு 12 கோடியே 70 இலட்சத்து, 77 ஆயிரம் ரூபாய் மானியமாகக் கோரியிருக்கிறார். இதைக் குறைப்பதற்கு வழியிருக்கிறது. அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் யோசனை செய்தால் நிச்சயமாகக் குறைக்கலாம். சாதாரணமாக Stamp paper, Non- Judicial stamp paper என்று உள்ளன. Stamp paper எல்லாம் நாசிக்கிலே print செய்கிறார்கள். நீதிமன்றங்களில் அல்லது பத்திரப் பதிவு அலுவலகத்திலே அவர்களுக்கு stamp paper-ல் எழுத வேண்டும் என்பதை மாற்றி, அவர்கள் சாதாரண பேப்பரிலேகூட எழுதி, அந்த முத்திரைக் கட்டணத்தை பத்திரப் பதிவு அலுவலர்களோ அல்லது நீதிமன்றங்களில் இருக்கக்கூடிய அலுவலர்களோ வசூல் செய்யலாம். இப்போதுகூட அவர்களுக்கு அதிகாரம் தந்திருக்கிறார்கள். Sub-Registrar-க்கு 10 ஆயிரம் ரூபாய் வரை அதிகாரம் இருக்கிறது. மாவட்டப் பதிவாளருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இருந்தாலும், பத்திரத்திலே எழுத வேண்டிய



2000 ஏப்ரல் 25] [திரு. ஏ. ராசேந்திரன்]

அவசியமே இல்லையென்று சொல்லிவிட்டால், நிச்சயமாக இந்த முத்திரைத் தாள்கள் அச்சிடுவதற்கான செலவு அரசுக்குக் குறையும். அதன்மூலம் இந்த 12 கோடி ரூபாய் மானியம் கோரி இருப்பதை, அதைக்கூட நிச்சயமாக அமைச்சர் அவர்கள் குறைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அரசுச் செலவு குறையும். அதேசமயத்தில், அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், நாங்கள் விற்பனையாளர்களுக்கு எல்லாம் கமிஷன் தருகிறோம், அதனால் அவர்கள் ஊதியம் பெறுகிறார்கள், அவர்களுடைய பிழைப்புக்கு வாய்ப்பு குறைந்து விடும் என்றுகூடச் சொல்லலாம். இருந்தாலும், அவர்களுக்கு பிழைப்புக்கு வேறு வழியிருக்கிறது. நீதிமன்றங்களுக்கு விற்கின்ற வில்லைகளை அவர்கள் விற்கலாம். அந்தக் கமிஷன் அவர்களுக்கு நிச்சயமாகப் போகும். அதனால், அவர்களுடைய வாய்ப்பு நிச்சயமாகக் குறையாது என்ற என்னுடைய கருத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஊரகத் தொழில்களைப்பற்றி ஒரு சில கருத்துகள்.

"ஆயுதம் செய்வோம்.
நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்,
கல்விச் சாலைகள் வைப்போம்"

என்று கூறினார் பாரதியார். அதைப்போலத்தான் இன்று தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இன்று நம்முடைய உறுப்பினர்கள் யாராவது இங்கிருந்து வேலூர் சென்றால், வேலூர் செல்லும்போது வழியிலேயிருக்கின்ற ஆலைகளையெல்லாம் பார்க்கக்கூடும். பெரிய பெரிய ஆலைகள் எல்லாம் வந்திருக்கின்றன. நான் ஊரகத் தொழில் என்று சொல்லவில்லை. இருந்தாலும், தொழில்கள் என்று சொல்லும்போது பெரிய பெரிய ஆலைகள் எல்லாம் தமிழ்நாட்டிலே வந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் பார்ப்பதற்கு உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நாம் தொழில் துறையில் முன்னேறியிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே தொழில் துறையில் முதலாவது இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இவை எல்லாம் அத்தாட்சிகளாக இருக்கின்றன. அதைப்போலவே, ஊரகத் தொழில் ஒவ்வொரு கிராமத்திலே இல்லாவிட்டாலும், ஒவ்வொரு ஒன்றியத்திலாவது இதைப்போல தொழில்கள் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று தமிழக முதல்வர்

அவர்கள் ஆணையிட்டு இப்போது பல ஒன்றியங்களில் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதேபோல, தொழிற்பேட்டைகள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் சிறிய சிறிய, தொழிற்பேட்டைகளாக இருந்தாலும் அவற்றை எல்லாம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் கிராமத்திலே இருக்கின்ற மக்கள், அவர்களுக்கு வேண்டிய வேலைகளை அவர்கள் நிச்சயம் செய்து பயனடைவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

போளூர் வட்டத்தில் பக்கத்திலே முடையூர் என்ற கிராமம் இருக்கிறது. அங்கு கற்சிலை செய்கிறார்கள். அங்கே கிராமத்திலேயிருக்கின்ற மக்கள் எல்லாம் பெரிய பெரிய சிற்பங்களையெல்லாம் செய்கிறார்கள். அந்தக் கிராமத்திலே இருக்கின்ற மக்களிடத்திலே ஒரு போட்டோவைக் கொடுத்து இதைச் சிலைபோல் செய்ய வேண்டுமென்று சொன்னால், கல்லிலே சிறப்பாகச் சிலைகள் செய்கிறார்கள். அங்கே இருக்கின்றவர்கள் டெல்லிக்கும், அமெரிக்காவுக்கும் இந்தச் சிலைகளையெல்லாம் இடைத்தரகர்கள் மூலம் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இடைத்தரகர்கள் மூலம் அனுப்புகின்ற காரணத்தினால் அவர்களுக்கெல்லாம் வருவாய், அவர்கள் எண்ணுகின்ற அளவுக்கு கிடைக்கவில்லை. இடைத்தரகர்களுக்குச் சென்று விடுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் போளூரில் பூமாலை திட்டத்தை அறிவித்தால் நிச்சயமாக அந்தக் கைவினைக் கலைஞர்கள் எல்லாம் அந்தச் சிற்பங்களை அந்தப் பகுதியிலே விற்றாலோ அல்லது திருவண்ணாமலையிலாவது அதை வைத்து விற்றாலோ அவர்களுக்கு உரிய இலாபம் கிடைக்கும். அதன்மூலம், நம்முடைய சிற்பக் கலை மேலும் வளர்வதற்கு அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்ததாக இருக்கும். அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, போளூருக்குப் பக்கத்திலே கஸ்த்தம்பாடி என்ற ஓர் ஊர் இருக்கிறது. அங்கே ஒரு 250 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. முன்பு அந்த இடத்தில், ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று அந்த இடத்தை அதிகாரிகள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அதன் பிறகு தொழிற்பேட்டை வைக்க வேண்டுமென்று அந்த இடத்தைப் பார்த்தார்கள். இருந்தாலும் எதுவுமே இப்போது நடைபெறவில்லை. விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, ஆரணிக்குப் பக்கத்திலே இருக்கின்ற ஆதனூர் என்ற



இடத்திலே 100 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்திலும் ஒரு தொழிற்பேட்டை, கஸ்த்தம்பாடியிலே ஒரு தொழிற்பேட்டை அல்லது ஆரணியிலே ஒரு தொழிற்பேட்டை வைத்தால் நல்லது. கலைஞர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம் பிரியும்போது, வடக்கே வாழ்கிறது; தெற்கே தேய்கிறது என்று மற்றவர்கள் சொல்வதை நீங்கள் சொன்னாலும், தெற்கேயும் வளரும்; நிச்சயமாக திருவண்ணாமலை மாவட்டம் வளரும்; அதற்குரிய பணிகளைச் செய்கிறேன் என்று வாக்குறுதி தந்து இருக்கிறார்கள். அதற்கேற்ப நம்முடைய அமைச்சர் அவர்கள் போளூர் அல்லது ஆரணியில் இந்தத் தொழிற்பேட்டையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அடுத்து தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவதற்காக அங்கே இருக்கின்ற 40 பணி இடங்களை நிரப்பக் கோரி அவர்கள் எல்லாம் மனுச் செய்து, Public Service Commission மூலம் வேலையில் அமர்த்த இருந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று நிறுத்தப்பட்டு இருக்கிறது. இதையெல்லாம் நம்முடைய துறை அதிகாரிகளுடன் நம்முடைய அமைச்சர் அவர்களும் கவனித்து அந்த 40 பணி இடங்களையும் நிரப்பச் செய்ய வேண்டும்.

அடுத்து, முத்திரைத்தாள்கள் நிருவாகம், ஆவணப் பதிவு மற்றும் ஊரகத் தொழில்கள்- இவையெல்லாம் கிராமத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், மற்ற பொதுமக்கள் ஆகியோரிடம் நேரடியாக தொடர்புடைய துறைகள். இந்தத் துறைகள் மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய கலைஞர் அவர்களும் மேலும் நல்ல ஊக்கங்களைத் தருவார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுந்தர்.

***திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான முத்திரைத் தாள்கள் நிருவாகம், பத்திரப் பதிவு, ஊரகத் தொழில்கள் மற்றும் அவற்றின் மீதான மூலதனச் செலவுகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. சுந்தர்] [2000 ஏப்ரல் 25

நம்முடைய அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டித்தருவதிலே வணிக வரித் துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய துறைகளுக்கு அடுத்து மூன்றாவது துறையாக இந்தப் பத்திரப் பதிவுத் துறை விளங்குகிறது என்று அரசு கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தொடர்ந்து சராசரியாக அரசுக்குக் கூடுதல் வருவாய், 1993-94, 1994-95-ல் ஏறத்தாழ கூடுதல் வருவாயாக 174 கோடி ரூபாய் அரசுக்கு வந்து இருக்கிறது; அதைப்போலவே 1994-95, 1995-96 அதற்கு அடுத்த ஆண்டுகளிலே ஏறத்தாழ 162 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைத்திருக்கின்றது. அதற்குக் காரணம், கடந்த ஆட்சி காலத்திலே ஒரு கொள்ளைக் கும்பல் நாட்டைச் சுருட்டுகின்ற வகையிலே எல்லா நிலங்களையும்— பட்டா நிலங்களாக இருந்தாலும், புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும், அவற்றையெல்லாம் அவர்கள் வளைத்த காரணத்தினாலே, அன்றைக்குக் கூடுதலாக அரசுக்கு வருவாய் ஏற்பட்டு இருக்கின்றது. அதற்குப் பிறகு நம்முடைய அரசு அமைந்த பிறகு விலைகள் எல்லாம் வீழ்ச்சி அடைந்த காரணத்தினாலே, இங்கே நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருப்பதைப்போல, 1999-2000 ஆம் ஆண்டிலே வீடு, நில உடைமைகளை விற்றல் மற்றும் வாங்கல் நடவடிக்கைகள் எல்லாம் வீழ்ச்சி அடைந்திருந்த காரணத்தினாலே, பத்திரப் பதிவு மூலமாக வரவேண்டிய வருவாய் சராசரியாகத்தான் இருந்து இருக்கின்றது. ஆனால், கடந்த 1999-2000 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 166 கோடி ரூபாய் கூடுதல் வருவாயாகக் கிடைத்து இருக்கின்றது. அதற்குக் காரணம் 'சமாதான்' சலுகைத் திட்டம். அந்த வகையிலேயும் வருவாய் இந்த அரசுக்குக் கூடுதலாகக் கிடைத்து இருக்கின்றது. பத்திரப் பதிவிலே இப்போது நம்முடைய அரசே குறிப்பிட்டு இருப்பதைப்போல, கடந்த 1993-94 ஆம் ஆண்டுகளிலே நிலத்தினுடைய விலை மதிப்பு பல மடங்கு ஏற்றப்பட்டு இருந்தது; செயற்கையாக ஏற்றப்பட்டு இருந்தது. ஆனால், இன்றைக்கு விலை வீழ்ச்சி அடைந்து இருக்கின்ற காரணத்தினாலே, பத்திரங்கள் எல்லாம் பதிவு செய்ய முடியாத நிலையில், அதாவது வழிகாட்டி மதிப்பிற்கும், வெளிச் சந்தை மதிப்பிற்கும் வித்தியாசம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே பத்திரப் பதிவு சரியான முறையிலே செய்ய முடியவில்லை; அதனாலேதான் பல பேர் இன்றைக்கு தனித் துணை ஆட்சியர் (முத்திரைத் தாள்) அவர்களைத் தேடிச் செல்கின்ற நிலை இருக்கின்றது. அதை அரசு புரிந்து நடந்துகொண்ட காரணத்தினாலேதான் இந்த 'சமாதான்' சலுகைத் திட்டம் மூலமாக இந்தப் பத்திரங்கள் எல்லாம் அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே வழி செய்யப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு அந்த வழிகாட்டி மதிப்பைப்



2000 ஏப்ரல் 25] [திரு. கே. சுந்தர்]

பொறுத்தவரையிலே, ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அதை ஏற்றிக்கொண்டே செல்கின்ற காரணத்தினாலே, இன்றைக்கு வழிகாட்டி மதிப்பிற்கும், வெளிச் சந்தை மதிப்பிற்கும் நிறைய வேறுபாடு இருக்கின்றது. எனவே, அதை இன்றைக்கு நம்முடைய அரசு திருத்துகின்ற வகையிலே கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் வழிகாட்டி மதிப்புக் குழு இயங்கி வருகிறது. அதிலே வழிகாட்டி மதிப்பைச் சரியாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் நிர்ணயித்திட, மதிப்பு நிர்ணய நடவடிக்கையிலே ஆலோசனை வழங்க சென்னை நில நிர்வாக ஆணையாளர் கட்டுப்பாட்டிலே உள்ள இணை ஆணையாளர் (நில எடுப்பு) இக்குழுவிலே சேர்க்கப்பட்டு உள்ளார். நான் இன்னும் கூட ஓர் ஆலோசனையாக நம்முடைய அரசுக்குச் சொல்ல விரும்புவது, அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் இதிலே இணைத்தால், ஓர் உண்மையான மதிப்பை நிர்ணயிப்பதற்கு சரியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதுமட்டுமல்லாமல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ராசேந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சொத்துக்களைப் பதிவு செய்கிறபோது, நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளுக்கேற்ப, விற்பவரின் கையொப்பம் தவிர, வாங்குபவரின் கையொப்பமும் பெற வழிவகை செய்கிற வகையிலே அரசு பரிசீலித்து வருவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு, விற்பவர் மற்றும் வாங்குபவரின் ரேஷன் கார்டும் இணைக்கப்பட்டால் நன்றாக இருக்கும். அப்படியில்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அந்த இருவரின் புகைப்பட நகல்கள் இணைக்கப்பட்டால் அதுவும் நன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால், பினாமி பெயரில் பதிவு செய்கிற நிலையையெல்லாம் மாற்றக்கூடிய ஒரு நிலை இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில் சார்-பதிவாளர் அலுவலகங்களில் — யார் வேண்டுமானாலும் எந்தப் புறம்போக்கு நிலத்தையும் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, அதையெல்லாம் மாற்றக்கூடிய வகையிலே அந்தக் குறிப்பிட்ட நிலங்களை அவர்கள் பதிவு செய்ய வருகிறபோது, பதிவு செய்யாத வகையில்— குறிப்பிட்ட சர்வே நெம்பரில் உள்ள புறம்போக்கு நிலங்களையெல்லாம் பதிவு செய்யக் கூடாது என்ற ஓர் உத்தரவு இருக்க வேண்டும். அதையும்

மீறிப் பதிவு செய்கிறபோது, விற்பவர், வாங்குபவர், பதிவு செய்பவர் ஆகிய மூன்று பேர்கள் மீதும் கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய வகையிலே சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஊரகத் தொழில்களைப் பொறுத்தவரையிலே மிகச் சிறப்பாக நம்முடைய அரசு செயல்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுக் கொண்டவுடனே 1990 ஆம் ஆண்டு ஏறத்தாழ 112 வட்டங்களைத் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக, மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவித்தார்கள். அதற்குப் பின் வந்த அரசு அதிலே அதிக அக்கறை காட்டாத காரணத்தாலே, அன்றைக்கு அவர் அறிவித்தாலும்கூட 1996 ஆம் ஆண்டிலேதான் அந்த வட்டாரங்களையெல்லாம், ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் மாற்றி தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தார்கள். அதுவும் 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்தான் அந்த அறிவிப்பு வந்தது. அதற்குப் பிறகு நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பல வகைகளிலே, பல சலுகைகளைக் காட்டிய காரணத்தினாலே இன்றைக்கு 287 வட்டாரங்களிலே தொழில்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன குறிப்பாக உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதியிலே அடங்கியுள்ள உத்திரமேரூர், வாலாஜாபாத் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு சிறப்பாக தொழில்கள் அங்கே நடைபெறுகின்றன.

அதிலும், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திலே, சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற பகுதிகளிலே பல்வேறு தொழிற்சாலைகள் இன்றைக்குத் தொடங்கப்பட்டு, வேலைவாய்ப்பெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உத்திரமேரூர் என்பது தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியம். அந்த ஒன்றியத்தில் 2,3 தொழிற்சாலைகள்கூட தொடங்க முடியாத ஒரு சூழ்நிலை. அங்கே மிகவும் பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் வசிக்கின்ற காரணத்தினாலே, அரசே அங்கே நிலத்தை எடுத்து, ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். திருக்கழுக்குன்றம் வட்டத்திலேயும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்திலே ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் அருகிலே சிட்கோவால் 1993 ஆம் ஆண்டு 100 ஏக்கர் நிலம்



கையகப்படுத்தப்பட்டு அந்த இடத்திலே தொழிற்பேட்டை அமைக்கப்பட்டது. ஆனால் ஒருவர் கூட அங்கே சென்று தொழில் தொடங்க முடியவில்லை. அதேபோல பர்கூரிலே மகளிருக்கென்று ஒரு தொழிற்பேட்டை தொடங்கப்பட்டு, பலமுறை ஏலம் விடப்பட்டும், 4 ஆண்டுகளாகியும், தொழில் முனைவோர்கள் அங்கே தொழில் தொடங்க வரவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், ஒன்றுக்கும் உதவாத அந்த நிலங்களை கடந்த ஆட்சியாளர்கள் அதிக அளவிலே அரசிற்குக் கொடுத்து உள்ளதால், அரசு நிர்ணயித்திருக்கின்ற விலைக்கு வாங்க மறுக்கிறார்கள். தொழில் முனைவோர்கள் யாரும் வருவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனுடைய விலையைக் குறைத்து, தொழில் தொடங்குகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த அரிய வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதலாவதாக மட்டுமல்ல, மனித சமுதாயத்தில் பாதி பேர் வாழ்கின்ற தாயகமான ஆசியாக் கண்டத்தின் நுழைவு வாயிலாக தமிழ்நாடு ஏன் திகழக் கூடாது?

Why can't Tamil Nadu become the regional gateway of Asia; home to half the humanity?

இந்தியாவிலேயே திறமைசாலிகளின் மிகப் பெரிய உறைவிடம் என்றும், அறிவு செறிந்தோரின் இருப்பிடம் என்றும் பெயர் பெற்ற நமது தமிழகம் மேலும் உயர்ந்து, உலகப் புகழ் பெற்றிட, பல்வேறு துறைகள் மூலம் பல்லாற்றானும் பாடுபட்டு, எத்துறையாயினும் தன்னுடைய முத்திரையைப் பதித்துச் செயலாற்றும், தன்னிகரில்லா தனிப் பெரும் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, ஊரகத் தொழில்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

தருமபுரி மாவட்டத்தின் வடக்குப் பகுதி, குறிப்பாக கிருஷ்ணகிரி தொகுதிக்கு உட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியம், கெளமங்கலம் ஒன்றியம், ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் விவசாயத்தின் ஒரு பகுதியாக அந்த மக்கள் மல்பரி பயிரிடுவதைத் துணைத் தொழிலாகக்

கொண்டுள்ளார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். மல்பரி பயிரிடுதல் ஆண்களுக்கு உரிய வேலையாக, விவசாயத் தொழிலாக இருக்கின்ற நேரத்தில், பட்டுப் புழு வளர்த்தல், பட்டு நூற்பு மற்றும் பட்டு முட்டை உற்பத்தி ஆகியவற்றை எங்கள் பகுதியில் கிராமப்புறங்களில் இருக்கின்ற பெண்கள் குடிசைத் தொழிலாகச் செய்கிறார்கள் என்பதையும் நான் இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

வருடத்தில் குறைந்தபட்சம் 4, 5 முறைகளாவது இந்தப் பட்டுக் கூடுகள் அறுவடை செய்யும் அளவுக்கு இந்தத் தொழில் இருப்பதால் அதன் மூலமாகப் பொருளாதாரத் துறையிலே பெண்கள் தங்களுடைய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்குத் தகுந்த ஒரு தொழிலாக இந்தப் பட்டு வளர்ப்புத் துறை அமைந்திருக்கிற காரணத்தினால் சமுதாயத்தில் நலிவுற்ற குறிப்பாக கிராமப்புறப் பெண்களுக்கு ஏற்ற தொழிலாகவும் இருக்கிறது என்பதை நம்முடைய அரசு உணர்ந்திருக்கிறது என்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆனால், பட்டுப் புழுக்களுக்கு உணவுக்காகப் பயன்படும் மல்பரி செடிகள் பயிரிடப்படுவது இப்போது தருமபுரி மாவட்டத்தில் குறிப்பாக ஓசூர், வேப்பனப்பள்ளி, கௌமங்கலம், தேன்கனிகோட்டை ஆகிய பகுதிகளில் வெகுவாகக் குறைந்துவிட்டது. முன்பெல்லாம் ஏறக்குறைய 45,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திலே மல்பரி பயிரிடப்பட்டு வந்தது. அது வெகுவாகக் குறைந்து 15,000 ஏக்கர் நிலத்தில் மட்டுமே மல்பரி இப்போது பயிரிடப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை துறையிலே உள்ள களப் பணியாளர்களை அனுப்பி நம்முடைய துறை மேற்பார்வையிட வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள் மிகுந்த வருத்தத்தோடு, குறையாக எங்களிடத்திலே அதைத் தெரியப்படுத்தினார்கள். வீரிய இன மல்பரி வகைகளைப் பயிரிட, பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் தேவையான அந்தக் கிருமி நாசினிகளை வழங்கியும், சொட்டுநீர்ப் பாசனம் போன்ற விவசாயத்திற்கு உரிய உதவிகளைச் செய்தும் மல்பரி பயிரிட விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று நான் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நோயற்ற தரமான முட்டை தொகுதிகளை விநியோகிக்க நீங்கள் களப் பணியாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று



நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே, விதைக் கரணைகளுக்குப் பதிலாக மல்பரி நாற்றுகளாக நாற்றங்கால்களில் உற்பத்தி செய்து நாற்று மூலம் மல்பரி நடவு செய்திட நாற்று மானிய உதவி ஏக்கருக்கு 500 ரூபாய் அளவிலே வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கின்றீர்கள். இந்த உதவியினை தருமபுரி மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் மல்பரி பயிரிடுகிற விவசாயிகளுக்கு விரைந்து வழங்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், விவசாயிகளுக்குத் துணைபுரியும் அறிவியல் அலுவலர்கள் Knowledge Workers. அதாவது ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளக்கமாகவும் விரிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வேளாண்மைத் துறையிலே இந்தத் தொழிலிலே ஈடுபட்டிக்கிற, இந்தத் துறையிலே பணியாற்றுகிற களப் பணியாளர்களுக்கு ஒப்பான அலுவலர்களை இதற்குத் தனியாகப் பயிற்சி கொடுத்து அந்தத் துறையிலே இருந்து நம்முடைய பட்டு வளர்ப்புத் துறை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த Knowledge Worker-களை இதற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியில் K.R.P. அணைப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான பட்டு நூல் தயாரிக்கும் சிறிய தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. இதனை மேம்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி பகுதியின் சுற்றுப்புறங்களில் உள்ள பர்கூர், காவேரிப்பட்டினம், மாரண்டஹள்ளி, பாலக்கோடு ஏறத்தாழ தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லாப் பகுதிகளிலும் தென்னை அதிகமாக பயிரிடப்படுகிறது. இந்தத் தென்னையினுடைய உப பொருட்களைக் கொண்டு— தேங்காய் நார் கொண்டு— பல்வேறு கைவினைப் பொருட்கள், கயிறு, கால் மிதியடிகள் போன்ற கைவினைப் பொருட்கள் எல்லாம் எங்களுடைய பகுதியில் அதிகமாகத் தயாரிக்கப்படுகின்றன. அலங்காரப் பொருட்கள் தயார் செய்யப்படுகின்றன. தேங்காய் ஓட்டினைக் கொண்டு அழகாக அதை பெயின்ட் செய்து அதன் மேல் வரைபடங்கள் எல்லாம் வரைந்து, பலவிதமான விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள் ஆகியவற்றை தயாரிப்பதில் குறிப்பாக இப்போது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மகளிர் நலக் குழுக்கள் அதிலே அதிகமாக

[டாக்டர் காஞ்சனா கமலநாதன்] [2000 ஏப்ரல் 25

ஈடுபாடு காட்டி கிராமப்புறங்களில் வெகு திறமையாக நன்றாகச் செயல்படுகிறார்கள். அவர்களிலே சிலர் இந்தத் தனியார் கயிறு திரிக்கின்ற ஆலைகளுக்கு எல்லாம் சென்று அந்தத் தொழிலிலே எல்லாம் ஈடுபடுகிறார்கள். இதனுடைய அடிப்படையில் கைவினைப் பொருட்கள் குடிசைத் தொழில் மூலமாக மகளிரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. தென்னை நார் உபயோகப்படுத்தி செய்கின்ற அந்தப் பொருட்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற காரணத்தால், அரசு சார்பில் கைவினைப் பொருட்களை விற்பனை செய்யும் மையமான பூமாலை என்னும் வணிகச் சின்னம் பொருத்திய, கிராமப்புறங்களில் விற்கின்ற ஓர் அங்காடியினை கிருஷ்ணகிரியிலே துறை மூலமாக அமைத்துத்தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிட்கோ மூலமாக கிருஷ்ணகிரியை அடுத்துள்ள போலூப்பள்ளியில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி ஏறத்தாழ 10, 15 ஆண்டுகளாக 200 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அப்படியே வாளா இருக்கிறது. வெறுமனே தரிசு நிலமாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே நான் முன்பு குறிப்பிட்ட கைவினைப் பொருட்களை எல்லாம் உற்பத்தி செய்கின்ற சிறு சிறு தொழிற்கூடங்களை நீங்கள் ஏற்படுததிக் கொடுத்து, குறிப்பாக மகளிருக்கு, தொழில் முனைவோர்களாக அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து உதவி செய்வீர்கள் என்று சொன்னால், அது எங்களுடைய பகுதியிலே, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற, பொருளாதாரத் துறையிலே ஒரு தேக்க நிலையிலே இருக்கின்ற தருமபுரி மாவட்டத்து மகளிருக்கு, குழுக்கள் மூலமாகத் தங்களுடைய பொருளாதாரத்தை மேம்பாடு செய்து கொள்ள வேண்டுமென்று! முனைப்பு காட்டுகின்ற பெண் தொழில் முனைவோருக்கு அது மிகுந்த ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும். எனவே, அந்தப் பகுதியிலே நீங்கள் தொழிற்பேட்டையை அமைத்து, தொழிற்கூடங்களை நிறுவி, மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு வேண்டுகோள். சிட்கோ மூலமாக வழங்கப்படுகின்ற தொழிற் கூடங்கள் தேவையற்ற போட்டிகளின் காரணமாக- எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுந்தர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல—விலையை உயர்த்தி ஏலம் கோருகின்ற நேரத்திலே தேவையில்லாமல் அவர்களே போட்டி போட்டுக் கொண்டு விலையை உயர்த்துகிறார்கள். அதற்குப் பிறகு அங்கே தொழில் தொடங்க முடியாத அளவுக்கு அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. ஏலத்தில்



2000 ஏப்ரல் 25] [டாக்டர் காஞ்சனா கமலநாதன்]

எடுத்த தொழிற்கூடங்களிலே தொழிலைத் தொடங்காமல் அப்படி, அப்படியே போட்டு வைத்துவிடுகிறார்கள். அப்படிப் போட்டு வைக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொழிற்கூடங்களை அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட காலவரையறையை ஏற்படுத்தி 3 ஆண்டு காலம் அல்லது இரண்டு ஆண்டு காலம் அவர்கள் தொழிற்கூடங்களை எடுத்துக்கொண்ட பிறகு, அதிலே தொழிலைத் தொடங்காமல் அப்படியே விட்டு வைத்திருப்பார்கள் என்று சொன்னால் அரசாங்கம் அதை மீண்டும் எடுத்து, தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு, தொழில் முனைவோருக்கு, அந்தத் தொழிற்கூடங்களைக் கொடுக்கும் என்ற ஒரு நிலையை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு உங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒரு வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, கோவை மாவட்டத்தில், பல்லடம் தொகுதியில் சுமார் 400 ஏக்கர் நிலம் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை என்ற பெயரில் வாங்கப்பட்டு, இப்போது சில கோடிகள் செலவு செய்யப்பட்ட பிறகு, வீணாக, அங்கே தொழில்கள் எதுவும் ஆரம்பிக்கப்படாமல் அப்படியே போடப்பட்டுள்ளது. மத்திய அரசு கொடுத்த இரண்டு கோடி ரூபாய் மானியத்திற்கு தமிழக அரசு பொறுப்பு ஏற்காத காரணத்தால் அந்தப் பணமும் பெறமுடியவில்லை என்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் ஒரு கோரிக்கை கொடுத்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு கோவை மாவட்டத்தில் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டுள்ள அந்த 400 ஏக்கர் நிலத்தை, அதுவும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற, அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டையை நீங்கள் எடுத்துக்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே ஒரு நல்ல தொழிற்பேட்டையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பதிவுத் துறையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட வேப்பனபள்ளியில் சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தச் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நடப்பு ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை உங்களுக்கு வைத்து, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பதிலுரையை அளிக்கின்ற வாய்ப்பினை நல்கிய எங்களுடைய உயிரினும் மேலான தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, இந்தத் துறையினுடைய சாதனைகளை இங்கே முன்னுரையாக விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

புதிய பொருளாதாரக் கொள்கை, தாராளமயமாக்குதல், உலகளாவிய பொருளாதார நடவடிக்கை, வெளிச் சந்தை வாய்ப்புகள், இன்னும் வேகமாக வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள், புதிய நூற்றாண்டில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், தற்போதுள்ள தொழில் துறையிலே இருக்கின்ற பின்னடைவுகள் ஆகியவற்றில் சிறு தொழில் துறையானது சிறு மற்றும் குறுந்தொழிலுக்கு அனைத்து வகையிலும் உதவி அளித்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் துறை மூலமாகச் சிறப்புப் பயிற்சியாக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு 14 இலட்சம் ரூபாய் செலவிலே 400 நபர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறோம்.

மானிய உதவிகளை.ப் பொறுத்தவரையில், பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய தாலுகாக்களை, 287 ஊராட்சி ஒன்றியங்களை, ஒன்றிய வாரியாக, பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-40

அதோடுமட்டுமல்லாமல், கடந்த காலத்திலே சிறப்பு மானியங்கள், 1999-2000 ஆண்டிலே மட்டும் ரூ.7,865.98 இலட்சம் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியின்போது 1991-1994 ஆண்டுகளில் 5 ஆண்டுகளில் சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு கடந்த கால அரசு வழங்கிய மானியம் ரூ.192 கோடி என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலே, கடந்த நான்கு ஆண்டுகளிலே சிறுதொழில், குறுந்தொழிலுக்கு வழங்கிய மானியம் மட்டும் ரூ.306 கோடி என்பதை மிகப் பெருமிதத்தோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு சிறு தொழில்களிலே பொருளாதார மந்தம், பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும்கூட, கடந்த ஆட்சிக் காலத்திலே, சிறு தொழில் பதிவு



மொத்தம் 97,767 அலகுகள் தான். ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியிலே, நான்காண்டு காலத்திலே சிறுதொழில் பதிவு மட்டும் 1,23,257 அலகுகள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலமாக, 11,09,311 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. 31-1-2000 முடிய தமிழ்நாட்டிலே 3,54,939 நிரந்தர சிறு தொழில்கள் உள்ளன. இதிலே 31,94,450 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தொழில் துறையினருக்குத் தேவையான பரிசோதனைக் கருவிகள் கடந்த 1998-99 ஆம் ஆண்டிலே ரூ.56.65 இலட்சம் செலவிலே வாங்கப்பட்டு, இன்றைக்கு அது தொழிற் துறைக்கு மிகவும் உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில், இந்த அரசு கடந்த ஆண்டு தேனி மாவட்டத்திலே கம்பம் பகுதியிலே விளைகின்ற திராட்சையைக் கொண்டு உலர் திராட்சை தயாரிப்பதற்கு- மாண்புமிகு முதல்வர் அவர்கள் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதற்கு ரூ.12.50 இலட்சம் வழங்கி தொழில் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து, அங்கே இந்த ஆண்டு உற்பத்தி தொடங்க இருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு இருக்கின்ற தொழில் துறையிலே மகளிருடைய பங்கை எந்த அளவிற்குக் கலைஞர் அரசு உயர்த்தியிருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். தலைவர் கலைஞர் ஆட்சியிலே கிட்டத்தட்ட 8,400 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.91.40 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அரசின் இந்தத் திட்டத்திலே, முதல் பெண் தொழில் முனைவோர் ஒருவர் வந்தால், அவருக்கு அதிகபட்சமாக 50,000 ரூபாய் மானியம் அல்லது திட்டச் செலவிலே 10 சதவிகிதம் வழங்கப்படுகிறது. இதுபோக, இன்றைக்கு வளர்ந்து வருகின்ற இந்தத் தொழில் துறையைப் பொறுத்த அளவில், நாட்டிலே வளர்ந்து வருகிற தகவல் தொழில்நுட்பத்திற்கு-Information Technology-க்கு ஏற்றாற்போல, தொழில் துறையை உயர்த்துவதற்கு கோவையிலும், மதுரையிலும் ஒரு Incubator Centre அமைக்கப்பட்டிருக்கின்றது. காரணம், சாதாரணமாக படித்துப் பட்டம் பெற்ற ஏழையெளிய குடும்பத்தைச் சார்ந்த தொழில் முனைவோருக்கு மின்தடையில்லா சாதனம், அதோடுமட்டுமல்லாமல், வாடகை அடிப்படையில் இணைப்புகளை இணையத்துடன் இணைத்தல், கணினி மற்றும் இதர தளவாடங்கள் ஆகிய வசதிகளைப் பெறுவதற்கு

மதுரையிலே C.E.D.-யுடன் கூட்டுச் சேர்ந்து ரூபாய் 50 இலட்சம் மானியத்திலே அங்கே அந்த வசதி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

சிறுதொழில்களுக்கு, மண்டல தொழில் வசதி ஆக்கக் குழு ஒன்று தலைவர் கலைஞர் ஆட்சியிலே நிறுவப்பட்டிருக்கிறது. சிறுதொழிலிலே இருக்கின்றவர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை வழங்கிய பின்னால், அந்தப் பணம் வரவில்லையென்றால், இந்த வசதி ஆக்கக் குழு, அத்தனை ஏற்பாட்டையும் செய்து, அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுத் தருவதற்கு ஏற்ப, எல்லா நடவடிக்கையையும் எடுத்து வருகின்றது. தலைவர் கலைஞர் ஆட்சியிலே இன்றைக்குப் பாரதப் பிரதமருடைய சுயவேலைவாய்ப்புத் திட்டம், ஊரகத் தொழில் துறையிலே ஒரு முக்கியமான அங்கம். இந்தியத் திருநாட்டிலே இன்றைக்குப் பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே தமிழகம் முதல் நிலையிலே இருக்கின்றது என்பதை புள்ளிவிவரத்தோடு நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 1999-2000 ஆண்டிலே மத்திய அரசின் இலக்கிற்கு அதிகமாக 103 விழுக்காடு வங்கிகளிடமிருந்து 15,460 பேருக்கு ஒப்பளிப்பு பெறப்பட்டது. கடந்த ஆட்சியின்போது, மூன்று ஆண்டுகளில் 28,144 பேருக்கு வழங்கிய மொத்தக் கடன் ரூ. 15,379.86 இலட்சம். ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியிலே, 3 ஆண்டுகளிலே வழங்கப்பட்ட பணம், 43,513 பேருக்கு ரூ.22,563 இலட்சம் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

அடுத்து, பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழகம்தான் இந்த ஆண்டும், இந்தியாவிலேயே, முதல் நிலையைப் பெறுகின்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறுதொழில் வாரியம்; நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்பேரிலே, சிறுதொழில், குறுந்தொழில்களினுடைய குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வதற்காக, சிறுதொழில் வாரியம் ஒன்றை அமைத்து, அதிலே 3 கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதன்மூலமாகப் பெறப்பட்ட கோரிக்கைகள் 169. அவற்றிலே, அத்தனைத் துறைகளுடனும் கலந்து பேசி தீர்க்கப்பட்டவை 102 கோரிக்கைகள். அவற்றை இந்த அரசு தீர்த்திருக்கிறது.



இதைத் தவிர, தொழில் துறையிலே, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்—சிட்கோ — மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிட்கோ, ஆரம்ப காலத்திலே நல்ல வளர்ச்சியைப் பெற்று இலாபத்திலே இயங்கி வந்த நிறுவனம்; பின்பு, கடந்த ஆட்சி காலத்திலே, 1995 ஆம் ஆண்டிலே, 3 கோடி ரூபாய்க்கு மேலே நட்டத்திலே, இழப்பிலே அந்த நிறுவனத்தை விட்டுச் சென்ற வேளையிலே, மீண்டும் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே, நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்து, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே, 3 ஆண்டுக் காலத்திலே எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகளினால், இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், விற்கப்படாமல் இருந்த 349 தொழிற்கூடங்களும், 371 மேம்படுத்தப்பட்ட மனைகளும், அதோடு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், சிட்கோ நிறுவனத்தால் தொழிற்பேட்டைகள் — கூடுதலாகக் கழக அரசு கட்டிய 186 தொழிற்கூடங்களும், 694 மேம்படுத்தப்பட்ட மனைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மொத்தம் சென்ற அரசுக் காலத்திலே நிலுவையில் இருந்தவைகளோடு சேர்த்து தொழிற்கூடங்கள் 535; அவற்றில் 221 தொழிற்கூடங்களை ரூ.2,275 இலட்சத்திற்கும், 1,065 மனைகளில் 608 மனைகள் ரூ.2,367 இலட்சத்திற்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே குறிப்பாக, கடந்த காலத்திலே புதிய தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்காக இந்த அரசு எடுத்த சீரிய முயற்சியால், எந்த நிலமும் தனியாரிடமிருந்து வாங்கப்படாமல் 52 இடங்களிலே நிலம் கையகப்படுத்துவதற்காக எடுத்த நடவடிக்கைகளிலே. இதுவரை நம்முடைய கைக்குக் கிடைத்திருக்கிற நிலங்கள் 7 இடங்களிலே முழுமையாகக் கிடைத்திருக்கிறது. அதுபோக, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற 1996-97-லே இருந்தது 55 இலட்சம் ரூபாய் இலாபம்; 1997-98-லே 186 இலட்சம் ரூபாய் இலாபம்; 1998-99-லே 43 இலட்சம் ரூபாய் இலாபம்; 1999-2000-லே 124 இலட்சம் ரூபாய் இலாபம். 2000-2001-லே 112 இலட்சம் ரூபாய் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நட்டத்திலே இருந்த 'சிட்கோ' நிறுவனம் இப்போது இலாபத்திற்கு வந்திருக்கிறது.

அதேபோல், கைத்திறத் தொழிலும் சரி, பூம்புகார் மற்றும் பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் இருக்கக்கூடிய அத்தனைத் திட்டங்களும் இப்போது பல்வேறு வகையிலே விவசாயிகளுக்கு பட்டு உற்பத்தியை, மல்பரியினுடைய வளர்ச்சியை உயர்த்துவதற்காக பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துவருகிறது.

குறிப்பாக, இங்கே நான் ஒருசில அறிவிப்புகளைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். அதற்கு முன்னால் ஒரு முக்கியமான கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் வற்புறுத்தினார்கள். அறிஞர் அண்ணா பெயரால் இருக்கிற தொழிற்பேட்டை, கோவையிலே — அதற்காக இந்த அரசால் முயற்சி எடுக்கப்பட்ட நேரத்திலே, SIDBI நிறுவனமானது, Government Guarantee கொடுக்க வேண்டுமென்று சொன்னது. அரசு, அதற்கு பிணை வைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னது. நம்முடைய அரசு, தனியார் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளுக்கு அரசாங்கம் —Government Guarantee— கொடுப்பதில்லை என்று கொள்கை முடிவெடுத்திருக்கிறது. அதற்குப் பின்னால், நாம் மத்திய அரசை வலியுறுத்தி பல கடிதங்களை எழுதி, அந்த 300 ஏக்கர் நிலமும், அவர்கள் வாங்குகிற கடனுக்கு மேல் அதிகபட்சமாக இருக்கிற காரணத்தால், அதையே வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளலாம் என்று SIDBI மற்றும் மத்திய அரசுக்கு எழுதிய கடிதங்களுக்கு, அவர்கள் முதன்முறையாக ஒப்புக்கொண்டு, பின்னால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பின்னால், நம்முடைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகக் கடன் வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்காக அரசாங்கத்தினுடைய பங்காக 50 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இதற்கு நம்முடைய அரசானது, நிதித் துறையினுடைய சார்பாக அதற்கு ஒரு குறிப்பிட்ட பணத்தை அரசினுடைய பங்காக வழங்கியிருக்கிறது. இருந்தாலும், அது போதவில்லை என்றாலும், அதுபற்றிப் பேசி, நிச்சயமாக அறிஞர் அண்ணா தொழிற்பேட்டை தொடங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

அதுபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் கோயில் நிலங்கள், வஃக்ப் போர்டு நிலங்களை எல்லாம் பதிவதைச் சொன்னார்கள். அதற்கெல்லாம் சட்டம் கொண்டு வந்தாகி விட்டது. நிச்சயமாக பதிவுத் துறை அலுவலகத்திலே யாரும் அப்படிப் பதிவதற்கு வாய்ப்பில்லை. வழிகாட்டிப் பதிவைப் பொறுத்தளவில் அவர் ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்கவில்லை என்று சொன்னார். இன்றைக்கு Franking Machine 15 அலுவலகங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அங்கு வெற்றுத்தாளிலே எழுதி பதிவாகக் கூடிய ஒரு முறையை இந்த அரசு இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதுபோக இன்னும் பல அறிவிப்புகளை வழங்க விரும்புகின்றேன்.



சிறுதொழில்கள் துறையைப் பொறுத்தவரையில், சிறுதொழில் பிரிவுகள் விற்பனை மையம் சென்னையிலும், மதுரையிலும் 8 இலட்சம் ரூபாய் செலவிலே இந்த ஆண்டு தொடங்கப்பட இருக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்தப் பொருட்களை விற்பனை செய்வதற்காக காட்சி மையம் அமைக்கவிருக்கிறது இந்த அரசு.

அதுபோல, ஒற்றைச் சாளர முறை —Single Window Committee— யிலே இனிமேல் மனு செய்பவர்களுக்கு அங்கே இருக்கின்ற பொது மேலாளரே அத்தனை அனுமதியும் பெற்றுத் தருகின்ற வாய்ப்பை, புதிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், நலிந்த தொழில்நுட்பம் உள்ளவர்களுக்கு, அவர்களுடைய பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்காக 5 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. மதுரையிலே உள்ள வட்டப் பரிசோதனை ஆய்வுக் கூடத்தை நவீனப்படுத்துவதற்காக இந்த அரசு, கழக அரசு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

இப்போது தனியார் ஒருவர் தொழில் தொடங்க வேண்டுமென்றால். Consulting Agency வேண்டும். அதற்காக தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறுவதற்கு உரிய பணத்தைச் செலுத்த வேண்டும். அவ்வாறு தொழில் தொடங்க வருகின்ற இளைஞர்கள், படித்த பட்டதாரிகள், ஏழைகளுக்காக 50 சதவிகிதம் - அவர்கள் தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம், கலைஞர் அரசு ஏழையெளிய, படித்த பட்டதாரிகளுக்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சிறுதொழில் செய்கிறவர்களுடைய எண்ணிக்கையை முழு அளவிலே கணக்கு எடுப்பதற்காக, சிறுதொழில் சங்கத்தின் மூலமாக கணக்கெடுப்பு நடத்துவதற்காக இந்த அரசு 2.7 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது.

பதிவுத் துறையைப் பொறுத்தளவிலே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே அனைத்து சார்பதிவகங்களிலும் கணினிமயமாக்குவதற்குரிய நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் ஆரம்பித்து வைத்து, 25 சார்பதிவகங்கள் கணினி மயமாக்கப்பட்டன. வருகின்ற ஜூன் மாதத்திற்குள்ளாக, இந்த 2000-2001-க்குள் தமிழ்நாடு முழுவதும் உள்ள அத்தனை சார்பதிவகங்களும் கணினிமயமாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல போலி முத்திரைத் தாள்களைப் பற்றிச் சொன்னார்கள். போலி முத்திரைத் தாளும் சரி, அதுபோல கள்ளப் பணத்தையும் சரிபார்ப்பதற்காக அடையாளம் காட்டும் கருவி Ultra-Tracer ஒவ்வொரு சார்பதிவகத்திலும் வைப்பதற்காக தமிழ்நாட்டிலே முதல் கட்டமாக 300 சார்பதிவகங்களிலே போலி முத்திரைத் தாள் அடையாளம் காட்டும் கருவி வாங்குவதற்கு இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. இதுபோல, நம்முடைய Housing Development Finance Corporation - வீட்டு வசதி வாரியத்திற்கு உதவி செய்கின்ற நிறுவனத்திற்கு மற்றும் இருக்கக்கூடிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கும் அவர்கள் முத்திரைத் தாள்களைப் பெறுவதிலே மிகுந்த கஷ்டம் இருக்கிறது. எனவே, அவர்கள் Franking Machine-ஐ வைத்துக்கொள்வதற்கு, முத்திரைத் தாள் அச்சிடும் இயந்திரங்களை வைத்துக் கொண்டு, அதையே பயன்படுத்தி முத்திரை ஸ்டாம்பாக பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இதனால், அரசுககு முன்பணமாக பல கோடி ரூபாய் வருயானம் கிட்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

எல்லா மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய பதிவுத் துறை அலுவலர்களுசகு பயிற்சி மையங்கள், நம்முடைய தமிழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்காக உருவாக்கப்பட்ட அந்தப் பயிற்சி மையம், இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. புதியதாக, வருகிற ஆண்டிலே 1,5?4 முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுபோல வழிகாட்டி மதிப்பைப் பொறுத்தமட்டில் வழிகாட்டி மதிப்பைத் தெரிந்துகொள்ள மிகக் கஷ்டமாக இருக்கிறது என்று இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். அதனை நாமெல்லாம் இப்போது இணையப் பதிப்பிலே தெரிந்துகொள்ளலாம். Website நம்முடைய பதிவுத் துறை மூலமாக வழிகாட்டி மதிப்பை இன்றைக்கு 10 அலுவலகங்களிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் வருங்காலத்திலே தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய சார்பதிவகங்களுடைய வழிகாட்டி மதிப்பை கணினியிலே, நாம் இருக்கக்கூடிய பத்திரப் பதிவுத் துறைக்காக நியமிக்கப்பட்டிருக்கின்ற இணையப் பதிப்பிலே வீட்டிலே இருந்தே வழிகாட்டி மதிப்பைத் தெரிந்து கொள்ளலாம் என்பதை நான் இந்த நேரத்திலே



தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அத்துடன் இவ்வாண்டு இரண்டு புதிய சார்பதிவகக் கட்டடங்களும் அலுவலகங்களும் உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீண்டும் பட்டு வளர்ச்சித் துறையினுடைய சார்பாக - இன்றைக்கு ஒரு விவசாயி 300 கிலோ தயார் செய்வதற்குப் பதிலாக 450 கிலோ தயார் செய்கின்ற அளவிற்கு 80 தர மேம்பாட்டுக் குழுக்களை அமைத்து, 800 விவசாயிகளுக்கு, தலைவர் கலைஞர் அரசானது கிட்டத்தட்ட ரூ.32.32 இலட்சம் வழங்க இந்த நடப்பு நிதியாண்டிலே. திட்டம் உருவாக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இதனால் ஒரு விவசாயிக்கு 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக வருமானம் கிட்டும்.

*பிற்பகல் 12-55*

அதுபோல, சொட்டுநீர் பாசனம். ரூ. 59.40 இலட்சம் செலவிலே, 500 பேருக்கு சொட்டு நீர் பாசன வசதியை செய்துதர இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

100 பட்டு நூல் நூற்பாளர்களுக்கு கடின நீரை மென் நீராக்கி, பட்டு உற்பத்தி செய்வதற்கு 50 சதவிகிதம் மானியமாக 4 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, வீரிய மல்பரி வகைகளை உற்பத்தி செய்வதற்கு, வீரிய மல்பரி வி-1 ஒட்டு மல்பரியை உற்பத்தி செய்வதற்கு ரூபாய் ஒன்றரை இலட்சம் செலவில் 350 விவசாயிகளுக்கு வழங்க இந்த அரசு உதவி செய்திருக்கிறது.

16 விசைத்தறிகள் அமைப்பதற்கு, விவசாயிகளுக்காக 25 சதவிகித மானியத்திலே ரூ.2.40 இலட்சம் வழங்குவதற்கு, அரசு முடிவு செய்திருக்கிறது.

குறிப்பாக, கைத்திறன் தொழிலைப் பொறுத்தளவில், சுவாமிமலையிலே தயார் செய்யக்கூடிய பொருட்களுக்கு, அங்கே ஒரு விற்பனை வளாகம், வருகின்ற ஆண்டிலே கட்டுவதற்காக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வருகிற ஆண்டிலே, நம்முடைய கைத்திறத் தொழில், பூம்புகார் மூலமாக தயார் செய்யப்படக்கூடிய அத்தனை கலைப் பொருட்களும், புனே,

ஹைதராபாத் மற்றும் ஜெய்ப்பூர், உதய்பூர், போபால், இந்தூர், கோவா, புதுடெல்லி மற்றும் மும்பை போன்ற நகரங்களில் பெரிய அளவில் கண்காட்சிகள் நடத்த உத்தேசித்துள்ளது.

இதுபோக, 2000-2001 ஆம் ஆண்டில், எப்படி மாமல்லபுரத்திலே கற்சிலைகளுக்காக, தலைவர் கலைஞர் அவர்களால் முதலிலே, ஓர் ஆண்டு படிப்பாக, கைவினைப் பணிகளில் பயிற்சி பெறுவதற்கு ஆரம்பித்து பின்பு, பட்டயப் படிப்பாக மாற்றினார்களோ, அதேபோல, பஞ்சலோகச் சிலைகளையும், வெண்கல வார்ப்புச் சிலைகளையும், வடிவமைக்கின்ற பணிகளில் பயிற்சி பெறுவதற்கு சுவாமிமலையிலே, வருகின்ற ஆண்டிலே, 10 இலட்சம் ரூபாயிலே, கட்டடம் கட்டப்பட்டு, அங்கே மூன்று ஆண்டுகள் பட்டயப் பயிற்சி பெறுவதற்காக, நம்முடைய மாண்புமிகு தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டிலே, அந்த மூன்று ஆண்டு பட்டயப் படிப்பு தொடங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தளவில், நம்முடைய அரசு எடுத்திருக்கின்ற முடிவுகள் குறித்து இங்கே பேசிய நண்பர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஒரு குடும்பத்திலே, பாகுவிஸ்தி செய்தால், அதற்கு குறைக்கவேண்டுமென்று, ஏற்கெனவே அவர்கள் வைத்த கோரிக்கை; அதை கடந்த ஆண்டே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 4 சதவிகிதமாக இருந்ததை, 2 சதவிகிதமாகக் குறைத்திருக்கின்றார்கள்.

அதேபோல, அவர்கள் விடுதலைப் பத்திரத்திலும் சரி, செட்டில்மெண்டிலும் சரி, அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏற்கெனவே 4 சதவிகிதம் இருக்கிறது. அதை, இந்த அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. குறைப்பதானால் எவ்வளவு வருமானம் குறையும் என்பதை ஆய்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சமாதான் திட்டத்தின் மூலமாக, கிட்டத்தட்ட 50,000 பத்திரங்கள் முடிவுக்கு கொண்டுவந்த வகையிலே, நம்முடைய அரசுக்கு 34 கோடி ரூபாய், அதிகமாக வருவாய் வந்தது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த அரசின் சார்பாக, எடுத்த அத்தனை நடவடிக்கைகளிலும், இன்றைக்கு பத்திரப் பதிவுத்



துறையைப் பொறுத்தளவில் எங்களுக்கிருந்த குறியீட்டைவிட கிட்டத்தட்ட 19.86 சதவிகிதம் இந்த ஆண்டு கூடுதலாக வருவாயை ஈட்டி இருக்கிறது.

அதேபோல சிட்கோ. நஷ்டத்திலேயிருந்த சிட்கோ இலாபத்திலே வந்திருக்கிறது. கைத்திறன் தொழிலும் மிகச் சிறப்பாக இலாபத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்தனை துறைகளும் இன்றைக்கு, நம்முடைய முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இன்னும் பல சீர்திருத்தங்களை இந்தத் துறையிலே கொண்டு வருவதற்கு இருக்கின்றோம் என்பதை மட்டும், நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே குறிப்பாக, தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம், இங்கே இருக்கின்ற தாராள தொழில்மயக் கொள்கைகள்தான். முக்கியமாக சொல்லப்போனால், இங்கேயுள்ள திறந்தவெளி, transparence காரணமாக இந்தியத் திருநாட்டில், தமிழகத்திலேதான் தொழில் தொடங்குவதற்கு விரும்புகிறார்கள். அந்த அளவிற்கு, எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல், அரசே முன்வந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அத்தனையும் செய்கின்ற ஒரே ஒரு மாநிலம், இந்தியத் திருநாட்டிலே தமிழகம்தான்; என்பதைச்சொலலி நம்முடைய முதல்வர் கலைஞர்தான் என்பதைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் அத்தனையும் நான் படித்திருக்கின்றேன், கவனத்திலே கொண்டிருக்கின்றேன், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 5-முத்திரைத் தாள்கள் - நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5 - முத்திரைத் தாள்கள் - நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற [illegible], இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற [illegible] அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை. டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.2,70,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-00

(ஆ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 6-ஆவணப் பதிவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.52,57,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி இல்லை.

[2000 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.80,61,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ச) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*149.* சென்னை-15, ஹெக்ஸ் மொபைல்ஸ் நிறுவனத்திடமிருந்து, சென்னை-20 திருவாளர்கள் இந்திய பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம் வாங்கியுள்ள கால்நடை அவசர சிகிச்சைக்கான, சுவராஜ் மஸ்டா காஸ்மோ வண்டி (மாடல் எம்.வி.26பி) ஒன்றின் கொள்முதலுக்கு, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 7-2-2000 ஆம் நாளிட்ட 23 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*150.* வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் உருவாகி, 4-2-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட 12-1-1998 ஆம் நாளிட்ட II(1)/வ.வ. & அ.நி/16/98 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடுகள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 7-2-2000 ஆம் நாளிட்ட 24 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2000 ஏப்ரல் 25

151. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினருக்கு தொகுதி வீடுகள் கட்டுவதற்காக, இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தச்சர்-கருமார் தொழில் பிரிவுகள் தயாரிக்கும் மரப் பொருட்களின் விற்பனைமீது, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 7-2-2000 ஆம் நாளிட்ட 25 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. மானியக் கோரிக்கை எண் 5 -முத்திரைத் தாள் நிருவாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 6 - பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001, (தமிழ், ஆங்கிலம்)

119. மானியக் கோரிக்கை எண் 47 மற்றும் 59 - ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

120. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

121. மானியக் கோரிக்கை எண் 47-ன்கீழ் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும், திட்டங்களும், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

122. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

123. பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

124. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை. (1999-2000).

125. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கை. (1999-2000).



2000 ஏப்ரல் 25]

126. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை. (1999-2000)

127. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை. (1999-2000)

128. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை. (1999-2000)

129. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பத்தாவது அறிக்கை. (1999-2000)

130. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினொன்றாவது அறிக்கை. (1999-2000)

## இணைப்பு I

*(100 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 5-முத்திரைத் தாள்கள் நிருவாகம்**
**மற்றும்**
**கோரிக்கை எண் 6 - பத்திரப் பதிவு**

## கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

*அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்.*

-திருக்குறள்

பதிவுத் துறை, 137 ஆண்டுகள் நிறைவெய்தி, தொன்மையான துறைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. இத்துறை, தகவல் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துவதில் பெரிதும் முற்போக்குப் பார்வை கொண்டுள்ளது. இப்பதிவுத் துறை, அரசின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு வெளிப்படையான மற்றும துரித சேவையை வழங்கவும் முனைப்புடன் செயலாற்ற முயற்சி மேற்கொண்டுள்ளது. முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாக, அரசுக்குக் கணிசமான வருவாயை ஈட்டித்தருவதில், வணிக வரித் துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கு அடுத்து, மூன்றாவது துறையாக இப்பதிவுத் துறை விளங்குகிறது. இத்துறையின் சேவைப் பரிமாணம், 'பதிவுத் துறையுடனான தொடர்பை ஓர் இனிய அனுபவம் ஆக்கல்' என்ற தாரக மந்திரத்தை வழிகாட்டுதலாகக் கொண்டுள்ளது.

## 2. நிர்வாக அமைப்பு

### அ. தலைமையிடம்

பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராக உள்ளார். அவர் கீழ்க்கண்ட அதிகாரங்களையும் கைக்கொண்டுள்ளார்:-

(அ) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டத்தின் கீழ் நிறுவனங்கள் பதிவாளர்

(ஆ) 1972 ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுமங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளர்

(இ) 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கப் பதிவாளர்

(ஈ) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) ன் கீழ் சீட்டு நிதிகள் பதிவாளர்

பதிவுத் துறைத் தலைவருக்கு உதவியாகப் பின்வரும் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர்:-

(1) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர்
(சட்டம் மற்றும் மக்கள் தொடர்பு)

(2) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)

(3) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)

(4) கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்
(கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

(5) பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது)
(துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

(6) பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு) (மாவட்டப் பதிவாளர் நிலையில்)

(7) மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

(8) மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)





(9) கணக்கு அலுவலர்

(10) காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (விழிப்புக் குழு)

### ஆ. மண்டல அலுவலகங்கள்

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் ஒன்பது பதிவு மண்டலங்கள் உள்ளன. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், வருவாய் ஈட்டுதல், ஆய்வு செய்தல், தம் மண்டலத்திற்குள் உள்ள வட்டார பதிவுத் துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல், விசாரணை நடத்துதல் ஆகிய பணிகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். மண்டலத்தில் அவர் 1982-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் உள்ளார்.

### இ. வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களை தலைமையிடங்களாகக் கொண்டு, ஐந்து உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். புகார் மனுவின் மீது விசாரணை செய்வது, தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் செய்யப்படும் தணிக்கைப் பணிமீது சோதனை ஆய்வு செய்வது ஆகியவை இவர்களது முக்கியப் பணிகளாகும். மேலும், இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிறுவனங்களை ஆய்வு செய்கின்றனர்.

### ஈ. மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம், 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவு மாவட்டமும், மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவற்றுள் பணிப்பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளை கருத்தில் கொண்டு, 12 பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஓர் உதவிப் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் நிர்வகிக்கப்படுகின்றன. இவர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதி சட்டத்தின்கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் (Firms) ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கின்றனர்.

### உ. தணிக்கைக் குழுக்கள்

இத்துறையில் கட்டுக்கோப்பான காலவரையறைக்குட்பட்ட துறைத் தணிகைகை பிரிவு இயங்கி வருகிறது. மாநிலத்தில் உள்ள எல்லா சார்பதிவாளர் அலுவலகங்களையும், நூறு சதவீதம் துறைத் தணிக்கை செய்ய 45 தணிக்கைக் குழுக்கள் செயல்படுகின்றன. ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள், முத்திரைத் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளனவா எனக் கள ஆய்வு செய்யும் பணியையும் இத்தணிக்கைக் குழு கவனிக்கிறது.

### ஊ. சார்பதிவகங்கள்

மாநிலம் முழுவதும் 600 சார்பதிவகங்கள் உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் மற்றும் 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சடடம் ஆகிய சட்டங்களின்கீழ், திருமணப் பதிவாளராகவும் சார்பதிவாளர் செயல்படுகிறார்.

1999-2000 ஆம ஆண்டில் கள்ளிமந்தயம் (பழனி), கே.வி. குப்பம் (வேலூர்), மணச்சநல்லூர் (திருச்சி), மாரண்டஹள்ளி (தர்மபுரி) மற்றும் திருக்குவளை (நாகபட்டினம்) ஆகிய இடங்களில் புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறககப்பட்டன.

### எ. புலனாய்வுக் குழு

சொத்துக்களின் மதிப்பை நிர்ணயிக்கும் பொருட்டும், முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும் 'புலனாய்வுக் குழு' பிரிவு ஒன்று, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவர் தலைமையின்கீழ், 8 மாவட்டப் பதிவாளர்களையும், 2 உதவிச் செயற்பொறியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவர்கள் கட்டட கள ஆய்வுகள் செய்து வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

### ஏ. வழிகாட்டி மதிப்புக் குழு

ஆவணத்தில் சந்தை மதிப்புச் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வசதியாக, பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கிராமப் புல எண்கள் மற்றும் நகர எல்லையில் இருக்கும் தெருக்களில் உள்ள சொத்துக்களின் மதிப்புகள் அடங்கிய வழிகாட்டி மதிப்பு பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.



வழிகாட்டி மதிப்பு பதிவேடுகள் தயாரித்தல், மதிப்புகள் திருத்தி அமைத்தல் மற்றும் முரண்பாடுகளைக் களைவதற்கும் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் கீழ் வழிகாட்டி மதிப்புக் குழு இயங்கிவருகிறது. வழிகாட்டி மதிப்பினை சரியாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் நிர்ணயித்திட மதிப்பு நிர்ணய நடவடிக்கைகளில் ஆலோசனை வழங்க, சென்னை நிலநிர்வாக ஆணையாளர் கட்டுப்பாட்டில் உள்ள இணை ஆணையர் (நில எடுப்பு) இக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக குழுமம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி மற்றும் இதர நகராட்சிகளின் 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்டச் சட்டத்தின் பிரிவு 10(1)-ன்கீழ், உள்ளாட்சி திட்டப் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும். இதர கிராமப் புறங்களிலுள்ள சொத்துக்களின் மதிப்பு, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையும் திருத்தி அமைக்கப்படுகிறது

வீடு, நில உடைமைகளை விற்றல் மற்றும் வாங்கல் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்திருந்ததால், 1999-2000-க்கான வழிகாட்டி மதிப்பு திருத்தியமைக்கும் பணி தள்ளி வைக்கப்பட்டது.

வழிகாட்டி மதிப்பினை வெளிப்படையாக்கும் நோக்குடன், சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டின் நகல்கள் வர்த்தகக் கழகங்கள், வணிகர் மற்றும் விவசாயிகள் சங்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றங்களுக்கு, மக்களின் தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டுக்கான வழிகாட்டி மதிப்புகள், கணினி இணையத்தில், www.:http:\\igregn.tn.nic.in. என்ற வலைதளத்தில் கிடைக்கும்.

### ஐ. பதிவுத் துறை பயிற்சி நிலையம்

1996 முதல் செயல்பட்டுவரும் இப்பயிற்சி மையம், பதிவுத் துறையில் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்து பதிவு அலுவலர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது.

[2000 ஏப்ரல் 25

### 3. பதிவுத் துறை நிர்வகிக்கும் சட்டங்கள்

(1) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் II/1899)

(2) 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் XVI/1908)

(3) 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்

(4) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் 40/1982)

கீழ்க்கண்ட சட்டங்களின் கீழ், துறையின் வரையறுக்கப்பட்ட பணிகள் மட்டும்:

(5) 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சட்டம்

(6) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம்

(7) 1972 ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுமங்கள் சட்டம்

(8) அ. 1869 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்

ஆ. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம்

இ. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம்

ஈ. 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்

உ. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்

ஊ. 1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம்

### 4. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் - திருவாகம்

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், நன்கொடை, உடைமை உரிமை நிலவர ஏற்பாடு முதலியவை குறித்த ஆவணங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் II/1899) அதிகாரமளிக்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத் துறைத் தலைவர், வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியாக (முத்திரை வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைச் சட்டத்தின் மூலம் வருவாய் வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார். அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின்பேரில், முத்திரைத் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது.



2000 ஏப்ரல் 25]

#### (i) வருவாய் ஈட்டல்

பதிவுத் துறை அலுவலர்களின் சீரிய கண்காணிப்பாலும் விழிப்புணர்வாலும் அரசின் வருவாய் 1968-69 ஆம் ஆண்டில் ரூ.40 கோடியிலிருந்து 1998-99 ஆம் ஆண்டில் ரூ.854.30 கோடிக்கு உயர்ந்தது.

முத்திரை வருவாய்

| ஆண்டு | ஆவணப்பதிவு | தொகை (ரூபாய கோடியில்) |
|---|---|---|
| 1992-93 | 10,98,115 | 367.81 |
| 1993-94 | 11,51,150 | 411.98 |
| 1994-95 | 12,65,287 | 586.34 |
| 1995-96 | 13,61,036 | 748.50 |
| 1996-97 | 12,89,947 | 748.58 |
| 1997-98 | 13,32,377 | 806.26 |
| 1998-99 | 13,69,688 | 854.30 |
| 1999-2000 (மார்ச், 2000 முடிய) | 15,03,181 | 1,019.60 |

#### (ii) இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ-ன்கீழ் வரும் இனங்கள்

முத்திரைச் சட்டத்தின்படி, சொத்து விற்பவர்கள் ஆவணத்தில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு உண்மையில் ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள, வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 25

ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து, ஆவணம் பதிய வருபவர் கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ-ன்கீழ், அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை நிர்ணயிப்பதற்காக பத்திரப்பதிவு அதிகாரி, அந்த ஆவணத்தைத் தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பி வைப்பார். ஆவணத்தில் குறிபபிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து அதன் மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத தீர்வையை தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கிறார்.

இத்தகைய தனிததுணை ஆட்சியர்கள் 11 இடங்களில் பணிபுரிகின்றனர். அவர்கள், மதிப்பு நிர்ணயம் தொடர்பாகப் பெறப்படும் ஆவணங்களில் கண்டுள்ள சொத்துககளை ஆய்வு செய்து சம்மந்தப்பட்ட சொத்தின் மதிப்பை நிர்ணயிதது விதிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை முடிவு செய்கின்றனர்.

6-3-2000 முதல் அமல் செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டம் 1/2000, தனித்துணை ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட மதிப்பு நிர்ணய ஆணை மீது, மேல்முறையீடு செய்திடவும் மற்றும் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி தன்னிச்சையாக சீராய்வு செய்வதற்கும் வகை செய்கிறது.

## 5. சமாதான் சலுகைத் திட்டம்

அரசு அறிமுகப்படுத்திய "சமாதான் சலுகைத் திட்டத்தின்படி", வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பின் மீது விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை மற்றும் ஏற்கெனவே செலுத்தப்பட்ட முததிரைத் தீர்வை ஆகிய இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தைச் செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தில், 1-3-1999 அன்று முத்திரைத் தனித்துணை ஆட்சியரிடம் நிலுவையில் இருக்கும் ஆவணங்களுக்கு மட்டுமே இச்சலுகை பொருந்தும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் 1-3-1999-லிருந்து 30-9-1999 வரை அமலில் இருந்தது. இத்திட்டத்தின் மூலம், 36,813 ஆவணங்கள் முடிக்கப்பட்டு, அரசுக்கு ரூ.34.56 கோடி வருவாய் கிடைத்துள்ளது.



2000 ஏப்ரல் 25]

## 6. முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடமானம், அதன் மாற்றம், நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரையில், முத்திரைத் தீர்வையுடன் 5 சதவீதம் மிகுவரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை, மிகுவரியாக வசூலிக்கப்படும் தொகையில், 10% தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை எடுத்துக்கொண்டு, எஞ்சியுள்ள 90% தொகை மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது.

அதேபோல் நகரப் பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்படும் மிகுவரி வசூலில், 3% இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக்கொள்கிறது. மீதமுள்ள 97% மிகுவரி சம்பந்தப்பட்ட நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

## 7. நிருவாகச் சீர்திருத்தங்கள் — சட்டத் திருத்தங்கள்

### அ. 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் XVI/1908)

1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் திருத்தப்பட்ட பிரிவு 22-ஏ-ன்கீழ், எந்த ஓர் ஆவணம் அல்லது ஆவணங்களின் வகைகளைப் பதிவு செய்வதானது "பொதுக் கொள்கைக்கு மாறானது" என்பதை, அரசு பதிவிதழில் அறிவிக்கையின் மூலம் அரசு அறிவிக்கலாம். அறிவிக்கையில் சேர்ப்பதற்குரிய அத்தகு ஆவணங்களின் பட்டியலை அரசு இறுதி செய்து வருகிறது.

நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க, இல்லாத ஒரு நபர் பெயரிலோ, பினாமி பெயரிலோ நடைபெறும் சொத்து வாங்குதலைத் தடை செய்திட, ஆவணம் மற்றும் பதிவு அலுவலகப் பதிவுகளில் சொத்தை விற்பவரின் கையொப்பம் தவிர, சொத்தை வாங்குபவரின் கையொப்பமும் பெற வழிவகை செய்யும் நடைமுறையை பதிவுச் சட்டத்தில் வகை செய்திட அரசு பரிசீலித்து வருகிறது.

ஆவணங்களின் நகல்களை கணினி சுருக்கத் தட்டில் (CD-ROM) சேமித்துவைத்து, அவற்றைத் திரும்பவும் மீட்டெடுத்து சான்றிட்ட நகல்கள்

[2000 ஏப்ரல் 25

வழங்குவதற்கு வழி செய்யும் வகையில், பதிவுச் சட்டத்தில் தேவையான திருத்தம் செய்ய அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## ஆ. இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம், II/1899)

தமிழநாடு சட்டம் 1/2000-ன்படி, பெருநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சொத்துக்கள் குறித்த குத்தகை, கூட்டுவணிகம், விடுதலை ஆவணங்களுக்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. தனித் துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயித்த மதிப்புக்கு ஏற்படும் குறைவு முத்திரைத் தீர்வையை தாமதமாகச் செலுத்தும் நிகழ்வுகளில், மேற்படி தொகைகளுக்கு வட்டி வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏ-ன்படி, தனித் துணை ஆட்சியரின் மதிப்பு நிர்ணய ஆணைமீது, மேல்முறையீடு மற்றும் முதன்மைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி அவர்களின் தன்னிச்சையான சீராய்வு (Suo-motu) போன்ற வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன

நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்று, ஆவணப் பதிவுக்குச் செலுத்தப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இவற்றை கேட்பு வரைவோலை (Demand Draft) வழியாகவும் செலுத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

## 8. முத்திரைத் தாள்கள்-கொள்முதல் செய்தல்:

தமிழநாடு முழுவதற்கும் அஞ்சல்சாரா முத்திரைத் தாள்களான நீதித் துறை முத்திரைத் தாள்கள், நீதித் துறைசாரா முத்திரைத் தாள்களின் தேவையை, முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து அதனை நாசிக்கிலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூலக் கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள் உதவி கணகாணிப்பாளர் ஒருவரின் உதவியுடன், அலுவல்-முறையில், முத்திரைத்தாள் கண்காணிப்பாளராகச் செயல்படுகின்றார். முத்திரைத்தாள் தேவை மற்றும் வழங்குதலில் ஒரு முறையான ஒருங்கிணைப்பு பாதுகாக்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 25]

## 9. ஃபிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்

சில வேளைகளில் எழும் முத்திரைத்தாள் தட்டுப்பாட்டினை தவிர்ப்பதற்கு ஃபிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் முத்திரைத் தீர்வைத் தொகை செலுத்துவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. முதற்கட்டமாக 15 பதிவகங்களில் இந்தக் கருவி அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

## 10. 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழான ஒப்பளிப்புகள்

பொதுமக்களுக்கு நகல்கள் துல்லியமாகவும், உடனுக்குடனும், வழங்குவதற்கு, சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு, 10 நகலெடுக்கும் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து துரிதமாகவும், துல்லியமாகவும் அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுரைகளை கள அலுவலர்களுக்கு அனுப்ப, அந்த அலுவலகத்திற்கு, அதிக அளவிலான நகலெடுக்கும் கருவி (Heavy duty and high volume copier with printer) ஒன்று வழங்கப்படவுள்ளது.

பதிவு அலுவலகங்களில் விலை மதிப்புள்ள சொத்துக்கள் குறித்த ஆவணங்கள் மற்றும் நிரந்தரப் பதிவேடுகளை முறையாகப் பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, 100 உருக்கு அலமாரிகள் வாங்கப்படவுள்ளன.

## 11. முத்திரைத்தாள் விற்பனை

### (அ) முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

பொதுமக்களுக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்திட முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அதிகாரிகளும் இத்துறையிலுள்ள தனி விழிப்புக் குழுவும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

### (ஆ) முத்திரைத்தாள் விற்பனையாளர்களாக சார்பதிவாளர்கள்

சார்பதிவாளர்கள், அலுவல்முறையில் முத்திரைத்தாள்கள் விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர்.

[2000 ஏப்ரல் 25

சிறப்பு ஒட்டு முத்திரைவில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன் கீழ் முத்திரைத் தீர்வையினை ரூ.10,000/- வரை ரொக்கமாகப் பெற்றிடவும், சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டப் பதிவாளர்கள் சார்பதிவாளர்களாகச் செயல்படும் இடங்களில், உச்சவரம்பின்றி, முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்று, ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலை, பொதுமக்கள் முத்திரைத்தாள்கள் பெறுதலில் ஏற்படும் சிரமத்தைக் குறைத்திடும்.

### இ) மைய முத்திரைத்தாள் விற்பனை மையம்

நீதிமன்ற முத்திரைத்தாள்கள், பத்திரப் பதிவிற்கான நீதிசாரா முத்திரைத்தாள்கள் மற்றும் முத்திரைவில்லைகள் ஆகியவை எளிதாகவும், தேவையான அளவு, இடர்பாடின்றி பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்குடனும், சென்னை துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில், முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்றைத் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது. இம்மையத்தில் பத்திரப்பதிவிற்குத் தேவையான படிவங்களும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 12. ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் உரிமங்கள்

### (அ) நகல் எழுத்தர் உரிமம்

1967ஆம் ஆண்டு இந்திய பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகளின்படி பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அந்த ஆவணத்தின் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நகல் தெளிவான கையெழுத்துடனோ, தட்டச்சு செய்தோ, சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதால், 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகல் எழுத்தர் உரிம விதிகள் 2-4-1971-ல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டன. ஆவணங்களுக்கு நகல் எழுதவும், தட்டச்சு நகல் எடுக்கவும், நகல் எழுத்தர் மற்றும் தட்டச்சர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன

### (ஆ) ஆவண எழுத்தர் உரிமம்

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளின்படி, முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம், அவற்றின் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்த அரசு நடத்தும் தேர்வில், தேர்ச்சி பெற்றவர் மட்டுமே ஆவண எழுத்தர் உரிமம் பெறத் தகுதியுடையவர் ஆவர். மாநில



2000 ஏப்ரல் 25]

அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவு மாவட்ட அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

## 13. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்

தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டத்தின்படி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிருவாக மாவட்டப் பதிவாளர்கள் இந்தச் சட்டத்தின் கீழ், சங்கங்களின் பதிவாளர் ஆவர். பதிவுத் துறைத் தலைவருக்கு, இச்சட்டத்தின் கீழான பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும், மேல்முறையீடுகளைக் கேட்டு இறுதியாணையிடும் அதிகாரமும் உள்ளன.

தற்போது காலதாமதமாக சங்கத்தின் ஆவணங்களைக் கோர்வைக்குத் தாக்கல் செய்வதை அறிவிக்கையின் மூலம் விலக்களிப்பதைத் தவிர்த்து, இத்தகைய காலதாமதங்களை மாவட்டப் பதிவாளர்களே ஏற்று ஆணையிட 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கப் பதிவுச்சட்டப் பிரிவு 49-க்கு திருத்தம் செய்திட அரசு பரிசீலித்து வருகிறது.

சங்க நிருவாகப் பொறுப்பில் காலவரையறை இன்றி ஒரு சில நபர்களே தொடர்ந்து இருந்து வருவதால் ஏற்படும் நிருவாகச் சீர்கேட்டினைத் தடுத்திட, ஒருவர் நிருவாகப் பொறுப்பில் தொடர்ந்து 6 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாதவாறு, 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம், பிரிவு 15-க்கு உட்பிரிவு (6) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் 96,213 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 14. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் 40/1982)

### அ) தமிழ்நாட்டில் சீட்டு நிதி செயல்பாடுகள்

1982 ஆம் ஆண்டு மையச் சீட்டு நிதிச் சட்டம் மற்றும் அதன் கீழ் வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின்படி கட்டுப்படுத்தப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டு), சீட்டு நிதி பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர்.

[2000 ஏப்ரல் 25

### (ஆ) சீட்டு விழிப்புக் குழு

பதிவு செய்யாமல் சீட்டு நடத்துதல் மற்றும் அதன் தொடர்பான முறையீடுகளைக் கண்டுபிடிக்க பதிவுத் துறைத் தலைவரால் விழிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் செயலபடுகிறது.

### இ) தமிழ்நாடு சீட்டுக் கழகம்

அரசின் கொள்கை முடிவின்படி, தமிழ்நாடு சீட்டுக் கழகம் கலைக்கப்பட ஆணையிடப்பட்டது. சீட்டு நிதிக் கழகத்திற்கு வர வேண்டிய ரூ.2.79 கோடியில், 31-12-1999 வரை ரூ.2.59 கோடி வசூலிக்கப்பட்டுவிட்டது. இதில் பரிசு பெற்ற சீட்டுத தொகையும் அடங்கும். மீதமுள்ள ரூ.20 இலட்சத்தை வசூலிக்க, சீட்டு நடுவர் நீதிமன்றத்தில் 440 வழக்குகள் கோர்வை செய்யப்பட்டு, சீட்டு நடுவர் மன்றங்களிலும் நீதிமன்றங்களிலும் நிலுவையில உள்ளன.

## 15. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (Indian Partnership Act, 1932)

இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டத்தில், மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ், படிவம் 1ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு, தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்குத் தெரிவிப்பதில்லை. இந்நிலையினைத் தவிர்க்கும் பொருட்டும், எத்தனை கூட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என அறியவும், அவற்றுக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என்பதைக் கண்காணிக்கவும், உதவி புரியும் வகையில், 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவன (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 3,59,465 கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 25]

## 16. கணினிமயமாக்கம்

### அ) "ஸ்டார்" திட்டம் - சேவையின் புதிய பரிமாணம்

* "ஸ்டார்" - விளக்கம் - எளிய மற்றும் வெளிப்படையான பதிவு முறைச் செயல்பாடு
* இத்திட்டம் பதிவுக்கு வரும் பொது மக்களின் அனைத்துத் தேவைகளுக்குமான ஒட்டுமொத்த தொழில்நுட்ப வசதியாகும்.
* தகவல தொழில்நுட்பத்தைக் கொண்டு பிரச்சினைகளை அணுகும் நடைமுறையில் இருந்து, பிரச்சினைகளைக் களைவதற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நடைமுறைக்கு மாற்றுவது.

### ஆ) கணினி வசதி விரிவடைதல்

பதிவுத் துறையை கணினிமயமாக்கும் நடவடிக்கையின் முதற்கட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6-2-2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

பத்திரப் பதிவுத் துறையில் பொது மக்களுக்குப் பயனுள்ள பல வசதிகள் விரைவில் கிடைத்திடும் வகையில், இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி 2000-2001 ஆம் நிதி ஆண்டில் மற்ற பதிவு அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### இ) அளிக்கப்படும் சேவைகள்

1. ஆவணங்கள் பாதுகாப்பு
2. சான்றிட்ட நகல்கள் வழங்கல்
3. வில்லங்கச் சான்று வழங்கல்
4. சொத்து மதிப்பு தகவல் அளித்தல்
5. வழிகாட்டி மதிப்பு தகவல் அளித்தல்
6. பிறப்பு, இறப்பு பதிவு வடிப்பு வழங்கல்

[2000 ஏப்ரல் 25

7. திருமணப்பதிவு

8. சங்கப்பதிவு/கண்காணிப்பு

9. சீட்டுப்பதிவு/கண்காணிப்பு

10. கூட்டு வணிக நிறுவனப்பதிவு/ கண்காணிப்பு

**ஈ) நன்மைகள்**

1. உடனடியான மற்றும் வெளிப்படையான சேவை அளித்தல்

2. எளிதான, தெளிவான நடைமுறை

3. இடைத்தரகர் நிலை நீக்கம்

4. இனிய தொடர்பளித்தல்

**உ) வலைதளம்**

www..http\\igregn.tn.nic in. என்ற வலைதளம், 'எவ்வாறு' எனச்சொல் மற்றும் 'உங்களுக்குத் தெரியுமா' என்ற படிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வலைதளத்தைத் தொடர்புகொண்டால், பதிவுக்கு வருபவர்களின் அனைத்து சந்தேகங்களையும் நிவர்த்தி செய்வதுடன், பதிவு செய்வதற்குரிய நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளையும் அவர்களுக்குத் தெரிவிக்கும். மாநிலம் முழுமைக்குமான 2000-2001-ஆம் ஆண்டுக்கான வழிகாட்டி மதிப்புத் தகவலும் இவ்வலைதளத்தில் கிடைக்கும்.



2000 ஏப்ரல் 25]

## இணைப்பு II

***(100 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

**கோரிக்கை எண் 47—ஊரகத்தொழில்கள்**

**கோரிக்கை எண் 59-ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001**

*முன்னுரை:*

நமது மாநிலத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் குறுந்தொழில் மற்றும் சிறு தொழில்கள் மிக முக்கியமான மற்றும் அத்தியாவசியமான பங்கு வகிக்கின்றன என்றால் மிகையாகாது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் பொருளாதாரம் தனக்கென ஒரு பெயரைப் பெற்றுள்ளதற்கு சிறு தொழில் மற்றும் குறுந்தொழிலின் செயல்பாடும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. மேலும், இத்துறை அதிக அளவில் வேலைவாய்ப்புக்களை தோற்றுவிப்பதுடன், மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஏற்படக்கூடிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும், கிராமப்புறங்களிலுள்ள வளங்களை திறம்பட உபயோகிக்கவும், மக்கள் கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கிக் குடி பெயர்வதைத் தடுக்கவும் உதவுகிறது. இத்துறை மாநிலத்தின் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

1990-களில் ஆரம்பித்த பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையும், உலகமயமாக்கல் கொள்கையும், படிப்படியாக இந்திய தொழில் துறையில் ஊடுருவியுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு உள்நாட்டு தொழில் அதிபர்கள் தங்களின் கண்ணோட்டத்தை மாற்றி அமைத்துக் கொண்டுள்ளனர். தாராளமயமாக்கல் கொள்கை மூலம் நமது நாட்டிற்கு அதிக அளவில் அன்னிய முதலீடும் அதனால் ஏற்படக்கூடிய வேலைவாய்ப்புக்கள் போன்ற நன்மைகள் கிடைத்தாலும், இக்கொள்கையினால் சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் துறைகளுக்கு ஏற்படக்கூடிய எதிர் மறையான விளைவுகளையும் அரசு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு அரசு உள்நாட்டில் தொழில்நுட்ப மேம்பாடு, இயற்கை வளங்களை உபயோகப்படுத்தி கிராமப்புறங்களில் சீரான தொழில வளர்ச்சி, தொழிலதிபர்களிடத்தில் தரமேம்பாடு பற்றிய சிந்தனையினை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும்

அரசு உள்நாட்டு தொழில் வளர்ச்சியின் பயனையும் நன்கு அறிந்துள்ளது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் தொழில் துறையில் முதலீடு செய்ய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முயலுகிறது. இதற்காக உரிமம் வழங்குவதில் ஏற்படக்கூடிய தடைகளைக் களையவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த அரசு, முதலீட்டாளர்களின் நண்பனாக விளங்குகின்றது.

நல்ல அனுபவமிக்கவர்கள் நிறைந்துள்ள சிறு தொழில் துறை இன்றைய மாறிவரும் சூழ்நிலைகளில் முழுவதுமாகச் செயல்பட தன்னை தயார்படுத்திக் கொண்டு வருகிறது. தொழிலகங்களுக்குத் தேவையான கடன் வசதியை கடன் வழங்கும் நிறுவனங்களின் வாயிலாக செயலாக்குதல், வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில் துறையின் செயல்பாடுகளில் நடைமுறை சிக்கல்களை எளிமைப்படுத்தல் போன்ற சீர்திருத்தங்களை இத்துறை மேற்கொண்டு வருகிறது. மத்திய மற்றும் மாநில தொழில் மேம்பாட்டு முனைவோர்களின் நல்ல ஒத்துழைப்பையும் இத்துறை பெற்றுத் தருகிறது.

தமிழ்நாட்டில் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களையும் ஊரகத் தொழில் பிரிவையும் ஆதரித்து மேம்படுத்துவதில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அரசுத் துறை நிறுவனங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

1. தொழில் வணிக இயக்ககம்

2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

3. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

4. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

இந்நிறுவனங்களின் பணிகள் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

**2. தொழில் வணிக இயக்ககம்**

2.1 தொழில் வணிக இயக்ககம் அரசின் தொடர்பு முகவர் அமைப்பாகும். இது சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களுக்குரிய பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. கடந்த காலத்தில் இயக்ககத்தின் பங்கு மிகவும் சட்டப்படியானதாக அமைந்திருந்தது. உரிமம் வழங்குதல், பற்றாக்குறை ஏற்படும்போது மூலப் பொருட்கள் வழங்குதல் போன்ற பணிகளையும், முறைப்படுத்துதல்



போன்ற ஒழுங்குமுறைப் பணிகளையும் மேற்கொண்டது. தற்போது, வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. பெரும்பான்மையான இயக்கக அதிகாரங்கள், மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. புதிய தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான பல்வேறு அரசு அனுமதிக்களுக்கான கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் பிரிவுகளுக்கு உறுதுணையான பணிகளுக்கு வகை செய்ய மாவட்டத் தொழில் மையங்கள் மாற்றியமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் வழிகாட்டும் உறுதுணை ஏற்பாடு தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இயக்ககம் மேற்கொண்ட பல்வேறு பணிகள் குறித்த விவரம் வருமாறு:

1. சிறுதொழில், மிகவும் சிறிய தொழில் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது மற்றும் மேம்படுத்துவது.

2. சிறுதொழில்களுக்கான மாநில மூலதன உதவி, மின்னாக்கி (ஜெனரேட்டர்) உதவித்தொகையில் கட்டண உதவித் தொகை, வட்டியில்லா விற்பனை வரித்தள்ளிவைப்பு தள்ளுபடி, நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்குத் தொடக்க உதவித் தொகை போன்ற பல்வேறு உதவித் தொகைகள் மற்றும் ஊக்க உதவித் தொகைகளை ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல்.

3. இரசாயனம், உலோகம், உலோகப் பொருட்கள், மின் சாதனம், மின்னணு பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கும் பரிசோதனை வசதிகளை அளித்தல்.

4. பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் போன்ற மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

5. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6. கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் அரசின் பல்வேறு கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

7. தொழில் முனைவோருக்கு உறுதுணைப் பணிகளுக்கு வகை செய்தல்.

8. மின்சார மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு சிறப்புப் பயன் தரும் தொழிற்பேட்டைகளைப் பராமரித்தல்.

9. தகவல் வங்கி, பல்வேறு மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைக்கப்பட்ட தகவல் மையம் மற்றும் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல்.

10. தொழில் மேம்பாட்டு வள வாய்ப்புள்ள புதிய பகுதிகளைக் கண்டறிதல், தொழில் முனைவோருக்கு தொழில் பிரபலமடைவதற்கும், வளர்ச்சியுறுவதற்குமான வசதிகளுக்கு வகை செய்தல்.

11. தொழில்நுட்பப் பொருளாதார கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

12. மாதிரி மற்றும் அடங்கல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

13. குடிசைத் தொழில் மற்றும் கைத்திறத்தொழில்களை மேம்படுத்துதல்.

14. இலேசான ரக பொறியியல் தொழில்கள், கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு ஆகிய தொழில்களில் பயிற்சி வசதிகள் அளித்தல்.

15. நலிந்த தொழில் பிரிவுகளைக் கண்டறிந்து அறிவித்து நிதியுதவி செய்தல்.

16. மூலதனப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய உதவி செய்தல்.

17. வீட்டுப் பயனுக்கான மின்சாதனங்களுக்குரிய தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

18. ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

19. சிறிய மற்றும் மிகச்சிறிய தொழில் பிரிவுகளுக்காக அரசு அறிவித்த சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்.



20. இத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளைப் பற்றிய விபரங்களை அறியும்பொருட்டு தொழில் முனைவோர்களின் வசதிக்காக "இன்டர்நெட் வெப்சைட்" கீழ்க்கண்ட கணிப்பொறி குறியீடுகளில் அறிய வசதி செய்யப்பட்டுள்ளது.

1. www.tndic.org.

2. www. tamilnadu indcom. org.

## 2.2 மாவட்டத் தொழில் மையங்கள்

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் செயல்படுகின்றன. சென்னை மாவட்டத்தில் தொழில் முனைவோர்கள் சொந்தமாக சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு அனைத்து உதவிகளையும் அளிப்பதற்காக வட்டார அலுவலகம் ஒன்று செயல்படுகிறது. மாவட்டத் தொழில் மையங்கள் மூலதன மானியம், நிதியுதவி, மூலப்பொருள் ஒதுக்கீடு, மின்சார மானியம் போன்ற பல்வேறு ஊக்க மற்றும் உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள், உள்ளூர் தொழில் நிறுவனங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான பல்வேறு வழிகளிலிருந்து தகவல்களை அளிப்பதற்கான ஒரு பாலமாகச் செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

தொழில் முனைவோர்கள், சொந்தமாகத் தொழில் தொடங்கும் பொருட்டு தொழில் நுட்ப இடுபொருட்கள் அனைத்தையும் பெறுவதில் அவர்களுக்கு உதவி செய்ய அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும், சென்னை வட்டார அலுவலகத்திலும் வழிகாட்டும் சேவைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டும் சேவைப் பிரிவு தொழில் முனைவோரின் தகுதியின்படி தேவையான உதவித்தொகைகளைப் பெறுவதில் அவர்களுக்கு உதவி புரியும். இத்திட்டத்தின் கீழ் 1,136 மனுக்கள் 100 விழுக்காடு ஏற்றுமதி சார்ந்த தொழில் நிறுவனங்களிலிருந்தும் மற்றும் 3,282 தொழில் கோரிக்கை மனுக்களும் நடப்பு ஆண்டில் தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நடைமுறை சிக்கல்களைக் குறைத்து எளிய முறையில் சிறு தொழில் மையங்கள் அமைப்பதற்கு வழிவகுக்கும் பொருட்டு ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள், நகர அமைப்புத் திட்டம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், பொதுச் சுகாதாரம், தொழிற்சாலைத் துறை மற்றும் ஏனைய துறைகளிடமிருந்து அனுமதிகள் பெறுவதற்கும், மின் இணைப்புப் பெறுவதற்கும் இதன் மூலம் தொழில் முனைவோர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது.

## 2.3 சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல்

சிறு தொழில் பிரிவுகளின் வளர்ச்சிகளுக்குத் தடையாகவுள்ள இடர்பாடுகள் அனைத்தையும் அகற்றும் நோக்கத்துடனும், நடைமுறைகள் மற்றும் விதி முறைகள், சிறு தொழில் மற்றும் ஊரகத் தொழில்களின் நலன்களைப் பாதிக்காதிருப்பதற்கு உதவி செய்யவும் தமிழ்நாடு அரசை அணுகுவதே, சிறு தொழில் பிரிவுகள் குறித்த கொள்கைக் குறிப்பின் முதன்மை நோக்கம் ஆகும். இச்செயல் நோக்கத்திற்காக சிறு தொழிற் பிரிவுகளைப் பதிவு செய்வதற்கான படிவங்களும் எளிமையாக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யும் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. சில தேவையான குறைந்தபட்ச விவரங்கள் அளிக்கப்படுவதன் பேரில், தற்காலிகமாக உடனுக்குடன் பதிவு செய்து கொள்ள இயலும். நிரந்தரமான பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்காக இது வரையில் வலியுறுத்தப்பட்டு வந்த நீண்ட நடைமுறையும் சீரமைக்கப்பட்டுள்ளது. தளவாடம மற்றும் இயந்திரங்களில் செய்யப்படும் மொத்த முதலீடு ரூ.100.00 இலட்சத்திற்கு மேற்படாத தொழிற்சாலைகள் சிறு தொழில் பிரிவுகளில் அடங்கும்.

துணைத் தொழில் பிரிவுகளைப் பொறுத்தவரையில், அதாவது இயந்திர பாகங்கள், துணைப் பாகங்கள் முதலியவற்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள அல்லது தங்களது உற்பத்தியில், 50 சதவீதத்திற்கும் குறையாத அளவுக்கு சேவைகளில் ஈடுபட்டுள்ள அல்லது, ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு சேவைகள் அளிக்கும் துணைத் தொழில் பிரிவுகளைப பொறுத்தவரையில் தளவாடம், இயந்திரங்களில் செய்யப்படும் முதலீட்டின் அளவு ரூ.100.00 இலட்சம் இருக்க வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்ட கொள்கை முடிவின்படி, தளவாடம், இயந்திரங்களில் ரூ.25.00 இலட்சம் வரையில் (அசல் கொள்முதல் விலை) முதலீடுகளைக் கொண்டுள்ள சிறு தொழில் பிரிவுகள் மிகச் சிறிய தொழில் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.





1999-2000 ஆண்டிற்கு நிரந்தரமான சிறு தொழில் பதிவுகள் குறித்த இலக்கு 30,000 தொழில் அலகுகள் ஆகும். தற்காலிக பதிவுகள் குறித்த இலக்கு 50,000 தொழில் அலகுகள் ஆகும். 31-3-2000 அன்றுள்ளபடி 27,798 நிரந்தரமான சிறு தொழில் பிரிவு சான்றிதழ்களும், 43,817 தற்காலிகச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### இருபது அம்சத் திட்டம்

இந்திய அரசின் இருபது அம்சத் திட்டத்தின் 1 (ஜே) மற்றும் 11 (ஏ) அம்சங்கள் தொழில் வணிக இயக்ககத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அம்சம் 1 (ஜே), படித்து வேலையில்லாத நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க புதிதாக சிறு தொழில் பிரிவுகள் ஏற்படுத்துவது பற்றி விவரிக்கிறது.

அம்சம் 11 (ஏ) ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களால் நிறுவப்பட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை பற்றி விவரிக்கிறது.

இவ்விரு திட்டங்களும் உன்னிப்பாகக் கண்காணிப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1 (ஜே) அம்சத்தில் 17,500 அலகுகளும், 11 (ஏ) அம்சத்தில் 2,000 அலகுகளும் 1999-2000 ஆண்டின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் 31-3-2000 அன்றுள்ளபடி படித்து வேலையில்லாத நபர்களால் 17,009 சிறுதொழில்களும், ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களால் 1,978 சிறு தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### தொடக்க நிலைப் புள்ளி விவரப் பிரிவு

இத்துறையின் தொடக்க நிலைப் புள்ளிவிவரப் பிரிவு, பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து கணக்கெடுப்பின் மூலம் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும் மாதிரி அளவைப் பணியின் மூலம் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை நாளது வரை பராமரிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

சிறு தொழில் பிரிவுகள் குறித்த மூன்றாவது அனைத்திந்திய புள்ளி விவரங்கள் கணக்கெடுப்பு வசதியை மேம்படுத்த 1992-93 முதல் 1998-99 ஆம் ஆண்டுகள் வரை பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகள் பற்றிய பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் தமிழ்நாட்டில் 31-3-2000 வரையில் 3,54,061 சிறு மற்றும் மிகச் சிறிய தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 25

## 2.4 சிறுதொழில் பிரிவுகளுக்குக் கொள்முதல் முன்னுரிமை

முன்பு, 1997 ஆம் ஆண்டில் சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கென்று ஒதுக்கப்பட்ட 474 இனங்களைப் பொறுத்தவரையில், அரசு ஆணைகள் பிறப்பித்தது. இதன் தேவைகளில் 50 சதவீதம், மூடி முத்திரையிடப்படாத, பொது ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும். எஞ்சியவை மூடி முத்திரையிடபபடாத பொது ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் குறைந்த விலைகளில் இம் மாநிலத்திற்குள் உள்ள சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதன பின்னர், மத்திய அரசு, சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 350 இனங்கள் அடங்கிய திருத்தப்பட்டியல் ஒன்றை வெளியிட்டது.

சிறு தொழில் பிரிவுகள் தற்போது எதிர்கொண்டு வருகின்ற கடினமான சூழ்நிலையைக கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு தனது முந்தைய ஆணைகளை மறு ஆய்வு செய்து 350 இனங்கள் குறித்த திருத்தப்பட்டியலை பொறுத்தவரையில் இம்மாநிலத்தில் 1997 பிப்ரவரிக்கு முன்பிருந்த சிறு தொழில் பிரிவுகளுககு கொள்முதல் முன்னுரிமையை மீண்டும் கொடுத்தது. [நிதித்துறையின் (BPE) 4-5-1998 ஆம் நாளிட்ட 1995 ஆம் எண் அரசாணை) இதனை இமமாநிலம் முழுவதிலும் உள்ள சிறு தொழில் பிரிவுகள் இந்த நெருக்கடியான நேரத்தில் ஓர் ஆதரவு நடவடிக்கையாகக் கருதி, இக்கொள்கை முடிவை வரவேற்றுள்ளன.

## 2.5 ஊக்கத் தொகைகளும், உதவித் தொகைகளும்

### 1. உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகளின் அளவு

மிகச் சிறிய தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு இம்மாநிலத்தில் உள்ள 287 வட்டாரங்கள் தொழிலில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள் மாநில மூலதன உதவித் தொகை, குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை உதவித் தொகை, வட்டியில்லா விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் ஏனைய சலுகைகள் பெறத் தகுதியுடையவையாகும். இந்த ஊக்கத் தொகைகளும் சலுகைகளும் அரசு/அரசு நிறுவனங்களின் ஆதரவு பெற்ற தொழிற்பேட்டைகளுக்கும், தொழில் வளாகங்களுக்கும் கிடைக்கின்றன.



2000 ஏப்ரல் 25]

பல்வேறு உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வருமாறு:

அ. பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள். உயரளவு ரூ.15.00 இலட்சம் என்பதற்கு உட்பட்டு 15 சதவீத மாநில மூலதன முதலீட்டு உதவித் தொகை பெறத் தகுதியுடையனவாகும்.

ஆ. மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள், உயரளவு ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்டு 20 சதவீத மூலதன முதலீட்டு உதவித் தொகை பெறத் தகுதியுடையனவாகும்.

இ. முக்கிய தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அதாவது மின்னணுத் தொழில்கள், தோல் தொழில்கள் ஆகியவற்றிற்கு, உயரளவாக ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்ட நிலையான சொத்துக்கள் மீது 20 சதவீத சிறப்பு முதலீட்டு உதவித் தொகை கிடைக்கிறது.

ஈ. தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் பின்வரும் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு, உயரளவாக ரூ.15.00 இலட்சம் என்பதற்குட்பட்டு நிலையான சொத்துக்கள் மீது 20 சதவீத சிறப்பு மூலதன முதலீட்டு உதவித் தொகையும் கிடைக்கிறது.

1. ஆட்டோ துணைப் பாகங்கள்
2. மருந்து மற்றும் மருந்தகப் பொருட்கள்
3. உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழில்கள்
4. சூரிய எரிசக்தி சாதனங்கள்
5. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள் மட்டும்
6. சணல் பதப்படுத்தும் தொழில்கள் (தெரிவு செய்யப்பட்ட 6 வட்டங்களில் மட்டும்)
7. மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள்

8. விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரி பாகங்கள்

9. அலுமினியம் போன்ற செலவுச் சிக்கனமான கட்டிடப் பொருட்கள்

உ சிறு தொழில் பிரிவுகள், உயரளவாக ரூ.5.00 இலட்சத்துடன் சுய மின் உற்பத்தி சாதனத்தின் விலையில் 15 சதவீதம் மின் உற்பத்தி சாதன உதவித் தொகை பெறத் தகுதியுடையனவாகும்.

ஊ. சிறு தொழில் பிரிவுகள், அவற்றின் அமைவிடங்களுக்கேற்ப குறைந்தழுத்த மின் இணைப்புகளுக்கு பயன்படுத்திய மின்கட்டணத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40%, 30% 20% என்ற அளவில் மின்கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

எ. பின் தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு, உருவாக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் மதிப்பில் 100 சதவீத விற்பனை வரியை ஒன்பது ஆண்டுகளுக்கு தள்ளிவைப்பும், மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு 5 ஆண்டுகளுக்கு கைவிடுதல் அல்லது 9 ஆண்டுகளுக்கு தள்ளி வைப்பும், ஏனைய பகுதிகளில் அமைந்துள்ளவற்றிற்கு நிலையான சொத்துக்களின் மதிப்பில் 60 சதவீதமும் வட்டியில்லா விற்பனை வரித்தள்ளுபடி/ தள்ளிவைப்பும் 5 ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது.

அரசு நிதிகளை விடுவிப்பதன் பேரில் இந்த உதவித் தொகைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வெவ்வேறு உதவித் தொகைக் கணக்குத் தலைப்புகளின்கீழ் எய்திய சாதனைகள் குறித்து பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.



**உதவித் தொகை குறித்த வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் ஏற்பட்ட பணி முன்னேற்றம்.**

*(31-3-2000 அன்றுள்ளபடி)*

| திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட தொகை | பயன்பெற்ற சிறு தொழில்பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மூலதன முதலீட்டு உதவித் தொகை | 1,700.00 | 1,700.00 | 556 |
| குறைந்தழுத்த மின் கட்டண உதவித் தொகை | 800.00 | 800.00 | 3,123 |
| மின் உற்பத்தி சாதன உதவித் தொகை | 70.00 | 70.00 | 148 |
| வட்டியில்லா விற்பனை வரித் தள்ளி வைப்பு (31-1-2000 வரை) | ரூ.5,295.98 இலட்சத்திற்கு தகுதிச் சான்று வழங்கப்பட்டது. | .. | 189 |

## 2.6. தொழில்களுக்கு விருதுகள்

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் நன்கு செயல்படுகின்ற சிறு தொழில்கள், நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

### அ. சிறு தொழில்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள்

சிறப்புத் தகுதிச் சான்றிதழுடன் ரூ.10,000/ ரொக்கப் பரிசும் ரூ.3,000/ மதிப்புள்ள நினைவுப் பரிசும் மாநில அளவிலான விருது பெறுபவர்களுக்கு அளிக்கப்படும். மாவட்ட அளவிலான ஒவ்வொரு விருது பெறுபவர்களுக்கும் நற்சான்றிதழுடன் கூடிய ரூ.3,000/ மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

### ஆ. மகளிர் தொழில் முனைவோருக்கு மாநில அளவிலான பரிசு

நற்சான்றிதழ் மற்றும் ரூ.3,000/ மதிப்புள்ள நினைவுப் பரிசுடன் முதலாவது பரிசுக்கு ரூ.25,000/ இரண்டாவது பரிசுக்கு ரூ.15,000/ மூன்றாவது பரிசுக்கு ரூ.10,000/ ஆகிய ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

[2000 ஏப்ரல் 25

### இ. தரமிக்க பொருள்களுக்குரிய பரிசுகள்

சிறு தொழில்கள் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களில், தரமிக்க பொருட்களை வெற்றிகரமாகத் தயாரிக்கும் தொழிலதிபர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் ரூ.3,000/ மதிப்புள்ள நினைவுப் பரிசுடன்கூடிய முதல் பரிசுக்கு ரூ.25,000/ ரொக்கமும், இரண்டாவது பரிசுக்கு ரூ.15,000/ ரொக்கமும் மற்றும் மூன்றாவது பரிசுக்கு ரூ.10,000/- ரொக்கமும் அளிக்கப்படும்.

### ஈ. ஏற்றுமதிக்கான விருதுகள்

பின்வருகின்ற மூன்று வகைகளின் கீழுள்ள தேர்ந்த தொழில் முனைவோர்களுக்குரிய ஏற்றுமதி விருது:

1. 100 சதவீத ஏற்றுமதியை நோக்கமாகக்கொண்ட தொழில்கள்.
2. புதிய உற்பத்திப் பொருட்களை புதிய சந்தைகளில் விற்பனை செய்யும் ஏற்றுமதியில் கணிசமான முறையில் முந்தைய இரண்டாண்டுகளுக்குள் முன்னேற்றம் காணும் தொழில் பிரிவுகள்.
3. முந்தைய இரண்டாண்டுகளுக்குள் ஏற்றுமதியை தொடங்கியிருக்கும் தொழில் பிரிவுகள்.

சிறு, நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின்கீழ் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களுக்கும் நற்சான்றிதழுடன்கூடிய ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## 2.7. தொடர்புகொள்ளுதல் மற்றும் தகவலளிப்பதில் உதவி புரிதல்

### 1. நூலகங்களுடன்கூடிய தொழில்நுட்பத் தகவல் பிரிவுகள்

தொழிலதிபர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழில்நுட்பப் பணியிலுள்ளவர்களுக்குத் தேவையானவற்றை அளிப்பதற்காக நூலகங்களுடன்கூடிய தொழில்நுட்பத் தகவல் பிரிவுகள் கிண்டி, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் காட்பாடி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மிகச் சிறிய தொழில், சிறு தொழில் மற்றும் பெருந் தொழில்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் வளர்ச்சிக்கும் தேவையான தகவல், பல்வேறு உதவிகள் குறித்த ஆதரவான விளக்கங்களை



2000 ஏப்ரல் 25]

மேற்சொன்ன நூலகங்களுடன்கூடிய தொழில்நுட்பத் தகவல் பிரிவு அளிக்கிறது.

இந்தத் தொழில்நுட்ப நூலகத்தை பயன்படுத்துவோருக்கு உடனடி பார்வைக் குறிப்புகள் மற்றும் விரிவான குறிப்பு அளிக்கும் வசதிகள், அறிவியல் புத்தகங்கள், சஞ்சிகைகள், நாளேடுகள் போன்றவை வகைப்படுத்தப்பட்டு அட்டவணையிடப்பட்டு பெயர் அட்டையிடப்பட்ட வரிசைப்படி பராமரிக்கப்பட்டு வைக்கப்படுவதோடு, படிப்பவர்களின் உடனடிப் பார்வைக்கென்று வழங்கப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட மையங்களில் படிப்பவர்களுக்கு நிழற்பட நகலெடுக்கும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

### 2. தொழில் தொடர்பு மற்றும் தகவல் உதவி மின் மற்றும் மின்னணு தகவல் வங்கி

இத்தகவல் வங்கி, மின்சாரம் / மின்னணு தொழில்களைத் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்குத் தேவையான முக்கியமான அடிப்படைத் தகவல்கள் மற்றும் வழிமுறைகளை வழங்குகிறது. இந்த வங்கி தகவல் வசதிக்கென சுமார் 1,400 புத்தகங்கள் மற்றும் 100 இந்திய மற்றும் அயல்நாட்டு சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது. இந்த மையம் வாங்குவோர் மற்றும் விற்போரைக் கண்டறிவதற்குரிய தகவல்களையும் அளிக்கிறது.

### 3. இரசாயனத் தொழில்களுக்கான தகவல் வங்கி

இத்தகவல் வங்கி தமிழ்நாட்டிலுள்ள இரசாயனத் தொழில்கள் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேளிப்பது, நாளது வரையில் பராமரிப்பது, புள்ளி விவரங்கள் குறித்து ஆலோசனை வழங்குவது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. மேலும் தேர்வு செய்யப்பட்ட இரசாயனம் மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு, நாளது வரையில் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சிறு தொழில் துறையில் இரசாயனம் மற்றும் சார்புத் தொழில்களை அமைப்பதற்கு ஆர்வமாக உள்ள தொழில் முனைவோர்களுக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல் வசதிகளையும் அளிக்கிறது.

[2000 ஏப்ரல் 25

**4. தொழில் தொடர்புப் பிரிவு**

அரசுத் திட்டங்களை நிறைவேற்றவும், சிறு தொழில் நிலையங்களைப் பதிவு செய்வதற்காக மைய அரசின் நிதி விநியோக மற்றும் வழங்கல் விற்பனை தலைமை இயக்குநருடன் தொடர்பு கொண்டு ஒருங்கிணைந்து பணியாற்றவும் இப்பிரிவு தொடங்கப்பட்டது. இப்பிரிவினால், சிறு தொழில் நிலையங்கள் அரசு ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளும்பொழுது பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பு வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசுத் துறைகளில் தொடர்ச்சியாக தேவைகளை அறிந்து அவை பற்றிக் குறித்த காலத்துக்கு ஒருமுறை தகவல்கள் பெறவும் இதன்மூலம் இயலும்.

**5. தொழிலியல் சேவைப் பிரிவு**

மாநிலத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களைப் புதியதாக அமைப்பதற்கு தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு நிலைகளில் உதவிடும் பொருட்டு தொழிலியல் சேவைப் பிரிவினை தொழில் வணிக இயக்ககத்தில் அரசு அமைத்துள்ளது. இது விரைந்த செயல்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

இத்தொழிலியல் சேவைப் பிரிவு பெரிய மற்றும் நடுத்தர தொழில்களுக்குரிய தொழில் உரிமங்களை வழங்குவதற்காக தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்கிறது. மேலும், மாநிலத்தில் 100 விழுக்காடு ஏற்றுமதி செய்யும் தொழில் நிலையங்கள் அமைப்பதற்கும் அனுமதி அளிக்கிறது.

## 2.8. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

படித்து வேலையற்ற ஆடவர், மகளிர் மற்றும் ஏனையோர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு ஊக்குவிக்கப்பெறும் வகையில் கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி நிலையம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆதார வாய்ப்புத் திறன் கொண்ட 1,000 மகளிர் தொழில் முனைவோராக தொழிலைத் தொடங்க வகை செய்யும் பொருட்டு, பயிற்சி அளிக்கப்படுவதற்காக, சென்னையிலுள்ள தொழில் முனைவோர் வளர்ச்சி மையத்தை தயார் நிலையில் வைக்கும் நோக்குடன் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக, அரசு ரூ.16.40 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.



2000 ஏப்ரல் 25]

இதுவரையில் 8,400 மகளிர் தொழில் முனைவோருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இவர்களுள் 3,450 மகளிர் தொழில் முனைவோர் பல்வேறு வகைபாடுகளைச் சேர்ந்த தொழில்களைத் தொடங்கியுள்ளனர். பயிற்சியளிக்கப்பட்டவர்களில் 40 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இம்மாநிலத்தில் தொழிலை சொந்தமாக தொடங்கியுள்ளனர் என்பது இதன்மூலம் தெரிகிறது.

**2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்திற்கான சிறப்புப் பயிற்சி**

ஆறு திங்கள் கால அளவிற்கு நடத்தப்படும் தொழில் முனைவோர் வளர்ச்சி சிறப்புத் திட்டம் ஒன்று 1998-99 ஆம் ஆண்டில் சோதனை அடிப்படையில் அரசால் தொடங்கி வைக்கப்பட்டது. பணி அனுபவம் மற்றும் விற்பனை நிலைமைகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல் போன்றவையே இத்திட்டப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கென்று 1999-2000 ஆம் ஆண்டிற்கு அரசு ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இப்புதிய திட்டத்தின்கீழ் பயிற்சி பெறுவதற்காக சென்னை, திருவள்ளூர், திருச்சி, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 200 பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**3. மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்**

மகளிர் தொழில் முனைவோர்கள், குறிப்பாக முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதில் குறிப்பாக தங்களது தொழில் நிலையங்களை தொடங்குவதற்கு ஈட்டுத் தொகை செலுத்த மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இத்தொழில் முனைவோர்களுக்கு உள்ள இடர்பாடுகளைக் களையும் பொருட்டு முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்களுக்கு, திட்டச் செலவில் 10 விழுக்காடு (உயர் அளவு ரூ.50,000 என்பதற்குட்பட்டு) தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசு வகை செய்துள்ளது.

## 2.9. தொழில்நுட்ப நிலையங்கள்

**1. கருவிகள் பொறியியல் பயிற்சி நிலையம், திண்டுக்கல்**

இந்நிலையம் கருவிப் பொறியியல் மூன்றாண்டு பட்டயப் படிப்பினை நடத்துகிறது. இந்தப் பாட முறை, சென்னையிலுள்ள தொழில் நுட்ப இயக்குநராலும் மற்றும் புதுடில்லியிலுள்ள அனைத்திந்தியத் தொழில் நுட்பக் கல்விக் குழுமத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பட்டயத் தகுதிப் பாடமுறை நடத்துவதைத் தவிர கருவிகள் பழுது பார்ப்பு

மற்றும் கருவிகள் தயாரிப்பது போன்ற பணி ஆணைகளையும் எடுத்துக் கொள்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் கருவிப் பொறியியல் பட்டய வகுப்பில் 30 பேர் இந்நிலையத்திலிருந்து பயிற்சி பெற்றுச் செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டிலும் பயிற்சி முடிக்கப்பட்டவுடன் தேர்வு முடிவுகளுக்கு காத்திராமல் தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களில் வேலையளிப்பதற்கு கல்விவளாக நேர்முகத் தேர்வு மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். கருவிப் பொறியியலில் பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல தேவை உள்ளது.

**2. அரசுத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி**

சிறு தொழில் நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்பத் திறனை அளிக்கும் நோக்குடன் இந்நிலையம் ஏற்படுத்தப்பட்டது. சிறப்புப் பணிகளில் வேலை பெறுவதை நோக்கமாகக் கொண்ட பட்டயத் தகுதிப் பாடமுறைகள் மற்றும் பட்டய மேற்படிப்பு ஆகியவற்றில் தென்னிந்தியாவிலேயே பயிற்சியளிக்கின்ற ஒரே நிலையம் இதுதான்.

இந்தப் பயிற்சி மையம், அச்சு மற்றும் கருவிகள் வடிவமைப்பில் பட்டயத் தகுதிப் பயிற்சியினை அளிக்கிறது. இந்த நிலையத்தினால் அளிக்கப்படும் பயிற்சிகளுக்கும் கைவினைஞர்களுக்கும், தொழில் வணிக இயக்குநர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவர்கள் பல்வேறு சிறு தொழில் நிலையங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியலில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஒட்டி நடைபெறும் வகையில் கருவிகள் வடிவமைப்பு சான்றிதழ் பாடமுறை, அச்சு மற்றும் கருவிகள் வடிவமைப்புப் பட்டய மேற்படிப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. இயந்திரப் பொறியியலில் பட்டம், தகுதிப் பட்டயம் பெற்றவர்கள், கருவிப் பொறியியலில் தகுதிப் பட்டயம் பெற்றவர்கள் இந்தப் பட்டய மேற்படிப்புக்கு நுழைவு பெறத்தகுதி பெற்றவர்களாவர்.

அச்சு மற்றும் கருவிகள் தயாரிப்புச் சான்றிதழ் பாடமுறையானது கருவிப் பொறியியல் பட்டயமாக நிலை உயர்த்தப்பட்டது. குளிர் பதனவியல் சான்றிதழ் பாடமுறையும், பட்டயப் பாடமுறையாக நிலை உயர்த்தப்பட்டது. மேலும், இந்த நிலையம் மின்னணுவியல் பகுதியில்



புதிய பட்டயப் பாட முறையைத் தொடங்கியுள்ளது. பட்டயச் சான்றிதழ்கள் சென்னை கிண்டியிலுள்ள மாநிலத் தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தினால் வழங்கப்படுகின்றன.

பயிற்சியின்போது சிறப்புத் திறமை பெறுவதால் இந்த நிலையத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் வேலை பெறுவதில் எவ்வித இடையூறும் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் முன்னணியில் உள்ள தொழிலதிபர்கள் இந்நிலையத்தில் வளாக நேர்முகப் போட்டி நடத்தி மாணவர்களை வேலைக்குத் தேர்வு செய்கின்றனர்.

புதுடில்லியிலுள்ள அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் அங்கீகாரத்துடன் 1998-99 ஆம் ஆண்டு முதல் குளிர்பதன சீர்வளி வசதி பட்டயப் படிப்பு, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களால் ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெற வகை செய்யும் 'ஒற்றைச் சாளர முறையில்', கிண்டியில் உள்ள அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

## 2.10. பயிற்சி வசதிகள்

**1. அரசு அறிவியல் கண்ணாடித் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கிண்டி**

இந்த நிலையம் தனித்தன்மை வாய்ந்தது. இந்தியாவில் இது போன்ற நிலையம் இது ஒன்று மட்டுமேயாகும். அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் மாணவர்களுக்கு 2 ஆண்டு கால செய்முறைப் பயிற்சி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.120 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதுவரை 48 தொகுதிகளில் மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். பயிற்சி முடிவுற்ற பின் மாணவர்கள் பல்வேறு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை பெறுகின்றனர்.

**2. அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பு மையம், கோயம்புத்தூர்**

இந்த நிலையம் மாநிலம் முழுவதிலும் உள்ள கல்வி மற்றும் இதர நிலையங்களுக்குரிய அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள கண்ணாடி உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு அரசுத் துறைகள், பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு விற்பனை

[2000 ஏப்ரல் 25

செய்யப்படுகின்றன. மேலும், இந்நிதியாண்டில் 31-3-2000 வரை ரூ.8.24 இலட்சம் மதிப்புள்ள அறிவியல் கண்ணாடிக் கருவிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**3. அரசு பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், விருத்தாசலம்**

இந்த நிலையம், பீங்கான் தொழில்நுட்பவியலில் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலுள்ள சிறந்த பயிற்சி நிறுவனங்களில் இதுவும் ஒன்றென ஏற்பினைப் பெற்றுள்ளது. இந்நிலையத்தில் ஒவ்வொரு ஆண்டும் 30 மாணவர்கள் மூன்றரை ஆண்டு காலப் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) தேறியவர்கள் இப்பயிற்சியில் சேரத் தகுதி உடையவர்களாவர். இதுவரை 630 மாணவர்கள் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளார்கள். வெற்றிகரமான பயிற்சிக்குப் பிறகு இந்த நிலையத்தின் மாணவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு பீங்கான் தொழில் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். மேலும் இந்தப் பயிற்சியை முடித்த மாணவர்கள் வளைகுடா நாடுகள், மலேசியா, கனடா போன்ற வெளிநாடுகளிலும் வேலை செய்கின்றனர்.

இது தவிர இந்த நிலையத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வுக் கூடம் ஒன்று உள்ளது. இந்த ஆய்வுக்கூடம் மூலப் பொருட்கள் தொழில் பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பீங்கான் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை பரிசோதனை செய்கிறது. கட்டுமானத்திற்குரிய செங்கற்கள் மற்றும் சிவப்புக் களிமண் ஓடுகள் தயாரிப்பதற்குரிய சிவப்புக் களிமண் பரிசோதனையையும் இந்த நிலையம் மேற்கொள்கிறது.

**2.11. பரிசோதனை வசதிகள்**

**1. மின்பயன்பொருட்கள் பரிசோதனை வசதிகள்**

தரமுள்ள உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு திருவள்ளூருக்கு அருகில் உள்ள காக்களூர், கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பரிசோதனை வசதிகள் அளிக்கப்படுகின்றன.

காக்களூரிலுள்ள மத்திய மின் ஆய்வுக்கூடம், இந்திய தர நிர்ணய நிறுவனம், இரயில்வே மற்றும் பொருள் வழங்கல் விற்பனைத் துறையின் தலைமை இயக்குநரகம் ஆகியவற்றினால், பல மின்சாரப் பொருட்களுக்கு



2000 ஏப்ரல் 25]

பரிசோதனை வசதியளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாக இந்த ஆய்வுக்கூடம் விளங்குகிறது. மின்சாரப் பொருட்கள், குறிப்பாக வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கு, புதுடில்லியிலுள்ள தேசியப் பரிசோதனைக் கூடங்களின் அங்கீகாரக் குழுமத்தினர் (NABL) அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்திய அரசின் வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக்கட்டுப்பாடு ஆணையையும் இது செயல்படுத்துகிறது. இதற்கென சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள தரக்கட்டுப்பாடு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2. மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்கள்**

தொழில் வணிகத் துறை, மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்களை கிண்டி மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த நிலையங்கள் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இதர அரசு மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள நவீன நுட்பத்திறம் மேம்பட்டவையல்லாத மின் மருத்துவ சாதனங்களை பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ளுமளவிற்கு வசதிகளைப் பெற்றுள்ளன.

**3. இரசாயனப் பரிசோதனை வசதிகள்**

பல்வேறு வகைத் தொழில்களுக்குத் தேவையான பலதரப்பட்ட பரிசோதனை வசதிகளை வழங்கும் பொருட்டு தொழில் வணிக இயக்ககம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆய்வுக்கூடங்களை அமைத்துள்ளது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கிண்டியில் அமைக்கப்பட்ட இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம் பொதுமக்கள், தொழில் முனைவோர்கள், குறிப்பாக சிறு தொழில் முனைவோர்கள் ஆகியோருக்கு உடனடியாக விற்பனையாகக் கூடிய தரமான பொருட்கள் தயாரிப்பதில் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பரிசோதனை வசதிகளை அளிக்கிறது.

இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம் பின்வருகின்ற இரசாயன மற்றும் இயற்பியல் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளது:

[2000 ஏப்ரல் 25

1. இரும்பாலான உலோகம், மென் உருக்கு, கலவை உருக்கு, கருவி தயாரிப்பு, உருக்கு போன்ற உலோகக் கலவை.

2. தாமிரம், அலுமினியம், துத்தநாகம், டின், ஈயம் போன்ற இரும்பு கலவா உலோகங்கள் மற்றும் பித்தளை, வெண்கலம் கலவை உலோகம் போன்ற உலோகக் கலவைகளும், இதுபோன்ற வேறு உலோகங்களும்.

3. வண்ணப் பொருட்கள்

4. சிமிட்டி, செங்கல், உருக்குக் கம்பி, கட்டுமானப் பணிக்கு தேவைப்படும் நீர், மணல் மற்றும் இதுபோன்ற பொருட்கள் சிமிட்டி கற்கலவையாலான கன சதுரங்கள்.

5. பெட்ரோல், டீசல், மின்மாற்றி எண்ணெய் மற்றும் இதுபோன்ற பெட்ரோலியப் பொருட்கள்.

6. தாதுப் பொருள் மற்றும் அனைத்து வகைக் கனிமங்கள்.

7. அனைத்து வகை உரங்கள் (இரசாயனம் மற்றும் இயற்கை)

8. பயிர்ப் பூச்சிக்கொல்லிகள், பூச்சிக்கொல்லி மருந்துகள்.

### 4. பீங்கான் தொழிலுதவி மையம், விருத்தாச்சலம்

விருத்தாச்சலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறு அளவில் பீங்கான் தயாரிக்கும் சுமார் 100 தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் பொருட்களை (body-slip) தயாரிக்கும் பணியில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. பீங்கான் தயாரிப்பு பிரிவுகளுக்கு வழங்குவதற்காக, மாதந்தோறும் இம்மையம் சராசரியாக சுமார் 120 மெட்ரிக் டன் அளவில் பீங்கான் தொழிலுக்கு தேவைப்படும் பொருட்களைத் (body-slip) தயாரிக்கிறது. இம்மையம் சுரங்க வடிவுக்சூளைப் சூளை (Tunnel Kiln) வழியாக பீங்கானைத் தீயினால் சுடுகின்ற வசதிகளையும் அளிக்கிறது. இச்சூளை 24 மணிநேரமும் இயங்குகிறது. இவ்வாறாக விருத்தாச்சலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள பீங்கான் தயாரிப்புப் பிரிவுகளுக்கு, மூலப் பொருட்களும், சூளை வசதிகளும் அளிக்கப்படுகின்றன. தயாரிக்கப்படும் பீங்கான் வகையில் குறைவழுத்த மின்காப்புப் பொருட்கள், கலைப் பொருட்கள், பீங்கான் பொருட்கள் முதலியன அடங்கும்.



2000 ஏப்ரல் 25]

## 2.12. சுயவேலை வாய்ப்புத் திட்டம்

### 1. பிரதமரின் ரோஜ்கர் யோஜனாத் திட்டம்

மத்திய அரசின் ஆணைப்படி படித்த வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கான பிரதமரின் ரோஜ்கர் யோஜனாத் திட்டம் 1993 அக்டோபர் 2 ஆம் நாள் தொடங்கப்பட்டது. ஆதி திராவிடர்கள் / பழங்குடியினர் / முன்னாள் இராணுவத்தினர் / உடல் ஊனமுற்றோர் / மகளிர் ஆகியோருக்கு வயது உச்சவரம்பு 1-4-1999 முதல் 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 18 முதல் 35 வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த படித்த வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது. குறைந்தது எட்டாம் வகுப்பு தேறிய வேலையற்ற இளைஞர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், குறைந்தது ஆறு மாதக் காலத்திற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆண்டு வருமானம் ரூ. 24,000க்கு மிகையாக இருக்கக் கூடாது. குறைந்தது மூன்றாண்டுகள் ஒரே இடத்தில் குடியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

இத்திட்டம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 22.5% இட ஒதுக்கீடும், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடும் அளிக்கிறது. 1999-2000 ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் 15,000 பேருக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் மொத்தம் 48,535 விண்ணப்பங்கள் (முந்தைய ஆண்டில் எஞ்சியவை உட்பட) வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டில் 31-3-2000 வரை 12,739 பேருக்கு ரூ.6,918.19 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 9,319 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 6,555 பேருக்கு ரூ.3,261.17 இலட்சம் நிதி உதவியை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 17,646 இனங்களில் 14,956 இனங்களுக்கு ரூ. 7,218.76 இலட்சம் கடன் தொகை 31-3-2000 வரை வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 14,434 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

[2000 ஏப்ரல் 25

## 2.13. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஊரக மற்றும் சிறு தொழில்களை மேம்படுத்துதல்

### 1. சேலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கம்

"சேகோ செர்வ்" என்றழைக்கப்படும் சேலம் மாவுப் பொருள் மற்றும் சவ்வரிசி தயாரிப்பாளர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்புப் பணியை மேற்கொள்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள், மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்களை தயாரிப்பவர்களாவர்.

மாவுப் பொருள் மற்றும் சவ்வரிசி தொழில் கடந்த 40 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றபோதிலும், மேற்சொன்ன பொருள்களின் தயாரிப்பாளர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அமைப்பு ரீதியிலான விற்பனை முறை ஏதும் இல்லாமலிருந்தது. இத்தகைய உற்பத்திப் பொருள்களுக்கான நுகர்வோர் மையங்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே அமைந்துள்ளதால் விரிவான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் சூழலையும் அவ்வப்போது ஏற்படக்கூடிய நுகர்வோரின் தேவையளவைக் கண்காணித்து வருதல் போன்றவற்றை சிறு அளவு உற்பத்தியாளர் செய்ய இயலாத காரணத்தால் அவர்களால் நேரடியாக விற்பனை செய்ய இயலவில்லை. நிதி வரையறைகள், மொழி அறியாமையால் ஏற்படும் தடை, இறுதி முறை விற்பனை அங்காடிகளை நிறுவுவதில் உள்ள இடையூறு, அலுவலக வசதியின்மை போன்ற இடர்பாடுகளைத் தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது இடைத்தரகர்கள், தரகர்கள் வளர்ச்சிக்கு வழிகோலுவதன் மூலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் விற்பனை நடைமுறையில் அவர்களுடைய ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கிறது.

செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 7.62 இலட்சத்துடன் 168 உறுப்பினர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கமானது தற்பொழுது செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.5.47 கோடிகள் மற்றும் 796 உறுப்பினர்கள் கொண்டதாக வளர்ந்துள்ளது. இச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் சவ்வரிசி, மாவுப் பொருள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. விவசாயிகளும், செய்முறையாளர்களும், நியாய விலை பெறுகின்றனர். இம்மாநிலத்திலுள்ள சவ்வரிசி மாவுப் பொருள் தயாரிப்புப் பிரிவுகள் மூலம் சுமார் ஒரு



2000 ஏப்ரல் 25]

இலட்சம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் சுமார் ஐந்து இலட்சம் நபர்களுக்குத் தொடர்பான வேலைவாய்ப்பும் கிடைக்கின்றன.

ஏனையோருக்கு விதிக்கப்படும் 5 சதவீத விற்பனை வரிக்கு பதிலாக "சேகோ செர்வ்" மூலம் விற்பனை செய்யப்படும் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரியின்கீழ் சலுகை விதத்திலான 2 சதவீத விற்பனை வரியை தமிழ்நாடு அரசு விதிக்கிறது. இதைத்தவிர பங்கு மூலதனத்தில் பங்கேற்பதுடன் கூடுதல் விற்பனை வரிச் சுமையைக் குறைக்கும் வகையில் உதவித் தொகைக்கும் அனுமதி வழங்கியுள்ளது. "சேகோ செர்வ்"வின் நேரடி வியாபாரத்தை அதிகரிப்பதற்காக 11-11-1999 அன்று ஒரு "வெப்சைட்" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2. பாலிதீன் பணித் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம்

தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல் மற்றும் அவர்களுக்கு உயர்ந்த அளவு ஊதியங்கள் வழங்குதல் போன்றவற்றிற்காக பாலிதின் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தற்போது, பாலிதீன் பைகள், சிப்பமிடும் பொருட்கள் தயாரிப்பு பணியில் 17 பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்கள் காட்டு இலாக்கா, கூட்டுறவுச் சிறப்பங்காடிகள், வேளாண் தொழில் கழகம், ஆவின் போன்ற பல அரசுத் துறைகளின் தேவைகளையும் தனியார் அமைப்புகளின் தேவைகளையும் நிறைவு செய்து வருகின்றன. பாலிதீன் சங்கங்களுக்கான தலைமையகம் சென்னையில் உள்ளது. அது தமிழ்நாடு பிளாஸ்டிக் தொழிற்கூட்டுறவுச் சங்கக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வருகிறது. மூலப்பொருட்களை வாங்குதல், சேமித்து வைத்தல், விநியோகம் செய்தல், வேலை நிறைவு பெற்ற பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் தொழில் நுட்ப உத்திகளை தெரிவித்தல் போன்ற பணிவழிகளை இச்சங்கம் செய்து வருகிறது. உறுப்பினர் சங்கங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பாலிதீன் கழிவுப் பொருட்களை செய்முறைப்படுத்தி அவற்றை சிறு சிறு மணிகளாக மாற்றும் மறு செய்முறைப் பிரிவு ஒன்றையும் இச்சங்கம் வைத்துள்ளது.

### 3. குடிசைத் தொழில் தீப்பெட்டி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் உற்பத்தியளவு நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 85 சதவீதத்தை நிறைவு செய்கிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள பொருளாதார வகையில்

[2000 ஏப்ரல் 25

நலிவடைந்த பிரிவினருக்கு குறிப்பாக திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி போன்ற வறட்சிப்பாங்கான மாவட்டங்களில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மகளிருக்கு வேலைவாய்ப்பளிப்பதில் இத்துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது.

தரமுள்ள மூலப் பொருட்களை போட்டி விலை வீதத்தில் வாங்கி அவற்றை "டி" பிரிவு உறுப்பினர்களாகவுள்ள தீப்பெட்டி தொழில்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குதல் போன்ற பணிகளை ஆற்றுவதன் மூலம் தீப்பெட்டி சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தலையாய பங்கை ஆற்றுகின்றன. உறுப்பினர் தொழிற்பிரிவுகள் தயாரிக்கும் தீப்பெட்டிகளின் தரத்தை கட்டுப்பாட்டுடன் வைப்பதோடு அவற்றை இந்தியாவில் உள்ள ஏனைய பகுதிகளில் விற்பனை செய்யும் பணியையும், இச்சங்கங்கள் மேற்கொள்கின்றன. 31-3-2000 அன்றுள்ள நிலவரப்படி 9 சிறு அளவிலான தீப்பெட்டி தயாரிப்பு சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அடங்கிய, "தமிழ் நாடு மாநிலத் தீப்பெட்டி உற்பத்தியாளர் மற்றும் சேவைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்" என்ற பெயரில் ஒரு தலைமையகம், சாத்தூரில் 600 உறுப்பினர்கள் கொண்ட 'டி' பிரிவு தொழிற் பிரிவுகளுக்காகப் பணியாற்றி வருகின்றது.

**4. செங்கல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்**

செங்கல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. 13 செங்கல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையளிக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (தாட்கோ), உதவித் தொகை, தொடக்க நிதியுதவி, கடன் போன்ற வகையில் மேற்சொன்ன செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. 3132000 வரை அனுமதிக்கப்பட்ட / வழங்கப்பட்ட தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**சிறப்பு உதவித் திட்டம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டம் | அனுமதிக்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| உதவித் தொகை | 99.57 | 73.10 |
| தொடக்க நிதியுதவி | 59.27 | 11.51 |



2000 ஏப்ரல் 25]

மேற்சொன்ன செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான சூளை செங்கற்களைத் தயாரித்து வழங்குகின்றன.

**5. கயிறு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுகள்**

பழுப்பு நிற நார் தயாரிப்பதில் தமிழ்நாடு மாநிலம், இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. இம்மாநிலத்தில் கிட்டத்தட்ட 85,000 டன் நார் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 74 கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை கயிறு நூலிழை மற்றும் கயிறுப் பொருள்களைத் தயாரிக்கின்றன. இவற்றின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.350.88 இலட்சம் ஆகும். மற்றும் 11,812 உறுப்பினர்கள் இச்சங்கங்கள் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

மேற்சொன்ன கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுகளின் நடவடிக்கைகளை நவீனப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த கயிறு தொழில் வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தின்கீழ் ரூ. 461.94 இலட்சம் செலவில் 21 கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கயிறு விற்பனைக்குத் தள்ளுபடி வழங்கும் திட்டத்தின்கீழ் 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவதற்கு இயலும் வகையில் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் மானியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கயிறு நாரிழை மற்றும் கயிறு தயாரிப்புப் பொருள் விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்க இயலும் பொருட்டு, கயிறு தயாரிப்புத் தொழில் வாரியத்திடமிருந்து இதற்கு நிகரான தொகை மானியமாகப் பெறப்படும். இத்திட்டம் மாநிலத்தில் மும்முரமாக செயல்படுத்தப்படுகிறது.

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கயிறு தொழிற் கூட்டுறவு விற்பனை இணையம், "டான்கோபெட்" கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்வதோடு, கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களால் தயாரிக்கப்படும் கயிறுப் பொருள்களின் விற்பனையை உயர்த்தும் பொருட்டு இந்தியா முழுவதிலும் நடைபெறும் பல்வேறு தொழில் பொருட்காட்சிகளில் பங்கேற்கிறது. இம்மாநிலத்தில் கயிறு தயாரிப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக கயிறு தயாரிப்பு மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்திற்காக அனுமதி வழங்கும் / செயல்படுத்தும் முகவரமைப்பாக இந்த இணையம் செயல்படுகிறது.

[2000 ஏப்ரல் 25

**6. தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் பயிரிடும் நிலப்பரப்பைக் கொண்ட சிறு அளவில் தேயிலை பயிரிடுவோர் சுமார் 30,000 உறுப்பினர்கள் உள்ளனர். 35,196 ஏக்கர் பரப்பளவு தேயிலை பயிரிடும் நிலப்பரப்பையும், சிறு அளவில் தேயிலைப் பயிரிடுவோர் 21,680 உறுப்பினர்களையும் கொண்ட 17 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் முறையாக உற்பத்தியில் ஈடுபட்டு வ்ருகின்றன. இக்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலைகளின் மொத்த உற்பத்தி 171 இலட்சம் கிலோ கிராமுக்கு அதிகமாகும்.

"இன்ட்கோ" தேயிலைத் தொழிற்சாலைகள் பின்வரும் குறிக்கோளுடன் அமைக்கப்பட்டன:—

1. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோருக்கு பறித்த தேயிலைக்கு நல்ல விலை பெற்றுத் தருதல்.
2. தேவையான இடுபொருள்கள் வழங்குவதன் மூலம் தேயிலைத் தோட்டங்களின் விளைச்சல் திறனை மேம்படுத்துதல்.
3. தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நவீன முறைகளில் பயிற்சி அளித்தல்.

**7. ஏனைய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

(அ). சிற்பி (SIRPI) கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உதவி செய்ய, சென்னையில் தமிழ்நாடு கைவினைத் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் என்ற தலைமை அமைப்பு செயல்பட்டு வருகிறது.

சிற்பி (SIRPI) என்ற பெயரில் பிரபலமான இந்தச் சங்கம் சுமார் 23 கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்கிறது.

தமிழ்நாட்டில் கைவினைப் பொருள்களின் விற்பனையை உயர்த்தும் நோக்குடன் இந்தியாவிலுள்ள முக்கியமான இடங்களில் இந்த இணையம் பொருட்காட்சிகளை நடத்துகிறது. கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 1,000 கைவினைஞர்கள் இச்சங்கத்தின் மூலம் பெரும் பயனைப் பெறுகின்றனர்.



2000 ஏப்ரல் 25]

**(ஆ) சென்னை தொழில் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடம்**

தமிழ்நாடு அரசு மருந்துக்கட்டுப்பாடு ஒழுங்குமுறை வாரியம், சென்னை தொழில் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இச்சங்கத்தில் சுமார் 305 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கம் சுமார் 35 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் 1,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கிறது. ஐ.பி., பி.பி., யூ.எஸ்.பி. ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட தரங்களின்படி மூலப்பொருட்களையும், வேலை நிறைவு பெற்ற மருந்துப் பொருட்களையும் பகுப்பாய்வு செய்வதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

பகுப்பாய்வுக் கூடத்தின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, இச்சங்கம் ரூ.40.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு உள்ளது. இதில் தமிழ்நாடு அரசு தனது பங்குத் தொகைக்கு ரூ.10.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.30.00 இலட்சத்தை "தாய்கோ" வங்கி குறித்த கால கடனாக அளிக்கும்.

**(இ) திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர்கள் சங்கம்**

திண்டுக்கல் பூட்டுகள், பாரம்பரியமாகப் புகழ் பெற்றவையாகும். பூட்டுகள் தயாரிப்பதற்காக மாநிலத்தில் உள்ள ஒரே தொழிற் கூட்டுறவுச் சங்கம் இச்சங்கமே ஆகும். இச்சங்கத்தில் 50 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். உறுப்பினர்கள் தயாரிக்கும் பூட்டுகளை விற்பனை செய்வதில் இச்சங்கம் முக்கியமாக ஈடுபட்டுள்ளது. இச்சங்கம் இரயில்வே, துறைமுகப் பொறுப்புக் கழகம், மருத்துவமனைகள், உள்ளாட்சி அமைப்புகள் முதலிய அரசு அமைப்புகளுக்கு பூட்டுகளை வழங்கி வருகிறது. தயாரிப்புப் பணிகளின் தரத்தை உயர்த்துவதற்காக பூட்டிற்குத் தேவையான உதிரிபாகங்களை தயார் செய்யவும், உற்பத்தியை நவீனமயமாக்குவதற்கும் ரூ.28.50 இலட்சம் செலவில் சங்கமானது நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கத்தை நவீனப்படுத்துவதற்காக கீ பிட்டிங் எந்திரம் (Key Bitting Machine) கீ ஸ்லாட்டிங் எந்திரம் (Key Slotting Machine) ஷாக்கில் எந்திரம், (Shakle Machine) பாலிஷிங் எந்திரம் (Polishing Drum) போன்ற பிற எந்திரங்கள் வாங்கப்பட்டு, தற்போதுள்ள வசதிகளுடன் கூடுதலாக நிறுவப்படும். இவை வெவ்வேறு வகை பூட்டுகளைத் தயாரிப்பதற்காக தன் உற்பத்தித்திறனை அதிகரிக்க இச்சங்கத்திற்கு உதவி புரியும்.

[2000 ஏப்ரல் 25

### செயற்கை வைரத் தொழிலுக்கு புத்துயிர் ஊட்டல்

திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் செயற்கை வைரத் தொழில்களை புதுப்பிக்கும் பொருட்டு அரசு ரூ.123.50 இலட்சம் செலவில் திட்டம் ஒன்றுக்கு 1998-99இல் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் என்னவென்றால், நிலைய ஆதரவு அளித்தல், தொழில்நுட்பத் தனித்திறம் பெறல், சந்தை வியாபார ஆதரவளித்தல், பயிற்சி வசதியளித்து தொழில்நுட்ப மேம்பாடு அடைதல், கச்சாப்பொருட்களை இறக்குமதி செய்தல், செயற்கை வைரம் ஏற்றுமதி செய்தல், தொழிலாளியை சுயநலத்திற்காக பயன்படுத்துபவரை நீக்குதல் மற்றும் இலாபகரமான வேலைவாய்ப்பினை பெரிதாக்குதல் முதலியவையாகும். திருச்சியில் சந்தை வாய்ப்புள்ள ஒரு மத்திய சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் 15-10-1998-ல் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தில் 300 கைவினைஞர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சந்தை வாய்ப்பு மத்திய சேவைத் தொழில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து முடிக்கப்பட்ட செயற்கை இரத்தினத்தை வாங்கி நல்ல இலாபகரமான விலையில் சந்தையில் அறிமுகப்படுத்துகிறது. இத்திட்டத்தின் நோக்கமானது ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்களை அமைத்து பயிற்சி அளிப்பதாகும். செயற்கை வைர வியாபாரத்தில் பயிற்சித் திட்டமும் அமலாக்கப்பட்டு வருகிறது. சங்கத்தின் நிர்வாகம் ஜனநாயக முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி

1961 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியில் தற்போது 480 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.414.51 இலட்சமாகும். இதில் தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.268.30 இலட்சமாகும். ரூ.500.00 இலட்சம் அளவுக்கு இவ்வங்கியிடமுள்ள குறித்த கால வைப்பீடுகளைத் திருப்பித் தர தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. அரசிடமிருந்து தாராளமான நிதியுதவி பெறுவதால் இவ்வங்கி 31-3-2000 நாள் நிலவரப்படி ரூ.1,914.05 இலட்சம் அளவுக்கு பல்வேறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சிறு தொழில் நிறுவனங்களுக்கும், நிதியுதவி அளித்துள்ளது. இவ்வங்கி தேயிலை, தீப்பெட்டி, நார், தோல், உலோகம், கைவினைப் பொருட்கள் மற்றும் ஊர்தி இயக்குதல் முதலிய வெவ்வேறு வகை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.



2000 ஏப்ரல் 25]

சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், நீலகிரி, கரூர், பெரம்பலூர் ஆகிய பத்து மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்ட காலக் கடன் வசதி அளிப்பதற்காக வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் மறு நிதியுதவி திட்டத்திற்காக "இந்திய ரிசர்வ் வங்கி" இவ்வங்கியை அங்கீகரித்துள்ளது. தற்பொழுது இந்த வங்கி குறைந்த வட்டி விகிதத்தில் தொழில் கூட்டுறவு பிரிவில் புதிய திட்டங்களுக்கு தாராளமாக நிதி உதவி அளிக்கும் நிலையிலுள்ளது.

### சிறு தொழில்களுக்கு நிதியுதவி

இம்மாநிலம் முழுவதிலும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு 22 கிளைகள் உள்ளன. இக்கிளைகள், உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி மற்றும் நகைக் கடனும் அளிக்கின்றன. இவ்வங்கி, சிறிய மிகச் சிறிய தொழிற்சாலைகளுக்கும் நிதியுதவி அளிக்கிறது. இவ்வங்கி தற்பொழுது அதன் பணியாளர்களுக்கு நுகர்வோர் கடன் மற்றும் தனிப்பட்ட கடனும் அளிக்கின்றது. தொழில் வணிகத் துறை அரசு பணியாளர்களுக்கும் கடன் உதவி அளிக்கின்றது.

## 2.14. ஏனைய பணிகள்

### (i) தொழில்நுட்பக் குழு

இந்திய சிறு தொழில், உண்மையில் புதுமையான தொழில்நுட்பம் எதையும் பின்பற்றாமலேயே தனது சொந்தப் பணித் திறன் அடிப்படையில் தானே முன்னேறியுள்ள போதிலும், மத்திய அரசின் தாராளமயமாக்கக் கொள்கையின் காரணமாக, இந்திய அங்காடி, அயல்நாட்டு வர்த்தகர்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ளபோது, உற்பத்தித் திறன், விலைப் போட்டி ஆகிய துறைகளில் சிறு தொழில் துறை தத்தளிப்பது உணரப்படுகிறது. எனவே, தரம் உயர்த்துவதன் மூலம் அல்லது மாற்றல் மூலம் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே சிறு தொழில் துறையின் இன்றைய தேவையாகும். சிறந்த தொழில்நுட்பத் தகவல்கள் ஆலோசனை மற்றும் நிதியுதவியுடன், தகவல் அளிப்பு பணிகள மற்றும் ஏனைய வசதிகள் இந்தியாவில் வலுவானதாக இல்லை.

[2000 ஏப்ரல் 25

நடப்பு தாராளமயமாக்கல் மற்றும் உயர்போட்டி சூழ்நிலையில் சிறு மற்றும் நடுத்தரமான தொழில்கள் வளர்வதற்கு ஏதுவாக, மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சில சிறு தொழில் சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சென்னையில், தமிழ்நாடு சிறு தொழில் தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் குழு உலக அளவிலும், தொடர்பான பொருள்களின் உற்பத்தியிலும், செய்முறையிலும் வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய ஒரு மையமாகச் செயல்படும். பொருள் உற்பத்தித் தொழில்நுட்பத்தையும் செய்முறைத் தொழில்நுட்பத்தையும் அறிந்து பின்பற்றித் தரம் உயர்த்துவதிலும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சுமுகமாகச் செயல்பட உறுதி செய்யும்.

சிறு தொழில் துறை, ஏனையவற்றிற்கிடையே, தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கு நிதி இடர்ப்பாட்டை எதிர் நோக்குகிறது என்பதைக் கூறத் தேவையில்லை. சிறு தொழில் பிரிவுகள், உயரிய தொழில்நுட்பத்தை அடைவதற்கு முன், பல நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளதால், உரிய ஆதாரங்களிலிருந்து இடைநிலைத் தொழில்நுட்பம் வளர வகை செய்வதே இக்குழுவின் நோக்கமாகும். இதனால் சிறு தொழில் பிரிவுகள் தங்கள் தொழில்நுட்பத் தர உயர்வுக்கான தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள இயலும்.

**(ii) பொருட்காட்சிகள்**

இத்துறை 26-1-2000 இல் சென்னையில் நடைபெற்ற குடியரசு தினவிழா தொடர்பான வண்ணமிகு ஊர்வலத்தில் பங்கு கொண்டு இத்துறையின் பணிகள் மற்றும் சாதனைகளையும், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியையும் அலங்கார ஊர்திகள் உதவியுடன் எடுத்துக்காட்டியது.

மேலும், இத்துறை பின்வரும் பொருட்காட்சிகளில் பங்கு பெற்றது:

1. சென்னையில் 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற 25 ஆம் இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி.
2. மதுரையில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு சித்திரைப் பொருட்காட்சி.
3. திருச்சியில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு பொருட்காட்சி.
4. 9-4-1999 முதல் 18-4-1999 வரை கிண்டியிலுள்ள சிறு தொழில் சேவை நிலைய வளாகத்தில் நடைபெற்ற SFC 2000 மற்றும் இந்நூற்றாண்டின் SISI பொருட்காட்சிகள்.



2000 ஏப்ரல் 25]

**(iii) தகவல் தொடர்பு அடைகாப்பகங்கள்**

அதிக சிரமமின்றி புதிய மென்பொருள் வளர்ச்சிக்காக மென்பொருள் தொழில் முனைவோர்க்கு வாடகை அடிப்படையில் இணையத்துடன் இணைத்தல், மின்தடையில்லா சாதனம், கணினி மற்றும் இதர தளவாடங்கள் முதலிய அடிப்படை பொருள் வசதி அளிக்கவும். கோயம்புத்தூரில் தன்னாட்சி சங்கமாகவும், மதுரையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்துடன் (C.E.D) கூட்டு முயற்சியில் தலா ஒரு தகவல் தொழில் அடைகாப்பகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.550.00 இலட்சமாகும். இதில் ரூ.50.00 இலட்சத் தொகையை அரசு மானியமாக ஒவ்வொரு தகவல் தொழில் அடைகாப்பகத்திற்கும் அரசு அளித்துள்ளது.

**(iv) கணினி இணைய தளத்தில் தொழில் வணிகத் துறையின் செயல்பாடு பற்றிய தகவல் தொகுப்பு**

அரசு நிர்வாகம் ஒளிவுமறைவற்ற வகையிலும், அரசின் திட்டங்கள் பொதுமக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, தொழில் வணிகத் துறை கணினி இணைய தளம் (வெப்சைட்) ஒன்றை உருவாக்கியுள்ளது. இதில் இத்துறையின் செயல்பாடு பற்றி பொதுமக்கள் மற்றும் தொழில் முனைவோர் வசதிக்கேற்ப விவரங்கள் தரப்பட்டுள்ளன. இந்த இணைய தளத்தின் முகவரி

www.tamilnaduindcom.org

www.tndic.org

இக்கணினி இணைய தளத்தில் கீழ்க்கண்ட தலைப்புகளின் விவரங்கள் தரப்பட்டுள்ளன:

1. எங்களைப் பற்றிய குறிப்பு
2. சிறு தொழில் சான்றிதழ் பதிவு
3. பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டம்
4. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
5. ஒற்றைச் சாளர அனுமதி

[2000 ஏப்ரல் 25

6. தொழில்நுட்ப விவரங்கள்

7. சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்

8. விருதுகள்

9. பரிசோதனை வசதிகள்

10. தொழில் கூட்டுறவு

11. தாய்கோ வங்கி

இவற்றைப் பற்றி சுருக்கமான குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**1. எங்களைப் பற்றிய குறிப்பு**

இத்துறையின் நடவடிக்கைகள் பற்றி சுருக்கமாக இத்தலைப்பில் தரப்பட்டுள்ளன.

**2. சிறு தொழில் சான்றிதழ் பதிவு**

இந்தக் கணினி இணைய பக்கத்தில், சிறு தொழில், குறுந்தொழில், சிறு தொழில் சேவை மற்றும் வியாபார தொழிலகங்கள், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலகங்கள் முதலியவற்றின் வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. நிரந்தர சிறு தொழில் சான்றிதழ் மற்றும் தற்காலிக சிறு தொழில் சான்றிதழ்களை பெறுவது பற்றிய நடைமுறையினையும் விரிவாக இப்பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. இக்கணினி இணைய பக்கத்திலிருந்து நிரந்தர சான்றிதழ் மற்றும் தற்காலிக சான்றிதழ்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை கணினி மூலம் பெறலாம்.

**3. பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்:**

இப்பக்கத்திலிருந்து பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் விவரங்களைப் பெறலாம். இத்திட்டத்தில் பயன்பெற பெற்றிருக்க வேண்டிய தகுதி, கிடைக்கும் மானியம், பயிற்சி, விளிம்புத் தொகை, திட்டத்தின் மூலம் பெறப்படும் உச்சவரம்புத் தொகை, யாருக்கு விண்ணப்பித்தல் வேண்டும் போன்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன. தமிழில் விண்ணப்பமும், விண்ணப்பங்களை கணினிப்பொறி மூலம் கிடைக்கவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 25]

**4. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம் (EDP)**

இத்திட்டத்தில் சேர பெற்றிருக்க வேண்டிய தகுதி, பயிற்சி காலம், ஊக்க ஊதியம், திட்டம் செயல்படும் இடங்கள், யாருக்கு விண்ணப்பித்தல் வேண்டும் போன்ற விவரங்கள் இக்கணினி இணையதளத்தின் பக்கத்திலிருந்து பெறலாம்.

**5. ஒற்றைச் சாளர அனுமதி**

இப்பக்கத்தில் வெவ்வேறு துறையின் உரிமம் மற்றும் தடைநீக்கம் போன்றவற்றை ஒற்றைச் சாளர அனுமதி மூலம் பெறுவதற்கான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**6. தொழில்நுட்ப தகவல்கள்**

தொழில்நுட்பத் தகவல் மையங்கள் மூலமாகவும், இரசாயன, மின்சார மற்றும் மின்னணு தொழிலகங்களின் விவரக்குறிப்பு வங்கி மூலமாகவும் அளிக்கப்படும் வசதிகள், இந்தக் கணினி இணையதளத்தின் பக்கத்திலிருந்து பெறலாம்.

**7. ஊக்கத்தொகைத் திட்டங்கள்**

சிறு தொழிலகங்களுக்கு அளிக்கப்படும் மானியம் மற்றும் ஊக்கங்கள் பற்றி இப்பக்கத்தில் காணலாம். தொழில்ரீதியாக பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டாரங்களின் பெயர்களும் இப்பக்கத்தில் தரப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்குண்டான விண்ணப்பப் படிவத்தினை கணினி மூலம் பெறலாம்.

**8. விருதுகள்**

மகளிர் நடத்தும் சிறு தொழிலகங்களின் தரம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி தொழிலகங்களின் சிறப்பினைப் போற்றும் வகையில் விருதுகள் வழங்கப்படுகின்றன. இது குறித்த தகவலை இப்பக்கத்தில் காணலாம்.

**9. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கத் தேவைப்படும் அடிப்படை விவரங்களை இப்பக்கத்தில் காணலாம். தொழில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கான விண்ணப்பப் படிவங்களை தமிழில் கணினி மூலம் பெறலாம்.

**10. தாய்கோ வங்கி**

தொழிற் கூட்டுறவு சிறு தொழில் மற்றும் குறுந்தொழிலகங்களுக்கு 'தாய்கோ வங்கி' மூலம் வழங்கப்படும் வசதிகள் இப்பக்கத்தில் உள்ளன. மேலும் இவ்வங்கியின் கிளைகளும் இதன் முகவரியும் தகவலுக்காக தரப்பட்டுள்ளன.

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள், பொது மேலாளர்களின் 'ஈ-மெயில்' முகவரிகள் (11 மாவட்ட மையங்களுக்கு மட்டும்) தொலைபேசி எண், மண்டல இணை இயக்குநர், சென்னை-2, போன்ற முகவரிகள் இப்பக்கத்தில் காணலாம்.

## 2.15. 2000-2001 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

**1. தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் வளர்ச்சி**

இத்திட்டமானது பொது மக்களிடம் ஒரு நல்ல வரவேற்பை கண்டுள்ளது. மேலும், எதிர்பார்த்த பலனை குறிப்பாக பெண் தொழில் முனைவோர்களிடமிருந்து அடைந்துள்ளது. அரசு மற்றும் அரசு சாரா துறைகள் உள்பட மற்ற வகைகளில் ஒரு உறுதியான மற்றும் பாதுகாப்பான வேலைவாய்ப்பை அடையக்கூடிய வாய்ப்பானது வருடாவருடம் குறைந்து கொண்டு வருவதால், சுயவேலை வாய்ப்பினை அணுகுவதே ஏறக்குறைய தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஒரு கருத்தாகும். இது படித்து வேலையில்லாதவர்களுக்கும் மிகவும் பொருந்தும். பயிற்சிக்குரிய உதவித்தொகை மற்றும் செயல்முறை சார்ந்த பயிற்சி முதலியவை பயிற்சியாளர்களுக்கு கொடுப்பதற்காக ரூ.17.50 இலட்சம் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. காட்சி மையங்கள்**

சென்னையிலும் மதுரையிலும் இரு காட்சி மையங்கள், சென்னையில் TANSTIAவின் ஆதரவுடனும் மதுரையில் MADISSIAவின் ஆதரவுடனும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது மையம் ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அரசு சிட்கோ, சிட்பி (SIDBI) மற்றும் சிறு தொழில், குறுந்தொழில் பிரிவு சங்கங்களினால் வழங்கப்படும் பங்குத்தொகையைக் கொண்டு நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் மையம் ஒன்றுக்கு மாநில அரசின் பங்குத் தொகை ரூ.20 இலட்சமாகும்.





சிறு தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு, வாங்குபவர்களின் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் காட்சி மையங்கள் அமைக்க இது உதவியாகயிருக்கும். மேலும் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு எய்துவதற்கும் உதவியாகயிருக்கும்.

**3. ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் திட்டம்**

சிறு தொழில் முனைவோர் நகர ஊரக திட்டத் துறை, பொது சுகாதாரத் துறை, மாசுக்கட்டுப்பாடு வாரியம், மின்வாரியம் முதலிய அலுவலகங்களிலிருந்து தொழிற்சாலை நிறுவுவதற்கான பல்வேறு உரிமங்கள் / அனுமதிகள் வாங்க வேண்டியுள்ளன. தொழில் முனைவோர் பெறவேண்டிய தேவையான உரிமங்கள் தொடர்பாக பல ஆண்டுகளாக அரசு முழுமுயற்சி எடுத்தும் இன்னமும் தொழில் முனைவோர் மேற்படி உரிமங்களைப் பெற அதிக நாட்களாகின்றன. இதனை உணர்ந்து தமிழ்நாடு அரசு ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மாவட்ட தொழில் மையத்துடன் இணைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் இத்துறை அலுவலர்கள் மேற்படி துறை அலுவலர்களை அணுகி குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் உரிமங்களை தொழில் முனைவோருக்கு பெற்றுத்தந்து அவர்களின் அலைச்சலைக் குறைத்து காலத்தை வீணாக்காமல் உதவ வேண்டும். இதனால் தொழில் முனைவோர்களின் நிலை மேம்பாடு அடையும் எனவும் தொழில்களின் திட்டகால அளவை துரிதப்படுத்த உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2000-2001 ஆம் ஆண்டுக்கு அரசு ரூ. 8 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**3. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)**

தமிழ்நாட்டில் சிறு தொழில்களை மேம்படுத்தி பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் சிறு தொழில்களைப் பரவலாக்கி சிறு தொழில் நிறுவனங்களைப் பெருகச் செய்ய வேண்டும் என்ற திட்டவட்டமான குறிக்கோளுடன் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கப்பட்டது.

சிட்கோ நிறுவனம் சிறு தொழில்களின் மேம்பாட்டிற்கு குறிப்பாக படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் பொறியியல் பட்டதாரிகளுக்கும் மகளிர் தொழில் முனைவோர்களுக்கும் சுயவேலை வாய்ப்பினை அளிக்க

[2000 ஏப்ரல் 25

வேண்டுமென்ற நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் சிறு தொழில்களின் வளர்ச்சி, மாநிலத்தில் கூடுதலான வேலை வாய்ப்பினை நேரடியாகவும் மறைமுகமாகவும் அளிக்கிறது.

இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கம், பின்வரும் தொழில் ஆக்க நடவடிக்கைகளுடன் சிறு தொழில் பிரிவுகளின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதே ஆகும்.

**1. அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதலும் தொழிற்கூடங்களுக்கு வகை செய்தலும்**

தொழிற்பேட்டைகளில் சாலைகள், வடிகால் வசதிகள், மழைநீர் வடிகால் வசதிகள், மின்விளக்கு, குடிநீர் வழங்கல் முதலியன போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்குவதே சிட்கோ நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்குரிய பல்வேறு இடங்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதுடன் அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளுடன் பல்வேறு அளவிலான தொழிற்கூடங்களையும் உருவாக்கித் தருகின்றது. மேலும், குறிப்பாக, சிறு தொழில் தொடங்க விருப்பப்படும் தொழில் முனைவோருக்கு சுலபமான தவணை அடிப்படையில் / ஒட்டுமொத்த அடிப்படையில் சீர் செய்த மனைகள் ஒதுக்கப்படுகின்றன. தொழில் கூடங்கள் கட்டுவதற்கு முன்னர், விளம்பரம் செய்வதன் மூலமும் மற்றும் தேவை குறித்த ஆய்வு நடத்துவதன் மூலமும் தொழில் தொடங்கும் வாய்ப்புடைய தொழில் முனைவோருக்கு தேவைப்படும் பணிக் கூடங்கள் மற்றும் சீர்செய்த மனைகள் ஆகியவற்றின் தேவை அளவினை நிறுவனம் மதிப்பீடு செய்கிறது.

இந்நிறுவனம் நான்காவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலிருந்து இத்திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

மேற்சொன்ன திட்டம் தொடர்பாக 1999-2000 ஆம் ஆண்டில் இலக்கு மற்றும் எய்திய சாதனை பற்றிய விவரம் பின்வருமாறு:—



2000 ஏப்ரல் 25]

(ரூபாய் இலட்சத்தில்)
(29-2-2000 வரை)

| தொ. எண் | விவரங்கள் | 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 1999-2000 இல் எய்திய சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1. | தொழிற்கூடங்கள் கட்டுதல் | 63 | 67.00 | 13 | 82.80 |
| 2. | சீர்செய்த மனைகள் | 435 | 368.00 | 200 | 353.29 |
| 3. | சீர்செய்த மனையின் விற்பனை | 300 | 500.00 | 225 | 851.39 |
| 4. | தொழிற்கூடங்கள் விற்பனை | 200 | 1,300.00 | 54 | 653.83 |

**2. முக்கிய / அரிய மூலப்பொருட்களை விநியோகித்தல்**

கூடுதல் எண்ணிக்கையில் கிடங்குகளை தொடங்குவதுடன் அடிப்படை மூலப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதும் இந்நிறுவனத்தின் கொள்கையாகும்.

சிறு தொழில் பிரிவுகள் இந்நிறுவனக் கிடங்குகளிலிருந்து போட்டி விலை வீதத்தில் தொழிற்பிரிவுகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற உறுதி செய்வதற்கு இந்நிறுவனம் முயலும். சிட்கோ நிறுவனம் பின்வரும் மூலப்பொருட்களை வழங்கி வருகின்றது:

1. இரும்பு எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரேட்டு
4. துத்தநாகம்
5. ஈயம்
6. காகிதம்
7. பாலிதீன் குருணைகள்

[2000 ஏப்ரல் 25

1999 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டுக்கான இலக்கு மற்றும் எய்தப்பெற்ற சாதனை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| தொ. எண் | விவரங்கள் | 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 1999-2000-இல் எய்திய சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | டன் | மதிப்பு | டன் | மதிப்பு |
| 1. | இரும்பு எஃகு | 20,000 | 4,320.00 | 5,721 | 1,065.00 |
| 2. | மெழுகு | 9,500 | 2,715.00 | 7,179 | 2,045.00 |
| 3. | பொட்டாசியம் குளோரேட்டு | 10 | 18.10 | 2 | 1.00 |
| 4. | துத்தநாகம் | 1,000 | 700.00 | 353 | 273.00 |
| 5. | ஈயம் | 200 | 80.00 | 29 | 12.00 |
| 6. | காகிதம் | 600 | 207.00 | 286 | 83.00 |
| 7. | பாலிதீன் குருனைகள் | 125 | 17.00 | 34 | 17.00 |

### 3. விற்பனை வசதி உதவித் திட்டம்

சிறு தொழில் பிரிவுகளை வெற்றிகரமாக நடத்த சிறப்பான விற்பனை வசதி ஆதரவு அவசியமானதென்பதை உணர்ந்து, இக்கழகம் விநியோக முறையை விரிவுபடுத்த முயற்சிகள் எடுத்து வருகிறது.

இதன் மூலம் நடைமுறை மூலதன தேவைகள் மற்றும் தொழில் பிரிவுகளின் பொருள் பட்டியல்களின் விலை குறைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசுத் துறைகளும், துணை நிறுவனங்களும், வழங்கல் விற்பனைத் துறை தலைமை இயக்குநரும் வெளியிடும் ஒப்பந்தப்புள்ளிகளில் சிறு தொழில் பிரிவுகள் சார்பாக இந்நிறுவனம் பங்கு கொண்டு முன்பணத் தொகையுடன் வழங்கல் ஆணைகளைப் பெறுகிறது.

1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 500.00 இலட்சம் மதிப்பிற்கான வழங்கல் ஆணைகளை நிறைவேற்ற சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கருதியது.



2000 ஏப்ரல் 25]

இத்திட்டத்தின்கீழ் எய்தப் பெற்ற சாதனை வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| தொ. எண் | விவரங்கள் | 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 1999-2000-இல் எய்திய சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1. | நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை நிறைவேற்றப்பட்ட பணி ஆணைகளின் மதிப்பு | 100 | 500.00 | 29 | 147.00 |

சிறு தொழில் பிரிவுகள் அவற்றின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இந்நிறுவனம் அடிக்கடி வாங்குவோர்-விற்பவர்கள் கூட்டங்கள் பலவற்றிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

### 4. முறி மாற்று உதவி (Bill Discounting Assistance)

சிறு தொழில் பிரிவுகள் அரசுத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்கும் அவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு தொகை பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணத்தால் சிறு தொழில் பிரிவுகளுக்கு ஏற்படக்கூடிய நிதிப் பிரச்சினைகளைக் குறைக்க இத்திட்டம் வகை செய்கிறது. சிறு தொழிற் பிரிவுகள் அரசுத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கும் பொருட்களுக்காக அவை கொடுக்கும் பட்டியல்களுக்கு தொகை வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. சிறு தொழில் பிரிவுகளுக்கு அளிக்கப்படும் கடன் கால அளவு 45 முதல் 90 நாள் வரை அல்லது கொள்முதல் ஆணையில் வகை செய்துள்ளபடியான கடன் கால அளவாக இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் அரசுத் துறைகளுக்குப் பொருட்கள் வழங்கியுள்ள தொழில் பிரிவுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்கல் பட்டியல்களின் பேரில் பட்டியல் மதிப்பில் 80 சதவீத அளவிற்கு தொகைகளை வழங்குகிறது. எஞ்சிய தொகை அரசுத் துறைகளிடமிருந்து தொகை வரப்பெற்ற பிறகு அளிக்கப்படுகிறது. இதற்கு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சிறு அளவுத் தரகுத் தொகையை விதித்து வசூலிக்கிறது. இந்தப் புதிய திட்டம் சிறு தொழில் பிரிவுகள் எதிர்கொள்ளும் கடும் நடைமுறை மூலதனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று நம்பப்படுகிறது.

[2000 ஏப்ரல் 25

**5. ஏற்றுமதி விற்பனை உதவித் திட்டம்**

சிறு தொழில் மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு ஏற்றுமதி விற்பனைச் சந்தை வாய்ப்பு உதவி அளிக்க மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் ஒரு புதிய திட்டத்தை 2-11-1998 அன்று தொடங்கினார். சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், டான்ஸ்டியா, எப்ளன்ள ஒத்துழைப்புடன் சிட்கோ நிறுவனத்திடம் பதிவு செய்து கொண்டுள்ள தொழில் பிரிவுகளுக்கு தகவல் இணைதளம் (வெப்சைட்) மேம்படுத்துவது, அவற்றில் உற்பத்திப் பொருட்களை காட்டி வைப்பது, அப்பொருள்களை சிறப்பான முறையில் விற்பனை செய்வது ஆகிய வகைகளில் உதவும். இது சிறு அளவு ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான நிறுவன ஆதரவை நல்கும். சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருட்களை உலகிற்கு விற்பனை செய்ய பல்வேறு பணிகளை ஆற்றுவதன் மூலம் சிட்கோ, பொதுவான ஏற்றுமதி மேலாளராகச் செயல்படும்.

## 2000-2001 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

**1. அடிப்படை வசதிகள்**

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 200 தொழிற்கூடங்களைக் கட்ட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் இலக்கை அடைவதற்காகவும், சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து வளர்ந்து வரக்கூடிய கோரிக்கைகளை நிறைவேற்றவும் 2000-2001 ஆம் ஆண்டில் கூடுதலாக 75 தொழிற்கூடங்களைக் கட்டவும், 616 மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

**2. மூலப்பொருள்கள் வழங்கல்**

2000-2001 ஆம் ஆண்டில் சிறு தொழில் பிரிவுகளுக்கு பின்வருமாறு மூலப் பொருட்களை வழங்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது:

| தொ. எண் | விவரங்கள் | 2000-2001 ஆம் ஆண்டுக்கான இலக்கு அளவு (மெடன்களில்) | 2000-2001 ஆம் ஆண்டுக்கான இலக்கு மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | இரும்பு, உருக்கு | 15,000 | 3,000.00 |
| 2. | மெழுகு | 10,000 | 2,800.00 |
| 3. | காகிதம் | 600 | 207.00 |
| | மொத்தம் | **25,600** | **6,007.00** |



2000 ஏப்ரல் 25]

**3. விற்பனை உதவித் திட்டம்**

இந்நிறுவனம் வரும் 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 500.00 இலட்சம் மதிப்புள்ள ஆணைகளை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் 'வாங்குவோர்' - 'விற்போர் மையம்' நடத்துவதன் மூலம் சிறு தொழில் அலகுகளுக்கு தேவைப்படும் ஆணைகளை அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளிடமிருந்து பெற்றுத்தருவதையும் தனது திட்டமாகக் கொண்டுள்ளது.

**4. அடுத்தள புதிய திட்டங்கள்**

சென்ற ஆண்டு, பல புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள் நிறுவுவதென்று மாண்புமிகு அமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அவ்வாறே அரசு புறம்போக்கு நிலங்களும் மற்றும் கையகப்படுத்த தகுந்த பட்டா நிலங்களும் மேற்படி புதிய தொழிற்பேட்டைகள் நிறுவுவதற்காக கண்டறியப்பட்டு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிட்கோவினால் உருவாக்கப்படவுள்ள புதிய மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற்கூடங்களின் இடங்கள் இணைப்பு-1-ல் உள்ளன.

**5. சுயமின் நிலையம்**

தொழிற்பேட்டைகளில் உள்ள நிறுவனங்களின் மின்சக்தி தேவையைப் பெருக்குவதற்கு சிட்கோ திட்டமிட்டுள்ளது. இது மின் நுகர்வு தொழிற்கூடங்களுடன் பங்குதாரராக அங்கம் வகிக்கும் இந்நிறுவனங்கள் தங்களது முழுமையான மின்சக்தி தேவைகளை பூர்த்தி செய்ய சுயமின் உற்பத்தி நிலையங்களை நிறுவக்கூடும். இந்நிறுவனம் தயாரிக்கும் மின்சாரத்தில் தேவைக்கு அதிகமான மின் சக்தியை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்கும். அனைத்து தடைநீக்கங்களையும் மற்றும் ஒப்புதல்களையும் பெற்று சிட்கோ இதில் நடுநிலை வகிக்கும். மேலும் சுயமின் நிலையத் திட்டத்திற்குரிய முதலீட்டில் சிட்கோவும் ஓரளவு பங்கெடுக்கும். இந்த சுயமின் நிலையம் அதன் உறுப்பினர் தொழிலகங்களுக்கு மிகவும் நியாயமான விலையில், மாறாத மின் அழுத்தத்தில் மின்சாரத்தை விநியோகம் செய்யும். பத்து தொழில் பேட்டைகளில் சுய மின்நிலையங்கள் நிறுவ இயலக்கூடிய ஆய்வுகளை செய்ய ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது கீழ்க்கண்ட 11 தொழிற்பேட்டைகளில் திட்டமிடப்பட்டுள்ளது.

1. கிண்டி
2. அம்பத்தூர்
3. திருமுடிவாக்கம்
4. குறிச்சி
5. தூவாக்குடி
6. கப்பலூர்
7. இராணிப்பேட்டை
8. ஒசூர்
9. திருப்பூர்
10. கரூர்
11. திருமழிசை

இத்திட்டத்திற்கு மைய அரசிடமிருந்து ஒருங்கிணைந்த தொழில் வளர்ச்சி உதவி மற்றும் மானியம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6. ஏற்றுமதி விற்பனை உதவித் திட்டம்

டெல்லியில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பன்னாட்டு தொழில் மற்றும் வர்த்தக பொருட்காட்சியில் சிட்கோ பங்கு கொண்டு சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பினை அதிகப்படுத்தி வருகிறது. மேலும் இத்திட்டம் பன்னாட்டு வாணிபத்தை கணக்கில் கொண்டு, உள்நாட்டு விற்பனையை மட்டும் நம்பி இராமல் சிறு தொழில் முனைவோர் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

சிட்கோ நிறுவனம் அதன் மைய அலுவலகத்தில் "முன்னிலை" அலுவலகத்தை ஏற்கெனவே அமைத்துள்ளது. இது பொதுவான ஏற்றுமதி மேலாளராக செயல்படுவதுடன் சிறு தொழில் பிரிவுகளுக்காக வெப்பேஜ்களை, கணினி தகவல் தளங்களை மேம்படுத்துவதுடன் ஏற்றுமதி



விற்பனை குறித்து சிறு தொழில் பிரிவுகளுக்கு தேவைப்படக்கூடிய தகவல்களை பல்வேறு முனைகளில் சேகரித்து, தேவைப்படக்கூடிய தொழில் பிரிவுகளுக்கு வழங்கும் பணியையும் மேற்கொள்கிறது.

### 7. திறம் வளர்ப்பு மையங்கள்

தொழில்களுக்கும், பயிற்சிக்கும் திறன் வாய்ந்தவர்களைக் கிடைக்கச் செய்யும் தற்பொழுதுள்ள தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தவும், சிட்கோ நிறுவனம் பல்வேறு தொழில் பேட்டைகளில் திறம் வளர்ப்பு மையங்களை அமைக்கவும் உதவும்.

### 8. சூரிய சக்தி மையங்கள்

தொழிற்பேட்டைகளில் மரபுவழி சார்ந்த எரிபொருள்கள் மூலம் கிடைக்கும் சக்தியின் தன்மையைக் குறைத்து, சூரிய சக்தியின் மூலம் கிடைக்கும் எரிசக்தி உற்பத்தி திட்டங்களை மேம்படுத்துதல் அல்லது வளர்ச்சியுற செய்வதில் உதவிசெய்ய சிட்கோ உத்தேசித்துள்ளது.

### 9. தொழில் முனைவோர் வழிகாட்டி மையம்

புதிய தொழில் முனைவோருக்காக சிட்கோ வழிகாட்டி மையம் ஒன்றை அமைத்து கீழ்க்கண்ட வகைகளில் பணியாற்றி வருகிறது:

(அ) புதிய தொழில் முனைவோர், அவர் சார்ந்த தொழில் வழியாக அவருக்கு தேவைப்படும் ஆலோசனைகள், உதவிகள் வழங்கப்படுகிறது.

(ஆ) படிவம்/மனுக்களை பூர்த்தி செய்ய உதவுகிறது.

(இ) விற்பனைவரி பதிவு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பதிவு, தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தில் பதிவு மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்திலிருந்து விரைவில் மின் இணைப்பு பெற உதவுகிறது.

(ஈ) இந்நிறுவனம் மாசு கட்டுப்பாடு வாரிய அனுமதி பெற உதவுகிறது.

### 10. சிட்கோவின் பரந்த ஒருங்கிணைப்பு அமைப்பு

இந்நிறுவனம் இதுவரை மாவட்ட அளவில் கிளை அலுவலகங்களை மட்டுமே கொண்டு இயங்கி வந்தது. தொழில் முனைவோர் மற்றும் புதிய

தொழில் தொடங்குபவர்களின் நலன் கருதி சுலப முறையில் பயனடையும் வகையில் சில முக்கிய தொழிற்பேட்டைகளில் மேலும் பல கிளைகளை அமைத்து செம்மையாக செயல்புரிந்து வருகின்றது. தற்பொழுதுள்ள பணியாளர்களைக் கொண்டே 31 கிளை அலுவலகங்களை உருவாக்கி இயக்கிக்கொண்டு வருகின்றது.

**11. உலக தொழில் அமைப்பின் சட்டத் திட்டங்களை அறியும் இயக்கம்**

உலகமயமாக்கப்படும் இப்புது சூழ்நிலையில், விலை/வரிப்பட்டியல் மற்றும் தனியுரிமைச் சான்றிதழ் தொடர்பான விதிமுறைகள் மற்றும் அறிவு சம்பந்தமான சொத்துரிமை முதலிய உலக தொழில் அமைப்பின் சட்டத் திட்டங்களைப்பற்றி சிறு தொழில் பிரிவுகளும் அதன் அதிபர்களும் அறிந்திருக்க வேண்டும். இது தொடர்பான விவரங்களைப் பரப்ப சிட்கோ கருத்தரங்குகள் நடத்த உத்தேசித்துள்ளது.

**12. இன்டர்நெட் சேவை ஏற்பாடு செய்பவராக சிட்கோ செயல்படுதல்**

சிட்கோ அதன் தொழிற்பேட்டைகளில் தகுதியான முறையில் செய்தி அறிவிப்பு மற்றும் கணினி வசதிகளை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுக்கும். இதில் தொழிற்பேட்டையிலுள்ள எல்லா தொழில் பிரிவுகளும் கணினி மற்றும் 'இ-மெயிலின்' உபயோகங்களை எளிதில் பெறுவர்.

தொழிற்பேட்டையிலுள்ள எல்லா சிறுதொழில் பிரிவுகளின் வசதிக்காக சிட்கோ இன்டெர்நெட் சேவை ஏற்பாடு செய்பவராக செயல்பட எல்லா முயற்சிகளையும் எடுக்கும்.



## இணைப்பு - 1

**அ. மேம்படுத்தப்பட்ட மனைகள்**

| வரிசை எண் | இடத்தின் பெயர் | சிறிய மனைகள் | பெரிய மனைகள் | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1. | வாழவந்தான் கோட்டை | 25 | 40 | 20 |
| 2. | பெரம்பலூர் | 20 | 35 | 15 |
| 3. | திருப்புவனம் | 30 | .. | 5 |
| 4. | மலுமிச்சம்பட்டி | .. | 36 | 10 |
| 5. | அரும்பாவூர் | 30 | .. | 3 |
| 6. | கப்பலூர் | 20 | .. | 2 |
| 7. | தூத்துக்குடி | .. | 30 | 8 |
| 8. | வள்ளியூர் | - | 40 | 16 |
| 9. | விருதுநகர் | 15 | - | 2 |
| 10. | போலுப்பள்ளி | 40 | 40 | 16 |
| 11. | ஆசனூர் | .. | 20 | 4 |
| 12. | வெண்மணி ஆத்தூர் | - | 20 | 4 |
| 13. | இருங்காட்டுக்கோட்டை | 20 | 50 | 15 |
| 14. | காஞ்சிபுரம் | 25 | .. | 5 |
| 15. | விச்சூர் | 35 | 20 | 10 |
| 16. | திருமுடிவாக்கம் | 25 | .. | 4 |
| | மொத்தம் | **285** | **331** | **139** |

ஒரு ஏக்கரின் சராசரி மதிப்பு ரூ. 3.73 இலட்சம்

139 ஏக்கரின் மொத்த மதிப்பு ரூ. 519 இலட்சம்

[2000 ஏப்ரல் 25

**ஆ. தொழிற்கூடங்கள்**

| வரிசை எண் | இடத்தின் பெயர் | சிறிய தொழிற் கூடங்கள் | பெரிய தொழிற கூடங்கள் |
|---|---|---|---|
| 1. | சுவாமிமலை | 50 | .. |
| 2. | திருப்புவனம் | 15 | .. |
| 3. | திருமுடிவாக்கம் | .. | 10 |
| | மொத்தம் | **65** | **10** |

75 தொழிற்கூடங்களின் மொத்த மதிப்பு ரூ. 156 லட்சம்

## 4. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

தொடக்கத் திட்ட காலத்தில் மாநிலம் முழுவதிலும் பரவலாகத் தொடங்கப்பட்ட சிறு தொழில் பிரிவுகளைக் கொண்ட நிறுவனம் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) ஆகும். இது பலவகைப்பொருள் உற்பத்தி நிறுவனமாகும். தமிழகத்தில் சென்னையிலும் சில தேர்ந்தெடுத்த நகரங்களிலும் இதன் பொருள்களுக்கு விற்பனை மையங்கள் உள்ளன. டான்சி நிறுவனம் மாநில, மத்திய அரசு துறைகளுக்கும், பொதுத் துறை நிறுவனங்களுக்கும், வாரியங்கள், கழகங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் பொருள்களையும் பணிகளையும் வழங்கி வருகிறது. தற்போது டான்சி அமைப்பில் 31 உற்பத்திப் பிரிவுகளும், 3 திட்ட மையங்களும், 6 விற்பனை மையங்களும் உள்ளன.

மேற்சொன்ன தொழிற் பிரிவுகளுடன் டான்சி பின்வரும் இரண்டு துணை நிறுவனங்களைப் பெற்றுள்ளது. (1) தமிழ்நாடு வண்ணம் மற்றும் சார்புப் பொருட்கள் உற்பத்தி நிறுவனம் (TAPAP) (2) தமிழ்நாடு மாநில பொறியியல் பணி நிறுவனம் (SESCOT)

### (1) உற்பத்திப் பொருட்கள்

டான்சி நிறுவனத்தின் உற்பத்திப் பணிகளை பின்வருமாறு தொகுக்கலாம்:



2000 ஏப்ரல் 25]

| தொகுதி | உற்பத்திப் பணிகள் |
|---|---|
| கட்டுமானம் | சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் தொழிற் சாலைகள், அனல் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றிற்கு தேவைப்படும் கனரக கட்டுமானங்கள் உயர் அழுத்த மின்மாற்றித் தொடர்கள், நுண் அலைக்கோபுரங்கள் ஆகியவற்றிற்கு தேவைப்படும் கோபுரத் துணைப் பாகங்கள் முதலியன. |
| பொறியியல் | தொழிற்சாலைக் கொட்டகைகள், திரையரங்குகள், பள்ளிக் கட்டடங்கள், கிடங்குகள் முதலியவற்றிற்கான இலகுவான கட்டுமானங்கள், ஆங்கிள்கிராஸ் ஆம்ஸ், ஷீட் மெட்டல் பேப்ரிகேஷன் போன்ற மின்வாரிய மின்கம்பித் தொடர் பொருட்கள், பங்குகள், ஸ்டால்கள் (Bunks, Stalls) ஆகியவற்றைத் தயாரித்தல் முதலியன. |
| வார்ப்படச்சாலை | இயந்திரத்துடன் கூடிய இயந்திரமல்லாத துணைப் பாகங்கள், ஜி.ஐ. குழாய்கள் ஸ்பெஷல்ஸ். |
| அறைகலன்கள் | அறைகல மரப்பொருட்கள், அக அலங்காரப் பொருட்கள், பேனலிங் முதலியன, வீட்டு உபயோக, அலுவலக உபயோக, மருத்துவமனை உபயோகத்திற்கான உருக்கு அறைகலன்கள் முதலியன. |
| பல்வகை | இந்தியா மார்க் II ஆழ்கிணறு, வி.எல்.டி.எம். கை பம்புகள் தயாரிப்பு, கேஸ்கட்ஷெலாக், பிக்சர் வார்னிஷ் போன்ற சாராவி அடிப்படையிலான பொருட்கள், டைட்டான் வாட்சுகளின் உதிரி பாகங்கள். |

**சாதனைகள்**

1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 43.15 கோடி உற்பத்தி இலக்கிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

1999-2000-இல் எய்தப் பெற்ற தோராயமான சாதனை: 1998-99-ல் எய்தப்பெற்ற சாதனையுடன் ஒப்பிடப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

[2000 ஏப்ரல் 25

(ரூபாய் இலட்சத்தில்)

| | 1998-99 | 1999-2000 |
|---|---|---|
| மொத்த விற்று முதல் | 3,535.03 | 3,586 |
| உற்பத்தி | 3,590.49 | 3,503 |
| ஈட்டிய தொகை | 993.68 | 840 |
| ஆதாயம் (+) இழப்பு (-) | (-)319.22 | (-)380 |

டான்சி நிறுவனம் மின்கம்பித் தொடர் பொருட்கள், RTS கிராதிகள், பம்பு, பம்பு உதிரிபாகங்கள் முதலியனவைகளை வழங்க தமிழ்நாடு மின்வாரியத்துடன் ஆண்டு கட்டண வீத ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது. கீழ்க்கண்ட முக்கிய பணி ஆணைகளின் உற்பத்தி மூலம் 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கை எய்த டான்சி அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | பெங்களூரிலுள்ள கர்நாடக அரசின் மருத்துவத் துறைக்குரிய மருத்துவமனைக் கட்டில்கள் தயாரித்து வழங்குதல் | 49.14 |
| 2. | சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு மேஜை, நாற்காலி போன்றவை தயாரித்து வழங்குதல் | 120.00 |
| 3. | கல்வித் துறைக்கு அலமாரிகள் தயாரித்து வழங்கல் | 65.00 |

**சீரமைப்பு**

நிருவாகத்தை முடுக்கி விடவும் இந்த அமைப்பின் சாதனையை மேம்படுத்தவும், நிறுவன அலுவலகம், உற்பத்திப் பிரிவுகள் ஆகியவற்றைச் சீரமைக்கவும், மாற்றியமைக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 25]

**துணை நிறுவனங்கள்**

*(I) தமிழ்நாடு மாநில பொறியியல் பணி நிறுவனம் (SESCOT) (முன்னாள் தமிழ்நாடு மொப்பட்ஸ் லிமிடெட்)*

இந்தத் துணை நிறுவனம் மொப்பட்டுகளைத் தயாரிக்க 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இயக்க இடர்பாடுகள் காரணமாக மொபபட் தயாரிப்புப் பணி 1981 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது. ஏற்கெனவே உள்ள தொழிலாளர் மற்றும் இயந்திரங்களை பயன்படுத்திட இந்நிறுவனம் பணி ஆணைகளை செயல்படுத்த தொடங்கியது. இத்துணை நிறுவனத்தில் மூன்று தொழிற் பிரிவுகள், அதாவது கருவிகள் கூடம், சீட்மெட்டல் தொழிலகம் மற்றும் வாயு அடுப்புகள் பிரிவுகள் உள்ளன.

செஸ்காட் நிறுவனம் டான்சிஃப்ளேம் (Tansi Flame) என்ற துருவுறா எஃகு திரவ பெட்ரோலியம் எரிவாயு அடுப்பினைத் தயாரித்து அதற்கு இந்திய தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழையும் பெற்றுள்ளது. இந்த அடுப்பு அறிமுகம் செய்யப்பட்டு நன்கு விற்பனையாகி வருகிறது. இந்த அடுப்பைப் பெருமளவில் உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சிறிய அளவில் ஒரு அடுப்பு மேடை கொண்ட பெட்ரோலிய எரிவாயு அடுப்பினைத் தயாரித்து சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

ராகவன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு இந்நிறுவனத்தின் நிலைத்திருக்கும் தன்மையை ஆராய்ந்து, தொடர்ந்து இலாபகரமாக செயல்பட முடியாத நிலையில் மூடிவிட கருத்து தெரிவித்துள்ளது. செஸ்காட் மற்றும் டான்சி நிறுவனங்களின் இயக்குநர்கள் குழுக்களின் தீர்மானப்படி செஸ்காட் நிறுவனத்தை மூடிவிட்டு, எரிவாயு அடுப்பு பிரிவினை தொழிலாளர்கள் இன்றி டான்சி நிறுவனத்துடன் இணைத்திடலாம் எனும் செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்நிறுவனத்தின் மூன்று வருட உற்பத்தி, விற்பனை, ஆதாய இழப்பு ஆகிய விவரங்கள் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை | ஆதாய-இழப்பு விவரங்கள் |
|---|---|---|---|
| 1996-97 | 277.12 | 225.38 | (-)33.37 |
| 1997-98 | 171.27 | 174.10 | (-)92.88 |
| 1998-99 | 242.21 | 248.47 | (-)90.52 |

**(1) தமிழ்நாடு வண்ணங்கள் மற்றும் சார்புப் பொருட்கள் உற்பத்தி நிறுவனம் (டாபாப்)**

இந்த நிறுவனம் 1985-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் 1-4-1986-லிருந்து உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனம் சிவப்பு ஆக்சைடு வண்ணப்பூச்சுகள், சாலைகளில் போக்குவரத்து அடையாளக்குறி இடுகின்ற இரப்பர் கலந்த வண்ணப்பூச்சுகள் மற்றும் மெழுகு தன்மை கொண்ட வண்ணப்பூச்சுகள் முதலியவற்றைத் தயாரிக்கிறது. இந்த வண்ணங்கள் டான்சியில் தயாராகும் பொருட்களில் உபயோகப்படுத்தப்படுவதோடு, காவல் துறை, சென்னை மாநகராட்சி நெடுஞ்சாலைத் துறை, சர்க்கரை ஆலை நிறுவனம் மற்றும் இதுபோன்ற ஏனைய நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் மூன்று வருட உற்பத்தி, விற்பனை, ஆதாய இழப்பு ஆகிய விவரங்கள் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை | ஆதாய-இழப்பு விவரங்கள் |
|---|---|---|---|
| 1996-97 | 114.50 | 106.50 | (+)0.10 |
| 1997-98 | 111.95 | 113.19 | (+)0.28 |
| 1998-99 | 127.27 | 125.72 | (+)0.82 |

இந்நிறுவனம் அதன் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும், மாற்று வழிப்படுத்துவதற்கும் 1-5-1991-லிருந்து தமிழ்நாடு மொபெட் நிறுவனத்தின்



கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த கருவிகள் அறையை (Tool Room) எடுத்துக்கொண்டுள்ளது.

## 5. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

5.1. ரூ. 10 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அரசு வட்டியில்லா பங்கு மூலதனமாக ரூ.250 இலட்சம் வழங்கியுள்ளது.

இந்நிறுவனத்தின் முக்கியமான நோக்கங்கள் வருமாறு:

தமிழ்நாட்டில் தோல் தொழிலை மேம்படுத்துவதற்காக பின்வருகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறது:

(அ) மூலப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் முதலியவற்றை நியாயமான விலையில் சிறு தோல் பதனிடுபவர்களுக்கு வழங்குவது;

(ஆ) காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு விற்பனை உதவி அளிப்பது;

(இ) காலணி மற்றும் இதர தோல் பொருட்கள் தயாரிப்பதில் சிறு கைவினைஞர்களின் திறனை மேம்படுத்துவது;

(ஈ) தோல் தொழிலில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பது;

(உ) தமிழ்நாட்டில் எட்டு இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் தோல் தொழிலால் ஏற்படும் மாசு மற்றும் சுற்றுப்புறக் கேட்டை நீக்குவதற்கு உதவியளிப்பது.

### 5.2. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் நிர்வகித்து வரும் தொழிற்பேட்டை

மாதவரத்தில் தோல் தொழிலுக்காகச் செயல்பட்டு வரும் தொழிற்பேட்டையை 18-6-1986-லிருந்து டால்கோ நிறுவனம் சிட்கோ நிறுவனத்திடமிருந்து எடுத்துக் கொண்டது. தொழிற் கூடங்களின் உரிமையாளர்களிடமிருந்து பராமரிப்புக் கட்டணங்கள் வசூலிப்பதன் மூலம் தொழிற் பேட்டையின் பராமரிப்பை டால்கோ நிருவாகிகள் கவனித்துக் கொள்கின்றனர். தற்பொழுது சொந்த உரிமை அடிப்படையில்

[2000 ஏப்ரல் 25

3.5 தொழிற் கூடங்கள் தொழில் முனைவோர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஒரு தொழிற் கூடம் டால்கோ நிறுவனத்தினால் வைத்துக கொளளப்பட்டுள்ளது.

**5.3. மூலப் பொருள் வழங்குவதில் டால்கோவின் பங்கு**

இந்நிறுவனம் சிறு தோல் பதனிடுவோருக்கு இரசாயனப் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசைப் பொருள் (Imported wattle extract) ஆகியவற்றை நியாயமான விலையில் வழங்குகிறது. திண்டுக்கல் மற்றும் பேரணாம்பட்டு ஆகிய இடங்களில் டால்கோ நிறுவனத்தின் மூலப்பொருள் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

**5.4. சிறு கைவினைஞர்களுக்கு உதவி அளிப்பதில் டால்கோவின் பங்கு**

சிறு கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில் பெரம்பூரில் ஒன்றும், சேலத்தில் ஒன்றும், ஆக இரு பொருட்கள் சேகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் கைவினைஞர்களிடமிருந்து காலணிகளையும், தோல பொருட்களையும் கொள்முதல் செய்வதல்லாமல், சீரான வேலை வாய்ப்பினையும் அளித்து வருகின்றன. இந்தப் பொருட்கள் டால்கோவின் விற்பனைக் கூடங்கள் மற்றும் பொருட்காட்சி, வர்த்தகப் பொருட்காட்சிகள் ஆகியவற்றின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

**5.5. தோல் பதனிடும் தொழில்களுக்கான கழிவுகள் சுத்திகரிப்பு உதவிகள்**

தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக உள்ள எட்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களை டால்கோ மேற்பார்வை செய்கிறது. அவற்றில் 5 மையங்கள் வளையாம்பட்டு, உதயேந்திரம் பக்கலபள்ளி, இராணிப்பேட்டை, திண்டுககல், திருச்சி, சிவிபட்டரை, பேரணாம்பட்டிலுள்ள கோட்டா செக்டர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**5.6. தோல் தொழிற் கூடங்கள்**

டான்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து நான்கு தோல் தொழிற் கூடங்கள் 1986 ஏப்ரலில் டால்கோ நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. அவையாவன:

அ. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்

ஆ. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, மாதவரம்



2000 ஏப்ரல் 25]

இ. டால்கோ தோல் பணிகள் தொழிற் கூடம், பல்லாவரம்

ஈ. டால்கோ தோல் பணிகள் தொழிற் கூடம், பெரம்பூர்

அனைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கும் ஏற்பட்ட நெருக்கடியினால் விண்ணமங்கலம் மற்றும் மாதவரத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்விரு தொழிற்சாலைகளும் 1998 ஜூன் திங்கள் முதல் செயலற்று இருக்கின்றன. தானாக ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ் அனைத்து தொழிலாளர்களும் விடுவிக்கப்பட்டனர்.

பல்லாவரம் மற்றும் பெரம்பூரிலுள்ள மற்ற இரண்டு தோல் பணிகள் தொழிற்கூடங்கள், மத்திய மாநில அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்களின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும் வகையில் ஷூஸ், பூட்ஸ் உதிரி பாகங்கள், கையுறைகள், நடத்துநர் பைகள், வார்ப்பட்டைகள் முதலியவற்றை உற்பத்தி செய்கின்றன.

**உற்பத்தி விவரம்:**

*(ரூபாய் இலட்சத்தில்)*
*(29-2-2000 முடிய)*

| | ஆண்டுக் குறியீடு | விகிதப் படியுள்ள குறியீடு | எய்தியது | விழுக்காடு |
|---|---|---|---|---|
| உற்பத்தி மதிப்பின் விவரம் | 344.00 | 229.33 | 84.68 | 37 |
| விற்பனை மதிப்பின் விவரம் | 710.00 | 473.33 | 131.72 | 28 |

*முடிவுரை:*

அரசு மேற்கொண்டுள்ள புதிய கொள்கையின் நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் சிறு தொழில் துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அவசியமான உதவியை நல்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[2000 ஏப்ரல் 25

## இணைப்பு - 1

### 2000-2001 ஆம் ஆண்டிற்கான

### பகுதி - II திட்டங்கள்

### தொழில் வணிக இயக்ககம், சென்னை-600 005.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| | பயிற்சி | |
| 1. | கிண்டி தொழில்நுட்ப பயிற்சி மைய மாணவர்களுக்கு CAD/CAM-ல் பயிற்சி அளித்தல் | 1.50 |
| 2. | கிண்டி தொழில்நுட்ப பயிற்சி மைய மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் தகவல் அளிப்பு முறையில் பயிற்சி | 0.35 |
| 3. | கிண்டி தொழில்நுட்ப பயிற்சி மைய மாணவர்களுக்கு அனல் மின்பொறியியல் பயிற்சி அளித்தல் | 0.10 |
| 4. | தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் முன்னேற்றம்: 1000 நபர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் | 17.50 |
| 5. | காட்சி மையங்கள்<br>சிறுதொழில் பிரிவுகள் தயாரித்த பொருள்களை விற்பனை செய்ய உற்பத்தி பொருள் காட்சி ஏற்படுத்த நிதி உதவி | 40.00 |
| 6. | அடிப்படை வசதிகள்<br>கடலூர் மாவட்ட தொழில் மையத்தில் ஒரு அடிகுழாய் பம்பு செட்டுடன் துளைக் கிணறு வெட்டுதல், PVC தண்ணீர் தொட்டி கட்டுதலும் மற்றும் பம்பு அறை கட்டுதலும் | 1.50 |
| 7. | ஒற்றைச் சாளர அனுமதி திட்டத்தை சீர்படுத்துதல் | 8.00 |
| | மொத்தம் | 68.95 |



2000 ஏப்ரல் 25]

## இணைப்பு - 2

### அட்டவணை - 1 (அ)

### நிதி ஒதுக்கீடு விபரம்

### (ஊரக மற்றும் சிறு தொழில்கள்)

### கோரிக்கை எண் - 47

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்புகள் | 1999-2000 வரவு-செலவு திட்ட மதிப்பீடு | 1999-2000 திருத்தப்பட்ட திட்ட வரவு செலவு மதிப்பீடு | 2000-2001 வரவு-செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. 2059 - பொதுப் பணிகள் | 11,34 | 11,34 | 11,34 |
| 2. 2551 - மலைப்பகுதி விரிவாக்கத் திட்டம் | 2 | 1 | 2 |
| 3. 2851 - கிராமம் மற்றும் சிறு தொழில்கள் | 31,52,85 | 31,01,22 | 32,11,29 |
| 4. 2852 - தொழில்கள் | 4,69,98 | 4,47,61 | 5,01,39 |
| 5. 2885 - தொழில் நிறுவிட உதவி | 17,36,41 | 10,16,41 | 10,00,01 |
| மொத்தம் | 53,70,60 | 45,76,59 | 47,24,05 |

### அட்டவணை - 1 (ஆ)

### கோரிக்கை எண் - 59

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1. 4425 - முதலீட்டுச் செலவு | 12,55 | 12,51 | 4 |
| 2. 4551 - மலைப்பகுதி குறித்த முதலீட்டுச் செலவு | 3 | - | 3 |
| 3. 4851 - கிராமம் மற்றும் சிறு தொழில் முதலீட்டுச் செலவு | 1,13,71 | 1,15,72 | 13 |
| மொத்தம் | 1,26,29 | 1,28,23 | 20 |

[2000 ஏப்ரல் 25

## இணைப்பு - III

*(100-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண்—47 - ஊரகத் தொழில்கள்

### கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

### பட்டு வளர்ச்சித் துறை

***1.01.*** தமிழகத்தில் பட்டு வளர்ப்பு என்பது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட, வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய ஒரு கிராமப்புற குடிசைத் தொழிலாகும். ஒரு ஹெக்டேர் மல்பரித் தோட்டத்தின் மூலம் வருடம் முழுவதும் 12 முதல் 13 நபர்களுக்கு மல்பரி பயிரிடுதல், பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு, நெசவு, சாயம் ஏற்றுதல், அச்சிடுதல் ஆகிய தொழில்கள் மூலம் நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், பட்டு வளர்ப்பு பல அம்சங்களைக் கொண்டுள்ளதால, அது நலிவடைந்த மக்களுக்கு ஏற்ற பொருத்தமான கிராமப்புறத் தொழிலாகும். பட்டுப் புழுக்களுக்கு உணவாகப் பயன்படும் மல்பரிச் செடி அதிக நாள் பலன் தரக்கூடியதாகும். அது மிகக் குறைந்த அளவு மழை பெறும் பகுதிகளுக்கும் (650 - 750 மி.மீ.) ஏற்ற பயிராகும். வறட்சியை தாங்கும் தன்மை கொண்டதாகும். மற்ற பயிர்களை ஒப்புநோக்கும்போது, நோய்த் தாக்குதல் மற்றும் பூச்சிகளினால் ஏற்படும் பாதிப்பு இப்பயிருக்கு மிகவும் குறைவானதாகும். இப்பயிரை சாகுபடி செய்வதற்காகும் ஆரம்பச் செலவு பிற பயிர்களுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். ஒரு வருடத்தில் நான்கிலிருந்து ஐந்து முறை பட்டுக் கூடுகள் அறுவடை செய்ய முடியுமாதலால், குறைந்த கால இடைவெளியில் தொடர்ந்து வருமானம் கிடைக்கச் செய்கிறது. பட்டுப் பொருட்களை உடனடியாக நல்ல விலைக்கு விற்பனை செய்ய தயாராக சந்தை வசதிகள் உள்ளன. எனவே, இத்தொழில் சொந்தமாக மல்பரி பயிரிட்டு பட்டுப்புழு வளர்ப்பு செய்யும் சமுதாயத்தில் நலிவுற்ற, குறிப்பாக கிராமத்தில் உள்ள பெண்களுக்கு ஏற்ற தொழிலாகும்.

***1.02.*** பட்டு வளர்ச்சித் துறை, பகுதி-1 மற்றும் பகுதி-2 திட்டங்கள் மூலமும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம், சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் போன்ற பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் மூலமும்,



2000 ஏப்ரல் 25]

பிரிவு திட்டங்களின் மூலமும், பன்னாட்டு நிறுவனம் மற்றும் மத்திய பட்டு வாரியத்தின் நிதியுதவிகளை பெற்றும் பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக செயல்பட்டு வருகிறது.

***1.03.*** இம்மாநிலத்தில் பட்டு வளர்ச்சி தொடர்ந்து நிலைத்து வளர தேவைப்படக்கூடிய சில இனங்களைக் கண்டறிந்து அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை வருமாறு:

(i) வீரிய இன மல்பரி வகைகளைப் பயிரிட பட்டு விவசாயிகளை ஊக்குவித்தல்.

(ii) மல்பரி பயிரிடுதல், பட்டுப்புழு வளர்த்தல், பட்டு நூற்பு மற்றும் பட்டு முட்டை உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.

(iii) புழு வளர்ப்புத் தளவாடங்கள மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்காக வங்கிகளில் கடன் உதவி பெற்றுத் தருதல்.

(iv) நோயற்ற தரமான முட்டைத் தொகுதிகளை விநியோகித்தல்.

(v) பட்டுக் கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கவும், நோய் பாதிப்பைத் தடுக்கவும் உரிய தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

(vi) பட்டுக் கூடுகள் மற்றும் பட்டு நூலுக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்தித் தருவதுடன் அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்ய உதவுதல்.

(vii) தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்பின் மூலம் பட்டு நூற்பகங்கள் அமைக்க உதவி அளித்தல்.

(viii) தரமான பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்ய தேவையான கிருமி நாசினிகளை விநியோகித்தல்.

(ix) சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவியளித்தல்.

(x) பாலிமர் மவுண்ட்டேஜ் மற்றும் தண்டு அறுவடை மூலம் புழு வளர்ப்பு மேற்கொள்ள தாங்கிகள் கொள்முதல் செய்ய உதவியளித்தல்.

*2.01. 1999-2000-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறை கீழ்வரும் சாதனை அளவை அடைந்துள்ளது:*

[2000 ஏப்ரல் 25

இயல்பு சாதனை

| வ. எண் | திட்ட விவரம் | அலகு | குறியீடு | சாதனை |
|---|---|---|---|---|
| 1. | மல்பரி விரிவாக்கம் (கூடுதல் பரப்பு) | ஏக்கர் | 2525.00 | 2336.00 |
| 2. | பட்டு முட்டை உற்பத்தி | இலட்சத்தில் | 120.00 | 110.88 |
| 3. | பட்டு முட்டை வளர்ப்பு அளவு | இலட்சத்தில் | 150.00 | 153.53 |
| 4. | பட்டு கூடுகள் உற்பத்தி | இலட்சத்தில் | 60.00 | 63.83 |
| 5. | கச்சாப்பட்டு உற்பத்தி | இலட்சத்தில் | 6.50 | 6.72 |
| 6. | வேலைவாய்ப்பு (கூடுதல்) | எண்ணிக்கை | 13575 | 14180 |

நிதிச் சாதனை

| வ. எண் | திட்ட விவரம் | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | திட்டப் பணிகள்<br>பகுதி-1<br>பகுதி-2 | -<br>42.040 | -<br>40.134 |
| 2. | திட்டம் சாராப் பணிகள் | 2027.920 | 2010.330 |
| 3. | சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம் | 9.687 | 9.687 |
| 4. | பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் | 21.250 | 20.519 |
| 5. | மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்<br>அ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்<br>ஆ. மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம் | <br>2.338<br>20.000 | <br>2.338<br>19.905 |
| 6. | தன்னாட்சி அமைப்புகள் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 4.580 | 2.310 |
| 7. | பட்டு - 2000 திட்டம் | 42.646 | 42.069 |
| | மொத்தம் | **2170.461** | **2147.292** |



2000 ஏப்ரல் 25]

**3.01. 2000-2001-ஆம் ஆண்டிற்கான இயல்புக் குறியீடு வருமாறு:**

(1) 1,398 ஏக்கர் பரப்பில் 4,520 புதிய விவசாயிகளைக் கொண்டு மல்பரி பயிரிடுவது.

(2) 130.00 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்தல்.

(3) 63.00 இலட்சம் கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்தல்.

(4) 7.00 இலட்சம் கிலோ கிராம் பட்டு நூல் உற்பத்தி செய்தல்.

(5) 10,000 நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல்.

3.02. இவை தவிர இத்துறை கீழ்வரும் குறிக்கோள்களை கொள்கையாக நிர்ணயித்து அதனை அடைவதற்கு செயல்பட்டு வருகிறது. அவை பின்வருமாறு:

(1) 100 முட்டைத் தொகுதிகள் புழு வளர்ப்பின் மூலம் 45 கிலோ கிராம் அளவுக்கு பட்டுக் கூடு உற்பத்தியை அதிகரித்தல்.

(2) மல்பரி இலை மகசூலை ஒரு ஏக்கருக்கு 8,000 கிலோ கிராமிலிருந்து 14,000 கிலோ கிராம் அளவுக்கு அதிகரித்தல்.

(3) வருடத்திற்கு புழு வளர்ப்புத் திறனை ஏக்கருக்கு 600 நோயற்ற முட்டைகளிலிருந்து 1,200 முட்டைத் தொகுதிகளுக்கு அதிகரித்தல்.

(4) ரெண்டிட்டா அளவை 9 : 1 என்ற விகிதத்தை அடைதல்.

(5) கச்சாப்பட்டு தரத்தை பன்னாட்டு தரத்துக்கு உயர்த்துதல்.

(6) இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டு நூலை இங்கேயே பயன்படுத்தும் வகையில் சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்.

**4.01. வளர்ச்சித் திட்டங்கள்:**

2000-2001-ஆம் ஆண்டில் பட்டுத் தொழிலுக்காக கீழ்க்கண்ட மேம்பாட்டுத் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட உள்ளன:

(1) பகுதி-2 திட்டம்

(2) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

(3) மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்

(4) பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்

(5) சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டம்

(6) செரி-2000 திட்டம்

**5.01. பகுதி-2 திட்டம்**

பகுதி-2 திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**5.02. அ. வீரிய ரக மல்பரி நடவுக்கு ஊக்கத் தொகை அளித்தல்**

வீரிய ரக மல்பரி இனங்களை அறிமுகப்படுத்துவதில் விதைக் கரணைகளின் முளைப்புத்திறன் குறைவாக இருப்பதால் விதைக் கரணைகளுக்குப் பதிலாக மல்பரி நாற்றுகளாக நாற்றாங்கால்களில் உற்பத்தி செய்து நாற்று மூலம் மல்பரி நடவு செய்திட நாற்று மானிய உதவி ரூ.5.10 இலட்சம் வழங்கப்படும். இதன்படி ஒரு ஏக்கருக்கு ரூ. 500 வீதம் 1,020 ஏக்கரில் மல்பரி நடவு மேற்கொள்ள மானிய உதவி வழங்கப்படும்.

**ஆ. ஆராய்ச்சி பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டினை பட்டு நெசவு விசைத்தறியில் பயன்படுத்துவதற்கு உதவியளித்தல்**

பட்டு நூற்பு ஏனங்கள் மற்றும் பல்முனை நூற்பு ஏனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டினை விசைத்தறி மூலம் பட்டு தொழிலை அதிகரிக்கும் பொருட்டு, கோயம்புத்தூரிலுள்ள தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகம், பரிந்துரைக்கேற்ப, கோவை, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் ஒரு பயனாளிக்கு நான்கு விசைத்தறிகள் வீதம் வழங்க ரூ. 2.40 இலட்சம் செலவீனத்தில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் 16 பட்டு நெசவு விசைத்தறிகள் அமைக்கத் தேவையான இயந்திரங்களை கொள்முதல் செய்ய 25 விழுக்காடு மானிய உதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பட்டு நெசவுக்குரிய ஒரு விசைத்தறி மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய ரூ.0.60 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.



**6.01. 1999-2000 ஆம் ஆண்டிற்கான சாதனை**

1999-2000 ஆம் ஆண்டிற்கான இயல்பு மற்றும் நிதி சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. என் | திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவீனம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சித் திட்டம் | | | | |
| | (அ) வீரிய ரக மல்பரி நடவுக்கு ஊக்கத் தொகை (ஏக்கருக்கு) | 1400.00 | 1474.75 | 7.000 | 7.000 |
| | (ஆ) புதிய விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல் (நபர்களுக்கு) | 1400 | 1400 | 2.100 | 2.100 |
| | (இ) அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் (நபர்களுக்கு) | 1400 | 1400 | 13.902 | 13.425 |
| 2. | சேலம் பட்டு வளர்ச்சித் துறை இயக்ககத்தில் உள்ள நிர்வாகத் தகவல் மையம் சீரமைத்தல் | - | - | 1.200 | 1.177 |
| 3. | மத்திய பட்டு வாரிய புதிய பட்டுப்புழு இனங்களை பிரபலப்படுத்துவதற்கு ஊக்கத் தொகை | - | - | - | - |
| | (அ) பாதிப்படைந்த இளம்புழு வளர்ப்புக்கு ஈடுகட்டும் தொகை அளித்தல் (நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு) | 60000 | - | 0.600 | ஒப்படைக்கப்பட்டது |

[2000 ஏப்ரல் 25

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) இரு சுழற்சி இன பட்டுக் கூடு உற்பத்திக்கு ஊக்கத் தொகை அளித்தல் (கிலோ கிராமுக்கு) | 12000 | 11000 | 0.263 | 0.197 |
| (இ) புதிய இனங்களை வளர்க்கும் விவசாயி களுக்கு கிருமி நாசினி களை இலவசமாக வழங்குதல் (நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு) | 60000 | 49005 | 1.980 | 1.785 |
| 4. அதிக பட்ச பட்டுக் கூடு அறுவடைக்கு தனியாக பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட உதவி அளித்தல் (நபர்களுக்கு) | 300 | 289 | 15.000 | 14.450 |
| மொத்தம் | .. | .. | **42.045** | **40.134** |

மாநிலத் திட்டக்குழு 2000-2001 ஆம் ஆண்டிற்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**7.01. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

1981-82 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2000-2001 ஆம் ஆண்டில் புதிய பட்டு விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட உதவிகள் அளிக்கப்படவுள்ளன.

(1) பயனாளிகள் தெரிவுக்கான குழுக்கூட்டம் நடத்த ஒரு கூட்டத்திற்கு ரூ.9,000 வீதம் 3 கூட்டங்கள் நடத்துதல்.

(2) 50 விவசாயிகளுக்கு ரூ.500 மதிப்புள்ள வீரிய ரக மல்பரி நாற்றுகள் இலவசமாக விநியோகம் செய்தல்.

(3) 50 பயிற்சியாளர்களுக்கு ரூ.150 வீதம் பயிற்சி உதவித் தொகை அளித்தல்.

(4) நாற்றுகள் விநியோகம் செய்ய போக்குவரத்துச் செலவினம் ரூ. 500 வீதம் 50 விவசாயிகளுக்கு அளித்தல்.



2000 ஏப்ரல் 25]

(5) மல்பரி நாற்றுகள் நடவு செய்வதற்கு குழி எடுக்க ஒரு விவசாயிக்கு ரூ.1500 வீதம் 50 விவசாயிகளுக்கு வழங்குதல்.

(6) ஒரு விவசாயிக்கு ரூ.750 வீதம் 50 விவசாயிகளுக்கு இடுபொருள் உதவியளித்தல்.

(7) ஒரு விவசாயிக்கு ரூ.300 மதிப்பில் 50 விவசாயிகளுக்கு மல்பரியை மரமாக பராமரிப்பதற்குரிய பயிற்சிக் கருவிகள் வழங்குதல்.

**7.02. 1999-2000 ஆம் ஆண்டின் இயல்பு மற்றும் நிதி சாதனை** விபரம் பின்வருமாறு:

| வ. என் திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மல்பரி நாற்றுகள் விநியோகம் (இலட்சம் நாற்றுகள்) | 0.625 | 0.625 | 0.313 | 0.313 |
| 2. புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிதத்ல் (எண்ணிக்கை) | 50 | 50 | 0.250 | 0.250 |
| 3. புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி உபகரணங்கள் இலவசமாக வழங்குதல் (எண்ணிக்கை) | 50 | 50 | 0.250 | 0.250 |
| 4. அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் (எண்ணிக்கை) | 50 | 50 | 1.250 | 1.250 |
| 5. கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லல் (பயனாளிகள்) | 50 | 50 | 0.275 | 0.275 |
| மொத்தம் | - | - | **2.338** | **2.338** |

2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 2.12 இலட்சத்தில் 50 விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் பயன் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 25

**8.01. மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது:

(i) கோயம்புத்தூர்

(ii) திண்டுக்கல்

(iii) தேனி

(iv) விருதுநகர்

(v) திருநெல்வேலி

**8.02. இத்திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:**

(1) 720 விவசாயிகளுக்கு மல்பரி நாற்றுகள் ரூ.270 வீதம் மானிய விலையில் வழங்குதல்.

(2) 720 விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, நோய்த் தடுப்பு மேலாண்மை ஆகியவற்றில் ஒரு மாதத்திற்கான பயிற்சி அளிக்க ரூ.500 வீதம் விவசாயிகளுக்கு உதவித் தொகை அளித்தல்.

(3) 720 விவசாயிகளுக்கு ரூ.500 மதிப்புள்ள இலவசப் பயிற்சி உபகரணங்கள் வழங்குதல்.

(4) 720 விவசாயிகளுக்கு ரூ.2,400 மதிப்புள்ள அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகித்தல்.



2000 ஏப்ரல் 25]

**8.03. 1999-2000 ஆம் ஆண்டிற்கான இயல்பு மற்றும் நிதி சாதனை விவரம் பின்வருமாறு:**

| வ. எண். | திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | மல்பரி நாற்றுகள் விநியோகம் (இலட்சத்தில்) | 8.750 | 16.510 | 0.875 | 0.875 |
| 2. | புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் (எண்ணிக்கை) | 700 | 700 | 1.050 | 1.050 |
| 3. | அடிப்படை புழு வளர்ப்பு தளவாடங்கள் விநியோகம் (எண்ணிக்கை) | 700 | 700 | 1.050 | 1.047 |
| 4. | இலவசப் பயிற்சி உபகரணங்கள் வழங்குதல் (எண்ணிக்கை) | 700 | 700 | 17.025 | 16.933 |
| | **மொத்தம்** | - | .. | **20.000** | **19.905** |

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.26.464 இலட்சம் செலவினத்தில் 720 புதிய விவசாயிகளுக்கு உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9.01. பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்**

மலைவாழ் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பட்டு வளர்ச்சித் திட்டங்கள் கீழ்க்கண்ட மலைப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை.

(ii) விழுப்புரம் மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள கல்ராயன்மலை.

(iii) திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள பச்சமலை.

(iv) திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாதுமலை.

(v) வேலூர் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை.

(vi) சேலம் மாவட்டத்திலுள்ள அருநூத்துமலை.

[2000 ஏப்ரல் 25

**9.02. 2000-2001 ஆம் ஆண்டில் மலைவாழ் மக்களுக்காக கீழ்க்கண்ட உதவிகள் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:**

(1) 500 விவசாயிகளுக்கு ரூ.375 மானிய விலையில் மல்பரி நாற்றுகள் விநியோகித்தல்.

(2) 500 விவசாயிகளுக்கு மல்பரி நடவு மேற்கொள்வதற்கு ரூ.375 வீதம் மானிய உதவி அளித்தல்.

(3) 500 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க உதவித் தொகை ரூ.500 வீதம் அளித்தல்.

(4) 500 புதிய விவசாயிகளுக்கு ரூ. 500 மதிப்புள்ள இலவசப் பயிற்சி உபகரணங்கள் விநியோகித்தல்.

(5) 500 விவசாயிகளுக்கு ரூ.2,500 மதிப்புள்ள அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல்.

**9.03 இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டின் சாதனை விவரம் வருமாறு:**

| வ. எண் | திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | மலபரி நாற்றுகள் விநியோகம் (ஏக்கரில்) | 125.00 | 145.25 | 1.875 | 1.145 |
| 2. | மல்பரி நடவுக்கான உதவித் தொகை (எண்ணிக்கை) | 500 | 500 | 1.875 | 1.875 |
| 3. | பயிற்சியாளர்களுக்கான உதவித்தொகை (எண்ணிக்கை) | 500 | 500 | 2.500 | 2.500 |
| 4. | இலவச பயிற்சி உபகரணங்கள். மற்றும் முட்டை தொகுதிகள் வழங்குதல் (எண்ணிக்கை) | 500 | 500 | 2.500 | 2.500 |
| 5. | அடிப்படை புழு வளர்ப்பு தளவாடங்கள் வழங்குதல் (எண்ணிக்கை) | 500 | 500 | 12.500 | 12.500 |
| | மொத்தம் | | | **21.250** | **20.520** |



2000 ஏப்ரல் 25]

2000-2001 ஆம் ஆண்டில் 500 விவசாயிகளுக்கு ரூ.21.250 இலட்சத்திற்கு உதவிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.01. சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டம்**

2000-2001 ஆம் ஆண்டில் சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சி திட்டங்களை கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

1. பெரம்பலூர்
2. திருச்சி
3. விழுப்புரம்
4. கடலூர்
5. தேனி
6. மதுரை
7. சிவகங்கை
8. திண்டுக்கல்
9. திருநெல்வேலி
10. தூத்துக்குடி

**10.02 ஆதி திராவிட விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட உதவிகளைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.**

(1) ஒரு விவசாயிக்கு ரூ.750 வீதம் 200 ஆதி திராவிட விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் மல்பரி நாற்றுகள் விநியோகித்தல்.

(2) ஒரு விவசாயிக்கு ரூ.375 வீதம் 200 விவசாயிகளுக்கு நடவு மானியம். அளித்தல்.

(3) ஒரு விவசாயிக்கு ரூ.500 வீதம் 200 விவசாயிகளுக்கு பயிற்சி உதவித் தொகை அளித்தல்.

(4) ஒரு விவசாயிக்கு ரூ.500 வீதம் 200 விவசாயிகளுக்கு பயிற்சி கால புழு வளர்ப்பு உபகரணங்கள் வழங்குதல்.

(5) ஒரு விவசாயிக்கு ரூ.2,500 வீதம் 200 விவசாயிகளுக்கு அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல்.

[2000 ஏப்ரல் 25

**10.03** 1999-2000 ஆம் ஆண்டில் இயல்பு மற்றும் நிதிச் சாதனை விவரம் பின்வருமாறு

| வ. எண் | திட்ட விபரம் | இயல்பு | | நிதி | |
|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | மல்பரி நாற்றுகள் மானிய விலையில் அளித்தல் (ஏக்கரில்) | 62.50 | 124.30 | 0.9375 | 0.9375 |
| 2. | பயிற்சி உதவித் தொகை (எண்ணிக்கை) | 250 | 250 | 1.2500 | 1.2500 |
| 3. | பயிற்சி உபகரணங்கள் (எண்ணிக்கை) | 250 | 250 | 1.2500 | 1.2500 |
| 4. | அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் (எண்ணிக்கை) | 250 | 250 | 6.2500 | 6.2500 |
| | மொத்தம் | | | 9.6875 | 9.6875 |

2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 200 விவசாயிகளுக்கு ரூ. 9.250 இலட்சம் மதிப்பீட்டில் உதவிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 11.01 பட்டு 2000

இந்தியா மற்றும் சுவிஸ் நிறுவன வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு திட்டத்தின்கீழ் மல்பரி மற்றும் பட்டுக் கூட்டின் தரம் மற்றும் உற்பத்தி அளவை அதிகரிக்கவும், பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**11.02** 1999-2000 ஆம் ஆண்டில், 40 தர மேம்பாட்டுக் குழுக்கள் பட்டு வளர்ப்புக்கு வாய்ப்புள்ள தர்மபுரி, கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு, சேலம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தவும், பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதன உதவி அளிக்கவும், தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கவும், தீவிரப் பட்டு வளர்ச்சி அல்லாத பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு தீவிர பட்டு வளர்ச்சிக்கு உகந்த பகுதிகளில் பயிற்சி அளிக்கவும் ரூ.42.646 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.



2000 ஏப்ரல் 25]

**11.03** 2000-2001 ஆம் ஆண்டில் தர்மபுரி, கோயம்புத்தூர், நாமக்கல், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய மாவட்டங்களில் ரூ. 32.32 இலட்சம் மதிப்பில் 80 தர மேம்பாட்டுக் குழுக்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தீவிர மல்பரி பட்டு அபிவிருத்தி இல்லாத பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தீவிர மல்பரி பட்டு அபிவிருத்தி உள்ள பகுதியில் ரூ.8.52 இலட்சம் செலவினத்தில் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ. 40.84 இலட்சமாகும்.

## 12.01 அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களை ஊக்கப்படுத்தவும், பட்டு நூலுக்கு போட்டி விலை அடிப்படையில் நியாயமான விலை கிடைக்கவும் அண்ணா பட்டு பரிமாற்றகம் 1991ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டது. முன்பு பட்டின் தரம் மேலோட்டமாக மதிப்பிடப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதனால் தரமான பட்டு நூலுக்குக் கூட சில சமயத்தில் நல்ல விலை கிடைக்காமல் இருந்தது. சரியான தர அளவை அறியும் நோக்குடன் மத்திய பட்டு வாரிய உதவியுடன் காஞ்சிபுரத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு பட்டு பரிசோதனைக் கூடம் நிறுவப்பட்டுள்ளது. பட்டு உற்பத்தியாளர் மற்றும் பட்டு நூல் பயன்படுத்துவோரின் நலனை வெளிக்கொள்வதாகவும், பட்டுத் தொழிலின் தர உயர்வு நோக்கை செயல்முறைகளில் உயர்த்தும் வகையிலும் தர உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

1999-2000 ஆம் ஆண்டில் அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் செயல்பாடு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| வியாபாரம் செய்த அளவு இலட்சம் கிலோ கிராம் | மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|
| 2.145 | 2359.50 |

2000-2001 ஆம் ஆண்டில் அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் ரூ.2400.00 இலட்சம் மதிப்புள்ள ரூ.2.30 இலட்சம் கிலோ கிராம் கச்சாப்பட்டு கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 13.01 தமிழ்நாடு பட்டு கூட்டுறவு உற்பத்தியாளர்கள் இணையம், காஞ்சிபுரம்

தமிழ்நாடு பட்டு கூட்டுறவு உற்பத்தியாளர்கள் இணையம் ஒன்று கூட்டுறவு அடிப்படையில் 1979-இல் காஞ்சிபுரத்தில் தொடங்கப்பட்டு, 6 கிளைகளுடன் மாநிலத்தில் முக்கிய பட்டுத் தொழில் பகுதிகளில் இயங்கி

[2000 ஏப்ரல் 25

வருகிறது. அது தனது வாடிக்கையாளரின் தேவையை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பட்டு கூட்டுறவு உற்பத்தியாளர் இணையம் ரூ. 6,000.00 இலட்சம் மதிப்புள்ள 5.00 இலட்சம் கிலோகிராம் பாவு மற்றும் ஊடை ரக நூலாக தமது உறுப்பினர் களிடமிருந்து கொள்முதல் செய்து, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்க உள்ளது.

**14.01** 2000-2001 ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் தொடர் திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்களுக்காக ரூ.2,308.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது:—

**2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்ட நிதி மதிப்பீட்டு விவரம்**

| வ. எண் | திட்டங்களின் விவரம் | திட்ட மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திட்டப் பணிகள் | |
| | (அ) திட்டம் சாராப் பணிகள் | 2257.46 |
| | (ஆ) தன்னாட்சி அமைப்புகள் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 3.02 |
| 2. | பகுதி-2 திட்டங்கள் | |
| | (அ) ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சித் திட்டம் வீரிய ரக மல்பரி நடவுக்கு ஊக்கத்தொகை அளித்தல் | 5.10 |
| | (ஆ) ஆராய்ச்சி பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டினை பட்டு நெசவு விசைத்தறியில் பயன்படுத்துவதற்கு உதவியளித்தல் | 2.40 |
| 3. | பட்டு 2000 | |
| | (அ) பட்டு தர மேம்பாட்டுச் சங்கம் அமைத்தல் | 32.32 |
| | (ஆ) தீவிர மல்பரி பட்டு அபிவிருத்தி இல்லாத பகுதியிலுள்ள பட்டு விவசாயிகளுக்கு தீவிர மல்பரி அபிவிருத்தி உள்ள இடங்களில் பயிற்சி அளித்தல் | 8.52 |
| | மொத்தம் | **2308.82** |



2000 ஏப்ரல் 25]

**15.01 மத்திய பட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கி வளர்ச்சித் திட்டங்கள்.**

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் 12 திட்டங்கள் கிரியா ஊக்கி வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்த ரூ.492.562 இலட்சத்திற்கு மத்திய பட்டு வாரியத்துக்கு திட்டக் கருத்துருக்கள் அனுப்பப்பட்டன. அதில் மத்திய பட்டு வாரியம் ரூ.323.975 இலட்சமும், மாநில அரசு ரூ. 137.085 இலட்சமும் ஏற்கும், பயனாளிகள் ரூ.31.502 இலட்சம் ஏற்பர். கடந்த 2 ஆண்டுகளாக தமிழகத்தில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**15.02** கிரியா ஊக்கி திட்டத்தின்கீழ், 2000-2001 ஆம் ஆண்டில் மாநிலத்தில் ரூ.118.678 இலட்சம் மதிப்பீட்டில் 5 திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அதில் ரூ.91.37 இலட்சம் செலவினத்தை மாநில அரசும் ரூ.27.14 இலட்சம் செலவினத்தை மத்திய பட்டு வாரியமும் ஏற்கும். மீதமுள்ள ரூ.0.168 இலட்சம் பயனாளிகளின் பங்காகும்.

**16.01** 2000-2001 ஆம் நிதியாண்டில் 1,398 ஏக்கரில் 4,520 விவசாயிகளால் மல்பரி பயிரிடவும், 130.00 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யவும், 63.00 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யவும், 7.00 இலட்சம் கிலோ கச்சாப்பட்டு உற்பத்தி செய்யவும், 10,000 நபர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பினை உருவாக்கவும் பட்டு வளர்ச்சித் துறையால் திட்டமிடப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 25

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னை

1. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கீழ்க்காணும் முக்கிய குறிக்கோள்களுடன் 1973 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்து அமைக்கப்பட்டது:

(அ) தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுககு சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல.

(ஆ) முறையான பயிற்சியின் மூலமாக கைவினைஞர்களின் பாரம்பரியத் தொழில் திறனை மேம்பாடடையச் செய்தல்;

(இ) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் மேமபடுத்துவதற்குத் தேவையான உரிய தொழில் நுட்பததினை வளர்த்திடும் அதே நோக்கில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பை குறைத்து தொழில்முறை இடர்பாடுகளைக் களைய முற்படுதல்

(ஈ) வடிவமைப்புகளில் புதுமையினைப் புகுத்துவதை ஊக்குவித்தல்;

(உ) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிறுவனம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, சிறப்பு (கோயில்) திட்டங்களை மேற்கொள்ளுதல், கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

**2. சந்தை**

***2.01*** இந்நிறுவனம் தற்போது தமிழகத்திற்குள்ளாகவும் மற்றும் வெளியிலுமாக உள்ள தனது 20 விற்பனை நிலையங்கள் மூலம் தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப்பொருட்களுக்குச் சீரான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது. இங்கு கைவினைப் பொருட்கள் 'பூம்புகார்' என்னும் சிறப்புப் பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை வருமாறு:



2000 ஏப்ரல் 25]

| ஆண்டு | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1996-97 | 1,066.38 |
| 1997-98 | 1,095.38 |
| 1998-99 | 1,141.84 |
| 1999-2000 | 1,272.28 (தணிக்கை செய்யப்படாதது) |

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.1,350.00 இலட்சத்திற்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

**2.02 புதிய விற்பனை நிலையங்கள் தொடங்குதல்/சொத்துக்களை கையகப்படுத்துதல்:—**

பாண்டிச்சேரியில் தமிழக கைவினைப் பொருட்களுக்கு உள்ள அபரிமிதமான சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இந்நிறுவனம் சமீபத்தில் அங்கு ஒரு விற்பனை நிலையத்தினை தொடங்கியுள்ளது. மேலும் ஈரோட்டிலுள்ள தனது விற்பனை நிலையத்திற்கு சொந்தத்தில் பரந்த இடவசதியுடன் கூடிய கட்டடத்திற்காக இந்நிறுவனம் அங்கு ஒரு துண்டு நிலத்தினை உரிமை மாற்றம் பெற்று, பொதுப் பணித் துறையின் மூலம் இரண்டடுக்கு கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றுடன் கூட, மேலும் இந்நிறுவனம் சுவாமிமலையில் மாநில மற்றும் மத்திய அரசுகளின் உதவியுடன் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இடம்பெறச் செய்யும் பொருட்டு கூட்டுக் கட்டடம் கட்டுவதற்காக திட்டமிட்டுள்ளது.

(அ) கைவினைப் பொருட்களின் சந்தை வாய்ப்பிற்கான விற்பனை நிலையம்;

(ஆ) உலோக சிற்பக்கலைக்கான வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையம்; அங்கு உலோக சிற்பக் கலையில் 3 ஆண்டு சான்றிதழ் பயிற்சி பயிற்றுவிக்கப்படும்;

(இ) உலோக சிற்பக்கலைப் பொருட்கள் உற்பத்திக்கான உற்பத்தி நிலையம் மற்றும்

[2000 ஏப்ரல் 25

(ஈ) கூடுதலான பொருட்கள் சேர்த்து வைப்பதற்கான வசதிகள். இந்நோக்கத்திற்காக இந்நிறுவனம் சமீபத்தில் நிலம் கையகப்படுத்தியுள்ளது. அங்கு பொதுப் பணித் துறையினரால் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும்.

**2.03 சென்னை, திருச்சி மற்றும் உதகை விற்பனை நிலையங்களில் கூடுதலான இடவசதிக்கு வழி செய்தல்**

கிடைக்கக்கூடிய இடத்தை மேம்பட்ட இடவசதி நிர்வாகத்தின்மூலம் பெருமளவிற்குப் பயன்படுத்தி, சிறந்த நன்மை பெறும் பொருட்டு இந்நிறுவனம் சென்னையிலுள்ள தனது முக்கிய விற்பனை நிலையத்தில் ரூ.161.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டுமானம், உள் அலங்காரப் பணிகள் மற்றும் குளிர்சாதன வசதி ஆகியவை உள்ளடக்கிய மாபெரும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது. பொதுப் பணித் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டுவரும் இப்பணி இன்னும் முடிவுறாத நிலையில் உள்ளது. இதைப்போன்று திருச்சி பூம்புகார் விற்பனை நிலையத்தில் கூடுதல் விற்பனை இடவசதிக்காக தற்போதுள்ள இடத்தில் அபிவிருத்தி/திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் அதிக இடவசதிகளுடன் சுற்றுலாப் பயணிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உதகையிலுள்ள விற்பனை நிலையம் முக்கியப் பகுதியில் பரந்த அமைவிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**2.04 விற்பனை நிலையங்களை புதுப்பித்தல்**

கைவினைப் பொருட்கள் கலை நுணுக்கமான பொருட்களாதலால், அவற்றின் விற்பனைக்கு பொருத்தமான சூழ்நிலையினை ஏற்படுத்தித்தர வேண்டியது அவசியமானதாகும். மேலும் பொருட்களை அறிமுகப்படுத்தும் விதம் விற்பனை முன்னேற்றமடையச் செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது. இதனை கருத்திற்கொண்டு மத்திய அரசின் உதவியுடன் விற்பனை நிலையங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி விற்பனை நிலையத்தினை புதுப்பிக்கும் பணி முற்றுப்பெற்றுள்ளது. இம்மாதிரிப் பணியினை மத்திய அரசின் உதவியுடன் இந்த ஆண்டில் ஈரோடு, கொடைக்கானல், திருநெல்வேலி, சேலம், பெங்களூர், புதுடில்லி விற்பனை நிலையங்களில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 25]

**2.05 விளம்பரம்**

கலை மற்றும் கலைப் பொருட்களைப் பற்றிய மேலோங்கிய விழிப்புணர்வினை உருவாக்கிடவும், உள்ளூரிலும் மற்றும் வெளிநாடுகளிலும் கைவினைப் பொருட்களின் விற்பனையினை அதிகரிக்கவும் பரந்த விளம்பரங்கள் அவசியமாகிறது. பெரும்பாலான விளம்பரங்கள் கண்காட்சிகளின் போதும் மற்றும் விழாக்காலங்களில் சிறப்பு விற்பனை ஊக்குவிப்புகளின் போதும் இந்நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன.

மேற்கூறியவற்றுடன் கூட, விளம்பர இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்நிறுவனம் இந்திய அரசின் உதவியுடன் சில குறிப்பிட்ட கலைகளில் வண்ணமயமான சிற்றேடு மற்றும் அட்டவணைகளை, சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து கைவினைப் பொருட்களை வாங்குபவர்களிடையே பகிர்ந்து வழங்குவதன் மூலம் அவர்களிடையே கலைப் பொருட்களின் புகழைப் பரப்பி வருகிறது. இந்த அட்டவணைகளில் பொருட்களைப் பற்றிய சுருக்கமான விவரங்கள் மற்றும் விளக்கங்களுடன் கூடிய உற்பத்தி வழிமுறைகள் பற்றிய பராமரிப்பு குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இந்தச் சிற்றேடு/ அட்டவணைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கலை ரசனையுள்ளவர்களிடையே மேம்பட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் விற்பனை அதிகரிக்கவும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.06 கண்காட்சிகள்**

விற்பனை வழிமுறைகளின் ஒரு பகுதியாக, கைவினைப் பொருட்கள் புகழ் பரப்பச் செய்ய இந்நிறுவனம் ஆண்டு முழுவதும் விற்பனை நிலையங்களின் உள்ளேயும், வெளியிடங்களிலும் மேலும் இந்தியாவின் சில முக்கிய நகரங்களான ஹைதராபாத், போபால், இந்தூர், மும்பை, கோவா, பூனே போன்ற இடங்களிலும் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இக்கண்காட்சிகளில் சில உள்ளூர் விழாக்கால நிகழ்வுகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இந்தக் கண்காட்சிகளை தனது சொந்த நிதியிலோ அல்லது புதுடில்லி வளர்ச்சி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) நிதி உதவியுடனோ நடத்தி வருகிறது.

செப்டம்பர் 1999-ல் இந்நிறுவனம் சென்னையில் மத்திய அரசின் உதவியுடன் "கைவினைப் பொருட்கள் சந்தை"யினை நடத்தி நாட்டின் அனைத்து பகுதியிலிருந்தும் கைவினைஞர்களை பங்கேற்கச் செய்து

அவர்களின் பொருட்களை நேரிடையாக விற்பனை செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்நிகழ்ச்சி சென்னையில் ஐந்து ஆண்டு இடைவெளிக்குப் பின் நடத்தப்பட்டுள்ளது.

**2.07 ஏற்றுமதி**

சிறப்பான முயற்சிகள் மேற்கொண்டும், ஏற்றுமதி பெருகுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படாததால், இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனைக் கொள்கையினை வகுக்க ஒரு கலந்தறிதற்குரியரை நியமனம் செய்வது சாலச் சிறந்தது எனக் கருதப்பட்டது. கலந்தறிதற்குரியர் கீழ்க்கண்டவை ஏற்றுமதிக்கான உந்துகைப் பகுதிகள் எனக் கண்டறிந்துள்ளார்.

(அ) உலகெங்கும் பெரும்பாலான கோயில்கள் கட்டப்பட்டுவரும் பின்னணியில், பூம்புகார் நிறுவனம் ஏற்கெனவே இதுமாதிரியான பணிகளில் சிறப்பறிவுத் திறனுடன் நற்பெயரும் பெற்றுள்ளதால் வெளிநாடுகளில் கோயில் இரதம், கோயில் தேர், கோயில் கதவுகள், வாகனங்கள், சிலைகள் போன்றவைகளடங்கிய கோயில் பணிகள் மேற்கொள்ளுதல்;

(ஆ) வெளிநாடுகளில் எல்லா முக்கிய கண்காட்சிகளிலும் செயல் திறமையுடனும உரிய விதத்திலும் பங்கேற்று கலைநயமிக்க பொருட்களை காட்சிக்கு வைத்து, ஏற்றுமதிக்கான ஆணைகளை நேரிடையாகப் பெறுதல்:—

கலந்தறிதற்குரியவரின் பரிந்துரைகள் செயல்படுத்துவதற்காக நிறுவனத்தின் சீரிய பரிசீலனையில் உள்ளன.

**3. உற்பத்தி**

***3.01*** விற்பனை நிலையங்களின் மூலம் கைத்திறப் பொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், இந்நிறுவனம் தனது சொந்த உற்பத்தி நிலையங்களின் மூலம், நுட்பமான கைத்திறப் பொருட்களை உருவாக்கும் பாரம்பரிய கலை அழிந்துவிடாமல் காக்கும்பொருட்டு அவற்றின் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் பித்தளை விளக்குகள் மற்றும் கலைப் பொருட்கள், உலோக சிற்பங்கள், சந்தனமரச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், தஞ்சாவூர் கலைத் தட்டுகள் போன்ற முக்கிய கலைகளில் எட்டு உற்பத்தி நிலையங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இந்த உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—



| ஆண்டு | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1996-1997 | 174.28 |
| 1997-1998 | 250.28 |
| 1998-1999 | 224.24 |
| 1999-2000 | 235.45 (தணிக்கை செய்யப்படாதது) |

இந்நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.250.00 இலட்சத்திற்கு உற்பத்தியை எட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது.

உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தினை பராமரிப்பதற்காக இந்நிறுவனம் தனது உற்பத்தித் தேவைக்கான தரமான உலோகங்களை அரசுத் துறைகளின் மூலம் பெற்று வருகிறது. முக்கிய மூலப் பொருட்களான பித்தளை, செம்பு, துத்தநாகம், வெள்ளீயம், காரீயம் போன்றவை அரசு நிறுவனங்களான காவல் துறை, தமிழ் நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு வெடிமருந்துப் பொருட்கள் நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கனிம உலோக விற்பனை நிலையம் போன்றவற்றின் மூலம் கொள்முதல் செய்து வருகிறது. வெள்ளி தேவைக்கு (கலைத் தட்டு உற்பத்தி நிலையத் தேவைக்கு) சுங்கத் துறையின்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. சந்தனமரம் அவ்வப்போது தேவைக்கேற்ப வனத் துறையின் மூலம் பெறப்பட்டு வருகிறது.

**3.02 உற்பத்தி நிலையங்களை மேம்படுத்துதல்**

உற்பத்தி நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள வழக்கற்றுப்போன இயந்திரங்களை வெளியேற்றவும், மாறிவரும் தேவைகளுக்கேற்ப ஈடு செய்யும் பொருட்டும் இயந்திரங்களைப் படிப்படியாக புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக சில உற்பத்தி நிலையங்களில் குறிப்பிட்டவகை இயந்திரங்கள் இம்மாதிரி புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இவை போன்ற மாற்றங்கள் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**4. சிறப்புக் கோயில் பணிகள்**

***4.01*** இந்நிறுவனம் தனது வழக்கமான விற்பனை மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் நீங்கலாக, கிடைக்கக்கூடிய அனுபவத்தையும், சிறப்பறிவுத்

திறத்தினையும் கொண்டு தங்கம்/வெள்ளி/மரத்தேர்கள், மணிகள், வாகனங்கள், கோயில் கதவுகள், வரிசைகளுக்கான பித்தளை கிராதிகள் போன்றவற்றை உற்பத்தி செய்து பல்வேறு கோயில் ஆணைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி வருகிறது. இதைத்தவிர பித்தளை சலவைப் பெட்டிகளுக்கான அரசு ஆணைகளை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநரகம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநரகங்களுக்காக உற்பத்தி செய்து வழங்கிவருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் சிறப்பு ஆணைகளை நிறைவேற்றியதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் வருமாறு:

| ஆண்டு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1996-1997 | 8.17 |
| 1997-1998 | 17.48 |
| 1998-1999 | 12.47 |
| 1999-2000 | 79.98 (தணிக்கை செய்யப்படாதது) |

**4.02** கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் எடுத்துக்கொள்ளப்பட்ட சிறப்பு ஆணைகளில் முடிக்கப்பெற்றவை மற்றும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருபவை போன்ற விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பு | சேவைக் கட்டணமாக நிறுவனத்திற்கு சேரும் தொகை | திட்டத்தின் முனைவுத் தன்மை |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம், ஸ்ரீகாளஹஸ்திக்கு அலங்கார பித்தளை கிராதிகள் உற்பத்தி செய்து வழங்குதல் | 31.00 | 31.00 | பணி ஜூலை '99-ல் முற்றுப்பெற்றது. |
| 2 | மைலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கோயிலுக்கு 14' 7" தங்கத்தேர் செய்து வழங்குதல் | 77.00 | 9.70 | பணி டிசம்பர் '99-ல் முற்றுப்பெற்றது. |
| 3. | சென்னை மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் திருக் கோயிலுக்கு 16' 6-7/8" உயர தங்கத்தேர் உற்பத்தி செய்து வழங்குதல் | 122.34 | 24.00 | மரவேலை மற்றும் செப்புப் பணிமுற்றுப் பெற்றுள்ளது. வெள்ளி வேலை முன்னேற்றம் பெற்று வருகிறது. தங்க வேலை விரைவில் மேற்கொள்ளப்படும். |
| 4. | கோயம்புத்தூர் மாவட்டம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 16'6-7/8" தங்கத்தேர் உற்பத்தி செய்து வழங்குதல் | 108.00 | 15.85 | மரவேலை மற்றும் செப்புப் பணி முற்றுப்பெற்றுள்ளது. வெள்ளி வேலை முடியும் தருவாயில் உள்ளது. தங்க வேலை மேற்கொள்ளப்பட உள்ளது. |
| 5. | காங்கேயம் சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 9'8-7/8" தங்க இரதம் உற்பத்தி செய்து வழங்குதல் | 48.00 | 11.25 | மரவேலை நடை பெற்று வருகிறது. செப்பு மற்றும் தங்க ரேக் ஒட்டும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. |
| 6. | கடலூர் மாவட்டம், மணவாள நல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு 10'6" வெள்ளி இரதம் உற்பத்தி செய்து வழங்குதல் | 45.00 | 10.16 | ஆணை டிசம்பர் '99-ல் பெறப்பட்டுள்ளது. மரவேலை விரைவில் தொடங்க உள்ளது. அதன் பிறகு வெள்ளி வேலை மேற் கொள்ளப்படும். |
| 7. | ஆந்திரப்பிரதேச மாநிலம், யாதகிரிகுட்டா ஸ்ரீலஷ்மி நரசிம்மசுவாமி கோயிலுக்கு பித்தளை அலங்கார கிராதிகள் உற்பத்தி செய்து வழங்குதல் | 22.00 | 22.00 | உற்பத்தி முற்றுப் பெற்றுள்ளது. நிர்மாணப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. |
| 8. | திருவாலங்காடு கோயில் தேர் பழுது பார்த்தல் | 15.65 | 15.65 | பணி நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீகாள ஹஸ்தீஸ்வரசுவாமி திருக்கோயில் பிரபை மற்றும் கலசங்களுக்கு தங்கத்தகடு ஒட்டும் பணி | 17.50 | 1.90 | பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. |

**4.03** சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு த்ங்க இரதம் செய்து வழங்கியதில் தமிழ்நாட்டிலுள்ள பிற கோயில்களிலிருந்தும் மர இரதம் செய்து வழங்குவதற்கான விசாரணைகள் பெருமளவில் பெறப்பட்டுள்ளன. அதைப்போன்று குறித்த நேரத்திலும் எவ்வித குறைபாடுகளுமின்றி ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரசுவாமி தேவஸ்தானத்திற்கு பித்தளையிலான அலங்கார கிராதிகள் செய்து வழங்கியுள்ளதால் அக்கோயிலிலிருந்து மேலும் ரூ.40.00 இலட்சம் மதிப்பிற்கு ஆணைகள் பெறுவதற்கான வாய்ப்பிற்கு வழிவகுத்ததோடு மட்டுமின்றி ஆந்திர மாநிலத்திலுள்ள பிற கோயில்களிலிருந்தும் இம்மாதிரியான பணிக்கு பெருமளவில் விசாரணைகள் பெறப்பட்டுள்ளன. இந்நிறுவனம் ஆந்திர மாநிலத்திலுள்ள உள்ளாற்றலுடைய கோயில்களிலிருந்து சிறப்பு ஆணைகள் பெறுவதற்காக குறுகிய இடைவெளிகளில் அங்கு பயணம் மேற்கொண்டு அவற்றின் தேவைகளை அறிவதோடு மட்டுமின்றி ஹைதராபாத்திலுள்ள அறநிலையத் துறை ஆணையரிடமும் தொடர்பு கொண்டு அம்மாதிரியான திட்டங்களுக்கு விரைவான நிர்வாக அனுமதி பெறுவதில் கவனம் செலுத்தி வருகிறது.

## 5. பயிற்சி

### 5.01 புதிய கைவினைஞர்களை உருவாக்குவதற்கான பயிற்சி

பெரும்பாலும் பாரம்பரியமிக்க தமிழக கைத்திறக்கலை, கைவினைஞர்களால் அவர்களின் மூதாதையர்களிடமிருந்து மரபுரிமையாக பெற்று நடைமுறையாக பயிலப்பட்டு வருகின்றது. தற்போதைய மாறியுள்ள சூழ்நிலையில் கைத்திறக்கலையை பயின்றுவரும் கைவினைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மேலும் இது சில கலைகள் அழிவதற்கு ஒரு காரணமாக அமையலாம். மேலும் பாரம்பரியமாக கைத்திறக் கலையை பயின்றுவரும் கைவினைஞர்கள் மாறிவரும் வாடிக்கையாளர்களின் தேவையினை அறிந்திருக்கவில்லை. எனவே, இதனைக் கருத்திற்கொண்டும் ஒவ்வொரு கலைகளிலும் மேலும் அதிக அளவில் கைவினைஞர்களை உருவாக்கவும் இந்நிறுவனம் சில முக்கிய கலைகளில் காலமுறையாக ஓராண்டு பயிற்சியினை தனது சொந்த நிதியிலோ அல்லது மத்திய அரசின்



நிதி உதவியுடனோ நடத்தி வருகிறது. இந்த ஆண்டில் இந்நிறுவனம் கீழ்க்கண்ட கலைகளில் பயிற்சி அளித்துள்ளது.

(1) உலோக சிற்பம்

(2) பித்தளை விளக்குகள்

(3) பிரம்பு அழகு பொருட்கள் மற்றும்

(4) வெண்கல உலோக பொருட்கள்

இந்நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்ட பெரும்பாலான பயிற்சியாளர்கள் றுவகளது சொந்த உற்பத்தியினை தொடங்கியுள்ளனர். சிலர் தனியார் பட்டறைகளிலும் மற்றும் நிறுவன உற்பத்தி நிலையங்களிலும் சேர்ந்துள்ளனர்.

### 5.02 வடிவமைப்புகளில் புதுமையினைப் புகுத்துதல்

மரபு வழியான வடிவமைப்புகள் தவிர இந்நிறுவனம் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலுள்ள வாங்குவோர்களின் மாறிவரும் ரசனைகளுக்கேற்ப அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதறகாகவும் மற்றும் ஏற்றுமதி சந்தையில் தக்கதொரு இடத்தினைப் பெறவும் பயன்படுத்தக்கூடிய வகையில் புதிய வடிவமைப்புகளை மேம்படுத்த இந்நிறுவனம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இக்காரணத்திற்காக இந்நிறுவனம் புதுதில்லி வளர்ச்சி ஆணையர் (கைத்திறப் பொருட்கள்) அவர்களின் நிதி உதவியுடன் பித்தளை கலைப் பொருட்கள் மற்றும் பித்தளை விளக்குகளில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் பணியினை கலை மற்றும் கலைத் துறையில் சிறந்து விளங்கும் வடிவமைப்பாளர்களிடமும் மற்றும் சென்னை அரசு கலை மற்றும் கைத்தொழில் கல்லூரியிடமும் ஒப்படைத்துள்ளது. மேலும் இந்நிறுவனம் சமீபத்தில் சுவாமிமலையில் கையகப்படுத்தியுள்ள நிலத்தில் கட்டப்பட உள்ள கூட்டுக்கட்டடத்தில் தமிழக அரசின் நிதி உதவியுடன் வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையத்தினை நிறுவ திட்டமிட்டுள்ளது.

## 6. கைவினைஞர்களுக்கு சமூகப் பொருளாதார பாதுகாப்பு

### 6.01 மாநில விருதுகள்

இந்நிறுவனம், கைவினைஞர்கள் தமிழக கைத்திறப் பொருட்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் மாநில விருதுப்போட்டி நடத்தி வருகிறது. விருதுக்காக

[2000 ஏப்ரல் 25

பெறப்படும் பொருட்களில் தேர்ந்த நீதிபதிகளால் 5 கைத்திறப் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனை உருவாக்கிய கைவினைஞர்களுக்கு ரூ.5,000 ரொக்கமும், ஒரு வெள்ளி பதக்கமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வெற்றி பெற்றவர்கள் 65 ஆண்டுகளை எட்டிய பிறகு இந்திய அரசால் வழங்கப்படும் ஓய்வூதியத்திற்கு தகுதி பெறுபவர்களாகிறார்கள்.

### 6.02 தேசிய விருது

இந்நிறுவனம், கைவினைஞர்கள் தேசிய விருதுப் போட்டியில் பங்கு பெறுவதற்காக பூர்வாங்க தேர்வு நடத்தி, அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப் பொருட்களை புதுடில்லிக்கு அனுப்பவும், இறுதிப் போட்டியில் பங்கேற்கவும் உதவி புரிந்து வருகிறது.

### 6.03 நலத் திட்டங்களை செயல்படுத்துதல்

இந்நிறுவனம் கைவினைஞர்களின் நன்மைக்காக, பல்வேறு நலத் திட்டங்களை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்திவருகிறது. இதன் அடிப்படையில் வாகைக்குளம் மற்றும் கள்ளக்குறிச்சியில் 91 வேலைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் மாமல்லபுரத்தில் 37 வேலைக் கூடங்கள் கட்டும் பணி முன்னேறி வருகிறது.

கைவினைஞர்களுக்காக சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்த இந்நிறுவனம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அதன் வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றது. முதல் கட்டமாக இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் 1000 கைவினைஞர்களை சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஆயுள் காப்பீட்டு கழகத்தின் உதவியுடன் கைவினைஞர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறந்தால் உதவி புரிய கூட்டுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொணர திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்கள் வளர்ச்சி ஆணையர் (கைத்திறப் பொருட்கள்) அவர்களின் அனுமதியினை எதிர்பார்த்துள்ளது.

### 7.00 பங்கு மூலதன அமைப்பு மற்றும் செயல்பாட்டு முடிவுகள்

**7.01** அரசாணை நிலை எண் 263, கைத்தறி, கைத்திறப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை நாள் 16-10-1998-ல் இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.00 கோடியிலிருந்து ரூ.4.00 கோடிக்கு உயர்த்தப்பட்டது. இந்த உயர்விற்கான பங்குதாரர்களின் அனுமதியினை 22-9-1999-ல் நடைபெற்ற ஆண்டு பொதுக் குழுக் கூட்டத்தில் பெறப்பட்டு 1999-2000 ஆம் ஆண்டு கணக்கில் செயற்படுத்தப்பட்டது.



2000 ஏப்ரல் 25]

### 7.02 31-12-1999 வரையிலான இந்நிறுவனத்தின் பங்கு மூலதன அமைப்பு வருமாறு

| வ. எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 171.69 |
| 2. | மத்திய அரசு | 111.00 |
| 3. | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் | 0.70 |
| | மொத்தம் .. | 283.39 |

இந்நிறுவனம் ஆண்டுதோறும் நியாயமான இலாபத்தினை ஈட்டி 31-3-1999 ஆண்டு வரை ரூ.97.46 இலட்சத்திற்கு மிகையாக உள்ளது.

### 8.01 மாநில அரசு நிதியுதவி

#### அ. பகுதி-2 ஆம் திட்டம் 1999-2000

அரசாணை நிலை எண்கள் 100, 101 102 கைத்தறி, கைத்திறப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 3-6-1999-ன்படி அரசு ரூ.15.00 இலட்சத்தினை பங்கு மூலதனமாக 1999-2000ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்களின்கீழ் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அனுமதியளித்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சுவாமிமலையில் வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையம் நிறுவுதல் | 10.00 |
| 2. | கொள்முதலுக்கான மூலதன நிதி உதவி | 3.00 |
| 3. | உற்பத்தி நிலையங்களை நவீனப்படுத்துதல் | 2.00 |
| | மொத்தம் .. | 15.00 |

[2000 ஏப்ரல் 25

1999-2000 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் வரிசை எண் 2 மற்றும் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான தொகை முழுவதுமாக அனுமதிக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப் பட்டுவிட்டது. வரிசை எண் 1-ல் குறிப்பிட்டுள்ள திட்டம் சம்பந்தமாக, சமீபத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் கூட்டுக் கட்டடம் கட்டுவதற்கும் அதில் இந்நிலையத்தை அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் உலோக உற்பத்தியில் 3 ஆண்டு சான்றிதழ் பயிற்சிக்கான இந்நிறுவனத்தின் பிரேரணைகள் அரசின் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் பரிசீலனையில் உள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன் பயிற்சி தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## ஆ. பகுதி-2 ஆம் திட்டம் 2000-2001

தமிழக அரசு இந்நிறுவனத்திற்கு கொள்முதலுக்கான பங்கு மூலதன உதவித் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.5.00 இலட்சம் நிதி உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான அரசாணை உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

## 8.02 மத்திய அரசு நிதியுதவி

1999-2000 ஆம் ஆண்டிற்காக இந்திய அரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்காக இதுவரை ரூ.60.40 இலட்சத்தினை அனுமதித்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின பெயர் | மொத்த செலவு | இந்திய அரசின் பங்கு | சதவீதம் | நிறுவன பங்கு | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1. | சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சணல் பொருட்களுக்கான பகுதி நிறுவுதல் | 0.40 | 0.40 | 100% | — | — |
| 2. | சென்னை/ பெங்களூர்/ புதுடில்லி விற்பனை நிலையங்களை புதுப்பித்தல் | 30.00 | 15.00 | 50% | 15.00 | 50% |
| 3. | சென்னையில் கைவினைப் பொருட்கள் சந்தை | 10.00 | 7.50 | 75% | 2.50 | 25% |
| 4. | சண்டிகார், புனே, போபால், மும்பை, இந்தூர், புதுடில்லி மில்லெனரி ஆகிய 7 இடங்களில் கண்காட்சிகள் | 10.00 | 7.50 | 75% | 2.50 | 25% |
| 5. | சுவாமிமலையில் புதிய விற்பனை நிலையம் தொடங்குதல் | 30.00 | 15.00 | 50% | 15.00 | 50% |
| 6. | மும்பையில் புதிய விற்பனை நிலையம் தொடங்குதல் | 20.00 | 10.00 | 50% | 10.00 | 50% |
| 7. | மூலதன பங்கு | -- | 5.00 | 100% | — | — |



2000 ஏப்ரல் 25]

மேலும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள், மத்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## 9.01 எதிர்கால வாய்ப்புகள்

சங்க அமைப்பு விதிக் குறிப்புகள் மற்றும் விதிகளில் உள்ள உரிமை ஆவணங்களின் பார்வைக் குறிப்புகளுடன் கணிப்பாய்வு செய்யும்போது இந்நிறுவனம், அடிப்படையில் பழமையான தமிழக கலை மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு வகை செய்து கொடுத்தல் போன்ற நலத்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் அவற்றை இலாப நட்ட நோக்கில் மட்டுமே கணக்கிட முடியாது.

**9.02** மற்றொரு முக்கியமான பாராட்டப்பட வேண்டிய அம்சம் என்னவெனில் இது ஒரு அரசு நிறுவனமாக இருப்பதால் எல்லா பணியாளர் நல நடவடிக்கைகளும், சட்ட முறை விதிகளின்படி எவ்வித தடைகளுமின்றி செயல்படுத்தப்பட வேண்டி உள்ளதால், இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள வணிக செயல்பாடுகளில் நிர்வாகச் செலவினங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன.

[2000 ஏப்ரல் 25

**9.03** இந்த ஆண்டில் நிலங்கள் கையகப்படுத்துதல் புதிய/கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளதா கணிசமான சொத்துகள் கையகப்படுத்தப்பட்டு உள்ளன. இவை இந்நிறுவனம் வைத்திருந்த சிறிதளவு உபரித் தொகையினை விழுங்கி தோடல்லாமல் வணிக வங்கிகளிடமிருந்து அதிக வட்டி விகிதத்தி பெருமளவில் கடன் பெற வேண்டிய நிலைக்கு ஆளாக்கியது. இ நடவடிக்கைகள் மேலும் விற்பனையை குறிப்பிட்ட அளவிற்கு நி குலைய வைத்துள்ளதற்கு சென்னை விற்பனை நிலையம் சாட்சியமா அமைகிறது. இருப்பினும் இந்தத் திட்டங்கள் முற்றுப் பெற்றவுட விற்பனை கணிசமான அளவு உயர வழிவகுக்கும் என்பதைப் பாராட்ட வேண்டும்.

**9.04** கைத்தறித் துறையைப் போன்று, கைத்திறப் பொருட்கள் துறை சலுகை நிதியினை, தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி (நபார்ட்) வங்கியின் மூலம் பெறுவதற்கு இதுவரை பரிசீலிக்கப்படவில்லை. இந்நிறுவனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதனை கைத்திறப் பொருட்கள் துறைக்கும் விரிவாக்கம் செய்ய கேட்டுக் கொண்டுள்ளது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டால் இந்நிறுவனம் மேலும் பல வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வழிவகை செய்யும்.

**9.05** மேலும் உலகெங்கிலும் காணப்படும் பின்னடைவுப் போக்கினாலும், நாட்டின் சில பகுதிகளில் காணப்படும் மோசமான வானிலையினாலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது. இதன் விளைவாக விற்பனையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

**9.06** ஆனால் ஏற்றுமதித் துறையிலும், மற்றும் சிறப்புக் கோயில் திட்டங்களிலும் வருங்கால வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. ஆயினும் இதற்காக வெளியூர் மற்றும் உள்ளூர் சந்தைகளில் தொடர் விற்பனை நடவடிக்கைக்காக அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளுதல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.